சிவமயம்.

யாழ்ப்பாணத்திலிருந்த

காசி-அ-வரதராஜபண்டிதரவர்கள்

இயற்றிய

சிவராத்திரி புராண

மூலமும்,

பிரம்மஸ்ரீ

திரு-சிவாநந்த சாகர யோகீஸ்வர ரவர்கள் மாணாக்கராகிய:

மதராஸ் ரிவினியூபோர்ட் ஆபீஸ் (ஸெட்டில்மெண்ட்) கிளார்க்கு

மா-நமசிவாயம் பிள்ளையவர்கள்

இயற்றிய

அரும்பிரயோகவுரையும்,

வசனமும்.

சாதாரண௵ ஆடிமீ.

1910

Copyright Registered.

PRINTED BY
K. ARUMUGA CHETTIAR,
AT MADRAS,
SACHIDANANDA PRESS,
R. VIVEKANANDA PRESS,
AND
GOLDEN PRESS.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவராத்திரி புராணம்.

காப்பு.

ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா யிருப்பானை யுரகவேந்தன், றாங்குநெடு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச் சயில மானைப், பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்றந் தளித்தானைப் பசும்பொற்றோட்டுப், பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து கரத்தானைப் போற்றல் செய்வாம். *

கடவுள் வாழ்த்து.

சபாபதி.

சீர்தந்த கமலமலர்த் திசைமுகனுந் திருமாலுந் தேவர் கோவுங், கூர்தந்த நகப்புலிக்காற் றவமுனியும் பதஞ்சலியுங் குழைந்து போற்ற, வார்தந்த கலசமுலை மலைவனிதை விழிகளிப்ப மன்றுளாடுங், கார்தந்த மணிமிடற்றுக் கடவுடிருவடியிணைகள் கருத்துள்வைப்பாம்.

---

* ஓங்கும்=வளரும்; மருப்பு=தந்தம்; உரகவேந்தன்=ஆதிசேடன்; தாங்கும்=சுமக்கும்; நெடுநிலத்து=நீண்ட பூவுலகத்தில்; ஆனைமுகத்தானை = கஜமுகாசூரனை; சயிலமானை = உமாதேவியை; பாங்கு = பக்கத்தில்; மழுத்தானை=மழுப்படை;பரித்தான்=தாங்கினேன்.

(க) தேவர்கோன் = இந்திரன்; புலிக்காற்றவமுனி=வியாக்கிரபாதர்; மலைவனிதை = உமாதேவியார்; கார்தந்த மணி = இந்திரநீலரத்தினம்.

சிவராத்திரிபுராணம்.

சிவகாமியம்மை.

கடிகமழ்கட் கமலமலர்க் கட்டிகிரிக் கரனொருசூ கரம தாகிப், படியிடந்து மறிவரிய பதப்பவள மலை மருங்கிற் படரும் பச்சைக், கொடிகொடிய பவக்கட லிற் குளித்தழுந்தா தின்பமுத்தி கூடும்வண்ணம், மடிய வருக் கருள்புரியுஞ் சிவகாமி யம்மைபதத் தன்பு கூர் வாம். (உ)

விநாயகர்.

சொற்பகர்நா வினுக்கடங்கா வளங்குலவு தில்லை மன்றிற் றுலங்குகோயிற், பொற்பகலாக் குடபுலக்கோ புரத்தமரர் கணத்தலைவர் போற்ற மேவி, யற்பகனாண் மலரிறைத்துத் தொழுமடியார் கேட்டவர மளித்தலா லே, கற்பகநா மம்பெறுமே ரம்பனையோர் கொம்பனை யுட் கருதி வாழ்வாம். (௩)

சுப்பிரமணியர்.

சூராட்டுப் பயில்சயிலத் துணைமுலைத்தின் டகு வியர்மை தோயும் வாட்கண், ணீராட்டுப் பெற்றமறநீ

(உ) கிரிக்கரன் = விஷ்ணு; சூகரம் = பன்றி; பவளமலை = பவளம்போன்றமேனியாம் பரமேசுவரன்; பச்சைக் கொடி = பசியகொடிபோன்ற உமாதேவியார்.

(௩) சொற்பகர் = சொல்லைவிளைவிக்கிற; மன்றில் = சபையில்; பொற்பு = அழகு; குடபுலம் = மேற்றிசை; அற்பகல் = அல்லும்பகலும்; நாண்மலர் = அன்றலர்ந்த மலர்; ஏரம்பனை = விநாயகக்கடவுளை.

(௪) சூர் = தெய்வப்பெண்கள்; ஆட்டுப்பயில் = விளையாடப் பழகும்; சயிலம் = மலைபோன்ற; தகுவியர் = அசுர மாதர்; மறநீடு = கொடுமைமிகுந்த; புலவு = மாமி சத்தை; அலகை = பேய்; பாராட்டுத்தூர = துதிக்க; பணித்த = ஏவிய; முருகவிழ் = தே[illegible]லர்ந்த

டவுணுருடற் புலவலகை நிறையத்தேக்கிப், பாராட் டுத் தர்வடிவேற் படைபணித்த கரனரன்பார்ப் பதிக் குச் செல்வச், சீராட்டுப் பிள்ளையெனுமுருகன் முருகவிழ்மலர்த்தாள் சென்னி சேர்ப்பாம். (௪)

இரங்குன்றன் றஞ்சநமக் கென்றுமக வான்முத லோ ரிரப்ப நீண்ட, கரங்குன்றம் படைத்தனைய கரிமுகத்தோ னரிமுகத்தோன் கதங்கொள் சூரன், வரங்குன்ற மயிலுகைத்தங் கயிலெடுத்த மலர்க்கரத்தோன் மஞ்சு துஞ்சும், பரங்குன்றத் திருந்தசெவ்வேளடிக்கடிச்செம் பதுமமலர் பணிதல் செய்வாம். (௫)

ஈரலைவா யசங்கவரப் பிணங்கிடக்குங் களத்தமர் நீத் தெய்திநொய்தில், வாரலைவா யுறுமொருமா வரையோரொன் றோரிரண்டா வகிர்ந்த வேலோன், வேரலைவா யழிக்க மென்றோட் கவின்படைத்த வள்ளிசுரவேழத் தோடுஞ், சீரலைவாய் வருமடிக ளடியரடிப் பொடிமுடியிற் சேர்த்தல் செய்வாம். (௬)

---

(௫) இரங்கு = கருணைசெய்; நீண்டகரம் குன்றம்படைத் தனைய=மலையானதுஓர்கையைப்பெற்றதுபோல; கரிமுகத்தோன் = தாரகன்; அரிமுகத்தோன் = சிங்கமுகாசூரன்; கதம் = உக்கிரகோபம்; உகைத்து = செலுத்தி; அயில்=வேல்; மஞ்சு=மேகம்; துஞ்சும் தங்கும்; கடி=வாசனை.

(௬) வாயசம் = காக்கை; அமர்நீத்து = போரையொழித்து; எய்தி = நீங்கி; நொய்தில் = விரைவில்; வார் = நீண்ட; அலைவாய் = சமுத்திரத்தினிடத்து; மா= மாவிருக்ஷமாயிருந்த சூரபத்மனையும்; வரை = கிரவுஞ்சகிரியையும்; ஓரொன்று = ஒவ்வொன்றையும்; ஓரிரண்டா = இரண்டுபிளவாக; வேரல் = மூங்கிலுக்கு; வாய்=பொருந்திய; ஐ—அழகை; அழிக்க = கெடுக்க; கவின்=அழகு; சுரவேழம்=தெய்வயானை.

பெருவாவிக் கயனயனக் குறத்திமுகாம் புயமலர்ந் தும் பெட்பினென்று, மொருவாவி னன்குடிலைப் பொருள்விரித்துத் தாதைதனக் குரைத்தோ னூர்கா, மருவாவி நன்குடிஞைப் புனன்மலர்த்தே னுடனள்ளி வயற்குப் பாயுந், திருவாவி னன்குடிவாழ் செவ்வே டன் சேவடிகள் சிந்தை செய்வாம். (எ)

பாரகத்தும் விசும்பகத்தும் பயின்முனிவ ரிமைய வர்தம் பழங்கணீங்கத், தாரகத்தொன் மறையுருவாய் மருவுசிவ சத்திதரு சத்தி யால்வெஞ், சூரகத்தைத் துளைபடுத்தியொருதோகை யேறியிருதோகைமாரோ, டோரகத்தி லிருந்தபிரா னென்னகத்தி லிருக்கவிடர்க் கிடமின்றென்பால். (அ)

நீடலுறழ் கருங்கனங்கள் படிந்துமுழ வெனமுழங்க நிரந்துதும்பி, பாடல்புரி தரத்தழைத்த பாசடைச்

(எ) முகாம்புயம் = முகமாகியதாமரைமலரை; பெட்பின் = பெருமையானது; என்றுமொருவா = எப்பொழுதும் நீங்காத; இனன் = சூரியனாகியகுமரவேள்; குடிலை = பிரணவம்; ஊர் = ஊராவது; காமரு = அழகிய; வாவி = தடாகத்துநீரும்; குடிஞைப்புனல் = நதிநீரும்.

(அ) பார் = மண்ணுலகத்தும்; விசும்பு = விண்ணுலகத்தும்; பயில் = வசிக்கும்; பழங்கண் = துன்பம்; தாரகம் = ஆதாரமாயுள்ள; தொல் = பழமை; சத்தியால் = சத்தி வேலால்; சூரகத்தை = அசுரர துமார்பை; ஒருதோ கை = ஒப்பற்றமயில்; இருதோகை = மயில்போலுஞ் சாயலையுடைய வள்ளியம்மைதெய்வயானையாமிருவர்.

(க) நீடு = மிகுந்த; அல் = இருளை; உறழ் = ஒத்த; கருங் கனங்கள் = இருண்டமேகங்கள்; முழவு = பேரிகை; நிரந்து = விளங்கி; பாசடை = பசுமைபொருந்திய இலைகளையுடைய; பணை = சோலை; செய்ய = சிவந்த.

சந் தனப்பணையிற் படருஞ்செய்ய, கோடலலர்விளக் கேந்தக் குலமயினு டகம்புரியுங் குன்றுதோறு, மாடல் புரிமுருகனிரு சரணமலர் பரவிவினை யகற்றிவாழ்வாம்.

உருத்தணியாய் வருமசுரர் குடறுணிக்கு நெட்டி லைவே லுரவோய் துன்பக், கருத்தணியாப் பெருவெ யிலுட்டிளைத் திளைத்தகளையகலக் கருணைக் கண்டந், திருத்தணியார் கழனிழற்கீ ழென்றுவழி படுமடியா ரிதயத் துள்ளுந், திருத்தணியாம் பதியகத்தும் வாழ் குமர குருபரன்றாள் சிரமேற் கொள்வாம். (௧0)

பொருவினறு மலர்பொதுளுந் தண்டலைசூழ் கதி ரைநகர்ப் புனிதன் பாத, முருகியுளத் தழுத்திவினை நீறழுத்து மாறெழுத்து முணர்ந்து நாவின், முருகசர வணபவசண் முககுகவென் றனுதினமுமொழிவோர் தங்கண், மருமருவு கமலமல ரடிமுடியின் மீதுவைத்து வணங்கல் செய்வாம். (௧௧)

நந்திதேவர்.

செய்யதழற் புரிசடையுந் திருநுதலிற் றனிவிழி யுந் திண்டோணான்குங், கையதனிற் சரிகைமழுப் பிர ம்புகலை யடிச்சிறுமான் கன்றுந் தாங்கி, வையமுத

---

(௧0) உருத்து=கோபித்து; அணியாய்=வகுப்பாக; நெடு= நீண்ட; இலைவேல்=இலைபோலும் வடிவாகிய வேல்; உரவோய்=உடையவனே; துன்பக்கரு = துன்பத் தைத்தரும் பிறவிநோய்; திளைத்து = அழுந்தி; இளைத்த = வருந்திய; கருணைக்கண்தந்து = கிருபா நோக்கஞ்செய்து; இருத்து=இருக்கச்செய்.

(௧௧) பொருவில்=ஒப்பற்ற; பொதுளும் = அடர்ந்துள்ள; தண்டலைசூழ் = சோலைசூழ்ந்த; கதிரைநகர் = கதிர் காமம்; வினைநீறழுத்தும் = இருவினைகளை நீறாக்கும்.

லனைத்துலகுந் தொழுங்கயிலை மலைகாக்கமதியுஞ் சூடி, மையனருள் பெற்றநந்தி யடிக்கமல முடிக்கமல மாக வைப்பாம். (௧௨)

சரஸ்வதி.

காரதிருங் கயிலைமலைக் கண்ணுதன்முப் புரமெரிக்கக் கருது மந்நா, ணீரதிகந் தருந்தரங்கத் தடங்கடல்சூழ் திடம்புடவி நெடுந்தே ரூர்ந்த, சாரதிதன் றிருநாவி லடியருளத் தினிலிருக்குந் தவள மேனிப், பாரதி செம் பதப்பதுமத் துணைப்போது முப்போதும் பரவல் செய்வாம். (௧௩)

சண்டேசுவரர்.

நீளிரண்டு கரத்தெடுத்த நிறைகுடப்பான் முதற்புனித நீரி லாட்டி, வாளிரண்டு நிகர்த்தவிழி மலைமகள்கேள் வனைவழுத்தி மலர்கள் சாத்தி, யாளிரண்டு பதமளித்தென் றருச்சிக்கு மமையமதி லவஞ்செய் தந்தை,

---

(௧௨) செய்ய=சிவந்த; தழல் = அக்கினிநிறம்வாய்ந்த; புரிசடை=முறுக்கமைந்தசடை; நுதலில்=நெற்றியில்; தனிவிழியும்=ஒப்பற்றகண்ணும்; சுரிகை = கத்தி; முடிக்கு=சிரசிற்கு; அமலம்=பரிசுத்தம்.

(௧௩) காரதிரும் = மேகங்கள்சப்திக்கும்; நீரதிகந்தரும் = மிகுதியான ஜலம்பொருந்திய; தரங்கம் = அலை; புடவி=உலகம்; ஊர்ந்த=செலுத்திய; சாரதி=பிரமன்; தவளமேனி = வெண்ணிறம்; பதுமம் = தாமரை; துணைப்போது = இரண்டுமலர்; முப்போதும்=காலை உச்சி மாலை யென்னு முக்காலத்தும்.

(௧௪) பான்முதல் = பால்முதலாக; நீரில் = நீரிறுதியாக; ஆட்டி = அபிஷேகஞ்செய்து; ஆளிரண்டு பதமளித்து = இரண்டு திருவடிகளைத்தந்து அடிமைகொள்; எறிந்த=வெட்டிய; அவம்=இடையூறு.

தாளிரண்டு மறவெறிந்த சண்டேசர் மூண்டகப்பொற் றாளிற்றாழ்வாம். (கச)

திருஞானசம்பந்த சுவாமிகள்.

வெங்குருவிற் கவுணியர்தங் குலத்துதித்து மீண வன்றன் வெப்புங்கூனு, மெங்குமிசை பெறமாற்றி யமணரெண்ணா யிரர்கழுவி னேறவேற்றிப், புங்கமி லென் பரிவையுருப் படைத்துயிர்பெற் றெழப்பதிகம் பாடி மேன்மை, தங்குமறைத் திருஞான சம்பந்தன் றாட்டுணை கடலைமேற் கொள்வாம். (கரு)

திருநாவுக்கரசு சுவாமிகள்.

காவரசு மலரயன்மால் கடவுளர்க்காச் சென்றமா செய் காம ஞைமம், பூவரசு படவிழித்துப் புனவே ங்கை யித்தியதழ் புனைந்து போர்த்த, தேவரசு மனம கிழத் திருப்பதிக மிசைத்தமிழிற் சிறக்கப் பாடு, நாவரசு பதம்பரசு நமக்குயர்பொன் னுட்டரசு நல்கு மன்றே. (கசு)

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

மங்குணிறத் திருநெடுமால் வளையெயிற்றுப் பெரு ங்கேழல் வடிவந் தாங்கி, யங்கணில முழுதுமுழு தறி

(கரு) வெங்குரு=சீகாழி; மீனவன்=பாண்டியன்; இசை=கீர்த்தி; மாற்றி=நீக்கி; ஏற=சம்மதிக்க; புங்கமில்=குற்றமற்ற; அரிவை = பெண்; மறை = வேதியர் குலத்து.

(கசு) மங்குல் = மேகம்; வளையெயிற்று = கோரைப்பல்லை யுடைய; கேழல்=பன்றி; அங்கண் = இடமகன்ற; உழுது=தோண்டி; சேப்ப = சிவக்கும்படி; சரம் = அம்பு; வை=கூர்மை; பொங்கு=மிகுந்த; சிந்தை = தூதாக; அரனை=பரமேசுவரனை.

வரிய கமலமல ரடிகள் சேப்பச், சங்கணிகைக் குதலை மொழிச் சரவைவிழிப் பரவையென்பா டன்பாலன் பாற், பொங்கிருளிற் சந்தரனை நடப்பித்த சுந்தரனைப் போற்றல் செய்வாம். (கஎ)

மாணிக்கவாசகசுவாமிகள்.

பெருவாத பித்தகபப் பிணிக்குடையு முடற்சும க்கும் பிறந்தை நீக்கி, யொருவாத சிவகதியி னுரிமை பெற நறவமல ருமிழுஞ் சோலை, மருவாத மளைந்து லவு மன்றுடையாற் குக்கோவை மாலை சாத்துந், திரு வாத வூரடிக ளடிகள்படி யுறவணங்கிச் சென்னி சேர்ப்பாம். (கஅ)

தில்லைமூவாயிரவர்.

செம்மையா ரழலொருகை துடியொருகை தரித்துமன்றிற் றிருக்கூத் தாடு, மெம்மையா ளுடையபிரான் யாமவரி லொருவரென்றன் றிசைக்கப் பெற்ற, மும்மையா யிரமுனிவர் பொற்பொதுவிற் றிருப்பணிகண் முயன்று செய்வோர், தம்மையா யிரமுறைகை தொழுதனையோர் தாட்டுணைக டலைமேற் கொள்வாம்.

(கஎ) காவரசு=இந்திரன்; ஐம்பூவரசு = ஐந்து புஷ்பங்களாலாகிய பாணங்கட்குத் தலைவன்; புனம் = காடு; அத்தி=யானையினது; அதழ்=தோல்; தேவரசு= பரமேசுவரன்; பரசும்=துதிக்கும்.

(கஅ) குடையும் = துன்பப்படுத்தும்; பிறந்தை = பிறப்புக்குரியவினை; ஒருவாத=என்றுங்கெடாத; நறவம் = தேன்; மரு = வாசனையை; வாதம் = காற்றானது; அளைந்து=கலந்து; உலவும்=வீசும்; படியுற = பூமியிற்பொருந்த.

(கக) செம்மை=சிவப்பு; துடி=உடுக்கை; பொற்பொது= கனகசபை; மன்றில்=சிதம்பரத்தில்.

சிவனடியார்.

பொய்விரவு பவநீறு படப்புரிவெண் டிருநீறு பூசிக் கண்டி, கைவிரவு மணியினராயஞ்செழுத்து முணர்ந்து மனக் களங்க நீங்கி, மெய்விரவு மறைவரம்பி னிலை கடவா தொழுகியருண் மேன்மை பூண்ட, மைவிரவு கண்டர்தொண்டர் மலரடிகள் சிரத்திருத்தி வழுத்தல் செய்வாம். (௨௦)

பாயிரம்.

கந்தமலர்ப் பொழில்புடைசூழ் தில்லைவனத் தறி ஞர்திருக்கடைக்க ணோக்கி, முந்தவுரைத் தனர்பலரு மாயினுநீ யாகமநூன் மொழிவழாமற், பந்தமறுத் திடு ஞ்சிவராத் திரிவிரத சரிதைதனைப் பாடுகென்னச், செந்தமிழி னுயர்விருத்தப் பாவதனாற் றிரட்டியொன் றாய்ச் செப்பலுற்றேன். (க)

வீணிலிவன் றனதுமடம் வெளிப்படையாச் செய் தனனால் வித்தின் பாதி, நாணிலனென் றெனையுலகி னுவலர்களருவரதை நாடிச்சற்றும், பேணிலனின்மல னிரவின் பெருமையெடுத் துரைக்குமிந்தப் பேறுகூறு,

(௨௦) பொய்விரவு = அழியுந்தன்மையை (முடிவா)யுடைய; பவம்=பிறப்பு; மணிவிரவுகண்டிகை=உருத்திராக்க மணிகளாற் புனையப்பட்ட கழுத்தணி; மறைவரம் பின்=வேதங்கூறிய விதிப்படி; நிலை = ஒழுகுதல்.

(க) கந்தம்=வாசனை; பொழில் = சோலை; புடை=பக்கம்; பந்தம்=இருவினைக்கட்டு.

பேணிலனெண் சிவபதத்து ளிருத்துமெனும் விருப்புளத்தை யீர்த்த லாலே. (உ)

வேறு.

அரியநற் பரத விதிமுறை வழுவா தாடுநராடல் கண்டுவப்போர், விரிசினைத் தருவின் வாழ்கவிநடமுங் கண்டுளவிருப்பொடுவியப்பார், தெரிதமிழ்ப்புலவரமிழ் தெனத் தெருட்டுஞ் செய்யுள்கேட் டகமகிழ் சிறந்தோர், குரியரென் புன்சொற் கவிசெவியேற்றுள்ளுவப் புறற் கென்பதா லுரைத்தேன். (ங)

(உ) மடம்=அறியாமை; வெளிப்படை=யாவரும்அறியும்படி; ஆல்வித்தின்பாதி=ஆலம்விதையிற்பாதியளவேனும்; பேணிலன்=கருதினேனில்லை; நின்மலன்இரவின்= சிவராத்திரியின்; பேறு = பயன்; கூறும்=சொல்லுகின்ற; ஏண்=உயர்வுபொருந்திய; நிலன் = இடமென்று; எண்=நிச்சயிக்கப்பட்ட.

(ங) சினை=கிளை; தரு=மரம்; கவி=குரங்கு.

சிவராத்திரிபுராணம்.

உற்பவச் சருக்கம்.

திலக வாணுதற் கலைமகள் செறிதலாற் றினமு
மிலகு நான்மறைத் தொனிநனி யிரைத்திடு தலினு
லலகிலா வுயிர் படைக்குநான் முகற்கிலை யாமென்
றுலகுபோற் றுநை மிசவன வளஞ்சிறி துரைப்பாம். (க)

மண்ட லந்தனைச் செங்கனிப் பவளவாய் மடுத்தன்
றுண்ட முண்டகக் கட்புரு டோத்தம னுறைவை
குண்ட மொண்டழற் கண்ணினன் குலவுல கொப்பென்
றண்டர் யாவரும் புகழ்வது நைமிசா ரணியம். (உ)

முனிவர் முன்னைநாண் முண்டகத் தவிசினன் முகனைப்
புனித மாதவம் புரிந்தியாம் வைகிடப் புவியி
லினிய நற்றல மியம்புதி யென்னவெண் கமல
வனிதைகேள்வனோர் நுண்ணுதித் தருப்பையைவாங்கி.

(க) வாள்நுதல் = ஒளிபொருந்தியநெற்றி; செறிதலால் = வசித்தலால்; இலகு = விளங்கிய; நனி = மிக்க; இரைத்தல் = சப்தித்தல்; அலகிலா = எண்ணிக்கையில்லாத. (இச்செய்யுள் பிரம்மதேவனுக்கும் நைமிசாரணியத்திற்குஞ் சிலேடையாம்.)

(உ) மண்தலம் = பூமியை; மடுத்து = நிறைத்து; முண்டகக்கண் புருடோத்தமன் = விஷ்ணு; உறை = வசிக்கிற; ஒள் = சிறந்த; தழற்கண்ணினன் = அக்கினிநேத்திரமுடைய சிவபெருமான்; குலவுஉலகு = விளங்குகின்ற உலகம், அஃதாவது சிவலோகம்.

(ங) முண்டகத்தவிசின் = தாமரைமலரைப் பீடமாகவுடையன்; வைகிட = வசிப்பதற்கு; வெண்கமலவனிதை = சரஸ்வதி; நுண்ணுதி = கூர்மைபொருந்திய நுனி.

இருகை யால்வளைத் துருட்டியீ திறுத்திடு மிடத்திற்
பொருவின் மாதவம் புரிதிரென் றுரைத்திடப்போனார்
கருது மக்குசை தங்கிய கானமற் றதனாற்
றிருவு றைந்திடு நைமிச வனமெனச் சிறந்த. (௪)

துன்று கொன்றையாற் பசுங்கொடி விரவலாற் சுடுதீ
யென்று மேவலாற் கடுவிடப் பணிகளெய் துதலாற்
கன்று மானுகண் டுறைதலாற் கதிர்மணிக் கனக
மன்று ளாடிய பரம்பர னிகர்க்குமவ் வனமே. (௫)

ஆண்டை மூர்துயர் சோலைக ளறவருக் கடைகாய்
மாண்ட நற்கனி மலர்முதல் வழங்கினஞ் சுரர்க்கு
மீண்ட ளித்திட வேண்டுமென் றெண்ணிவானளவாய்
நீண்ட வன்றடஞ் சினைக்கையை நீட்டியே நிற்கும். (௬)

சடையர் குண்டிகை தரித்திடுங் கரத்தர்கண் டிகையின்
றொடைய ராதப மறைத்திடுந் தோகைமென் பீலிக்
குடையர் செய்யகற் றோய்த்திடுங் கோடிக மிறைஞ்சி
யுடையர் மாதவத் துறுவர்க ளுறுவதவ் வனமே. (௭)

---

(௪) இறுத்திடும்=தங்கும்; பொருவில்=ஒப்பற்ற; குசை=தருப்பைச்சக்கரம்; கானம்=காடு; மற்று = பின்.

(௫) துன்று=நெருங்கிய; பசுங்கொடி=பச்சைநிறம்வாய்ந்த கொடிபோன்ற உமாதேவியார்; விரவல் = பொருந்தல்; மேவல்=பொருந்தல்; பணிகள் = பாம்புகள்; எய்துதல்=பொருந்தல்; உகண்டு = துள்ளியுலாவி. (இச்செய்யுள் பரமேசுவரனுக்கும் நைமிசாரணியத்திற்குஞ் சிலேடையாம்.)

(௬) அறவருக்கு = தபசிகளுக்கு; அடை = தழையையும்; மாண்ட=பெருமைதங்கிய; சுரர்க்கு=வானோர்க்கு; வன்தடஞ்சினைக்கை=வலிமையும் பருமனும்பொருந்திய கிளையாகிய கை.

ஆதபந்தெறு வேனிநா ளம்புதந் துளித்துச்
சீத நீர்பொழி மாரிநா ளிமம்பெயுந் தினங்கண்
மாத வந்தவ ழுறிழைத் தும்பரு மதிக்கப்
பாத கங்களைக் கடிந்திடும் படிவரப் படிவர். (அ)

உருப்ப வெந்தழல் வேட்பவ ரொண்மலர் சமிதை
தருப்பை தண்டளி ரெடுப்பவர் தமனியச் சிகரப்
பருப்ப தந்தனைத் தனுவெனக் குனிசெய்த பரனை
விருப்ப மோடருச் சிப்பவ ரெண்ணிலார் விளம்பில். (௯)

(எ) குண்டிகை = பாத்திரம்; கண்டிகையின்தொடையர் = கழுத்தணியென்னும் உருத்திராக்க மாலையைத்தரித்தோர்; ஆதபம் = சூரியகிரணத்தை; தோகை = மயில்; பீலி = இறகு; குடையர் = குடையையுடையவர்; கல் = காவி; கோடிகம் = வஸ்திரம்; இறைஞ்சி = மரவுரி; உறுவர் = முனிவர்கள்; உறுவது = வசிப்பது.

(அ) அப்படிவர் = அந்தமுனிவர்கள்; ஆதபம் = சூரியகிரணம்; தெறும் = தீய்க்கின்ற; வேனிநாள் = வெயிற்காலத்தில் (பஞ்சாக்கினிமத்தியிலும்); அம்புதம் = மேகம்; துளித்து = தூறி; சீதநீர்பொழிமாரிநாள் = குளிர்ந்த மழைபெய்யும்கார்காலத்தும்; இமம்பெயுந்தினங்கள் = பனி பெய்யுங்காலத்தும் (ஆறு ஏரிமுதலிய நீர்நிலைகளிலும்); உம்பருமதிக்க = (மண்ணுலகத்தவர்களும்) விண்ணுலகத்தவர்களு மெச்ச; மாதவந் தவழுறிழைத்து = சிறந்ததவத்தைத் தவறுதுசெய்து; பாதகங்களைக்கடிந்திடும் = தீமைகளையொழிக்கும்; படிவர் = சொரூபத்தை யுடையவர். அஃதாவது தூய்மை பொருந்திய அந்தக்கரணத்தையுடையவர்.

(௯) உருப்பம் = சுவாலை; வேட்பவர் = வளர்ப்பவர்; ஒண் = சிறந்த; சமிதை = அரசுமுதலிய மரச்சுள்ளிகள்; தமனியம் = பொன்; பருப்பதம் = மேருமலை; தனு = வில்.

இன்ன நைமிச வனத்தியல் பனைத்தையு மெடுத்து
வன்ன மாமணி கிடந்தொளிர் பஃறலை வாயாற்
சொன்ன வூழிகள் பற்பல தொலைந்திடத் துணிந்து
பன்ன காதிபன் பகரினும் பகர்ந்திடற் கரிதால். (கo)

தெருண்ம னத்துயர் வியாதன்மா ணாக்கரிற் சிறந்த
மருண்ம னத்தினர்க் களவிடற் கரியநான் மறையின்
பொருண்ம னத்துணர் சூதன்முற் புராணநூல்வல்லோ
னருண்ம னத்துட னணையநை மிசவனத் தடைந்தான்.

வேறு.

வந்தமாமுனிவன் றனக்கெதிர்புகுந்து வருகென வுரைத்திவண் வரகீ, யெந்தமா தவஞ்செய் தனமென முகம ணியம்பியங் கியாவருமிறைஞ்சி, யந்தமாமணிப் பொற் றவிசினிலிருத்தி யருத்தியோடருக்கிய முதலா, முந்தவா தரவிற் பூசனைவிதியின் முறைதவ றுவகை முடித்து. (கஉ)

(கo) இன்ன = இத்தன்மையுடைய; இயல்பு = சுபாவலட்சணம்; வன்னம்=நிறமுள்ள; பஃறலை = பலதலை; தொலைந்திட = செல்ல; பன்னகாதிபன் = சர்ப்பங்கட்குத்தலைவன் அஃதாவது(வாசுகி, அநந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் என்னும் அட்ட நாகங்கட்குத் தலைமை பெற்ற) ஆதிசேடன்.

(கக) தெருள்=தெளிவு; மருள்=மயக்கம்; முன் = முதன்மையாகிய.

(கஉ) புகுந்து = போய்; அந்தம்=அழகு; பொன்தவிசு=பொன்னாற்செய்தபீடம்; அருத்தி = உணவு; முந்த ஆதரவில்=முற்பட்டஅன்புடன்.

மணிழைக்கரு முகின்மின் னிறத்தசெஞ்சடில மாத வர் சூதனை நோக்கி, யிழைப்பதற் கெளிதாய்ப் பவக்க டல்சுவற்றி யிருங்கதிப் பேறுநல் குவதாய்க், குழைக் கயனடந்து கழிக்கயன்மருட்டுங் கூர்விழிக் கோதைபங் கிருக்கு, முழைக்கரப்பெருமான் விரதமொன் றெமக் கிண் டுரைத்திடவேண்டுமென் றிரப்ப. (கங)

நன்றென் முகமு மிதையமு மலர்ந்து நயனநீர் பொழிதரவிருந்தே, மூன்றவமிழைத்தபயனிதுகேட்க முயன்றது நீவிர்முக் குறும்பை, வென்றமாதவத்தீர் விடையுயர்த்தருளும் விமலனுக் குரியநல்விரத, மொன் றுளதமர ரனைவருநோற்ப துரைக்குவ னுவந்துகேட் டிடுமின். (கச)

மின்னைநேர்சடிலத் தவிர்மதிக்கொழுந்து மிலைச் சிய சிவனிராப் பெருமை, யன்னவூர் திபுமோ ராயிரங் கவைநா வனந்தனு மறைந்திடற் கரிதான், மன்னுமா தவஞ்சேர் நந்திவா னவற்கு வழுவையு முழுவையு முரித்தோன், முன்னைநா ளுரைத்த தென்னொரு நா வான் மொழிந்திட முடியுமோ முடியா. (கரு)

(கங) சடிலம்=சடை; இழைப்பதற்கு=அநுஷ்டிப்பதற்கு; சுவற்றி=வற்றச்செய்து; இருங்கதி = சிறந்தபதவி; குழைக்கு அயல்நடந்து = காதின் குழையளவுஞ் சென்று; உழை=மான்; கழி=சமுத்திரக்கால்வாய்; கயல்=கெண்டைமீன்.

(கச) முக்குறும்பை=காமம் வெகுளி மயக்கமென்னு முக்குற் றத்தை; விடையுயர்த்து=இடபக்கொடியைநாட்டி.

(கரு) அவிர்=விளங்கும்; மிலைச்சிய = தரித்த; கவைநா= பிளந்தநாக்கு; அனந்தன்=ஆதிசேடன்; மன்னு = நிலைபெற்ற; வழுவை=யானை; உழுவை=புலி.

உலகுயிர் பிரமன் படைப்பதுந் திருமா லுயிர்த் தொகை காப்பது மூலகி, லலகிலா வளம்பெற் றியக்க ர்கோ னளகை யளிப்பதுங் களிப்பொடிந் திரன்மு, னிலகுபொன் னுலகம் புரப்பது மதிய மிரவிசெந் தழ ற்கிறை யிவர்க, டலைமைபெற் றதுவுஞ் சிவநிசி விரதந் தனையிழைத் தெனவுளத் துணர்வீர். (௧௬)

கூறுநான் மறையோர்க் கிருநிலம் பசும்பொற் குவைபசுக் கோடிநல் கிடினும், வேறுவே றுரைத்த விரதநோற் றிடினும் விரியுளைப் புரவியின் வேள்வி, நூறுசெய் திடினும் புரளவெண் டரள நுரைத்திரை கொழித்திடுங் கங்கை, யாறுமூழ் கிடினுஞ் சிவநிசி நோற்போர் பெறுபய னடைதன்மற் றரிதால். (௧௭)

அந்தண ரரசர் வணிகர்வே ளாள ராதியா விழி குலத் துதித்த, வெந்தொழி லாள ரந்தமா விந்த விர தமே நோற்றிடு லவர்தா, மிந்திர னயன்மா லிமையவர் முனிவர்யாவரு மிறைஞ்சிநின் றேத்தக், கந்தடுகளிறன் றுரித்துமெய்தரித்த கண்ணுதற் கடவுளிற் பொலிவார்.

---

(௧௬) இயக்கர்கோன் = யக்ஷர்கட்குத்தலைவனும் குபேரன்; அளகை=அளகாபுரி; அளிப்பது = காப்பது; செந் தழற்கிறை=அக்கினிதேவன்.

(௧௭) கூறும்=கொண்டாடும்; இருநிலம்=விசாலமான பூமி; குவை=குவியல்; விரி=விரிந்த; உளை = பிடரிமயி ரையுடைய; வெண்தரளம்=முத்து; கொழித்திடும்= ஒதுக்கிடும்;

(௧௮) இழிகுலத்துதித்தோர் = அநுலோமர் பிரதிலோமர் அந்தராளர் ஆகியமூவர்; வெந்தொழிலாளர்=கொடிய தொழில்களைப் புரிபவர்; அந்தமா = இறுதியாக; கந்து = கட்டுத்தறி; அடு = முறிக்கிற; கண்ணுதற் கடவுளிற் பொலிவர் = நெற்றிக்கண்ணையுடைய பர மேசுவரனைப்போல வாழ்வர் (அஃதாவது சாரூப்பியம் பெறுவர்.)

ஆவினைப்புரி நாலணிதருமருமத் தருமறைக் கிழ
வரைக் கருங்கண், மாவினை யளித்த கடலமிர் தனைய
மழலைமென் மொழிச்சிறு மகாரைக், காவினைப் பொரு
வுங் கருங்குழற் செவ்வாய்க் கன்னிய ரிவர்களைச் செகு
த்த, தீவினை யனைத்தும் பரிதிமுன் னிருள்போற் சிவ
நிசி நோற்றிடற் றீரும். (க௯)

மறைகளிற்சாம மகங்களிற்புரவி மகமலை களின்
மக மேரு, நிறைபுன னதியிற் கங்கையோ ரைந்தாய்
நிகழ்ந்தபூ தத்தினா காய, முறைதெரி சுரரிற் கருமுகி
லூர்தி முதன்மைபெற் றுயர்ந்ததா மென்ன, வறைதரு
விரதமனைத்தினு முரைக்குமா னிரவதிகமென் றறிமின்.

மற்றொரு விரதஞ் சிவநிசிக் கிணையா மதிப்பது
மாண்டுமீண் டுதித்துப், பெற்றன தொழில்க ளியற்றி
நின் றுழலும் பிரமன்மான் முதலிமை யவரைப், பற்
றலர் புரமோர் கொடியினி லடலை படவட வரைகுனித்
தருளுங், கற்றையஞ் சடிலக் கண்ணுதற் கிணையென்
றறிவிலா ருரைப்பது கடுக்கும். (உக)

(க௯) அணிதரும்=அணிகின்ற; மருமத்து=மார்பையுடைய; மாவினை = இலக்குமியை; மகார் = பிள்ளைகள்; காவினை = சோலையை; பொருவும் = ஒத்த; செகுத்த=கொன்ற.

(உ0) மகம்=யாகம்; மகமலை=பெரியமலை; நிகழ்ந்த=விளங்கிய; முறைதெரி = நீதிமுறைகளைத் தெரிந்துள்ள; சுரர்=தேவர்; அறைதரும்=சொல்லுகிற; கருமுகிலூர்தி=இந்திரன்.

(உக) பெற்றன = அடைந்தனவாகிய; உழலும் = அலைந்து வருந்தும்; பற்றலர் = பகைவர்; புரம் = திரிபுரம்; அடலை=சாம்பல்; வடவரை = மேருமலை; குனித்தல்=வளைத்தல்; கற்றை அம்சடிலம்=அழகிய சடைகளின் தொகுப்பு; கடுக்கும்=ஒக்கும்.

அன்புளாரன்றி யன்பிலாரெனினு மரனிர வினி
னுணா வகற்றிப், புன்புலா லுடலம் வருந்திடத் துயில்
கண் பொருந்திடா தருச்சனை புரிந்தாற், றன்பநீள்
பிறவிச் சுழிக்கடலழுந்தித் துயருறார் துறக்கமே முதலா,
மின்பமார் பதத்திற் போகமார்ந் தமல னிணைப்பதம்
பெறுவரென் றிசைத்தான். (௨௨)

இனையன மொழிகள் கனைகட லமிர்த மெனச்செ
விப் புலம்புக முனிவ, ரனைவரு மகிழ்ந்து மெய்ம்மயிர்
பொடிப்ப வங்கையாற் றொழுதுபைங் குவளைச், சுனை
பயில் கயிலைச் சிவநிசி விரதத் தோற்றமு நோற்றிடு
மியல்பும், வினையக றவத்துச் சூதமா முனிவ விரித்து
ரைத் தருளென விளம்பும். (௨௩)

பெற்றுயர் கற்ப வீற்றுல கீன்ற பிதாமக னுலந்
துபே ருலக, முற்றுமற் றொடுங்கிப் பிரளயத் துயிர்கண்
முடிந்திடுங் கங்குலி னுளத்தன், புற்றுமா மறையா கம
விதிப் படிவண் டுழுதுதே னுண்டுபாட் டயரும், பொற்
றுணர்க் கடுக்கைத் தொடைமிடை சடிலப் புனிதனை
யருச்சனை புரிந்தாள். (௨௪)

---

(௨௨) அரனிரவு=சிவராத்திரி; துயில்கண்பொருந்திடாது= தூங்காது; துறக்கம்=இந்திரபதவி.

(௨௩) இனையன = இப்படிப்பட்ட ; கனை = சப்திக்கின்ற ; பைங்குவளை=நீலோற்பலம்நிறைந்த ; சுனை=ஊற்றுநீர்க்குளம் ; பயில்=பொருந்திய; தோற்றம்=உதிப்பு.

(௨௪) பெற்றுயர்=பிரம்மதேவனடைந்துயர்ந்த;கற்பவீற்று= கற்பமுடிவில்; பிதாமகன் = பிரமன் ; உலந்து = அழிந்து ; உழுது = கிண்டி ; பாட்டயரும் = கீதம் பாடும் ; பொற்றுணர் = பொன்னிறமுள்ள பூங்கொத்துகள் ; மிடை=நெருங்கிய.

யாமமோர்நான்குஞ் சென்றகன்றுகாந்தத் திருட் பொழு தகன்றபி னிதழித், தாமமார் புனைந்த சோம சேகரன்பொற் றாளிணைப்பணிந்தவன் றனது, வாமமா ரிமய வல்லியின் றனைநான் வழிபடு கங்குல்வா னவரு, நாமநீர்வேலி யுலகுளோரெவருஞ் சிவநிசி யெனநவின் றிடவும். (௨௫)

இச்சிவ நிசிநோற் றியாவரா யினுமுன் னிணையடித் தாமரை கருதிப், பச்சிமத் தடைந்த பரிதிபூ ருவத்திற் பருப்பதத் துதித்திடு மளவு, நச்சிநற் பூசை புரிந்தவர் முத்தி நண்ணவும் வேண்டுமென் றிரப்ப, வுச்சியின் மணிசே ருரகபூ டணனு முமையவட் கவ்வர மளித்தான். (௨௬)

ஆதலாற்சிவராத் திரியெனுநாம மனைவரு மறைந் திட நிகழ்ந்த, தீதலாற் பரம னிரவினிற் றோற்ற மின் னுமோர் காரணமுளதென், றோதவா ரிதிசூ ழுலகு ளோர் பொருட்டா வுறுவர்கேட் டுவந்துள முருகச், சூதமா முனிவன் வியாதன்முன் மொழிந்த சொற்படி சொல்லுவான் றுணிந்தே. (௨௭)

பின்னுமோர்கற்பவிறுதியினிரசப்பிரசமென்கமல வீட் டிருக்கு, மன்னவாகனனு முலகுமாருயிரு மழிந்

---

(௨௫) உகாந்தத்து = கற்பாந்தத்தில்; இதழி=கொன்றை; தாமம் = மாலை; சோமசேகரன் = சந்திரனைத்தரித்தோன் (பரமசிவன்); கங்குல்=இரவு; வேலி=வேலியாகச்சூழ்ந்த; நாமநீர்=பெருங்கடல்.

(௨௬) பச்சிமம்=மேற்றிசை; பரிதி = சூரியன்; பூருவம்= கீழ்த்திசை; பருப்பதம் = உதயகிரி; நச்சி = பக்தி வைத்து; உரகபூடணன்=சர்ப்பாபரணன்.

(௨௭) ஓதம்=அலை; உறுவர்=தபசிகள்.

திடுமற்றைநா ளிருண்ட, வன்னமாமுகில்க ளீண்டியோ
ரேழுமறிகடனீர்முகந்தெழுந்து, மூன்னரேபொழிந்த
பிரளயப்புனல்வான் முகட்டளவளவிமுட் டியதால். ()

ஊறிலா னுயிருக்குயிரதா யிருக்கு மொருபொரு
ளொப்புடனுயர்வு, வேறிலானகண்டபூரணமானவெறு
வெளி வெறுத்தெதி ரடக்கு, மாறிலா னிமய மலைமக
டனைத்தன் வாமமீ திருத்திஞேன் வாழ்கா, வீறிலா
முதல்வன் யாவருமுய்யயோகமுற் றிருந்தன னிப்பால்.

கானிமிர் துளபக் கண்ணியு மணியுங் கவின்பெறப்
புனைந்திடுங் கரிய, மேனிய னளித்த சராசர மனைத்து
மீளவும் படைப்பதற் கெண்ணி, யூனிமி ருடற்செங்
கட்பெருங் கேழ லுருத்தரித் தாழ்ந்தபே ருலகைக்,
கூனியமருபிற் றுங்கியப் புனலுட் குளித்துமீ தெடுத்
துயர்ந் ததற்பின். (௩௦)

(௨௮) இரசம் = சுவையுள்ள ; பிரசம் = தேன்பொருந்திய ; இருள் = கருமையாகிய; வன்னமாம்=நிறம்பொருந்திய; ஈண்டி=சேர்ந்து; மறிகடல் = அலைகளை மடித்தலையுடைய கடல் ; பிரளயப்புனல் = உகாந்தவெள்ளம் ; வான்முகடு=வானவுச்சி.

(௨௯) ஊறிலான்=கெடுதி யில்லாதவன் ; வெறுவெளி=சிதாகாசசுவரூபன் ; வெறுத்து = கோபித்து ; எதிர் = எதிர்த்து ; அடக்கும்=தன்னையடங்கச்செய்யும்; மாறிலான்=சத்துருவில்லாதவன் ; வாமம்=இடப்பக்கம்.

(௩௦) கான் = வாசனை ; இமிர்=வீசும் ; கண்ணி = மாலை ; மணி = கவுத்துவமணி ; கவின்பெற = அழகமைய ; அளித்த=காத்த ; ஊன்=மாமிசம் ; நிமிர் = மிகுந்த; கேழல்=பன்றி ; ஆழ்ந்தபேருலகை=பிரளயப்புனலாலழுந்திய பெரிய உலகத்தை ; கூனிய மருப்பு = கோரப்பல்.

சரிதிசைக் கிரிக ளெட்டுமெண் டிசையிற் றளம்
பிடா வகைமுதற் கூட்டி, விரிகதிர்ப் பசும்பொற் கொடு
முடிவிளங்கு மேருவை நிலைபெற நிறுத்திப், பரிவுறு
முயிர்க ளனைத்துமீ ரேழு புவனமும் பண்டுபோற்
படைத்தற், குரியநான் முகத்துக் குரவனை விரவு
முந்தியம் போதினு லுதவி. (௩௧)

பங்கயத் தயனைக் கடைக்கணித் துலகம் பண்டு
போற் படைத்திடப் பணித்துத், துங்கவேற் றடங்
கட் டிருமகள் சுருதி துதித்திடுந் துணைப்பதம் வருட,
வெங்கண்மா மணிச்சூட் டரவணைப் புறத்து வெண்
டிரைப் பாற்கட னடுவ, ணங்கண்மா ஞால முழுது
முண் டுமிழ்ந்த வமலனங் கறிதுயில் புரிந்தான். (௩௨)

---

(௩௧) சரி = சரிந்த ; திசை = திக்கு ; கிரி = அஷ்டகுலா சலங்கள், (அவை கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்னும் எட்டுமாம்); தளம்பிடா = அசையாது ; விரி = பரவிய ; கதிர் = பிரகாசம்பொருந்திய ; கொடுமுடி = உன்னதசிகரம் ; பரிவுறும் = துன்பமுற்ற ; பண்டு போல் = முன்னிருந்ததுபோல; நான்முகக் குரவன் = பிரம்மதேவன் ; விரவும் = பொருந்திய ; அம் = அழகிய ; உந்திப்போதினல் = உந்தியில் மலர்ந்தபுஷ்பத்தால் ; உதவி = உண்டாக்கி.

(௩௨) கடைக்கணித்து = கிருபாநோக்காற்பார்த்து ; பணித்து=ஆஞ்ஞாபித்து; துங்கவேல்=வெற்றியுற்றவேலனைய ; தடங்கண்=விசாலமானகண் ; வெங்கண்=உக்கிரமானகண்ணையும் ; மணி=மாணிக்கம்பொருந்திய ; சூட்டு = உச்சியையுமுடைய; அரவணை = சேஷசயனம்; புறத்து=மேலே ; அங்கண் = அழகிய இடம்; அறிதுயில் = யோகநித்திரை.

உந்தியி லுதித்த நான்மறைப் பிரமனுங்கருக்குமுக் காலமு முணர்ந்து, புந்தியிற் றெளிந்தி ரேழுல குடனே புலவர்கந் தருவர்கிம் புருடர், வெந்திற லரக்கரியக்கர்வா ளசுரர் விஞ்சையர் கருடர்பைசாசர், முந்திய சித்தர் மனுடர்நீ டுரகர் முனிவரர் முதன்முதற் படைத்தே. (௩௩)

பூதியமைந்தி னனுபவம் பொருந்திப் பொருவின் முக்குணங்களிற் றழுவி, யாதியிற் புகலுன் கிருபதின் மேலுன் கமைந்தநா லுயிர பேத, மோதிய யோனி நாலிடத் துதிப்பித் தொற்றையா ழியந்தடந் தேருர், சோதிவா னிரவி குளிர்கதிர் மதியுந் தோற்றுவித் தனனனத் துவசன். (௩௪)

பாருல கெவையுஞ் சராசரத் தொகையும் படைத்தபின் பண்ணவர் முதலாய்ச், சீருல விடுமீ ரொன்பது கணமுந் திரண்டிரு மருங்குசே விப்பக், கூருல வியவெள் ளுகிர்ப்பெரும் பெழ்வாய்க் கோளரி சுமந்த பொற் றவிசிற், காருல வியமைக் குழற்கருந் தடங்கட் கலைமகள் கொழுநன்வீற் றிருந்தான். (௩௫)

---

(௩௩) புலவர்=தேவர்கள்; வெம்=கொடுந்தொழிற்புரிவதில்; திறல் = வலிமையுடைய; அரக்கர் = இராக்கதர்; அசுரர் = சுராபானஞ்செய்யாதவர் (சுரா-அமிர்தம்); உரகர்=நாகர்.

(௩௪) பூதியம் = பூதம்; முக்குணங்களிற்றழுவி = இராசதம், தாமதம், சாத்துவீகமென்னு முக்குண சம்பந்தமாய்; யோனிநாலிடத்து = அண்டசம் சுவேதசம் உற்பிசம் சராயுசம் என்னும் நான்கினிடத்து.

(௩௫) பாருலகு = மண்ணுலகம்; சராசரம் = அசையும் பொருளும் அசையாப் பொருளும்; சீருலவிடும் = சிறப்புவிளங்கும்; குழல்=கூந்தல்.

பின்னோர் தினத்திற் றுன்வருத் தமைத்த பேருலகனைத்தையு நோக்கச், சொன்னமா கணங்கள் சூழ்வர வெழுந்து துலங்குமே லுலகுபா தலங்கள், பொன்னவிர் குடுமிப் பூதர முதலாப் போயவன் கண் டுடல் புளகித், தென்னினின் முதல்வ ரினிப்பிற ரொ ருவ ரிலரெனுமிருஞ்செருக் குற்றே. (௩௬)

உளமிகத்தருக்கிக் கொண்டுமண் டலம்பண் டுண் டவன் றொண்டையங் கனிவாய்த், தளரிடைக் கரிய கெண்டையந் தடங்கட் டாக்கணங் கின்றவன் சரமாத், துளவணிமருமத் தரியரவணையிற் றுணைவிழி முகிழ்த் தறி துயில்செய், கிளர்நெடுந் தமரத் திரைமணி கொழிக்குங் கீரவா ரிதிமருங் கடைந்தான். (௩௭)

விண்ணினின் றிழிந்து முதிர்ந்தசூற் காள மேக மொன்றமிர்தசா கரத்தி, னண்ணிய தெனவே நெட்டு டற்பகுவாய் நகுமணிச் சுடிகைவா ளரவிற், புண்ணிய முதல்வன் யோகநித் திரைமுன் புரிவது கண்டுளம் பொறும, லெண்ணிநின் றடர்ந்து கண்படை வளர் வோன் யாவனீ யெழுந்திரென் றிசைத்தான். (௩௮)

---

(௩௬) பொன்னவிர்=பொன்னிறமமைந்த: குடுமி=சிகரத்தை யுடைய; பூதரம்=மேருமலை.

(௩௭) தொண்டை = கோவையினது; தாக்கணங்கு = இலக் குமி; தவன் = நாயகன்; மருமம் = மார்பு; முகி ழ்த்து = குவித்து; கிளர் = விளங்கும்; நெடும் = பெரிய: தமரம்=ஒலியுள்ள; கீரம்=பால்.

(௩௮) முதிர்ந்தசூல்=கற்பம்நிறைந்த; காளமேகம்=கறுத்த மேகம்; நகு = பிரகாசிக்கும்; சுடிகை = முடி; பகு வாய்=பிளந்தவாய்; வாள் = கொடிய; அடர்ந்து = நெருங்கி; கண்படை = நித்திரை; வளர்வோன் = செய்வோன்.

வேறு.

அகலந்தனி லலர்மின்பயி லமலன்றனி லொருவி
யிகல்கொண்டிவை பகர்கின்றனை யார்நீயென வினவப்
புகலம்பர முலகும்பர்கள் புவனங்கனல் பவனஞ்
சகலந்தனி யுதவும்பொரு டானென்றுரை தந்தான். ( )

பூவுந்தியில் வந்தோனிவை புகலப்புய லனையான்
றாவுந்திரை தவழுங்கட றரையெண்டிசை வரையார்
மேவும்பல வுயிரும்பர்கள் விதியிங்குனை முதன்மற்
றியாவுந்தரு பரதத்துவன் யானென்றுரை செய்தான்.

மறைநாலுமென் னுவுற்றது மண்கால்புனல் விண்டீ
நிறைவாகிய பொருள்யாவுமென் னினைவின்படி படை
னிறையாகிய பரதத்துவன் யானல்லது நீயென [ப்பே
றறைவாயறி வற்றாயென வயனுங்கழ றற்றான். (௪௧)

அக்காலையி லிருவோரையு மடர்மாயை மறைக்கப்
புக்காருணர் வில்லாரமர் பொருவான்முயல் பொழுதிற்
கைக்கார்முக முனிவுற்றெதிர் கண்ணன்குனித் திட்டுத்
திக்கானைகள் வெருவும்படி சிறுநாணொலி செய்தான்.

---

(௩௯) அகலம் = மார்பு; அலர்மின் = இலக்குமி; பயில் = தங்குகிற; ஒருவி = ஒழித்து; இகல் = பகை; அம்பரம் = ஆகாயம்; பவனம் = காற்று.

(௪0) விதி = பிரமனே!; புயல் = மேகம்; தாவும் = கரையோடு மோதும்; தவழும் = அசைந்து செல்லும்; உனையும் = நீ முதலாக.

(௪௧) கால் = காற்று; இறை = தலைமைவாய்ந்த; கழறற்றான் = சொன்னான்.

(௪௨) அடர் = மயக்கத்தைச்செய்கிற; புக்கார் = புகுந்தவர்; கார்முகம் = வில்; குனித்திட்டு = வளைத்து; திக்கானைகள் = ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் என்னும் திசையானைகளெட்டுமாம்.

வலிசேர்ப்பு நெடுமால்கர மருவுங்கொடு மரநா
ணொலியாலர வரசும்பர்க ளுடனுட்கிட வுவரார்
கலியார்கடை யனல்கால்கிளர் காலந்தனை யொப்பச்
சலியாதட லுடனின்றடு சரமாரி பொழிந்தான். (௪௩)

கடுத்தானுருத் தெழுந்தாலெனக் காயுங்கத மிகவந்
தடுத்தான்முத லகிலஞ்சுடு மயிலம்புகள் பலவும்
விடுத்தானவை முடுகாதயல் விலகும்படி விரைவிற்
றடுத்தானொரு குசைகொண்டுயர் சலசத்தவி சுறைவோன். (௪௪)

சீறித்திசை முகனீடிய சிறையோதிம மதன்மே
லேறிப்பல படைமந்திர மெடுத்தோதினன் விடுத்தா
னூறித்தரு கருணைக்கட லுவணப்பு ளுகைத்தே
நூறிச்சிலகணைகொண்டொரு நொடியிற்றுகள்செய்தான். (௪௫)

கண்டந்தண னிவனாகமோர் கடிகைப்பொழு தளவிற்
றுண்டஞ்செய்வ னென்றேழ்கடல் சுவறச்சுரர் பதற
வண்டங்கள் வெடித்துட்கிட வசனிக்குல நாணுந்
தண்டொன்றது கொண்டங்கரி தடமார்பி லெறிந்தான். (௪௬)

---

(௪௩) கொடுமரம்=வில்; அரவரசு = ஆதிசேடனும்; உம்பர்களுடன் = தேவர்களும்; உட்கிட = நடுங்க; கலி= சமுத்திரத்தில்; ஆர்=பொருந்திய; அனல்=ஊழித்தீயும்; கால்=ஊழிக்காற்றும்; கிளர்=எழும்; கடைக்காலந்தனை = உலக முடிவுகாலத்தை; அடல் = வலிமை; அடு=கொல்லுகின்ற.

(௪௪) கடு=விஷம்; உருத்து=சீறி; காயும்=எரிகிற (மூளுகிற); கதம்=கோபம்; அடுத்தான்=அடைந்தான்; அயில் = கூர்மை; முடுகாது = தன்னிடம்வாராது; சலசம்=தாமரை.

(௪௫) ஓதினன்=மந்திரமோதி; ஊறித்தரும் = சுரந்தளிக்கும்; கருணைக்கடல்=அருளாழியாந் திருமால்; உவணப்புள்=கருடன்; உகைத்து=ஏறி; நூறித்துகள்செய்தான்=நொறுக்கிப்பொடிசெய்தான்.

(௪௬) அந்தணன்=பிரமன்; ஆகம்=மார்பு; உட்கிட=அழிய; அசனிக்குலம்=இடிக்கூட்டம்.

முதிரச்சின மெதிரச்சுதன் முடுகுங்கதை கடுசிற்
பிதிர்பட்டுதிர் தரமைப்புயல் பிளிறிற்றிடு மொலிபோ
லதிரப்பொரு செருவிற்றின மட்டாடலரக்க
ருதிரப்பிண முடைநாறிடு மோர்தண்டமு னுய்த்தான். (சஎ)

விண்ணுடெரி கதுவத்திரை விரியுங்கடல் சுவறத்
தண்ணார்மதி தபனன்றிசை தடுமாறினர் திரிய
மண்ணுடழி வுற்றும்பரு மடியும்படி மறமுற்
றெண்ணுதமிர் பொருத்திட்டன ரைம்பது வருடம். (சஅ)

பொருதிப்படி மலைவுற்றிடு போதிற்றிரு மார்பன்
சுருதிக்கிறை வன்சென்னி துணிக்கும்படி நெஞ்சிற்
கருதித்துணை விழியிற்கனல் காலக்கனல் காலும்
பருதிப்படை விட்டானது பலியாதுறல் கண்டே. (சக)

குரமா முகத் துருமே லினிக் கொள்வான் பர
சிவன்றன், சரமானதங் கெடுத்தேவினன் றனியாடல்
விற் குனித்தே, திரமாமுக மொருநான்குள செழுநான்
மறை யவனும், வரனார்கணை விடுத்தான்வளர் வட
வைக்கனன் மான. (ருo)

(சஎ) முதிரச்சினம்=கோபமதிகரிக்க; எதிர்முடுகும் = எதிரில்விட்ட; கதை=தண்டாயுதத்தை; கடுகில் = கடுகைப்போல; பிதிர்பட்டு=தூகளாய்; மைப்புயல் = கரியமேகம்; பிளிறுற்றிடும்=கர்ச்சிக்கும்; பொருசெருவில்=தாக்கும்போரில்; தினம்=நாள்தோறும்; அட்டாடல் = கொலைசெய்யும்; உதிரப்பிணம்=இரத்த வெள்ளத்திலிருக்கும் பிணத்தினது; முடை=மாமிசம்; உய்த்தான்=செலுத்தினான்.

(சஅ) எரிகதுவ=தீப்பற்ற; தபனன்=சூரியன்; மறம்=வீரம்.

(சக) மலைவுற்று=மாறுபட்டு; பொருதிடும் போதில்=போர் புரியுங் காலத்தில்; கனல்கால = அக்கினிப் பொறி பறக்க; கனல்காலும் பருதிப்படை = அக்கினியைக் கக்கும் சக்கராயுதம்.

(ருo) குரமா = குதிரை; பரசிவன்றன்சரம் = பாசுபதாஸ்திரம்; ஆடல் = வலிமையுடைய; திரம் = ஸ்திரம்; வரன் = சிவன்; வளர்=எழுகின்ற; மான=ஒப்ப.

டெண்டான்முடிக் கொண்டானிடம் பெற்றுனுத
விற்றீக், கண்டானுறு மெண்டோளிறை கண்டானகன்
மண்டா, னுண்டாமொடு நுண்டாதுத ழொண்டாமரை
யுறைவோன், றண்டானுதி வண்டான்முதிர் சமரம்
பொரு தமரம். (௫௧)

கடுவெஞ்சின மொடுதன்படை விடுகின்றனர் கடி
தின், றடுவெங்கள மிசைதுஞ்சுவ ரரியம்புய னனைவே,
சுடுவெங்கனல் சிகைகொண்டெழு சுடரின்றிரள் வடி
வாய், நடுநின்றனன் மதியம்பொதி நளிர்செஞ்சடை
முதல்வன். (௫௨)

எடுக்குங்குடமாதத்தினிலிலகும்பிறை குறையத்,
தொடுக்குந்திதி பன்னொன்றெனச் சொல்லுஞ்சதுர்த்
தசியி, னடுக்கங்குலி னப்பேரொளி நண்ணுற்றபி னன்
னோர், விடுக்கும்படை நீறாயவை வெந்திட்டன மாதோ.

வேறு.

நின்மலை தனக்கு மூத்த நீலமா மலைக்கும் வேதப்,
பொன்மலை தனக்கு நாப்பட் புரைதவிர் பதும ராக,
மன்மலைநின்றதென்ன மாறுகொண்டவர்தம் பிற்றுஞ்,

---

(௫௧) அகல்மண்தான் = அகன்ற உலகத்தை; நுண்தாது உறு = நுண்ணியமகரந்தங்களையுடைய; தண்டால் = தண்டாயுதத்தாலும்; நுதி = கூர்மையுள்ள; வண்டால் = அம்பினாலும்; தமரம் = ஓசை.

(௫௨) கடு = கடுமைமிகுந்த; கடிது = அதிசீக்கிரத்தில்; இன்று = இப்பொழுது; அடு = கொல்லுகின்ற; துஞ்சுவர் = இறப்பர்; சிகைகொண்டெழு = கொழுந்துவிட்டெரியும்; பொதி = தரித்த; நளிர் = கங்கை(ஆகுபெயர்).

(௫௩) குடமாதம் = கும்ப (மாசி) மாதம்; பிறைகுறையத் தொடுக்கும் = தேய்பிறையிற் றொடர்ச்சியாகும்; நண்ணுற்றபின் = தோன்றியபின்; அன்னோர் = பிரம்ம விஷ்ணுக்கள்.

சொன்மலை வுருதவண்ணந் தோன்றிய சுடரைக் கண்டார். (ருச)

பங்கயத் தயன்மால்விண்ணோர் பார்த்தகட் புலத்துக் கெட்டா, தங்கவர் மனத்தி னுறு மளவிடற் கரியதாகிச், செங்கதிர்ப் பரிதி கோடி திரண்டொரு வடிவாய்க் கூடிப், பொங்கொளி விரித்தா லென்னப் பொலிந்தபே ரொளியை நோக்கி. (ருரு)

அதிசய மடைந்து நீண்ட வழற்பிழம் பாகிநிற்கு, மிதனடி முடிகள் காண்பா னிருவரு மிசைந்துதம்மிற், கதிதரு மடிக டேடக் கடவனென் றேன மாகித், துதிபெறு முகுந்தன் கீழேழ் தொன்னிலங் கீண்டு சென்றான். (ருசு)

கன்னமா மதங்கள் சிந்துங் கரிமுத லாக முன்னோர், சொன்னவா றுயிர்க ளெல்லாந் துணுக்கிடப் பவளச் செங்கா, லன்னமாய்ச் சிறைக்கான் மேரு வசைந்திடப் பறந்து வாச, வன்னவா ரிசத்தோன் வானின் மணிமுடி தேடிப் போனான். (ருஎ)

(ருச) நின்மலை=உமாதேவி ; நீலமாமலை=விஷ்ணு ; வேதப் பொன்மலை = பிரம்மதேவன் ; நாப்பண்=நடுவில் ; புரைதவிர்=குற்றம்நீங்கின ; மன்=பெருமை.

(ருரு) பொங்குஒளி=மிகுந்தபிரகாசம்.

(ருசு) கதிதரும் = மோட்சமளிக்கும்; ஏனம்=பன்றி; முகுந்தன் = விஷ்ணு; தொல் = பழமை; கீழேழ்நிலம் = கீழேழுலகங்களையும் ; கீண்டு=தோண்டி.

(ருஎ) கன்னமா மதங்கள் = கன்னமுதலிய விடங்களினின் றொழுகு மும்மதங்கள் ; சிந்தும்=பொழியும் ; கரி= திக்கானைகள் ; துணுக்கிட = திடுக்கிட ; சிறைக் கால் = சிறகின்காற்று ; வாசம் = வாசனையும் ; வன்னம் = செந்நிறமும் (பொருந்திய) ; வாரிசம் = தாமரை ; மணி=அழகு.

மருவருந் துளவுமாலு மலர்மிசை வதிகின்றோனு
மிருவரு மிகந்த கால மிறந்துட விளைத்ததன்றித்
திருவரு மழலின் செய்ய சேவடி முடிகாணுமல்
வெருவரு மனத்த ராகி வெள்கினர் மீள்கின்றாரால்.()

கூடியங் கிருவர் தாமுங் கோலநீ டொளியை
நோக்கி, யாடியி னடங்கும் வெற்பி னமர்ந்துய ரன்ப
ருள்ளத், தாடிருந் தருள்வோய் நின்னை யுணர்ந்தில
மெமது சென்னி, சூடியாம் வாழவின்றுன் றுணைப்
பதங் காட்டு கென்றார். (ருகூ)

மாசிமா தத்திற் றோன்று மதிக்கலை குறைந்து
தேயு, மாசில்பன் னான்காம் பக்கத் தரையிரு ளியாமந்
தன்னிற், றேசினுல் விளங்குஞ் சோதிச் செஞ்சுடராகி
நின்ற, காசிலா நுதற்கட் பெம்மான் றனதுருக்காட்டி
நின்றான். (சுo)

நீலகண் டமுமெண் டோளு நெற்றியிற் கண்ணு
நீறுங், காலனைக்காய்ந்த காலுங் கையின் மான் மழுவுங்
கண்டு, மாலவன் வாமந் தன்னின் மலரயன் வலப்பா
னின்று, சூலபா ணியனை நோக்கித் துதிபல சொல்ல
லுற்றார். (சுக)

ஓதியா யணுவா யெண்ணி லுயிர்க்குயி ராகி யென்
றும்,பேதியாப் பரம தாகிப் பிறப்புட னிறப்பிலாமற்,
சோதியா யெழுதாக் கேள்விச் சுருதியின் முடிவா

(ருஅ) மரு=வாசனை; வரும்=வீசும்; வதிகின்றோன்=வசி
ப்பவன்; இறந்து = கடந்து; திருவரும் = அழகு
பொருந்திய; வெருவரும்=அச்சமுள்ள.

(ருகூ) கோலம்=வடிவம்; ஆடி=கண்ணாடி; வெற்பின்=மலை
யென்ன; அமர்ந்து=விளங்கி.

(சுo) பக்கத்து=பக்ஷத்து; தேசினுல்=கீர்த்தியினுல்; காசி
லா=குற்றமற்ற.

(சுக) வாமம்=இடப்பக்கம்; வலப்பால்=வலப்பக்கம்.

யெங்கட், காதியா யநாதி யாகு மடிகணின் னடிகள் போற்றி. (௬௨)

விடைக்கொடி யுயர்த்தாய் போற்றி விரிமலர்ச் செழும்பொற் கொன்றைத், தொடைப்புயா சலனே போற்றி துலங்கு பொற் றேட்டிற் றுவும், படைக் கருங் கடைக்கட் செவ்வாய்ப் பைந்தொடி பங்கா போற்றி, சடைப்பரம் பரனே போற்றி சங்கரா போற்றி போற்றி. (௬௩)

விரித்துல கனைத்து மாக்கி வீக்குநாட் சராசரங்கள்
பரித்துள புவன மூன்றும் பாலநேத் திரத்தீ யூட்டி
யெரித்துநீ றாக்கிப் பூசி யென்பணிந் திலங்கு சூலந்
திரித்துநின் றாடுநின்பொற் சேவடி போற்றி போற்றி.

இலகொளிக் கதிரோன் றாகி யீர்ம்புனற் கும்பந் தோறும், பலவுரு வாகித் தோன்றும் பான்மைபோ லங்கங் காய்நின், றுலகுயிர்க் கனுப வங்க ளூட்டுவித் தொழிந்த காலத், தலகிலாக் கருணை நல்கு மமலனே போற்றி போற்றி. (௬௫)

---

(௬௨) ஓதியாய்=மலையாய்; எழுதா=எழுதப்படாத; கேள்விச்சுருதி = வேதங்கள் (இருபெயரொட்டு); அடிகள்=கடவுளே!.

(௬௩) உயர்த்தாய் = உயர்த்தினவனே; தொடை=மாலை; புயாசலம் = புஜமாகியமலை; படை = வேல்; பைந்தொடி=உமாதேவி; (அன்மொழித்தொகை).

(௬௪) விரித்து=மாயையினின்று விரியச்செய்து; வீக்கும் = அழிக்கும்; பரித்துள = சுமந்துகொண்டுள்ள; புவன மூன்று = சுவர்க்கமத்தியபாதலம் என்னு மூன்றும்; பாலம் = நெற்றி; திரித்து=சுழற்றி.

(௬௫) கதிர்=சூரியன்; ஈர்ம்புனல் = தண்ணீர்; கும்பம்= குடம்; அனுபவம்=சுகதுக்கங்களை; ஒழிந்தகாலம் = பிராரத்த வினையொழிந்தபொழுது.

அருவமாஃயுருவ மாகி யகண்டமா யசல மாகி, யொருபரம் பொருளாய் வண்ண மொப்புட னுயர்வு மின்றி, நிருமல ளுகி யெங்கு நிறைந்து நீங்காது நிற் குங், கருதருஞானனந்தக் கருணையங்கடலேபோற்றி.

காலனார் வீழத் தாக்குங் கனைகழற் காலா போ ற்றி, மூலமாம் பொருளுக் கெல்லா முழுமுதற் பொ ருளே போற்றி, பாலநேத் திரனே போற்றி படர்தி ரைப் பாலின்வேலை, யாலமுண் டிருண்ட கண்டத் தண்ணலே போற்றி போற்றி. (௬௭)

பொடியெழப் புரமோர் மூன்றும் புன்னகை கோட்டிச் சுட்டாய், கொடியின்மீ னெழுது வேளைக் குளவிழி யழலிற் கொன்றாய், படிமுதற் ககன மீறாய்ப் பரந்தியாம் பரிந்து தேடி, யடிமுடி காண்டற் கெட்டா வத்தனே போற்றி போற்றி. (௬௮)

நீர்வடி வான செய்ய நெருப்புல வுலவை வானம்
பார்வடி வாகத் தோன்றப் படைத்திட முன்ன மன்னுங்
கார்வடிவான கூந்தற் கவுரியு நீயு மொன்றாய்ப்
பேர்வடி வின்றி நின்ற பிஞ்ஞகா போற்றி யென்றே,

எய்ச்சிலை யுண்டென் றேதற் கேதுவா மிடை யாண் மாரன், கைச்சிலைப் புருவ மைக்கட் கவுதமன் பன்னி கொண்ட, மைச்சிலையுருவமாற்று மலர்ப்பதன்

---

(௬௬) அசலமாய்=அசைவற்றதாய்; நின்மலவண்ணம் = மல ரகிதவடிவம்.

(௬௭) கனைகழல் = சப்திக்கின்றவீரதண்டை; படர்திரை= வீசுகின்றஅலை; பாலின்வேலை=பாற்கடல்.

(௬௮) கோட்டி=செய்து; கொடியில்மீனெழுதும் = மீனக் கொடியையுடைய; வேள் = மன்மதன்; குளவிழி= நெற்றிக்கண்; படி = பூமி; ககனம் = ஆகாயம்; பர ந்து=வியாபித்து.

(௬௯) உலவு=சஞ்சரிக்கிற; உலவை = காற்று; பார்=பிரு திவி; முன்னம்=முதலில்; பேர்வடிவு=நாமரூபம்.

வடத்தண்டார்ந்த, பச்சிலைப்பள்ளி யானுட் பரிவுடன் பழிச்சி யேத்த. (௭௦)

மருவிரி கமலப் போதின் மன்னுநான் முகத்தோன் வெற்பி, லருவிபோல் விழிநீர் சோர வாகநெக் குருகி யன்பாற், றருவிரி மலர்கடூவித் தமனியச் சபையி லாடும், பொருவிரி கமலச் செம்பொற் பூவடி போற்றி செய்தான். (௭௧)

வேறு.

நிலத்தானைக் கடுவொடுக்கு மிடற்றானை மழுத்தானை நீங்காச்செங்கை, வலத்தானை மலைமகள்சேரிடத்தானை வரிசிலைக்கை மதனைக்காய்ந்த, சலத்தானை யெண்புயாசலத்தானைப்படைசூழ்ந்தருக்கிவாழ்தென், புலத்தானை யுதைத்தமலர்ப் பதத்தானைப் போற்றி செய்தார் புலவ ரெல்லாம். (௭௨)

கந்தரநேர் கந்தரத்தான் கருணைவிழிக் கடையருளிக் களிப்பினோடு, மந்தரவா னவர்புகழ்புள் ளரசுகைக்குமச்சுதனை யளிதே னுண்ணுங், கொந்தவிழ்நாண்

---

(௭௦) எய்த்து=இளைத்து; இலை=இல்லை; பன்னி=பத்னி (மனைவி); மை=கறுத்த; சிலை=கல்; வடத்தண்டு=ஆலங்கிளை; பரிவுடன்=அன்புடன்; பழிச்சு=துதித்து. (எய்த்து என்பது எதுகைநோக்கி எய்ச்சு எனவாயிற்று).

(௭௧) மருவிரி=வாசனைவீசும்; வெற்பில் அருவி=மலையினது அருவி; ஆகம்=உடலம்; தருவிரி=மரத்தில் புஷ்பித்த; தமனியச்சபை=பொன்னம்பலம்; பொருவிரி=ஒப்பில்லாத.

(௭௨) நிலம்=பூமிக்கு; தானை=வஸ்திரமாகிய (சமுத்திரத்து); செங்கை வலத்தானை=செவந்த வலதுகரத்தினுடையவனை; வரி=கட்டப்பட்ட; சிலை=வில்; சலத்தானை=கோபமுடையவனை; தென் பூலத்தானை=இயமனை.

மலர்க்கமலத் தவிசிருக்கு நான்முகனைக் குறித்துநீவிர், சிந்தைதனில் விழைந்தவரங் கேண்மினது தருவ லெனச் செப்பலுற்றான். (எ௩)

கரியெனநின் றுயிர்க்கருள்செய் கண்ணுதனீ கனற்பிழம்பாய் நின்றகாலை, விரிசுடர்விட் டெழுமொளி சேர் விளக்கில்விழும் விட்டிலென வீழ்ந்து நீறு, யெரியு மெம தந்திரங்க ளீங்கெமக்கு மீண்டுதவியாங்க ளொன் றும், புரியுமிரு தொழிலு நிலை பெறவுனருள் புரிதியெ னப் போற்றி நின்றார். (எச)

அன்றமரி விருவிரு முடியாமற் சோதிவடி வாயமா மும்மு, னின்றவிராச் சிவநிசியா மனசிவநா டனில் விதித்த நியமத்தோடு, மன்றன்மலர் கொடுபூசை புரிந் திடினீர் நினைந்ததெலாம் வழங்கல் செய்வா, மென்ற யன்மா லிருவருக்கு மனமகிழ வரமளித்திட் டியம்பும் பின்னும். (எரு)

ஆதியிலம் பிகைநோற்ற விரதமிதன் பெருமை யெவ ரளக்க வல்லார், சாதிமுறை நெறிதவறுஞ் சண் டாளர்நோற்றிடினுந் தக்கோராகி, மோதி வருங் கடல் புடைசூ ழுலகில் விரும் பியபோக முற்றிப்பின்னர்ப்,

(எ௩) கந்தர நேர்=கருமேகத்தையொத்த; கந்தரத்தான்= கண்டத்தையுடைய பரமேசுவரன்; விழிக்கடை = கடைக்கண்ணால்; அந்தரம்=ஆகாயம்; புள்ளரசு=கரு டன்; உகைக்கும் = நடத்தும்; அளி=வண்டு.

(எச) கரியென = சாட்சிபூதமாக; விரிசுடர் = விரிந்தகதிர்; இருதொழில் = படைத்தலும் காத்தலும்.

(எரு) முடியாமல்=இறக்காமல்; அன=(அன்ன) அப்படிப் பட்ட; மன்றல்=வாசனையுள்ள.

பூதிதரும் பெரும்பாவக் கடல்கடந்து முத்திநெறி பொருந்து வாரால். (எசு)

ஆவிந்த மறையவர்கட் களித்தாலும் புரவிமக மாற்றினாலு, மேவிந்தச் சிவநிசிபோற் பலன்றரா வெனவியந்து விண்ணினோங்கு, மாவிந்த நடைபயின்று வந்தனைய கரியுரித்த வரதன் வாமக், கோவிந்த னரவிந்தன் கோவிந்தன் முகநோக்கிக் கூறிப்போனான் (எஎ)

உலங்குலவும் புயமுகுந்த னிவ்விரத நோற்றீயிர் காத் துடற்று போரிற், சலங்குலவு மரக்கர்குலச் சலதி வட வையிற்சுவற்றுந் தானைப் பெற்றுப், பொலங்குலவு

(எசு) அளக்க = அளவிட்டறிய; புடைசூழ் = பக்கத்திற் சூழ்ந்த; மோதிவருங்கடல் = அலைகளால் கரையை மோதுங்கடல்; போகமுற்றி = அனுபவித்து முடித்து; பூதி = பிறப்பு.

(எஎ) ஆவிந்தம் = பசுக்கூட்டம்; புரவிமகம் = அசுவமேத யாகம்; ஆற்றினாலும் = செய்தாலும்; மாவிந்தம் = பெரிதாகியவிந்தகிரி; மேவிந்த = மேவும்இந்த; வரதன் = வரமருள்வோன் (பரமேசுவரன்); வாமம் = அழகு; கோவிந்தன் = பசுக்களாகிய ஆன்மாக்களுக்குத்தலைவன் (பசுபதி), அல்லது இடபத்திற்குத்தலைவன்; கோவிந்தன் = விஷ்ணு; அரவிந்தன் = பிரம்மா.

(எஅ) உலம் = திரண்ட (உருண்டையான) கல்; குலவு = ஒத்த; உடற்று = வருத்துகின்ற; சலம்குலவு = கோபமுடைய; சலதி = சமுத்திரத்தை; வடவையில் = வடவாக்கினிபோல; சுவற்றும் = வற்றச்செய்யும்; தானை = ஆயுதம்; பொலம்குலவு = பொன்னிறம் பொருந்திய; பொன் = அழகிய; பூஇன் = இனிய பூவாகிய; இலம் = (இல்லம்) வீட்டில்; குலவும் = வசிக்கும்; மயிலை = இலக்குமியை.

மிதழ்விரிந்து தேன்றுளித்து வழிந்திடுமம் புயப்
பொற்பூவி, னிலங்குலவு மயிலைமணந் திமையவர்கண்
முதலெவர்க்குமிறைவனானான். (எஅ)

நல்லுணர்வுற் றுயர்கமல நான்முகனோற் றுலகமு
நால் வகையிற் றோற்றும், பல்லுயிரு நினைத்தமனப்
படிபடைத்துத் தனதுகரப் படையும் பெற்றுச்,
சொல்லுமறை முழுதுணர்ந்து தூவியனப் புள்ளூர்ந்து
சுலாங்கு பூத்த, வல்லுறழ்மைக் கருங்கண்முலை வாணி
தனை மணந்துபெரு வாழ்வு பெற்றான். (எகூ)

சீதரனுந் திசைமுகனு நோற்றதற்பி னிவ்விரதஞ்
சிறந்த தெங்கு, மோதவரு மாகமதிச் சிவநிசியுற் பவ
மீதென் றுணர்வீ ரென்றே, மாதவத்துச் சவுனகனே
முதலாநை மிசவனத்தோர் மகிழ்ந்து கேட்பச், சூத
முனி வரனிகழ்ந்த சரித்திரத்தை விரித்தெடுத்துச்
சொன்னான்மன்னோ. (அ௦)

(எகூ) நல்லுணர்வுற்று = மேலாகிய ஞானத்தையடைந்து; கரம் = கிரணத்தையுடைய; படை = ஆயுதத்தை; தூவி = இறகையுடைய; வல் = சூதாடுகருவியை; உறழ் = ஒத்த; மை = இருள்போலும்; கருங்கண்முலை = கருமைநிறம்பொருந்திய நுனியினையுடையதனம்.

(அ௦) மாகமதி = மாசிமாதம்; சிவநிசி = சிவராத்திரி.

வசனம்.

நைமிசாரணியச் சிறப்பு.

வெண்டாமரையாளோடு செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மதேவனிடத்து முன்னோர் காலத்தில் முனிபுங்கவர்கள் சென்று பலவாறு துதித்து வணங்கி உலகைப் படைத்த உத்தமனே! நாற்றிசை பரவும் நான்முகக்கடவுளே! யாங்கள் இடையூறிலாது இனிதாக இறைவனை நோக்கித் தவஞ்செய்தற்காகப் புலி கரடி முதலிய மிருகங்களின் உபத்திரவ மில்லாததாய், நல்லரசாட்சியை யடுத்ததாய், குளிர்வெய்யில் முதலிய வற்றின் சம்பந்தம் தேகஸ்திதிக்கு இணக்கமாக வுடையதாய், உணவாதிகள் பிரயாசையின்றிக் கிடைப்பதாயுள்ள ஓர் வனத்தைத் திருவாய்மலர்ந்தருளவேண்டு மென்று பிரார்த்தித்தனர். அதுகேட்டு மனமகிழ்ந்த பிரம்மதேவன் கூர்மைபொருந்திய நுனியினையுடைய ஓர் தருப்பைப்புல்லை யெடுத்து வளைத்துச் சக்காகாரமாகச்செய்து பூமியிலுருட்டி இதுபோய்த் தங்குமிடமே நீவிர்சென்று தவம் புரிதற்குரிய இடமாமெனக் கூறியருளினர். அவ்விருடிகள் அந்த நேமி சென்ற வழியே சென்று அது தங்கிய வனத்திலிருந்து தவஞ்செய்வாராயினர். அவ்வனம் நேமி சென்று தங்கிய காரணத்தினால் நைமிசாரணியமெனப் பெயர் பெற்றது.

வைகுண்டத்தையும் சிவலோகத்தையும் ஒத்ததெனத் தேவர்கள் புகழும் சிறப்புவாய்ந்த அவ்வனம்: சரஸ்வதி வசித்தலானும் (கல்வி பயில்வதாலும்) எஞ்ஞான்றும் வேதாத்தியயனஞ்செய்யப் படுவதானும் பிரம்மதேவனையும், கொன்றைமரமிருத்தலானும் அதன்மீது பசுங்கொடி படர்ந்திருத்தலானும் யாகாக்கினியிருத்தலானும் சாபமிருத்தலானும் எப்பொருட்குமிறைவனாகிய பரமேசுவரனையும் நிகர்த்து விளங்கும். அவ்வனத்துள்ள விருட்சங்கள்: இங்குள்ள முனிவர்கட்கு இலை மலர் காய் கனி முதலியவற்றை மிகுதியாகக் கொடுத்தோம், இவ்

வாறே அங்குள்ள விண்ணவர்கட்கும் அளிப்போமென்றெண்ணி இலை முதலியவற்றைக் கரத்திலேந்தி விண்ணில் நீட்டியிருத்தல் போல ஆகாயத்தை யளாவிய கிளைகளை யுடைத்தாயிருந்தன.

இத்தகைய சிறப்புவாய்ந்த அந்த நைமிசவனத்தில் சடைமுடி, கமண்டலம், உருத்திராக்கமாலை, மயிற்பீலிக்குடை, காவி வஸ்திரமுதலியவற்றை யுடையவர்களாய் வசிக்கும் அந்த இருடிகளிற் சிலர் இடைவிடாது அருந்தவ மியற்றுபவராயும் சிலர் ஆகவனீயம், காருகபத்தியம், தட்சணாக்கினி என்னு முத்தீ வளர்ப்பவராயும், சிலர் வாசனைபொருந்திய மலர்களாற் பரமேசுவரனை அர்ச்சிப்பவராயும் விளங்குவாராயினர்.

புராண வரலாறு.

இங்ஙன மிருக்கையில் ஒருநாள் வியாசமுனிவரது மாணாக்கர்களிற் சிறந்த சூதமாமுனிவர் நைமிசாரணியத்தில் வசிக்கும்இருடிகளைக் காணும்பொருட்டு அங்குவந்தனர். வந்தபொழுது அவ்விருடிகள் அவரை எதிர்சென்றுவந்தனைபுரிந்து உபசரித்தழைத்துப்போய் ஆசனத்திருத்தி அர்க்கியமளித்துப் பூசனைபுரிந்து உணவருத்திப்போற்றி எதிர்நின்றுசுவாமிகாள்! அனுஷ்டிப்பதற் கெளிதாயும் வினையையொழித்து ஒப்பில்லாத மோட்ச சாம்பிராச்சியத்தை நல்குவதாயுமுள்ள பரமேசுவரனுக்குரித்தாய விரதமொன்றை எமக்குத்தேவரீர் திருவாய் மலர்ந்தருளல் வேண்டும் எனப் பிரார்த்தித்தனர். சூதமாமுனிவர் அதனைக்கேட்டு மனமகிழ்ந்து அவ்விருடிகளைநோக்கி மாதவத்தீர்! முன்செய் தவப்பயனா லிங்ஙனங் கேட்டீர்கள் போலும். நீவிர் கேட்டவாறே வேதாகமங்கள் துணிந்துரைக்கும் மேன்மை பொருந்திய விரதமொன்றுளது. அஃது யாதெனின், வேதங்களிற் சாமமும், யாகங்களில் அஸ்வமேதமும், மலைகளில் மகமேருவும், நதிகளிற் கங்கையும், பூதங்களில் ஆகாயமும், விண்ணவர்களில் இந்திரனும் முதன்மைபெற்றிருத்தல்போல, சிவபெருமானுக்குரிய விரதங்களில் முதன்மைபெற்று விளங்குவது சிவராத்திரி விரதமாகும். பரமேசு

வரன் நந்தியம்பெருமானுக்கு முன்னர் உபதேசித்த அந்தச் சிவராத்திரி விரத மகிமை பிரம்மதேவனாலும் ஆயிரம்நாவுடைய ஆதிசேடனாலும் சொல்லுதற்கரிதாகும். எனின் அவ்விரத மகிமையை முற்றுமுணர்ந்து என்னொரு நாவாற்சொல்ல முடியாது ஆகலின் என்னாற் கூடியவரையிற் கூறுவேன், ஒருமுகப்பட்ட மனத்துடன் கேட்பீர்களாகவென்று சொல்வாராயினர்.

சிவராத்திரி விரத மகிமை.

பிரம்மதேவன் படைத்தற்றொழிற்பெற்றதும், திருமால் காத்தற்றொழிற் பெற்றதும், குபேரன் அளகாபுரிக் கிறைவனானதும், இந்திரன் பொன்னுலகத்திற் கிறைவனானதும், சூரியன் சந்திரன் அக்கினி இம் மூவரும் தலைமை பெற்றதும் இச் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்ததனாலேயாம். பற்பல பூதானம் சுவர்ணதானம் கோடி கோதானம் செய்தலும் புராணங்களிலுரைத்த மற்றைப் பலவிரதங்களை நெடுங்காலம் நோற்றலும், நூறு அசுவமேதயாக மியற்றலும், பலமுறை கங்காஸ்நானஞ் செய்தலும், மேன்மைபெற்ற ஒரு சிவராத்திரி விரத மனுஷ்டிப்பதற்கு மேன்மையுடையனவாகா. பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரேயன்றி இழிகுலத் துதித்துக் கொடுந்தொழில் புரிவோரும் விதிப்படி இச்சிவராத்திரி விரதத்தை நோற்பாராயின் அவர் தாம் விரும்பிய போகங்களை யனுபவித்து இந்திரன் முதலியோர் போற்றக் கண்ணுதற் கடவுளது திருவடியையடைந்து விளங்குவர். பசுவையும், அந்தணரையும், சிசுவையும், கன்னிகையையும் கொன்ற தீவினையனைத்தும் சூரியன்முன் இருள்போல இவ்விரதம் நோற்றிடிற் றொலையும். இச்சிவராத்திரி விரதத்திற் கிணையாக மற்றொரு விரதத்தினையுரைப்பது; செத்துப் பிறக்குந் தேவர்களை அனாதிமுத்த பரம்பொருளாகிய பரமேசுவரனுக் கிணையென்று அறிவிலாருரைப்பது போலாம்.

சிவராத்திரி வரலாறு.

இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த சிவராத்திரியின் வரலாறு எப்படியெனில்; உலகங்களும் பிரமனும் அழிந்து பிரளயத்தில் உயிர்கள் மடிந்திடும் கற்பமுடிவினிரவிலே நான்கு யாமத்தும் உமாதேவியார்: பொன்னிறம் பொருந்திய கொன்றை மாலையைத்தரித்த பரமேசுவரரை ஆகம விதிப்படி அர்ச்சனைபுரிந்து அவ்வுகாந்தத் திருட்பொழுதகன்றபின் அப்பரமேசுவரரது திருவடிகளிற் பணிந்து, சுவாமின்! நும்மைத் தமியேன் பூசித்த இரவை, வானவரும் உலகுளோரும் நுமக்குரிய இரவெனக் கொண்டாடவும், அவ்விரவில் யாவராயினும் சூரியன் மேற்றிசையில் அஸ்தமித்ததுமுதல் கீழ்த்திசையில் உதிக்கும்வரைக்கும் நும்மைப் பூசித்தால் அவருக்கு இந்திராதி போகங்களையும் முடிவில் மோட்சசாம்பிராச்சியத்தையும் அளிக்கவேண்டுமெனவும் பிரார்த்திக்க, பரமேசுவரர் அங்ஙனமே அளிப்போமாகவென்று அனுக்கிரகித்தனர். * அவ்விரவு சிவராத்திரியென வழங்கி யாவராலுங்கொண்டாடப் பெற்றதாயிற்று.

அன்றியும் இச்சிவராத்திரி மேன்மை பெற்றதற்கு இன்னுமோர் காரணமுளது. அஃதியாதெனின்; பின்னுமோர் கற்பவிறுதியில் பிரளயப் புனல் வானின் முகட்டளவெழுந்தது. அதனால் பிரமன்முதலிய தேவரும் உலகமும் உயிரும் அழிந்தன. அற்றைநாள் ஆதியந்தமற்றப் பரமேசுவரர் யாவ

* பகற்பொழுது சிவபெருமானுக்கும் இராப்பொழுது உமாதேவியாருக்கும் உரியனவாமென்பது நியமமாகலான், அன்றிரவு பெருமானுக்குரியதாயிற்று. உலகினர் அன்பின் மிகுதியால்; ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை யாணாகவும் அழைப்பது போலவும், தமக்குரிய இடமுதலிய வற்றைத் தமது ஆப்தர் பெயரால் வழங்குவிப்பது போலவும், உமாதேவியார் தமக்குரிய இரவை பெருமான் பெயரால் வழங்குவித்தனர். இங்ஙனம் உமாதேவியார் பூசித்த இரவானது மாசிமாதம் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசி கூடியதாம்.

ரும் உய்யும்பொருட்டு யோகமுற்றிருந்தனர். பின்னர்த் திருமாலானவர் பிரளயத்தழிந்த சராசரங்களை மீளவும் படைப்பதற்கெண்ணி வராகவுருத்தரித்துப் பிரளயப் புனலுள்மூழ்கி அந்துப் புனலெழுந்ததால் அழுந்திய பூமியைத் தமது மருப்பினு லெடுத்துயர்த்தி யிருத்தி அப்பிரளயத்தாற் சரிந்த திசைக்கிரிகளெட்டையும் அந்தந்தத் திக்குகளில் அசையாது நாட்டி மேருமலையை நிலைபெற நிறுத்தித் தமது உந்தியம்போதினால் நான்முகக் கடவுளைத் தோற்றுவித்து உலகத்துயிர்களைப் பண்டுபோற் படைத்திடும்படி அப்பிரமதேவனுக்குக் கட்டளையிட்டுத் திருப்பாற்கடலிற்சென்று அரவணையி லறிதுயிற் புரிந்தனர். அங்ஙனமே பிரம்மதேவன், தேவர், கந்தருவர், கிம்புருடர், அரக்கர், இயக்கர், அசுரர்: விஞ்சையர், கருடர், பைசாசர், சித்தர், மனுடர், உரகர், சூரியன், சந்திரன் முதலியோரை முதலிற்படைத்து மற்றைச் சீவராசிகளை நால்வகை யோனியினிடத் துதிப்பித்து விண்ணவர் முதலியோர் சேவிப்பப் பொற்சிம்மாசனத்து வீற்றிருந்தனன்.

பின்னர்ப் பிரம்மதேவன் மேற்கூறிய விண்ணவர்முதலினோர் திரண் டிருமருங்கு சூழப் புறப்பட்டுத் தாம் படைத்த உலகங்க ளனைத்திலும்போய் உயிர் வர்க்கங்களைப் பார்த்து நாம் நினைத்தபடி இவ்வளவு உயிர்த்தொகைகளையும் உண்டாக்கினோ மாகையால் நம்மைப்பார்க்கிலும் முதல்வ ரொருவரு மில்லையெனப் பெருஞ் செருக்குற்று, உடல் புளகித்துத் திருப்பாற்கடலின் மருங்கடைந்து, ஆங்குத் திருமால் ஆதிசேடன்மீது சயனித்து யோகநித்திரை புரிவதைக்கண்டு, உளம் பொறாமல் ஆகாயத்தினின்றிறங்கி நெருங்கி, அறிதுயிற் புரிவோய்! நீயார் எழுந்திரென்று கூறினன். அப்போது திருமாலானவர் நித்திரையினின்று நீங்கி, பகைகொண் டிங்குவந்த நீயாரென்றுகேட்க, பிரம்மதேவன் நான் உலகுயிர்களைப்படைத்த முதற்பொருள் என்றுரைத்தனன். அதனைக்கேட்ட திருமால் கடலையும் அது சூழ்ந்த பூமியையும் திசைமலை முதலியவற்றையும் மற்றைப் பல வுலகங்களையும் பல வுயிர்களையும் பிரமனென்று சொல்லுமுன்னையும் படைத்தபரதத்துவன் யான்

என்றனர். பிரம்மதேவன் அதனைக்கேட்டுச்சினந்து திருமாலை நோக்கி அறிவற்றவனே! மறைநான்கும் என்நாவிலுள்ளன என்பதையும் மேற்சொல்லிய பூமிமுதலிய யாவற்றையும் நான் நினைத்தபடி படைத்துள்ளே னென்பதையும் நீ யுணர்ந்து இங்ஙனங் கூறுகின்றனைபோலும் என்றனன். இவ்வாறு நான் பரதத்துவன் நான் பரதத்துவ னென்று இருவரும் வாதிட அதனால் அவ்விருவரும் சினம் அதிகரித்தவர்களாய்ப் போர் புரியத் தொடங்கினர்.

அப்பொழுது திருமாலானவர் அஷ்டதிசை யானைகளும் அரவரசும் தேவர்களும் மற்றையரும் ஊழிக்காலமோ வென்று நடுங்கும்படி வில்லை வளைத்துச் சரமாரிபொழிந்தனர். பிரம்மதேவன் அந்த அம்புகள்யாவும் தன்னையணுகாதபடி ஒரு தருப்பையைக்கொண்டு தடுத்துச் சீறி அன்னவாகனத்தேறிப் பல பாணங்களையெடுத்து மந்திரமோதி விடுத்தனன். திருமால் கருடவாகனத்தேறி சிலகணைகொண்டு பிரம்மதேவன் விட்டபாணங்களை ஒருநொடியில் துகள் செய்தனர். அதனைக் கண்ட பிரமன் இவனுடலை ஒருகடிகையிற் றுண்டஞ்செய்வே னென்று ஆர்ப்பரித்து அநேக வீரர்களாலுந் தாங்குதற்கரிய ஒருதண்டை யெடுத்துத் திருமாலின் மார்பி லெறிந்தனன். திருமால் அரக்கருதிரப் பிணமுடைநாறும் ஒரு தண்டை யெடுத்து, சினமுதிரத் தனையணுகுங் கதையைக் கடுகுபோல் நொறுக்கி யுதிர்த்தனர். இங்ஙனம் அவ்விருவரும் தோல்வி வெற்றியில்லாது தேவலோகந் தீப்பற்றவும் கடல்நீர் சுவறவும் சந்திர சூரியர் திசைதடுமாறித் திரியவும் மண்ணுலகத் தோரும் விண்ணுலகத்தோரும் அழிவுறவும் நூறுவருட காலம் போர்புரிந்தனர்.

இவ்வாறு யுத்தஞ் செய்யும்போது திருமால் பிரமனது சென்னியைத் துணிக்கும்படி தமது சக்கராயுதத்தைவிட அதனாற் பிரமன் மடியாததுகண்டு, தான் முன்வருந்தித்தவங் கிடந்து பெற்ற பாசுபதாஸ்திரத்தை யெடுத்தேவினர். அவ் வஸ்திரத்தை வேறுவகையிற் றடுக்க வியலாத பிரம்மதேவன் வில்லைவளைத்து அங்ஙனமே தாம்பெற்ற பாசுபதாஸ்திரத்தை

எடுத்தேவினன். அந்தஅஸ்திரங்களிரண்டும்ஒன்றோடொன்று தாக்கி ஆகாயத்திற் கிளம்பி ஜீவராசிகள் நடுங்கவும் இடிக்கூட்டம் நாணவும் சிலகாலம் போர்புரிந்தன.

இப்படிப் பிரமனும் திருமாலும் மடியும்படி போர்புரிவதை, கங்கையைச் சிரத்திலும் உமாதேவியாரை இடத்திலுமிருத்திய பரமேசுவரர்கண்டு உமாதேவியாருக்குமுன்னாளனுக்கிரகித்தவாறு தமக்குரிய (மாசிமாதத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய) இரவின் அர்த்தயாமத்திலே அவர்கள் மடியாதபடி கொழுந்துவிட்டெரியும் அக்கினிப் பிழம்பாய் நடுவிற்றோன்றினர். திருமால் பிரமனென்னு மிருவராலும் விடப்பட்டு ஆகாயத்திற் சிலகாலமாகப் போர் புரிந்திருந்த அஸ்திரங்கள் அந்த அனற் பிழம்பிற் கலந்தன. திருமாலுக்கும் பிரமனுக்கும் நடுவிற் பரமேசுவர ரிங்ஙன மனற்பிழம்பாய்த் தோன்றியது முறையே நீலமலைக்கும் பொன்மலைக்கும் நடுவில் மிக்க உயர்ந்த பதுமராகமலை தோன்றியதுபோலிருந்தது. கண்ணுக்கு மனத்திலுக்குமெட்டாது கோடிசூரியர்கள் ஒருவடிவமாய்த்தோன்றியதுபோ லுண்டாகிய ஆதியந்தமற்ற அந்தச்சோதி சொரூபத்தைப் பிரமனும் திருமாலுங்கண்டு அதிசயமடைந்து அச்சொரூபத்தின் அடியை யொருவரும் முடியை யொருவரும் போய்ப்பார்த்து ஈண்டு மீண்டுவருபவரே நம்மிற் பரதத்துவராவரென்று நிர்மாணித்தனர். அப்படியே அடியைக்கண்டு வருவதாய்த் திருமால் வராகத்தின் வடிவாகிக் கீழேழுலகங்களையுந் தோண்டிச்சென்றனர். பிரமன் அன்னப்புள் வடிவாகிப்பறந்து ஆகாயத்தினிடத்து மணிமுடியைத் தேடிச்சென்றனன். அவ்விருவரும் அனந்தகாலந்தேடிச் சென்றும் அவ்வழலின்அடியையும் முடியையுங்காணாது உடலிளைத்து அச்சமும் வெட்கமுமுற்ற மனத்தராய்த் திரும்பிவந்து சேர்ந்தனர்.

பின்னர், பரமேசுவரர் இங்ஙனம் அனற் பிழம்பாய்த் தோன்றின ரென்பதைப் பிரமனுந் திருமாலுமுணர்ந்து அவ்விருவரும் அந்த ஒளிப்பிழம்பைநோக்கி, கண்ணாடியிலடங்கும் மலைபோல அவரவருள்ளத்திருந்து பேரருள் பாலிக்குங் கருணைக்கடலே! தேவரீரது செயலறியாது யாங்கள் இங்ஙனம்

வீணை மலைந்தனம். தமியேஞ் சென்னிசூடிவாழக் கிருபை புரிந்து தேவரீரது இணையார் திருவடியைக் காட்டியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அடியார்க்கெளியராம் பரமேசுவரர் அவர்களது வேண்டுகோளுக் கிரங்கி மேற்கூறியவாறு தமக்குரித்தாகிய மாசிமாதமும் தேய்பிறைச் சதுர்த்தசியும் கூடியவிரவில் அச்சுடரொளி யுருவைநீக்கி நீலகண்டமுமெண்டோளும் நெற்றியிற் கண்ணுமார்ந்த சூலபாணியராய்த் தன்னோர் சுய வுருக்காட்டி நின்றார். அப்பொழுது திருமாலிடப்பக்கத்திலும் பிரமன் வலப்பக்கத்திலும் நின்று பரமேசுவரனை நோக்கி "மலையினோ டணுவுமாகி மன்னுமோர் பொருளே போற்றி, பலவுயிர்க்குயிராயார்ந்த பைந்தொடி பாகாபோற்றி பலவிடைக் கொடியுயர்த்திப் பரந்தநற் பரனேபோற்றி சலமுடைச் சடையோய் போற்றிச் சங்கரா போற்றி போற்றி சரவசரங்களைத் தான்படைத்தளித்து விரவுமுடிவில் விளங்குமவைகளை நெற்றிக்கண்ணினிகழ்தீயூட்டிப் பற்பமாக்கிப் பரிவுடன் றரித்து என்பினையணிந்தே யிருஞ்சூலந்தனைச் சுழற்றியாடுந் தூயோய் போற்றி,, என்று தோத்திரஞ்செய்து வணங்கி நின்றனர். பரமேசுவரன் திருமாலையும் பிரமனையும் நோக்கி நீவிர் சிந்தையில் விழைந்தது யாதோ அதனைக் கேண்மின் என்றுகூற; அவ்விருவரும் கண்ணுதற்பரம! தேவரீர் அனற்பிழம்பாய் நின்ற காலை அத்தீயில் மறைந்த எமது அஸ்திரங்களை மீட்டும் 'அருளல்வேண்டும்; அன்றியும் யாங்கள் புரியுந் தொழில் நிலைபெறுமாறும் அநுக்கிரகித்தல் வேண்டும் என்று பிரார்த்தித்தனர்.

பரமேசுவரர் அவ்விருவரையும் நோக்கி நீவிர் மடியாதபடி யாம் அனற்பிழம்பாய்த் தோன்றிய நாளும், பின்னர் நுமக்குத் தரிசனந் தந்தநாளும் முன்னர் உமை விரதமிழைத்து எம்மைப்பூசித்த காரணத்தாற் சிரேஷ்டமெய்திய (எமக்குரிய) இரவின் விரத நாட்களாகும். அவ்விரத மகிமையை எவராலும் அளவிட்டுச் சொல்லமுடியாது. அவ்விரதத்தினைச் சாதிமுறை நெறிதவறுஞ் சண்டாளர் நோற்றிடினும் அவர் தக்கோராகி உலகில்விரும்பிய போகமார்ந்து முத்திநெறி சேர்வரென்பது

திண்ணமாம். கோதானம் அசுவமேதயாகமுதலியன். அளவில்லாதனவாகச்செய்தாலும் அவை இச்சிவராத்திரி விரதம்போற் பலன் தாராவாம். ஆகையால் நீங்களிருவரும் அவ்விரதமியற்றி அன்றிரவில் எம்மைத் திரிகரணசுத்தியாகப் பூசிப்பீராஞல் அது நீங்கள் விரும்பிய வற்றையெல்லாம் தருமெனத் திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர்.

அதனைக்கேட்ட இருவரும் பெருமானது கட்டளையைச் சிரமேற்கொண்டு அச்சிவராத்திரிவிரதம்நோற்றுப்போரிலிழந்த தத்தம் அஸ்திரங்களையும் தமது தொழில்களையும் பெற்று இமையவரிற் றலைமையெய்திப் பெருவாழ்வுற்றனர். சொல்லுதற் கருமையாம் சிவராத்திரி யுற்பவம் ஈதாகுமென்று சூதமா முனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குக் கூறினர்.

உற்பவச் சருக்கம் முற்றிற்று.

சிவராத்திரி
மான்மியச் சருக்கம்.

சொன்ன சூதனை நோக்கியவ் வனத்துறை துறவர்கண் மறைகூறு, மன்ன மாவிர தத்தினை நோற்றிடு மடைவுமன் றரன்றுளிற், பன்னு மாமல ரிட்டருச் சனைபுரி பரிசுநீ பரிவோடின், றின்ன வாறென விரித்தெமக் குரைத்தியென் றிரப்பவங் கிசைக்கின்றான். (க)

மாக மாமதிச் சிவநிசி யுற்பவம் வகுத்துரைத் தனமிப்பா, லாக வத்துட னைந்துள தரணிரா வவற்

(க) அன்ன=அப்படிப்பட்ட; நோற்றிடும்= அனுஷ்டிக்கும்; அடைவும்=முறைமையும்; பரிசும்=விதமும்.

(உ) மாகமாமதி = சிறந்த மாசிமாதம்; சிவநிசி = சிவராத்திரி; யோகராத்திரி=யோக சிவராத்திரி யென்பது; ஏகமாக=வேறு திதி கலவாமல்; நிசிக்கடை=இரவின் முடிவு; உவா=அமாவாசை;இசைந்திடில்=பொருந்தியிருந்தால்.

றைநீ ருணர்வீரால், யோக ராத்திரி சோமவா ரத்தி னன் றுதய்கா லையிலேதொட், டேக மாகவந் நிசிக் கடை யளவுவா ஞ்சைந்திடி லிதுவாமே. (௨)

திங்க ளின்கலே குறைசதுர்த் தசிமதிக் கிழமையீ ற் றிகழல்லிற், றங்கு சாமநான் களவுதொட் டிருந்திடி ற் சயிலமீன் றருண்மானைப், பங்கில் வைத்திடும் பரம னைப் பூசனை பண்ணுக பரிவோடு, மிங்குரைத்தவா கமங்கண்மற் றிதனையும் யோகராத் திரியென்றே. (௩)

ஈறு வந்தசா மத்தரை நாழிகை யிருளுவா விருந் தாலுந், தேறு கின்றவச் சதுர்த்தசி யப்படிச் சேரினு ங் கொளல்வேண்டு, மூறு தீர்தவத் துறவிர்காள் விதி முறை யுளாக்குமிங் கிவை நோற்கிற், கூறு மற்றுள சிவநிசி விரதமுக் கோடிநோற் றிடலொக்கும். (௪)

பருவ மாறுள வருடமோ ரொன்றுறு பன்னி ருமதிதோறு, முருவ மாமதி நிறைந்தது குறைந்திடு மோரிரு பக்கத்து, மருவு மாசதுர்த் தசியறு நான் கினு நோற்பது வழக்காகுந், திருவ மார்ந்தமா தவ ரிதை நித்திய சிவநிசி யெனச்சொல்வார். (௫)

(௩) திங்களின் கலேகுறை சதுர்த்தசி = தேய்பிறைச்சதுர்த் தசி; மதிக்கிழமை = திங்கட்கிழமை; அல்லில் = இர வில்; சயிலம் = இமாசல வரசன்; ஈன்றருள் = பெற்ற; மானை = மான்போன்றபார்வையுடையஉமாதேவியை.

(௪) ஊறுதீர் = கெடுதியற்ற; விதிமுறை = விதிக்கப்பட்ட கிரமப்படி.

(௫) பருவம் ஆறு = கார், கூதிர், முன்பனி, பின்பனி, இள வேனில், முதுவேனில் என்னும் ஆறுமாம்; ஓரொன் றுறு = ஒவ்வொன்ருகச்சேர்ந்த; பன்னிருமதி = பனி ரண்டுமாதங்கள்; மதிநிறைந்தது = வளர்பிறை; குறை ந்திடும் = தேய்பிறை; திருவமார்ந்த = மகிமைதங்கிய.

அதிக மாகமா தத்தினிற் குளிர்கதி ரம்புலி குறைபக்கத், திதிபன் னான்குமீன் றிங்கண்முற் றிரி தியை சித்திரை மதிதேயு, மதியி னட்டமி யிடபமா த்துமுன் மருவுமட் டமிமாசில், பதிக யாழ்மதி மதி வளர் சதுர்த்தியாம் பகர்ந்தகற் கடகத்தில், (சு)

விரியும் வெண்ணிலாக் கலைகுறை பஞ்சமி விளங் குமா வணிதன்னிற், பரியுஞ் சுக்கில பக்கவட் டமி புரட் டாதிமுற் பதின்மூன்று, மரியவைப்பசிக் கம்புலி வளர்திதி யாறிரண் டறைதேளிற், றெரியு முற்படு சத்தமி பிற்படு திதியிலட் டமிதானும். (எ)

ஒப்பின் மார்கழி யுபயபக் கத்தினி லுறுதிதி பதி னான்குஞ், செப்பு மான்மதி வளர்மதி தனிலுறு திரி தியை யிவைசூலக், கப்பு வேற்கரக் கண்ணுத லருச் சனைக் குரியவா கமமெல்லாந், தப்பி லாதெடுத் திசை கொண்மா தச்சிவ நிசியெனச் சாற்றும்மே. (அ)

மாறின் மார்கழிச் சதுர்த்தசி யாதிரை மரு விலுத் தமமாகு, மூறி லாக்குடத் திங்களிற் குளிர்கதி

(சு) அதிக = சிரேஷ்டமாகிய; மீன்திங்கள் = மீன (பங் குனி) மாதம்; முன் திருதியை=வளர்பக்கத்துத் திரு தியை; சித்திரைமதி=சித்திரைமாதம்; தேயுமதி= தேய்பிறை; பதிகயாழ்மதி = சேதமார்ந்த யாழினை யுடைய மிதுன(ஆனி)மாதம்; கற்கடகம்=ஆடிமாதம்.

(எ) பரியும் = விரும்பும்; முன் பதின் மூன்றும் = வளர் பிறைத் திரயோதசியாம்; தெரியும் = அறியப்பட்ட; முற்படு=வளர்பிறை; பிற்படு=தேய்பிறை.

(அ) உபயபக்கம்=இரண்டுபக்ஷம்; மான்மதி=மகரமாதம்; சூலக்கப்புவேல் = கிளைபோன்ற சூலமாகிய ஆயுதம்; இசைகொள்=புகழுற்ற.

ருடுபதி குறைபக்கந், தேறி நின்றிடு சதுர்த்தசி குசன்
கதிர்க் கிழமையிற் சேர்வுற்று, வீறினற்கதி கொடுக்
குமுக் கோடியாஞ் சிவநிசிக் கிணையாமால். (௯)

உற்ற பன்னிரு மதியிலிவ் விரதநோற் றுளம்
விழைந் தனமுன்னாட், பெற்று ளோரயன் மாசியிற்
கேசவன் பிறங்குபங் குனிதன்னிற், சொற்ற சித்திரை
த் திங்களிற் பார்ப்பதி சூரியன் விடைமாதத், தற்ற
மற்றிடு மிதுனமா தத்தர னாடியிற் குமரேசன். (௧௦)

சிங்கத் தம்புலி கன்னியிற் சேடனிந் திரனெடுந்
துலைத்திங்க, டங்கு கார்த்திகை நாமக ளுமதிதனின்
மனோன் மணிதையிற், றுங்க மாரிமி லிடபதேவன்ப
சுஞ் சுகமொழி யுமைவாம, பங்க னீடரு டந்திடத்
தக்கநற் பக்கராத் திரிசொல்வாம். (௧௧)

மகர திங்களி னபரபக் கத்திடை வருபிர தமை
யெய்தப், புகலு மன்றுதொட் டெதிர்ந்தபன் மூன்று
நாட்புசிப்பதோர் பொழுதாகிப், பகர்த ரும்பதி னான்
கினி னோற்பது பக்கராத் திரியாகு, மிகப ரந்தரு விரத
மற் றிதற்கிணை யாவரே புகல்கிற்பார். (௧௨)

அருட ருஞ்சிவ ராத்திரி யிப்படி யைந்துபட்டது
வாகு, முருகுகாதலோ டைந்தையு நோற்றனன் றுரைத்

---

(௯) உடுபதி = சந்திரன்; குசன் = செவ்வாய்; கதிர்க் கிழமை=ஞாயிற்றுக்கிழமை.

(௧௦) விழைந்து=ஆசைபொருந்தி: விடைமாதம் = இடப (வைகாசி) மாதம்; அற்றமற்றிடு=குறைவில்லாத.

(௧௧) துலைத்திங்கள் = துலா (ஐப்பசி) மாதம்; நாமகள் = சரஸ்வதி; துங்கமார்=வலிமைபொருந்திய; இமில்= முசுப்பினையுடைய; சுகம்=கிளி; நீடருள்=பேரருள்.

(௧௨) எய்த=வர; பதினான்கினில்=சதுர்த்தசியில்.

(௧௩) வரன்முறை=ஒழுங்கு.

தவை முடியாதேன், மருவு மிங்கிதி னென்றனை விதித்
திடும் வரன்முறை வழுவாமற், பெருகுமன்புட னேற்
றவர் பெறற்கரும் பெருங்கதி பெறுவா ரால். (௧௩)

ஊதை முன்படு பஞ்சியி னுறுவினை யோட்டிமேற்
பதஞ்சார்வான், கோதை பங்கன தருட்கடற் குளித்
திடுங் கோதறு குணத்தீர்கா, ளேதை யாமெடுத் துரை
ப்பதிங் குமேக்கினி யிமையவ ரறியாரிப், பேதை மானு
டரறிவரோ சிவநிசிப் பெருமையின் றிறனம்மா. (௧௪)

வேறு.

மத்தகமால் களிற்றுரிவை போர்த்துழுவை யுரித்
துடுத்து மதியஞ்சூடும், வித்தகனீ ணிறமிடற்றுச்
சிவனிரவா கியவிரதம் விளங்க நோற்கி, லுத்தமமத்
திமமதம மெனவொருமூ வகைப்படுமா லொழுங்கிற்
சொல்வன், முத்தழல்வேட் டிடுமுனிவீர் கேண்மி
னெனச் சூதமுனி மொழிவ தானான். (௧௫)

விரித்தசெழுங் கதிர்ப்பரிதி மேற்றிசைபோ யந்
திவந்து மேவுங் காலுந், தெரித்ததிர யோதசியாந் திதி
நின்று பின்புசதுர்த் தசிதான் கூடித், தரித்தவிரா வன்
றிமற்றைப் பகன்முழுதுந் தங்கியிடிற் றறுகட் டந்தி,
யுரித்தபிரா னிரசனிக்கு ளுத்தமத்தி லுத்தமமா
யுரைப்பர் மன்னோ. (௧௬)

---

(௧௪) ஊதை=காற்று; பஞ்சியின்=பஞ்சைப்போல.

(௧௫) மத்தகம்=மஸ்தகமுள்ள; மால்=பெரிய; உரிவை= தோல்; உழுவை = புலி; நீணிறம் = நீலநிறம்; முத்தழல் = ஆகவனீயம், காருக பத்தியம், தட்சணாக்கினீயம் என்னும் முத்தீ.

(௧௬) தரித்த = தங்கிய; தறுகண் = அஞ்சாமையுடைய; தந்தி=யானை; நிரசனிக்கு=இராத்திரிக்கு.

உதித்தகதிரத்தமித்த பின்கூடுஞ் சதுர்த்தசியுத் தமமா மென்பர், திதித்தவுத யாதியுத யாந்தமதாய்ப் பகலிரவு தோய்ந்து நிற்கும், கதித்தசதுர்த் தசிகதிரத் தமிக்குமுன்சேர் சதுர்த்தசிநற் கங்குற்போதின், மதித்தபத்து நாழிகையிற் பின்கூடுஞ் சதுர்த்தசிமத் திமமாமன்றே. (கஎ)

அல்லினிரு பதுகடிகை யளவுசதுர்த் தசிதானின் றதற்குப்பின்னர்ச், சொல்லினுயர் மதிபரிதி யுடன்கூடு மமாவாசை தொட்டத் தோடு, புல்லியிடி னதமசிவ ராத்திரியா மெனவெடுத்துப் புகல்வ ரல்லி, னல்லியல்சேர் பதின்மூன்றாந் திதிதொட்ட சதுர்த்தசியே நன்றதாமால். (கஅ)

கங்குறனிற் பதின்மூன்றாந் திதியுடனே சதுர்த் தசியோர்கலை தான்கூடி, லங்கதுவே சிவநிசியாக் கொளல்வேண்டுஞ் சிவரூப மாகுமேன்மை, தங்கு சதுர்த் தசிதிரயோ தசிசத்தி ரூபமிவை தாமொன் றாகித், துங்கமுறக் கூடுமிராச் சிவலிங்கா காரமெனச் சொல்வர் மன்னே. (ககூ)

ஆசில்மா வாசைதொட்ட சதுர்த்தசிதா னுவியக லங்கம் போலாம், பேசுமதிற் பூசைசெய்யிற் பிரமகத் திதோடமுண்டாம் பிறங்குமந்தத்,தேசமுழு வதுங்கெடுமுற் புண்ணியம்போஞ் சிந்தைசெய்யிற் றிடுக்கிட்டுள் ளங், கூசுநரகங்கடனிற் கொடியவிர வுரவமதிற் குளிப்பர்மாதோ. (உ0)

(கஎ) கதித்த=சிறந்த; கங்குல்=இரவு.

(கஅ) புல்லியிடின்=சேர்ந்திட்டால்; நல்லியல்=கீர்த்தி.

(ககூ) ஓர்கலை=ஓர் நாழிகை; துங்கமுற=பரிசுத்தமாக.

(உ0) ஆசுஇல்=குற்றமற்ற; ஆவியகல்அங்கம்=உயிர்நீங்கிய சரீரம் (பிணம்),

ஊறிலமா வாசைதொட்ட சதுர்த்தசிசைவ திகர் விரத்தர்க் குரியவாகும், கூறுபுகிழ்ச் சைவர்முன்னுட் கொளல்வேண்டுந் திருவோணங் கூடிற்கு, மாறிலமா வாசைதொட்ட சதுர்த்தசிதான் விரத்தருக்கும் வாழ் வின்மிக்க, தூறில்கிர கத்தருக்கு மாகுமமா வாசை யெனுந் தோட மின்றே. (உக)

அற்றமிலத் தராத்திரிமுன் சதுர்த்தசியோர் கலை கூடி லன்று கொள்க, செற்றமிலச் சதுர்த்தசிநள் ளிர வினிற்பின் னொருகலைதான்சேடித்துற்றுன், மற்றைநா ட்கொளல்வேண்டும் வைதிகரும் விரத்தர்களு மதிக்கு ம்பக்க, முற்றதுதா னிரண்டுபடி லிரவிலதிகத்திதிதா னுசிதமாமே. (உஉ)

திதித்திரயஞ் சேர்ந்துவரில் வைதிகர்க்குஞ் சைவ ருக்குஞ் சிறந்ததாகு, மதிக்குமற்றை நிசிக்கடையி னமாவாசை கூடமுதன் மழுமானேந்து, நதிச்சடை யோன் றனைப்பூசை புரிந்திடுதல் வைசருக்கு நன்றுமெ ன்றே, விதித்தனரான் மதிக்கிழமைச் சதுர்த்தசிக்கு மிந்தமுறை வேண்டுந் தானே. (உங)

அற்றனின்மூவைந்துகன்ன லாமளவிற் சதுர்த்த சிமுற் றினத்திற்கூடி, மற்றைநா ளிரவுபதி னைந்து

(உக) விரத்தர்—சன்னியாசிகள்; தூறில்—பழிப்பில்லாத.

(உஉ) அற்றமில் — குறைவில்லாத; செற்றம் — கெடுதி; சேடித்துற்றல்—தள்ளிவந்தால்.

(உங) திதித்திரயம்— திரயோதசி சதுர்த்தசி அமாவாசை யாம் மூன்று திதிகளும் ஒருநாளில் வருதல். (அஃதா வது காலையில் திரயோதசிதிதியின் அந்தமும், அதற் குப்பின் சதுர்த்தசி திதியும், அன்றிரவின் கடையில் அமாவாசை திதியின் ஆதியுமாக வருதல்).

கன்ன லஞ்விலுவா வந்தொன்ருகி, யுற்றிடிற் பிற்றினத் தனிமேல பூசைபுரிந்திடலாகா தொழிகமுந்தச், சொற் றதினத் தருச்சனைசெய் திடவிதித்தார் சைவநெறித் துறைநின்ருேரே. (உச)

முற்றிதியி லோர்பொழுதுண் டிடையில்விதித் தி டுந்திதியின் முழுது முண்ணு, திற்றிதனிற் றுயிலொ ருவி யேறேறி தனைப்பூசித்தியாம நான்கும், பிற்றிதி யிற் சிவனடியார்க் கன்னநல்கிப் பாரணந்தான் பின்னர் ச்செய்யச், சொற்றிடுமோ கமமாதச் சிவநிசிநோற் றிட க்கருதித் துணிந்து ளோர்க்கே. (உரு)

ஓதவருஞ் சோமசிவ நிசிதனக்குச் சதுர்த்தசியி னுண்டு வாவிற், ருதவிழ்பூங் கொன்றையணி வேணிய னைப் பூசைசெய்து சாமநான்குந், தீதகன்ற பிரதமை யிற் பாரணஞ்செய்திடவேண்டுஞ் செப்புமைந்து,பேத முள்ள சிவநிசிக்குட் சதுர்த்தசிசங் கரனிரவாய்ப் பிற ங்கிநின்ருல். (உசா)

இன்னசிவ நிசிவிரத நோற்றிடுவோர் முற்றினத் தி லெய்தாநின்ற, வன்னதிர யோதசியி லொருபொழு துண் டரிவையர் தோளணைதலின்றிச், சொன்னவிர வகற்றியற்றைவைகறையிற்புனிதநதித்தோயத்தாடிப்,

(உச) கன்னல்=நாழிகை.
(உரு) இற்று இதனில்=இத்தன்மையாம் இரவில்; ஏறு= இடபம்.
(உசா) சோம சிவநிசி=சோமவாரச் சிவராத்திரி; சதுர்த்தசி சங்கரனிரவு=நித்திய சிவராத்திரி (இதனிலக்கணம் இச்சருக்க வசனத்திற் காண்க).
(உஎ) எய்தாநின்ற = பொருந்தின; தோயம்=நீர்; தின மணி=சூரியன்.

பின்னர்தின மணியுதிக்குங் காலையிற்செய் கடனனைத்தும் பிறழா தாற்றி. (உஎ)

மதிமுடியோன் கோயிறனை வலம்வந்து தண்டனிட்டு வணங்கி வாயாற், றுதிபுகன்றில் வயினேகி யிழிகுலத்தோர் பாதகர்பாற் றுன்னிடாமற், கதியறுமற் றவருடன்வாய் பேசாமற் கண்ணினெதிற் கண்டிடாம, னதியிடைப்போய் நண்பகலி னுனவிதி வழுவாது நண்ணீராடி. (உஅ)

துய்யவெண்டூ சிரண்டுடுத்திட் டுச்சியிற்செய் கடன்கழித்துச் சுடலையாடு, மையனைப் பூசிக்குமிடங் கோமயத்தான் மெழுகியபின் னம்பொன்னுடை, செய்யதுகி னேத்திரத்தால் விதானித்து வாழைகன்னல் சிறக்க நாட்டி, மையகனுண் மலர்மாலை தோரணங்க ணிறைநிரையின் வயங்க நாற்றி. (உக)

கண்ணுதலை யருச்சித்தற் குரியபொரு ளனைத்தினையுங் கருதித்தேடி, விண்ணுலவு கதிரருக்கன் மேற்றிசைவே லையின்முழுக வீழும்வேலை, தண்ணுலவு சந்தனநற் றாபதீபாதியிம சயிலமீன்ற, வொண்ணுதலோர் பாகனுறை சந்நிதியின் முன்னமிவை யுதவியன்பால்.

(உஅ) இல்வயின்=வீட்டினிடத்து; துன்னிடாமல்=நெருங்காமல்; நண்பகல்=மத்தியானம்.

(உக) தூசு=வஸ்திரம்; செய்ய=சிவந்த; நேத்திரத் துகிலால்=பட்டு வஸ்திரத்திறைல்: விதானித்து=மேலே கட்டி அலங்கரித்து; கன்னல்=கரும்பு; மையகல்=குற்றம் நீங்கிய; நிரைநிரை = ஒழுங்காக; வயங்க=அழகாக; நாற்றி=தொங்கவிட்டு.

(௩௦) வேலை=சமுத்திரம்; வேலை=வேளை; ஒண்ணுதல்=(பெண்) உமாதேவி.

அந்தியினிற் றண்புனரேய்ந் தருக்கியநற் கிரியை செப மாற்றிப் பின்னர், வந்திளமா மதிமுடித்த வள்ள றனைப் பீடிகையில் வைத்துத்தாபித், திந்தியமோ ரை ந்தவித்திட் டாகமநூன் மறைகளெடுத் தியம்பாநிற்கு, முந்தியமந் திரங்களினாற் பூசைவிதி வழுவாமன் முடி த்தல் வேண்டும். (நக)

முன்னமுதற் சாமத்தி லானினைந்தா லாட்டிடுக முறைமையாகப், பின்னரிரண் டாஞ்சாமத் தைந்தமிர் தா லாட்டிடுக பிரசந் தன்னு, மன்னயஞ்சேர் மூன் றாய சாமத்தி லாட்டிடுகநாலஞ்சாமங், கன்னலின்சாற் றினிலாட்டக் காரணவாகமமெடுத்துக்கழறிற்றன்றே.()

ஆசகல்கோ சலந்தயிர்பால் கோமயநெய் கௌவி யமைந் தாகுஞ்செந்தேன், காசகல் சர்க்கரை ததிபா னெய்யிவையைந்தமிர்த மெனக் கரைவரித்தை, மாசக ல்கௌ வியம்போலத் தனித்தனியே தாபித்து மதியஞ் சூடு, மீசன்மணிமுடிமீதி லாட்டிடவா கமநூல்க ளெடு த்துக் கூறும். (நங)

சந்தமுதற் சாமமதி லகிலிரண்டாஞ் சாமமதிற் சாம மூன்றிற், கந்தமிகுங் கருப்பூரங் கடைச்சாமங் குங் குமஞ்செங் கமலப் போதில், வந்தருணன்முகன் முகுந்

(நக) நற்கிரியை=நன்மையை நல்கும் அனுஷ்டானம்; இந் தியம்=இந்திரியம்.

(நஉ) ஆனினைந்து=பஞ்சகவ்வியம்; ஐந்தமிர்தம் = பஞ்சா மிருதம்; பிரசம்=தேன்.

(நங) காசு=குற்றம்; தாபித்து=வைத்து; தனித்தனியே= பஞ்சாமிருதங்கூட்டியவைகளைப் பின்னும் ஒவ்வொன் றாகவும்.

(நச) சந்தம்=சந்தனம்; அகில்=அகிற்குழம்பு; கற்பூரம்= பச்சைக் கற்பூரம்; குங்குமம்=குங்குமப்பூ.

தன் மகபதி வானவரொவரும் வணங்கியேத்தி,மூந்தமிலா முழுமுதல்வன் றிருமேனி குளிரமிகு மன்பிற் சாத்தி.

முற்சாமம் வில்வமதிற் பிற்சாம மூளரிமலர் மூன்றுஞ் சாம, நற்சாதி மலர்நாலாஞ் சாமமதி னந்தியாவர்த்தப் பூக்கொண், டற்சாருங் களத்திறைக்குச் சாத்துகவென் றாகமத்து ளதிக மான, சொற்சாரமுள்ளசித்தத் தந்திர நூ லொருத்திதனைச் சொன்னதாமல். (நடு)

முண்டகமுற் சாமமதிற் றுளசியிரண் டாஞ்சாம மூன்றாஞ்சாமங், கண்டகஞ்சேர் கூவிளமுத் தளக்கிளை நான் கெனப்பகுத்த கடையிற் சாமம்,விண்டலர்ந்து மதுத்துளிக்கு முற்பலத்தின் மலர்சாத்த வேண்டுமென்றே, யண்டரெலாம் புகழ்ந்தேத்துஞ் சிந்தியமா மாகமநூ லறைந்த தன்றே. (நசு)

வில்வநொச்சி மாவிலங்கை முட்கிளுவை வெள்ளில்பஞ்ச வில்வமாகச், சொல்வரிவற் றின்றழைமுக் கிளையாகக் கொண்டயன்மா லொருடர்ந்துங் காணு, நல்வரதன் றிருமுடியினன்குசா மமுஞ்சாத்தநன்றாமீது,கல்வியறிந்தவருணரக் காரணவா கமமுரைத்த கருத்தா மன்றே.

ஏதமின்முற் சாமமுற்கப் பருப்பொடன்ன மாகுமற்றை யிரண்டாஞ்சாமந், தீதகல்பா யசமாகுஞ் சாமமொரு மூன்றதனிற் றிலஞ்சேரன்ன, மோதவருசாமமொருநான்கதனிற்சுத்தான்னமுரைத்தார்பூத, நாதனிவேத்தியந் தனக்குச் சுத்தான்ன மாஞ்சாமநான்கிற்கும்மே. (நஅ)

(நடு) மூளரிமலர்=தாமரைமலர்.

(நசு) முண்டகம்=தாமரை; கண்டகம்=முள்; கூவிளை=வில்வம்; உற்பலம்=நீலோற்பலம்.

(நஎ) வெள்ளில்=விளா.

(நஅ) முற்கம்=பயறு; திலம்=எள்.

சருவஞ்ஞனே யுக்கிரனே சங்கரனே சிவனேசா
ம் பவனேசான்ருய்ப், பெறுகதியை நல்கியிடு மீசான
னேமகவுக் கிரனேபேசு,மறுவறுபூ தாதிபதி யேயென்
னுமந்திரமோ ரெட்டு மோதி, யுறுதியுடன் றாபாதி
நிவேதனங்க ளனைத்தினையு மொழுங்கிற்செய்தே. ()

நாமத்தினிருக் கெனுஞ்சொன் ஞட்டுமறைமூந்த
வந்து நண்ணுஞ்சாமந்,தோமத்தினகற்றிரண்டாஞ் சுரு
தியிரண்டாஞ்சாமஞ் சொற்றமூன்ருஞ், சாமத்திற்சாம
மறை யீற்றிலுறு மறைநாலாஞ் சாமந் தன்னி,லீமத்தி
னின்ருடு மாதிதிரு முன்னேதி யிருகை கூப்பி. (சo)

உருகுமுளத் துடனிருந்து ஞெருவியிரு விழித
னிலு முறக்கமின்றி, யிருளுறுகங் குலின்யாம நான்கி
னுமிப் படியருச்சித் திறுதி தோறும், பொருவில்ருக்
கியங்கொடுத்து நாயடியேன் புரியுமிந்தப்பூசை தன்னை
த், திருவுளத்தி னயந்தருள்வா யெனத்துதித்துத் தண்
டனிட்டுத் திருமுன் வீழ்ந்தே. (சக)

இன்னனநற் சிவபூசை யியற்றியற்றைப் புலரிதனி
லெழுந்துபோகி, நன்னதியிற் புனலாடிக் காலையிற்செய்
கடன்கழித்து நவின்றவாறே, யன்னதினத் தினும்பக
ற்போதரனையருச்சித்த தற்பி ஞதிதீக்கை,சொன்னகுர
வனைப்போற்றி யந்தணருக் காடையன்னஞ் சொன்ன
மீந்தே. (சஉ)

(ருக) மறுவறு = குற்றமற்ற; ஒரெட்டுமெந்திரம் = மேலே
சொல்லிய எண்வகைத் தோத்திரத்தை.

(சo) தோமத்தின் = குற்றத்தினின்று; அகற்றும் = நீக்கும்.

(சக) ஒருவி = நீக்கி; கங்குல் = இரவு.

(சஉ) புலரி = விடியற்காலம்.

அங்கவர்த மனுமதியாற் பாரணஞ்செய் திடல்வே ண்டு மற்றைவைகற், றங்குபகற் கடனைத்துங் காலசந் தியுடன்முடித்துத் தாழுங்கீழ்பார்,செங்கதிர்வந் துதித் தாறு கன்னலுக்குட் பாரணந்தான் செய்தாராகிற், றுங் கமுறுகவளமொன்றுக் கனந்தபலமுளதென நூல்சொ ல்லுமாதோ. (௪௩)

அலைசெறிபாற் கடல்விடமுண் டருள்வான்முப் புரந்தழலுக் களிப்பான் மேருச், சிலைகுனித்த சிவனிர விப் படிநோற்போர் சிவகதியிற் செல்வ ரன்றிக், கலை முழுதுங் கற்றுணர்ந்த மாதவத்தீ ரன்னவர்முற்கருவின் மூவேழ், தலைமுறையி லுள்ளவருஞ் சத்தியமுத்தியிற் சேர்த றப்பிடாதால். (௪௪)

அறைமறைமந் திரவிதியா லருச்சிக்க விரகிலரே லன்பருள்ளத், துறைபரமனைந்தெழுத்தை யுச்சரித்தீ ரெட்டுவகை யுபசாரத்தாற், பொறைதருமன் புடன்பூ சை புரிந்திடுக பொறியளிகள் பூந்தா தூது, நறைகமழ் செங் கமலமலர் நான்முகத்தோன் பூசையினு நயப்ப னம்பன். (௪௫)

இத்தகைய சிவார்ச்சனைசெய் திடமாட்டார் விரு த்தர்கொடி யிடையார் நோய, ருத்தமநற் சிவநிசியி

---

(௪௩) வைகல்=தினம்; கன்னல்=நாழிகை; கவளம்=பிடி அன்னம்.

(௪௪) கருவின்=வம்சத்தின்.

(௪௫) விரகிலரேல் = சக்தி யில்லா தவரானல்; ஈரெட்டு வகையுபசாரம்=சோடசோபசாரம்; பொறி=புள்ளி யையுடைய; அளிகள்=வண்டுகள்; பூந்தாது = புஷ் பங்களிலுள்ள மகரந்தப் பொடிகளை; ஊதும் = இறைக்கும்.

(௪௬) சினகரம்=ஆலயம்.

னோடு துயிலொழித்துச் சாமநான்குஞ், சித்தமிகக் களி கூர்ந்து சிவபுரா ணங்கேட்டுச் செபங்கள்பண்ணி, முத் தனுறை சினகரத்திற் சென்றரனைச் சேவித்தன் முறை மை யாமே. (சசு)

அசிக்கணுமை பங்கனைமுற் சாமத்தி லருச்சித் தாங் கதற்குப்பின்னர்ப், பசிக்கழிந்தோர் நீர்சிறிது பா ல்சிறிது பருகவன்றேற் பழங்கள் சற்றே, புசிக்கசல பானநன்று மத்திமம்பால் பழமதமம் பொருவில்கந்தஞ், சுசிக்கொளப்பந் தோசைபிட்டு மாந்தலத மத்ததமஞ் சொல்லுங்காலே. (சஎ)

பகர்தருபா ரணமுமுவாப் புணர்ந்திடமுன் பலன் கொள் சைவர் பண்ண வேண்டு, மிகறருமுப் புரமெரி த்த பரமனடியர் சீர்த்திகளை யெடுத்து முன்னோர், புகல் சரிதை பாராட்டிப் பிற்பொழுது போக்கியெழு புரவித் தேரோ, னகல்பொழுதிற் கடன்கழித்துத் துயில்வரற் றை யந்தியன்ன மருந்த லாகா. (சஅ)

பாரணந்தான் புரிந்ததற்பின் பகற்பொழுதிற் சோம்பொடுகண்படைசெய்தாரே, லாரணங்கள் பயின்ற குல வந்தணரைம் பதிற்றிரட்டி யாயினோரைக், கார ணங்க ளொன்றுமின்றிக் கொன்றகடும் பழியடைவர்

(சஎ) அசி=வாள்; பசிக்கு அழிந்தோர்=பசியால் வருந்து வோர்; பருக=உண்ணுக; சற்றே = கொஞ்சம்; கந் தம்=கிழங்கு; சுசி=சுத்தம்; மாந்தல்=உண்ணல்.

(சஅ) எழுபுரவி=எழு குதிரைகள் கட்டிய; தேரோன் = இரதத்தையுடைய சூரியன்.

(சகூ) அணங்கு இல்=துன்பம் இல்லாத.

அ

கருதுஞ் சாந்திப், பேரணங்கி லோமமறை விதிப்படி யே புரியிலந்தப் பிழைபோ.மன்றே. (சக)

முத்தியினை விரும்பிமுதற் சங்கற்பந் தவறுது மூ வெட்டாண்டு, பத்தியுட னிவ்விரத நோற்றதற்பின் வேதியர்க்குப் பசுப்பூ தான, நித்திலவெண் ணகைக்க ன்னி தானமன்ன தானமுட னிதிய நல்கிப், புத்தியுட ன் சிவநிசியாம் விரதமொழி வதுவழக்காப் புகல்வர் மன்னே. (௫0)

வேறு.

இந்தநல் விரதந் தனைச்சிவ னந்திக் கிசைத்திட வுணர்ந்துசெங் கதிரோன், கந்தவேள் கதைக்கைக் காலன்விற் காமன் கடவுளர் கண்ணோராயிரத்தோன், செந்தமுற் கடவுண் மதிநிதிக்குபேரன் செப்பியவரன் முறை நோற்றுத், தந்தம மனத்தில் விழைந்தன பெற் றுத் தகைபெறு தலைவரா யினரால். (௫க)

என்றுரைத் திடலு நைமிச வனத்தி லிருந்தவ ரிருகரங் கூப்பி, நன்றுரைத் தனைநீ நாநிலத்துள்ளோர் நவையறு சிவநிசி நோற்றிட், டொன்றுதற் கரிதாமுத்தி பெற்றவர்க ளுளரெனி லுரையெனவுயர்ந்த, குன்றுறழ் தவத்துச் சூதமாமுனிவன் கூறுவன் கேண்மினென் றிசைப்பான். (௫உ)

---

(௫0) நித்திலம்=முத்துப்போன்ற; நிதியம்=சுவர்ணம்.

(௫க) கடவுளர் = தேவர்கள்; வரன்முறை = ஒழுங்கு தகை=பெருமை; குன்று உறழ்=மலையை ஒத்த.

(௫உ) நவையறு=குற்றமற்ற; ஒன்றுதல்=சேர்தல்.

வசனம்.

சிவராத்திரிவிரதம் அனுஷ்டிக்கு முறைமை.

மாதவத்துச்சவுனகர்முதலாம் நைமிசவனத்தோர் சூத மாமுனிவரை மகிழ்ந்துபோற்றி, இனி இச் சிவராத்திரி விரதமிழைக்கு முறைமை யினையும், அன்று பரமேசுவர னைப் பூசிக்கும் விதியினையும் கூறவேண்டுமென்று பிரார்த்திக்க, அம்முனிவ ரங்ஙனமே கூறுவாராயினர்.

மாதவர்காள்! கேண்மின்.

சிவராத்திரியானது; மாகசிவராத்திரி, யோகசிவராத்திரி, நித்தியசிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாதசிவராத்திரி யென ஐ வகைத்தாம்.

(க. மாகசிவராத்திரி.)

அவற்றுள், மாசிமாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய நாள் மாகசிவராத்திரியாம். இது வருஷ சிவராத்திரி யென்றும் மகாசிவராத்திரியென்றும் சொல்லப்படும்.

(உ. யோகசிவராத்திரி.)

சோமவாரத்தன்று சூரிய னுதயகாலந்தொட்டு இரவுமுழுதும் (அஃதாவது அன்று பகலிரவுசேர்ந்த அறுபதுநாழிகையும்) அமாவாசை யிருக்குமாயின் அன்று யோகசிவராத்திரியாம்.

சோமவாரத்தன்று சூரியன் அஸ்தமித்ததுமுதல் அன்றிரவு நான்கு சாமமும் தேய்பிறைச் சதுர்த்தசி யிருக்குமாயின் அன்றும் யோகசிவராத்திரியாம்.

சோமவாரத்தன்று இரவின் நான்காஞ்சாமத்தில் அமாவாசை அரைநாழிகை யிருந்தாலும் அன்றும் யோகசிவராத்திரியாம்.

சோமவாரத்தன்று இரவின் நான்காஞ்சாமத்தில் அப்படியே தேய்பிறைச்சதுர்த்தசி அரை நாழிகையிருந்தாலும் அன்றும் யோகசிவராத்திரியாம்.

இங்ஙனம் சோமவார சம்பந்தமாய்வரும் யோக சிவராத்திரி நால்வகைத்தாம்.

இத்தகைய ஒருயோக சிவராத்திரி விரத மிழைக்கின் அது மூன்றுகோடி மற்றைச் சிவராத்திரியின் விரதமிழைத்த பலன்றரும்.

(௩. நித்தியசிவராத்திரி.)

வருடத்தின் பனிரண்டு மாதங்களிலும் வரும் தேய்பிறை வளர்பிறைகளின் சதுர்த்தசிகூடிய இருபத்து நான்கு நாட்களும் நித்திய சிவராத்திரியாம்.

(௪. பட்ச சிவராத்திரி.)

தைமாதத்தின் தேய்பிறைப் பிரதமையன்று தொடங்கிப் பதிமூன்று நாள்வரையில் பிரதிதினமும் நியமத்துடன் ஒருபொழுது உண்டு பதினான்காம் நாளாகிய சதுர்த்தசியன்று (பின்னர்க்கூறும்) விதிப்படி விரதம் நோற்பது பட்ச சிவராத்திரியாம்.

(௫. மாத சிவராத்திரி.)

மாசிமாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி,
பங்குனிமாதத்து வளர்பிறைத் திருதியை,
சித்திரைமாதத்துத் தேய்பிறை அஷ்டமி,
வைகாசிமாதத்து வளர்பிறை அஷ்டமி;
ஆனிமாதத்து வளர்பிறைச் சதுர்த்தசி,
ஆடிமாதத்துத் தேய்பிறைப் பஞ்சமி,
ஆவணிமாதத்து வளர்பிறையட்டமி.

புரட்டாசிமாதத்து வளர்பிறைத் திரயோதசி,
ஐப்பசிமாதத்து வளர்பிறைத் துவாதசி,
கார்த்திகைமாதத்து வளர்ப்பிறைச் சப்தமி, தேய்பிறை [யட்டமி,
மார்கழிமாதத்து வளர்பிறைச் சதுர்த்தசி, தேய்பிறைச் [சதுர்த்தசி,
தைமாதத்து வளர்பிறைத் திருதியை;

என்னும் திதிகள்கூடிய பதினான்கு நாட்களும் மாதசிவ ராத்திரியாம்.

மார்கழிமாதத்து வளர்பிறைச் சதுர்த்தசி திருவாதிரை நட்சத்திரத்தோடுகூடிவந்தாலும், மாசிமாதத்துத்தேய்பிறைச் சதுர்த்தசி செவ்வாய்க்கிழமையோடாவது அல்லது ஞாயிற் றுக்கிழமையோடாவது கூடிவந்தாலும் அவ்வொரு சிவராத் திரியானது மற்றைச் சிவராத்திரி மூன்றுகோடிக்கிணையாம்.

மேற்கூறிய ஐவகைச் சிவராத்திரிகளிலும் விரதமிழைத் தல் நன்றும். அப்படிச்செய்யக்கூடாவிடின், இவற்றுள் ஒரு வகைச் சிவராத்திரியை யாவது விதிதவறுமல் நோற்றல் வேண்டும்.

மேலும், இச்சிவராத்திரி உத்தமத்தி லுத்தம சிவராத்திரி, உத்தம சிவராத்திரி, மத்திம சிவராத்திரி, அதம சிவராத்திரி என நால் வகைத்தாம்.

அவை வருமாறு:—

(க) உத்தமத்திலுத்தம சிவராத்திரி.

சூரியன் அஸ்தமிக்கும்வரையில் திரயோதசி யிருந்து நீங் கப் பின்னர்ச் சதுர்த்தசிவந்து அச்சதுர்த்தசி அந்தஇரவும் மறு நாட்பகல் முற்றுமிருப்பின் அஃது உத்தமத்திலுத்தம சிவராத் திரியாம்.

(உ.) உத்தம சிவராத்திரி.

சூரியன் அஸ்தமித்தபின்னும் இரவின் பத்துநாழிகைக்கு முன்னும் (அஃதாவது இரவின் முன் பத்து நாழிகையில்) சதுர்த்தசி வரின் அஃது உத்தம சிவராத்திரியாம்.

(ங.) மத்திம சிவராத்திரி.

காலை தொடங்கி மறுநாளுதயம்வரை (அஃதாவது பக லிரவு அறுபதுநாழிகையை ஆதியந்தமாக) வரும் சதுர்த்தசி யும், சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னரேவரும் சதுர்த்தசியும், இரவின் பத்து நாழிகைக்குப் பின்னர் வரும் சதுர்த்தசியும் மத்திம சிவராத்திரியாம்.

(ச.) அதம சிவராத்திரி.

இரவின் இருபதுநாழிகையளவு சதுர்த்தசியிருந்து நீங்க அதன்பின்னர் அமாவாசை வந்தால் (அஃதாவது இரவின் பின்பத்து நாழிகையைத்தொடர்ந்துவரும் அமாவாசை) அஃது அதம சிவராத்திரியாம்.

இவ்வதம சிவராத்திரியிற் பரமேசுவரனைப் பூசிக்கலா காது. இப்படி அமாவாசை தொட்ட இரவில்வரும் சதுர்த்தசி உயிர்நீங்கிய சரீரம்போலாம். அந்த இரவில் பரமேசுவரனைப் பூசிப்போர் முன்னர்ப் புரிந்துள்ள புண்ணியத்தை யிழந்து பிரம்மஹத்தி தோஷமடைந்துரவுரவாதி நரகங்களிற்சேர்வர்.

ஆனதால், மேற்சொல்லியபடி (சோமவாரமல்லாத வார ங்களின்) அமாவாசைதொட்ட இரவில் சதுர்த்தசி வருமாயின் அந்த இரவைநீக்கித் திரயோதசியுடன் சதுர்த்தசி ஒரு நாழி கையாவது கூடிவருகின்ற முந்தியநாளிரவே சிவனிரவாகக் கொள்ளல் வேண்டும். திரயோதசியும் சதுர்த்தசியும் கூடிய இரவு சிவலிங்க சொரூபமாம்.

அமாவாசைதொட்ட சதுர்த்தசி வைதிகர்க்கும் சன்னியா சிகட்கும் உரியதாகும். எனின் மேற்கூறியபடி அமாவாசை தொட்டகுற்றம் சைவருக்குமாத்திர முண்டென்றும், வைதி கர்க்கும் சன்னியாசிகட்கும் இல்லையென்றும் ஏற்பட்டதாம்.

அமாவாசைதொட்ட சதுர்த்தசி திருவோண நட்சத்திரத்துடன் கூடிவருமாயின் மேற்கூறிய மூவகையினர்க்கும் உரியதாகும். எனின் அமாவாசை தொட்ட குற்றமில்லையென்பதாம்.

அன்றியும் சதுர்த்தசியானது இரவின் பதினைந்து நாழிகைக்குமுன் ஒரு நாழிகையேனுங் கூடிவருமாயின் அன்றே சிவனிரவாகக் கொள்ளல் வேண்டும். அச்சதுர்த்தசி இரவின் பதினைந்து நாழிகைக்குப் பின் ஒரு நாழிகையாவது தள்ளி வருமாயின் மறுநாள் சிவனிரவாகக் கொள்ளல் வேண்டும்.

திதித்திரயஞ் சேர்ந்துவரின் (அஃதாவது காலையில் திரயோதசி திதியின் அந்தமும், அதற்குப்பின் சதுர்த்தசி திதியும், அன்றிரவின் கடையில் அமாவாசை திதியின் ஆதியுமாக வருதல்) மேற்சொல்லிய முத்திறத்தினருக்கும் உரியதாகும். எனின் மேலே சொல்லியபடி அமாவாசை தொட்ட குற்றம் சைவருக்கு மில்லை யென்பதாம்.

சோமவார சம்பந்தமாய் வரும் சதுர்த்தசிக்கு மிப்படியேயாம்.

இரவின் பதினைந்து நாழிகையளவில் சதுர்த்தசி திதி வந்து மற்றைநாளிரவு பதினைந்து நாழிகை யளவுமிருப்பின் முந்தியநாளிரவே சிவனிரவாகக் கொள்ளல் வேண்டும்.

சிவராத்திரி விரதமிழைக்கும் விதி.

இத்தகைய மகிமைவாய்ந்த சிவராத்திரி விரதம் நோற்போர்; அச்சிவனிரவுவாய்ந்த தினத்தின் முன்னாள் ஒருவேளையுண்டு மங்கையர் சங்கமநீக்கல் முதலிய ஆசாரந்தவறாதிருந்து பொழுதுபோக்கிச் சுத்தமானவிடத்திற் படுத்துறங்கிச் சிவராத்திரியன்று விடியற் காலையிலெழுந்து புண்ணியத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சூரியனுதிக்கும் வேளையில் காலையனுஷ்டானமியற்றிச் சிவாலயத்துச்சென்று பரமேசுவரனை விதிப்படித் தரிசித்துத்திரும்பி இழிகுலத்தோரையும் பாதகரையும் பார்க்காமலும் (அவர்கள்பால்) நெருங்காமலும் வீட்டினுக்கு

வந்து பரமேசுவரனைப் பூசிக்குமிடத்தைக் கோமயத்தால் மெழுகிப், பொன்னுடையையும் பட்டாடையையும் அவண் மேலே கட்டி வாழைமரங்களையும் கரும்புகளையும் நாட்டித் தோரணங்களையும் மலர்மாலைகளையுந் தொடுத்து அலங்கரிக்க வேண்டும். பின்னர் நடுப்பகலில் ஸ்நானஞ்செய்து உச்சிக்காலவனுஷ்டானங்க ளியற்றவேண்டும். பின்னர்ப்பரமேசுவரனை யருச்சித்தற்குரிய பொருள்களைச்சேகரித்து, சூரியன் அஸ்தமிக்கும் வேளையில் சிவாலயத்திற்கொண்டுபோய்க் கொடுத்துப் பரமேசுவரனை யர்ச்சிக்குமாறு ஏற்பாடுசெய்து வீட்டினுக்கு வந்து பின்னுமோர்தரம் ஸ்நானஞ்செய்து மாலைக்கால அனுஷ்டானமியற்றவேண்டும். பின்னர்ப் பொன்னுடையாதியா லலங்கரித்த விடத்தில் பரமேசுவரனைப் பீடத்தில் வைத்துத் தாபித்து ஆகமங்களில் விதித்த சிவபூசா விதி தவறாமல் நான்கு சாமத்திலும் சாமத்திற் கொரு முறையாகப் பூசைபுரிதல் வேண்டும்.

அபிஷேக அலங்கார அர்ச்சனுவிதி.

இப்படிப் பூசிப்பதில், பால், தயிர், தேன், சர்க்கரை இளநீர், பன்னீர், எலுமிச்சம் பழம், நார்த்தம்பழம், சந்தனம், விபூதி முதலியவைகளில் கிடைத்தவைகளை நான்கு சாமத்தும் அபிஷேகிப்பதோடு தவறாது முதற்சாமத்தில் பஞ்சகவ்வியத்தாலும், இரண்டாஞ் சாமத்தில் பஞ்சாமிர்தத் தாலும், மூன்றாஞ் சாமத்தில் தேனாலும், நான்காஞ் சாமத்தில் கருப்பஞ்சாற்றாலும், அபிஷேகஞ்செய்தல் வேண்டும். பால், தயிர் நெய், கோசலம், கோமயம், இவ்வைந்துங் கலந்தது பஞ்சகவ்வியமெனப்படும். தேன், சர்க்கரை, தயிர், பால், நெய் இவ்வைந்துங்கலந்தது பஞ்சாமிர்தமெனப்படும். (இதில் தயிரை நீக்கி வாழைப்பழஞ் சேர்த்துக்கொள்ளினு மொக்கும்.) பின்னர் முதற்சாமத்தில் அகிற்குழம்புடன் வில்வமும், இரண்டாஞ்சாமத்தில் சந்தனத்துடன் தாமரை மலரும், மூன்றாஞ்சாமத்தில் அரைத்த பச்சைக்கற்பூரத்துடன் சாதிமுல்லை மலரும், நான்காஞ் சாமத்தில் அரைத்த குங்குமப்பூவுடன் நந்தியாவர்த்தன மலரும் சாத்தல்வேண்டும்.

பின்னர் முதற் சாமத்தில் தாமரைமலராலும், இரண்டாஞ்சாமத்தில் துளசியாலும், மூன்றுஞ்சாமத்தில் முக்கிளையொருந்திய வில்வத் தளத்தினாலும், நான்காஞ் சாமத்தில் நீலோற்பலமலராலும் அர்ச்சனைபுரிதல் வேண்டும். வில்வம், நொச்சி, மாவிலிங்கை, முட்கிளுவை, விளா இவ்வைந்தும் பஞ்ச வில்வமாகவின் வில்வம் கிடைக்கவில்லையேல் மற்றைய நான்கிற் கிடைத்த வைகளா லர்ச்சனைபுரிக.

பின்னர் முதற்சாமத்திற் பயத்தம்பருப்புச் சேர்ந்த பொங்கலன்னமும், இரண்டாஞ்சாமத்திற் பாயசமும், மூன்றுஞ்சாமத்தில் எள்ளன்னமும், நான்காஞ்சாமத்திற் சுத்தான்னமும் நிவேதித்தல்வேண்டும். இயலாதேல் நான்கு சாமத்துஞ் சுத்தான்னமே நிவேதித்திடுக. இப்படி நிவேதித்த பின்னர் ஒவ்வொரு சாமத்தும் தூபதீபா ராதனைகள் கிரமமாகச் செய்தல் வேண்டும்.

பின்னர் முதற்சாமத்தில் இருக்குவேதமும், இரண்டாஞ்சாமத்தில் யசுர்வேதமும், மூன்றுஞ்சாமத்தில் சாமவேதமும், நான்காஞ் சாமத்தில் அதர்வணவேதமுமோதி இருகை கூப்பித்துதித்து அர்க்கியங்கொடுத்து அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அடியேன் புரிந்த இப்பூசையினைத் திருவுள்ளமேற்று அருள்புரிக வெனச்சிந்தனையாற் பிரார்த்தித்துப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

இப்படி நான்கு சாமத்தும் நித்திரையகற்றிப் பூசனையியற்றி மறுநாள் விடியற் காலையிற்போய் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து காலையனுஷ்டானமியற்றி உச்சிக்காலவனுஷ்டானமும் அக்காலையிலேயே புரிந்து தமது தீட்சாகுருவைப் பூசித்துப் பிராம்மணோத்தமர்கட்கு ஆடையும் உணவிற்குரியவைகளும் கொடுத்து உபசரித்து அவர்களாலாசீர்வதிக்கப்பெற்று, சூரியனுதித்து ஆறுநாழிகைக்குள் பாரணஞ்செய்திடல் வேண்டும்.

உணவகற்றலிற் பசிதாளாதவர் இரவின் முதற்சாமத்திற் பூசித்தபின்னர் கொஞ்சம் நீராவது பாலாவது பழமாவது புசித்தல்கூடும். இவற்றுள் நீருண்பது உத்தமமும், பாலுண்பது

மத்திமமும், பழமுண்பது அதமமுமாம். அன்றியும் அப்பம், தோசை, பிட்டு முதலியவைகளுண்பது அதமத்திலதமமாம்.

இப்படிச் சிவபூசைசெய்யச் சக்தியற்றவயோதிகரும் ஸ்திரீகளும் நோயாளரும் சிவராத்திரி தினத்தில் ஊணுறக்கமொழித்து அன்றிரவு நான்குசாமத்தும் சிவபுராணங்கேட்டேனும் ஜெபங்கள் செய்தேனும் சிவாலயத்துச்சென்று பரமேசுவரனைத்தரிசித்தேனும் அவ்விரவையகற்றி மறுநாட்காலையில் மேற்சொன்னபடி பாரணஞ்செய்தல் வேண்டும்.

அப்படிப் பாரணைசெய்த பிறகு சிவபுராணம்படித்தேனுங் கேட்டேனும் கண் துயிலாது அற்றைப் பகற்பொழுது போக்கி அஸ்தமிக்கும் வேளையில் மாலைக்காலவனுஷ்டான மியற்றி அவ்விரவிலும் அன்னபானாதி யருந்தாது புனிதமானவிடத்தில் ஆசாரத்துடன் நித்திரைசெய்தல் வேண்டும். பாரணை செய்தபின் அற்றைப் பகலிற் றுயில்வரேல் அவர் காரணமின்றி நூறுபிராமணரைக்கொன்ற பழியடைவர். அபுத்திபூர்வமாய்த்துயில்வாரேல் வேதவிதிப்படி ஹோமம்புரிந்து அக்குற்றத்தை நீக்கிக்கொள்ளல் வேண்டும்.

இப்படி இருபத்துநான்கு வருடம் நோற்றுப்பின் கோதானம் பூதானம் சுவர்ணதான முதலியவை நல்கி இவ்விரதத்தினைப்பூர்த்தி செய்தல்வேண்டும். இப்படிச்சிவராத்திரி விரதமிழைப்போர் சிவகதியிற்செல்வதுமன்றி அன்னவரின் முன்மூவேழு தலைமுறையினரும் தப்பாது முத்தியிற் சேர்வது சத்தியமாம்.

இப்படி இவ்விரதத்தினையனுஷ்டித்து இஷ்டகாமியார்த்தங்களையும் முத்திப்பேற்றையும் பெற்றோர் சரித்திரம் பலவாம், என்று சூதமாமுனிவர் சொல்லக்கேட்ட நைமிசாரண்ய வாசிகள் இவ்விரதத்தினை இவ்விதிப்படி நோற்று, பரம சாம்பிராச்சியப் பெருவீடடைந்த மேலோர் சரித்திரங்களையுஞ் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்கச் சூதமாமுனிவர் சொல்லுவாராயினர்.

மான்மியச்சருக்கம்.

முற்றிற்று.

குமாரச் சருக்கம்.

கந்த நாண்மலர்க் குவளைநட் புறுகதிர் மதியஞ்
சந்த னடவிப் பொதும்பரிற் றவழ்ந்துசெல் சாரல்
விந்த மால்வரைக் குத்தரத் துததியின் விரிநீ
ருந்துவெண்டிரைச் சிந்துவென் றொருநதி யுளதால்(க)

விடங்க திர்த்திர ணித்திலக் கோடுகள் விரவி
நெடுந்த ருக்களை முரித்துநன் னீலவண் டார்ப்ப
வடுந்தொ ழிற்புரிந் தடவிமால் வரைநின்று வரலாற்
கொடுங்கொலைக்கடம் பொழிகவுட்களிறெனக் குலவும்.

(க) நாண்மலர்=பகலில்மலருந் தாமரைமலர்; குவளை = கருநெய்தல்; நட்புறு=விரும்புகின்ற; சந்தனஅடவி=சந்தனவிருட்ச மடர்ந்த காடு; பொதும்பர்=சோலை; உததியின்=சமுத்திரம்போல, விரிநீர்=பரவியநீரானது; உந்து=வீசுகின்ற.

(உ) இச்செய்யுள் நதிக்கும் யானைக்குஞ் சிலேடையாகக்கூறப்பட்டதாம். எங்ஙன மெனின்; யானையானது முத்துக்கள் பொருந்திய இரண்டு கோடுகளை யுடையதாய், தான் செல்லும் மார்க்கத் திருமருங்கிலுமுள்ள மரங்களை முறித்துக் கொண்டும், மதநீருண்ணும் வண்டுகள் கோஷிக்க எதிர்ப்பட்டவர்களை அழித்துக் கொண்டும் காடுசூழ்ந்த மலைகளினின்று வருதல்போல, இந்நதியானது; முத்துக்கள் பொருந்திய இரண்டுகோடு (கரை) களையுடையதாய், தான் செல்லுமார்க்கத் திருமருங்குகளிலுமுள்ள (நதியோரங்களிலுள்ள) மரங்களை முறித்துக்கொண்டும் (வேரையறுத்து வீழ்த்தி), அம்மரங்களினது புஷ்பங்களிலிருந்து தேனை யுண்ணும் வண்டுகள் (அதனால்) சப்திக்க எதிர்ப்பட்ட திட்டு (மேடு) களையும் மனிதர்களையும் அழித்துக்கொண்டும் மலையினின்று வருதலாமெலன்க.

கலைகள் கற்றறி புலவர்வாய்த் தோன்றிய கவிபோன்
மலையி டைப்பிறந் தளக்கரும் பொருள்கொடு வந்து
தலைமை யுற்றசீர் பெற்றுயர் சங்கமார்ந் தெங்கு
முலவி மாநிலத் தவர்களுக் கின்பமே யுதவும். (௩)

ஏந்து பூண்முலை யெயிற்றியர் வயிறலைத் திரங்கக்
காய்ந்த புற்குரம் பைகளழித் தம்புவிற் கவர்ந்தே

(உ) கதிர்த்திரள் விடும் = மிகுந்த பிரகாசம் வீசும்; நித்திலம்=முத்துக்களை; கோடுகள் = கரைகள் (அன்றியும், மருப்புகள்.) விரவி = பொருந்தி; ஆர்ப்ப = சப்திக்க; அடுந்தொழில் = அழிக்குஞ்செய்கை; அடவி =காட்டையுடைய; மால்=பெரிய; கடம்=மதம்; கவுள் = கன்னம்.

(௩) இச்செய்யுள் நதிக்கும் தமிழ்ச்செய்யுளுக்கும் சிலேடையாகக்கூறப்பட்டதாம். எங்ஙன மெனின். தமிழ்ச்செய்யுளானது (பொதிகை) மலையினிடத்துத் தோன்றி அளவிலாப் பொருள்களைக் கொண்டுவந்து சங்கத்தைச் சார்ந்து எங்கும்பரவி உலகுக்கின்பமளிப்பதுபோல இந்நதியானது மலையினிடத்துத்தோன்றி (மலைபடுதிரவியம் காடுபடு திரவியமுதலிய) அளவில் பொருள்களைக்கொண்டுவந்து சங்குகளைப்பொருந்தி எங்கும் பரவி உலகத்தவர்கட்கின்பமளித்தவாறென்க.

கவிபோல்=தமிழ்ச் செய்யுளைப்போல; அளக்கரும்பொருள் = அளவுபடாப் பொருள்; சங்கமார்ந்து = சங்குகள்பொருந்தி (அன்றியும், வித்துவ சங்கத்திற் சேர்ந்து); உலவி=பரவி.

(௪) இச்செய்யுள் நதிக்கும் அரசனுக்குஞ் சிலேடையாகக்கூறப்பட்டதாம். எங்ஙனமெனின்; அரசனானவன் (தன்னை நெருங்கிப் பகைத்த அரசர்களுடைய மனைவியராம்) ஆபரணங்களைத்தரித்த முலைலயரும்பை யொத்த பற்களையுடைய ஸ்திரீகள் வயிற்றைப் பிசைந்து வருந்த

யாய்ந்த புரிலையிற் குறும்புக ளடக்கிவே லரசர்
வாய்ந்த வெள்வளை முழங்கவந் தாலென வருமால். (௪)

அவ்வரசர்களது தேகங்களை அழித்து அவரது அம்பை யும் வில்லையுங் கவர்ந்து மீண்டுவருகையில் பாலை நிலத்துள்ள வேடர்களது (வழிமறித்துக் கொள்ளையிடன் முதலிய கொடுஞ்செய்கைகளாம்) குறும்புகளையடக்கி வெற்றிச்சங்க முழக்கத்துடன் வருவதுபோல இந்நதியானது நீர்ப் பெருகியபொழுது இருமருங்குகளிலுமுள்ள வேடர்களது புற்குடிசைகளை அழித்து அக்குடிசைகளில் வசிக்கும், ஆபரணங்களை யேந்திய தனங்களையுடைய வேடப் பெண்கள் வயிற்றைப் பிசைந்து வருந்தும்படி அக்குடிசைகளிலுள்ள அம்பையும் வில்லையும் அடித்துக்கொண்டு பாலை நிலத்துவந்து (அங்குள்ள அதிவெப்பமாகிய) குறும்பைத் தணித்துச் சங்குகள் சப்திக்க வருதலினாலென்க.

அரசன் றன்மைக் குரியன.

ஏந்து பூண் = ஆபரணங்களைத் தரித்த; முல்லை = முல்லை யரும்பையொத்த; எயிற்றியர்=பற்களை யுடைய (மாற்றரசர்களின் மனைவியராம்) ஸ்திரீகள்; காய்ந்த=பகைத்த மாற்றரசர்களுடைய; புல் = அற்பமாகிய; குரம்பைகள்=தேகங்களை; பாலையில்=பாலை நிலத்தில்; ஆய்ந்த=(வழி மறித்துப்) பறித்தலாம்; குறும்புகளடக்கி=துன்பங்களை யொழித்து; வெள்வளை முழங்க=சங்கத் தொனியுடன்.

நதியின் றன்மைக் குரியன.

பூண்=ஆபரணங்களை; ஏந்தும்முலை=தரிக்கும் தனங்களையுடைய; எயிற்றியர்= (மலையினிடத்து வாழும்) வேடப்பெண்கள்; அலைத்து = பிசைந்து; இரங்க= வருந்தும்படி; புற்குரம்பை=புற்களாற் புனையப்பட்ட குடிசைகளை; பாலை=நீரும்நிழலு மில்லாத சுரமும்சுரஞ்சார்ந்த விடமும்; ஆய்ந்த=வருத்தும்; குறும்புகள்= வெப்பங்கள்; வெள்வளை முழங்க=சங்குகள்சப்திக்க.

கருது மந்நதிக் கரைமருங் குளதுகட் கமலத்
திருமகட்கணி யன்னது தேவரும் வியப்பத்
தருமநீதியுஞ் செல்வமுந் தழைப்பது தகைசால்
பொருவில் குஞ்சர புரியெனப் புகலொரு நகரம். (௫)

உழவ ருவயற் கமலவாண் முகத்திய ருவப்ப
மழவ ருதநல் லாடவர் மணவினை முடிக்கும்
விழவ ருதவெண் சங்கொலி வீதிதோ றிரட்ட
முழவ ருதவம் முதுநகர்ப் பெருமையார் மொழிவார். (௬)

நீரு கந்தகார் நிகர்நிறம் படைத்திடு நெடுமால்
ஏரு கந்தபைந் துகிலுடுத் தரிக்கலை யிகந்து
பாரு கந்தளந் திடநிமிர்ந் தாலெனப் படுமம்
போரு கந்திக ழகழ்ப்புறஞ் சூழ்நெடும் புரிசை. (எ)

வீழ்ந்து விண்முகில் வேலையென் றுண்ணீர் மிகுந்திட்
டாழ்ந்த கன்றுநீ டிஞ்சியை வளைந்தபே ரகழி
தாழ்ந்து மீதுய ரடிமுடிச் சக்கர கிரியைச்
சூழ்ந்து வெண்டிரைப் பெருங்கடல் சுற்றிய தொக்கும். (அ)

---

(௫) மருங்கு—இருபக்கத்திலும்; கள்—தேன் பொருந்திய; கமலம் — தாமரை; அணி — ஆபரணம்; தகைசால்—பெருமையுள்ள.

(௬) வாள் — ஒளி; மழவு — இளமை; விழவு — உத்ஸவம்; இரட்ட—ஒலிக்க; முழவு—மணமுரசி னொலி.

(எ) நீருகந்த—நீர்பொருந்திய; ஏருகந்த—அழகுபொருந்திய; பைந்துகில்—பசுமைநிறம் பொருந்திய துகில்; அரி—பொன்னுற்புனையப்பட்ட; கலையிகந்து—வஸ்திரத்தை நீக்கி; பார்—உலகத்தை; உகந்து—விரும்பி; அம்போருகம்—தாமரை; புரிசை—மதில்.

(அ) முகில்—மேகம்; வேலை—சமுத்திரம்; நீடு இஞ்சியை—நீண்டமதிலை; அடிதாழ்ந்து—அடியானது பூமியிலாழ்ந்து; முடிமீது உயர்—உச்சியானது மேலே வளரப்பெற்ற; பெருங்கடல்—பெரும்புறக்கடல்.

குறையில்பொன்னெயிற்குடுமியிற்றெடுத் துயர்கொடிக
ளறைறதிரைப்புன லகழிரு ழந்நக ரரிவை
நிறைவ னப்பெதிர் நோக்குறு மாடியர் நிலவின்
கறைது டைத்திட நீட்டிய கரங்களிற் கவினும். (கூ)

நிலவு மாமணி விமானங்க ணிலத்திருந் தென்னப்
பலவு மால்வரைக் குலநிரைத் தேனக்கதிர் பரப்பி
யுலவு மான்மதிக் கூன்முது குரிஞ்சிட வுயர்ந்து
குலவு மாடகத் தியற்றிய கூடமா டங்கள். (க0)

மாற தாமென நிழலுடன் மலைகா மலைக
ளாற தாமென விடுமதம் பெருக்கெடுத் தலைப்பச்
சேற தாய்நெடுந் தேர்களுஞ் சனங்களுஞ் செல்ல
நீற தாய்த்துக ளெழுந்துவிண் புதைக்கு நீள்வீதி. (கக)

வையம் யாவையும் விலைபெற வளர்முலை வருத்த
நையு நுண்ணிடை நாரியர் புலவியிற் கழித்த
துய்ய மான்மதச் சேற்றொடு துவளுமுத் தாரஞ்
செய்ய மாமணிக் கலன்கிடந் தெறிப்பன தெருக்கள்.

(கூ) எயில்=மதிலின்; குடுமியில் = உச்சியில்; அறை=கரை யைமோதுகிற; நகர் அரிவை=நகரமாகிய பெண்; வன ப்பு=அழகு; கறை=களங்கம்; கவினும்=ஒக்கும்.

(க0) நிலவு = பிரகாசிக்கிற; மால்வரைக்குலம் பலவும் = பல பெரியமலைக் கூட்டங்கள்; நிரைத்தென=வரிசையாக வைத்ததுபோல; மான்மதி = மான்ரூபமான களங்க முள்ளசந்திரன்; உரிஞ்சிட=தேய்க்கும்படி; குலவும்= விளங்கும்; ஆடகத்து=பொன்னால்.

(கக) மாறு = சத்துரு; மலை = சண்டையிடும்; காமலைகள்= யானைகள்; புதைக்கும்=மூடும்.

(கஉ) மான்மதம் = மிருகமதம் அஃதாவது புனுகு கஸ்தூரி முதலியன; நையும்=துன்புறும்; சேறு=களபம் (சந் தனக்குழம்பு); துவளும் = அசையும்; கலன் = ஆபர ணம்; எறிப்பன=பிரகாசிப்பன.

ஆதி நூலுண ரந்தணர் சாலைக ளொருபா
னீதி மன்னவர் நிறைமணி மாளிகை யொருபா
லூதியம்பெறு வணிகர்வாழ் வசதிக ளொருபாற்
சோதின் மண்மகள் புதல்வர்தங் குலமனை யொருபால்.

மெலிக்கு நூலிடை யறுமென மேகலை யரற்றிச்
சலிப்ப நாண்மலர்த் தாளணி தண்டைநூ புரங்கள்
கலிப்ப நீடிய காந்தளங் கைவளை கலினென்
றொலிப்ப மாதர்க ளாடக மாடங் கொருபால். (கச)

அலைக டற்கடைந் தரிசுரர்க் கமுதளித் ததுபோற்
றலைமை பெற்றமுத் தமிழ்க்கட லமுதத் ததனு
லுலைவு றக்கலக் கிச்சுவை செவிப்புலத் துண்பான்
கலைகள் கற்பவர்க் குரைப்பவர் கழகமங் கொருபால்.()

வார்வி சித்திடு மணிமுர சோதையுங் கொடுஞ்சித்
தேர்வி டுத்திடு மோதையும் பிளிறுசிந் துரங்கள்
போர்வி டுத்திடு மோதையும் புரவியின் கனைப்புங்
கார்வி டுத்திடு மோதையின் மும்மடி காட்டும். (கசா)

(கந). சாலை=வீடு; ஊதியம் = லாபம்; வசதி=வசிக்குமிடம் (வீடு); குலமனை=சிறந்தவீடு.

(கச) மெலிக்கும் நூல் = மெல்லிதாகிய நூல்போன்ற; மேகலை = ஸ்திரீகள் இடையிற் றரிக்கும் எண்கோவை மணி; அரற்றி=அழுது; சலிப்ப = வெறுப்படைய; கலிப்ப=கலீரென்ன; ஒலிப்ப = சப்திக்க; காந்தளங்கை=அழகிய காந்தட் புஷ்பமொத்த கரம்.

(கரு) தமிழ்க்கடல்=தமிழாகிய கடலை; தாலம்=நாக்கு; உலைவுற=சுழலும்படி; கழகம்=கல்விபயிலுமிடம்.

(கசா) வார்=நீண்டதோற்பட்டையால்; விசித்திடும் =இழுத்துக்கட்டிய; ஓதை=சப்தம்; கொடுஞ்சி=தேர்ச்சிகரம்; பிளிறு=யானைகத்துதல்; சிந்துரம்=யானை; கார்விசித்திடும் ஓதை=இடியோசை.

மறைவி ரித்துரை பயிற்றுந ரோதையு மன்னர்
திறை யளக்கவந் தீண்டின ரோதையுந் தேவர்க்
கிறைமை யிற்றினஞ் சாறய ரோதையு மெழுந்திட்
டறை கடற்படு முழக்கமுந் துளக்குற வலைக்கும். (௧௭)

துண்ட மாமதி தவழ்மதிற் றென்னக ரதனுட்
கண்ட வாருயிர்த் தொகைமுத லடங்கிய கணக்கா
லண்ட கோளகை கவித்திடும் பேருல கனைத்து
முண்ட முண்டகக் கண்ணினோ னுதரமொத் துளதால். (௧௮)

அரிபு ரந்தரன் விரும்புமந் நகரினிப் பவன்றோ
லுரிபு ரந்தரித் தயர்வட வரைகுழைத் துருத்துத்
திரிபு ரஞ்சுடு சிவனடி சிந்தைசெய் பவன்றாட்
பரிபு ரந்திகழ் திருவுறை பரிபுரஞ் சயனே. (௧௯)

காந்து செம்மணிச் சேடனுங் கமடமுங் கடம்பா
யேந்து கோட்டுமோட் டிபங்களோ ரெட்டுமெண் கிரியு
நாந்த கத்தொடு சமரமேற் றெதிருற நணுகும்
வேந்த ருஞ்சுமை யாறிட மேதினி பரிப்போன். (௨௦)

---

(௧௭) பயிற்றுநர் = கற்பிப்போர்; மன்னர்திறை = அரசிறை; அளக்க=செலுத்த; ஈண்டினர்=கூடினோரது; இறைமையில் = இராச்சியமுறைப்படி; தினம்=ஒவ்வொருநாளும்; சாறு=திருவிழா; அயர்=செய்கின்ற; துளக்குற = நடுங்க; அலைக்கும்=வருத்தும்.

(௧௮) துண்டம்=கீற்றுவடிவாகிய; அண்டகோளகை=வானவட்டம்; உதரம்=வயிறு.

(௧௯) புரந்தரன்=இந்திரன்; தோலுரி = புலித்தோல்; புரம் = தேகத்தில்; குழைத்து = வளைத்து; உருத்து = கோபித்து; தாள் பரிபுரம்=காற்சிலம்பு.

(௨௦) காந்து = ஒளிவீசுகின்ற; கமடமும்=கூர்மமும்; கடம்பாய்=மதம் பொழியும்; மோட்டிபம்=உயர்ந்தயானையும்; நாந்தகம்=வாள்; சமரம்=யுத்தம்; பரிப்போன்=தாங்கினோன்.

வேத நூன்முறை திறம்பிடா தெங்கணும் விளங்க
மாதர் கற்பெனும் வரம்பழி யாமன்மா நிலத்தோர்
பாதகம்பழி பயின்றிடா தருள்விழி பரப்பி
யாதரத்துட னறப்பயிர் வளர்த்தர சளித்தான். (உக)

அனைய கோமகற் காசிசொல் புரோகித னானோன்
வினையி னீங்கிய சுரர்குரு நிகர்ப்பவன் வெண்ணூல்
வனையு மார்பினன் முத்தழல் வேள்விகள் வளர்ப்போன்
றனைய ரின்றியே நெடிதுநாட் டவத்தொடு சரித்தான்.

சொற்ற வேதிய னில்வயிற் றோர்சுதன் றீமை
முற்று மோருருக் கொண்டென முடங்குவெண் டிரைக
ளெற்று பாற்கட லிடைவிட முதித்தென வெழில்கூர்
பெற்ற மூர்மறைக் கொழுந்தின தருட்பெறப் பிறந்தான்.

தோன்று மைந்தனுக் குபர்சுகு மாரனென் றருளா
லீன்ற தந்தைபே ரிட்டழைத் தோர்மணி யழுத்தி
யான்ற பொன்னணி யணிந்தையாண் டணுகிடு மளவின்
மூன்று நூல்வினை நான்மறை விதிப்படி முடித்து. (உச)

ஆதபன்வட திசையணை யுத்தரா யணத்துத்
தீதகன்றிடு மோரைகூ டியசுப தினத்திற்
றாதவிழ்ந்தவெண் டாமரை யாள்சரண் வழுத்திப்
பாதகம்பயின் மகற்குநான் மறைபயில் வித்தான். (உரு)

(உக) திறம்பிடாது=தவறாது; பாதகம்=துரோகம்; பழி=இகழ்ச்சி; ஆதரம்=அன்பு.

(உஉ) ஆசி=ஆசீர்வாதம்; சுரர்குரு=பிரகஸ்பதி; வனையும்=அணியும்; சரித்தான்=சஞ்சரித்தான்.

(உங) இல்=பெண்டீர்; முடங்கு=மடித்தலையுடைய; எற்றும்=மோதும்; பெற்றம்=இடபம்; ஊர்=வாகனமாகவுடைய.

(உச) ஏர்மணி=அழகிய ரத்தினம்; ஆன்ற=நிறைந்த; மூன்று நூல்=முப்புரியார்ந்த பூணூல்.

(உரு) ஓரை=இலக்கினம்; தாதவிழ்ந்த=மகரந்தம்வீசும்.

ஆய்ந்த பூற்பல தலைகளு மாவினுக் கமுத
மீந்த தாமெனக் கமரிடை யுகுத்தபா லென்ன
வோய்ந்தி டாமலிற் பகலெலா முணர்த்திட வுணர்ந்து
வாய்ந்த காமவேள் கணைக்கிலக் காமென வளர்ந்தான்.

கவள மால்களி றெனவரு காட்சிகண் டுருகித்
துவள நூலிடை நடந்துபின் றொடர்ந்துதூ முல்லைத்
தவள வாணகை கோட்டிமற் றருந்தனங் காட்டிப்
பவள வாயினார் காமுறு பருவமெய் தினனால். (உஎ)

கஞ்ச நாண்மலர்க் கண்ணினன் கலைமதி தகர்த்து
விஞ்ச வேநிரைத் திணக்கிவைத் தனையவெண் ணகை
சஞ்ச ரீகமட் டார்பசுந் தாரொடுந் தழுவி [யான்
மஞ்சு கிண்டெழு மின்னென நுடங்குநூன் மார்பன்.

பெய்யு மாமழை முகிலெனப் பிளிறுசிந் தூரத்தின்
கைய தாமெனக் கவின்றரு தாழ்தடக் கையான்
றுய்ய வாரிச முகைமுறுக் கவிழ்செழுந் துணரின்
செய்ய தாளினன் றேடரு மாடவர் திலதன். (உகூ)

(உசு) ஆய்ந்த=தெளிந்த; கமர் = பூமியின் வெடிப்பு; இலக்கு ஆம் என=இலட்சியமாக.

(உஎ) கவளம் = வாயளவு கொண்ட உணவின் உருண்டை; காட்சி=தோற்றத்தை; தூ=பரிசுத்தம்; நகை=பல்; கோட்டி=சிரித்து.

(உஅ) கஞ்சம் = தாமரை; தகர்த்து = உடைத்து; நிரைத்து இணக்கி = வரிசையாக நெருக்கிவைத்து; விஞ்ச = சிறப்பாக; சஞ்சரீகம்=வண்டு; மட்டு=தேன்; பசும்= சிறந்த; நுடங்கும்=துவளும்.

(உகூ) சிந்தூரம்=யானை; கை=துதிக்கை; வாரிசம்=தாமரை; செழுந்துணர்=அழகியமலர்; செய்ய=அழகிய; ஆடவர்=ஸ்திரீகள்; திலதன்=திலதம் போன்றவன்.

சொன்ன விண்டுவிற் றிரண்டுயர் பணைத்தடந் தோளா
வன்ன மேகலை மடந்தையர் கண்கவர் வதனன் [ன்
கன்ன லஞ்சிலைக் காமனே காட்சிதந் தனையா
னன்ன வன்றிருப் பேரெழி லாரெடுத் தறைவார். (௩௦)

தென்ற லந்தடந் தேர்மிசை வருமதன் செங்கை
மன்ற லம்புகள் படப்படப் பதைத்துளம் வருந்திப்
பொன்ற யங்குபூட் புணர்முலைக் கணிகையர் போக
மன்றி லென்றிட நுகர்ந்தவா வடங்கில னாகி. (௩௧)

பழுதி லன்புட னுதயமுற் பகருமுப் பொழுதுங்
கொழுந ரன்றியோர் கடவுளைத் தளிர்க்கரங் குவியா
வழுவில் கற்புடை மடந்தையர் தமைமன மருட்டித்
தழுவி யானினத்தொருமழவிடையெனச்சரித்தான்.

மாமன் மைத்துன னெனவழைப் பானியா வரையுந்
தாம னாகம புராணநூல் சதுர்மறை யென்னு
நாம நாவினி னவின்றிடா னொடொறுஞ் சிலைக்கைக்
காம னாகமம் வேதமீ தாமெனக் கற்பான். (௩௩)

ஈடு வாடைமற் றிலேபன மெனுமருந் தியற்றிப்
பீடு சானிறை முறைமையிற் பெருந்தகை பெற்ற

---

(௩௦) விண்டுவில்=மலைபோல; பணை =பருத்த; வன்னம்(வர்ணம்) = அழகிய; காட்சிதந்து=பிரத்தியட்சமானது; திரு=சிறந்த; பேரெழில்=மிகுந்த அழகு.

(௩௧) மன்றல் அம்புகள் = வாசனையுள்ள மலரம்புகள்; தயங்கும் = பிரகாசிக்கும்; அன்றிலென்றிட = அன்றிற்பட்சிபோல.

(௩௨) முன்=முதல்; ஆன்இனத்து = பசுக்கூட்டத்து; மழவிடை=எவ்வனப் பருவமுள்ள காளை.

(௩௩) தாமன்=கொன்றை மலரைத்தரித்தோன் (பரமேசுவரன்); காமனாகமம்=மதனநூன்முதலிய காமசாஸ்திரம்.

கோடு மாமணிக் கும்பநேர் குவிமுலை சுமக்கும்
வாடு நூலிடை மகளிரை வசப்பட மயக்கும். (௩௪)

உலக்கு நாளணித் தாயினர்க் கொளிக்குமீ னொக்கு
நலத்தி னோர்சிலைக் காமவே ணணுகினு நழுவாப்
பெலத்த முல்லையின் றருக்களை வேரொடும் பிடுங்கி
நிலத்தி னீங்கிட விசைத்தெறி சுழல்வளி நிகர்த்தான்.

அந்தி வெண்பிறை முடித்தவ னடித்துணைக் கமலஞ்
சிந்தை செய்கிலன் றிருவுருக் களைச்சிலை யென்றே
நிந்தை செய்பவ னீதியாய் நித்தமு மியற்றுஞ்
சந்தி வந்தனை மறந்தனன் றுறந்தனன் றருமம். (௩௬)

இந்த வாறிவ னொழுகிய படிறுகண் டியாருந்
தந்தை பாலெடுத் துணர்த்திடத் தனையனைக் கூவி
யந்த மாநகர்க் கலைஞரை யழைத்தரு கிருத்திச்
சிந்தை தேறுற வுறுதிநன் மதிபல செப்பும். (௩எ)

---

(௩௪) ஈடு=இடுமருந்து; வாடை=வாசனையால் மயக்குமருந்து; இலேபனம்=பூசுமருந்து; பீடுசால்=பெருமை நிறைந்த; நிறைமுறை=கற்புமுறைமை; பெருந்தகை=பெருமை; கோடு =யானையின் மருப்பை யொத்த; வாடும்=துவளும்.

(௩௫) உலக்குநாள்=மரணதினம்; அணித்தாயினர்க்கு=சமீபித்தவருக்கு; மீன்=நட்சத்திரரூபமாயிருக்கும் அருந்ததி (ஒருவன் இறப்பதற்குமுன் ஆறுமாதந்தொடங்கி அருந்ததி நட்சத்திரம் அவன்கண்ணுக்குத் தோற்றாதாகலின் ஈண்டு ஒளிக்கும் மீன் என்றனர்); நலத்தினோர்=ஸ்திரீகள்; நணுகினும்=கிட்டினும்; நழுவா=நீங்காத; முல்லையின்=கற்பாகிய; வளி=காற்று.

(௩௬) திருவுருக்களை=விக்கிரகங்களை; சிலை=கல்.

(௩எ) படிறு = பொய்யொழுக்கம்; தனையன்=பிள்ளை; கலைஞர்=சாஸ்திரமுணர்ந்தோர்.

பிறர்மனைக்குரித் தாகிய பேதையைப் புணர்ந்தோ
ரறமடுத்தநண் பொடுபுகழ் பெருமையோன் றடையார்
மறமிகுத்தவெம் பவம்பழி மாற்றரு மச்ச
மிறலி யற்றிடும் பகையிவை நான்குமெய்ப் திடுவார். (௩அ)

நீடு ருதுநல் விளமையென் றுளத்திடை நினைந்து
நாடு ரூர்பிறர் மனையெனி னமரீர் வைப்பில்
வீடு ருப்புகழ் மேவுவர் வித்தைகை வித்தங்
கூடு ரூர்நர கக்குழி விழுந்தழுந் தகிலார். (௩௯)

ஊறு தீர்மரத் தூரியி னொன்றென வொன்றி
வேறு பேதகங் காட்டுபுன் மனத்தினோர் விழைவாற்
கூறு நீணிதி கவர்விலை மகளிர்பாற் குறுகி
யேறு காமமே நுகர்பவர்க் கிகபர மில்லை. (௪0)

என்று பற்பல நன்மதி துன்மதி யிதயந்
துன்று மச்சுகு மாரனுக் குரைத்தலுஞ் சொற்ற
தொன்று மற்றவன் செவிப்புல நுழைந்தில துபலஞ்
சென்று தைத்திடா நெடுமர முளையெனச் சிதைந்த.

(௩அ) பேதை=ஸ்திரீகள்; நட்பு=சிநேகம்; புகழ்=கீர்த்தி; பெருமை=மேன்மை; மறம்=பொல்லாங்கு; பவம்=பாவம்; பழி=இகழ்ச்சி; இறல்=கெடுதி.

(௩௯) வைப்பில்=உலகத்தில்; வீடுருப்புகழ் = அளவில்லாத கீர்த்தி; வித்தை=ஞானமும்; கை=நல்லொழுக்கமும்; மேவுவர்=அடைவர்; வித்தம்=இகழ்ச்சியை; கூடுரூர் =அடையார்; அழுந்தகிலார்=அழுந்தமாட்டார்.

(௪0) ஊரியின்=பட்டையைப்போல(உரியென்பது ஊரிஎன லாயிற்று. இது நீட்டல் விகாரமாம்.) ஒன்றென = (இருவருக்கும் உயிர்) ஒன்று என்று நினைக்கும்படி; ஒன்றி=சேர்ந்து; வேறுபேதங்கள்=பிரிவுற்ற வித்தியாசமான செய்கைகளை.

(௪க) துன்றும்=பொருந்திய; நெடுமரமுளை=பூமியிலடிக்கும் நீண்டமுளை (கூராகச்சீவிய மரக்கொம்பு).

கப்பி நாடொறுங் களித்துண வளிப்பினுங் கோழி
தப்பி லாதுபுன் குப்பைபோய்க் கிளைத்திட றவிரா
தொப்பி னூல்படித் துறுமதி யேபல கோடி
செப்பினுலுந்தம்மனம்புரிசெயல்விடார்தீயோர். (சஉ)

களிப்பி னுஞ்சுடுங் கடவுளர் கடல்கடை யமிர்த
மளிப்பி னுஞ்சுடு மறைதிரைக் குளிர்புன லகத்துக்
குளிப்பி னுஞ்சுடுங் குன்றுறு குகைகளிற் குறுகி
யொளிப்பி னுஞ்சுடுங் காமமிக் கூர்தர வுழன்றான். (சஙு)

தூய நீத்திழி தொழில்புரி துற்குணத் திவனைத்
தாயு நீத்தன டந்தையு நீத்தனன் றமர்க
ணேய நீத்தனர் நிலநிதி மகளிர்மே னிகழு
மாய நீத்ததின் மயக்கறத் துறந்தவர் மனம்போல். (சச)

தொழுகு லத்தவர் குலத்தினிற் றோமறத் தோன்றிப்
பழுது பற்பல விளைத்திழி குலத்தொழில் பயின்றான்
முழுமு தற்பொரு ளாய்மறை நடஞ்செய்நான் முகத்தோ
னெழுது மத்தக விதிவழி விலக்கினோ ரெவரே. (சரு)

கன்னி மாடமுங் கடிமதிற் காவலுங் கடந்து
துன்னு மாரிருட் பொழுதின்மங் கையர்முலை தோய்வா

(சஉ) நாள்தோறும் களித்து=பிரதிதினமும் மகிழ்வாக; கப்பி = வாயில் அடைத்து; உணவளிப்பினும் = ஆகாரங் கொடுத்தாலும்; தப்பிடாது=தவறாது; கிளைத்திடல் =கிண்டுதல்; ஒப்பில்நூல்=மேலாகியவேதாகமம்.

(சஙு) ஊர்தர=பொருந்த.

(சச) தூயம் = பரிசுத்தம்; நிலம் நிதி மகளிர்=மண் பொன் பெண்; மாயம் நீத்து=தோன்றியழியும் உலகத்தின் போகவாரிதியை நீந்தி; அதின்மயக்கற = பின்னும் அதன்பேரிலுண்டாகும் இச்சா மயக்கம் நீங்க.

(சரு) தொழுங்குலம்=பிராமண குலம்; தோம்அற=குற்றம் நீங்க; பயின்றான்=செய்தான்; மத்தகம்=தலை.

னன்ன மன்னவர் தமைப்பிறர் விலக்கினு மிணையா
ரின்னதன்மையினீங்கிவைநிகழ்ந்துறுமேல்லை. (சசு)

முத்த மீதினு முளரிமென் முகிழ்முலை முகத்தும்
வைத்த பற்குறி நகக்குறி கண்டுதம் மனையார்
தத்த மக்குள கற்பழிந் தாரெனச் சலித்துக்
கைத்த சிந்தைய ராகியக் கடிநக ருள்ளார். (சஎ)

காவல் கட்டழித் திரவினிற் கரவினு லெய்தி
யாவ ரித்தொழில் புரிபவ ரெனமனத் தெண்ணிப்
பாவ முற்றிய படிற்றொழுக் கச்சுகு மாரன்
மாவ னப்புடை யான்செய லிது வென மதித்து. (சஅ)

அற்ற நோக்கியாம் பற்றினு மகப்படா னுசை
பெற்ற மாதர்தம் மொழிப்படி யினிமனம் பிரியா
ரிற்ற தாகுமில் வாழ்க்கையென் றிரங்கியுட் கவலை
யுற்று ளோர்திரண் டென்செய்கே மிதற்கென வுசாவி.

வேறு.

காசினி யென்னு மாதின் கலிக்கரி யாடை நீக்கி
மாசகல் புகழ்வெள் ளாடை சாத்திய மன்னன் முன்போய்க்

(சசு) கடிமதில்=அழகிய பாதுகாப்புச் சுவர்; அன்னமன்ன வர்=அன்னம்போன்ற நடையினையுடைய ஸ்திரீகள்; எல்லை=காலத்தில்.

(சஎ) முத்தம்=உதடு; கைத்த=வெறுத்த; கடிநகர்=காவலமைந்தஊர்.

(சஅ) கட்டழித்து=நிலைகுலையச்செய்து; கரவினல் = மறைவாய்; படிற்றொழுக்கம்=வஞ்சகநடை.

(சகூ) அற்றம்=சமயம்; பற்றினும்=பிடிக்கினும்; இற்றது= அழிந்தது; உசாவி=ஆராய்ந்து.

(ருo) கலி = சமுத்திரமாகிய; கரியாடை = கறுப்புவஸ்திரம்; மாசகல்வார் = (கர்பு ஆகிய) தூய்மை நீங்கப்பெற்ற ஸ்திரீகள்.

கூசுத லின்றிநந்தங் குறைதிறந் தறைவோ மென்னத்,
தூசகல் வரின் மான மிழந்தவர் துணிந்து சூழ்ந்து. (ருo)

கால்வழி சென்னீ ரென்னக் கருத்தொருப் படுத்
திமான, வேல்வழி கண்ட நெஞ்சர் வெள்வளை கொழுக்
கள் கிண்ட, சால்வழி பரந்துமேயுந் தண்பணை நாடுநீதி,
நூல்வழி புரக்கு மன்னன்வாயிலை நோக்கி யேகி. (ருக)

வாயிலோர் தம்மைக் கண்டெம் வரவுரைத் திடு
தி ரென்னப், போயிலோர்க் கன்னை யன்ன புரவலற்
போற்றி மாந்த, ராயினோர் கோடியோரிங் கடைந்தன
ரென்னக் கஞ்சக், கோயிலோ ரிருவர்மேவுங் கொற்ற
வன் கொணர்மி னென்றான். (ருஉ)

அரசர்கோ னருளிப்பாடென் றவரையுட் புகுத்
தப் போந்து, கரசரோ ருகங்கள் கூப்பிக் கனைகழற்
றளிற் றாழ்ந்து, பரசநீள் கடைக்க ணோக்கம் பரப்பி
நங் குறையா தென்ன, முரசகே தனனை யொப்பாய்
கேளென மொழிய லுற்றார். (ருங)

(ருக) கால்வழி = வாய்க்காலின் வழியே; செல் நீரென்ன = செல்லுகின்ற நீர் போல; மானவேல் = மானமாகியவேலானது; வழிகண்ட = துளைக்கப்பட்ட; கொழுக்கள் = கலப்பையி னுனியிலுள்ள இரும்பு; சால்வழி = உழுதகோடு; பரந்து = சென்று; தண்பணை = குளிர்ச்சிபொருந்திய வயல்; புரக்கும் = காக்கும்.

(ருஉ) வாயிலோர் = வாயிற்காவலர்; இல்லோர்க்கு = மிடியருக்கு; புரவலன் = அரசனை; கோடி = அளவில்லாத; கஞ்சக்கோயிலோர் இருவர் = தாமரை மலரை இல்லமாகவுடைய சரஸ்வதி இலக்குமி ஆகிய இருவர். (எனின் கல்வியும் செல்வமுமாம்).

(ருங) அருளிப்பாடு = கட்டளை; சரோருகம் = தாமரை; பரச = துதிக்க; அம் = அழகிய; முரசகேதனன் = முரசவாத்தியத்தைக் கொடியாகவுடையோன் (தருமராஜன்).

பூசுரர் குலேசனுங்ின் புரோகிதன் மைந்தனாநது, வாசநீள் கணைகரந்த மதன்சுகு மாரனென்போ, னீச ஞயீத் தனதுசாதி நீதியா நியமநீத்துத், தூசகல் கர வஞ்சஞ் சூதுசெய் தூர்த்தனுகி. (ருச)

சூல்வளை முழங்கி யார்க்குந் தொடுகடல் வளாக வைப்போர், கோல்வளை யாமற் காக்குங் குரிசினின் னகரந் தன்னிற், கால்வளை வரிவில் லேய்க்குங் கருங் கொடிப் புருவ மின்னுர், மால்வளை மனத்த ராய்க்கற் பிகந்திட வருத்து கின்றுன். (ருரு)

இல்லின்மே வியமின்னுர் தங் குறைகளை யெவர்க்கு முன்னுஞ், சொல்லநா ணுறுவர்யாருந் தோற்றுநோய் துடைத்து மாற்ற, வல்லரா மருத்து வர்க்கு மறைப்ப வருளரோ மன்ன, புல்லரே மானங்காத்துப் புரந்தரு ளெம்மை யென்றுர். (ருசு)

கேட்டபோ திருகைப் போதாற் கிளர்செவித் துளைகண் மூடிக், கோட்டமி றனிக்கோ லோச்சுங்

(ருச) பூசுரர் =(பூலோகதேவர்)பிராம்மணர்; வாசநீள்கணை= வாசனைபொருந்திய நீண்ட மலரம்பு;நீசனுய்=சண்டா ளனுய்; தூசு அகல் கரவம் = குற்றமிகுந்த வஞ்சனை; தூர்த்தன்=துஷ்டன்.

(ருரு) சூல்வளை = கர்ப்பம்நிறைந்த சங்கு; தொடு = ஆழ்ந்த (அல்லது தோண்டிய); வளாகம் = இடமாகவுடைய; வைப்பு=பூமி; ஓர்கோல்=ஒப்பற்றசெங்கோல்; குரி சில்=அரசனே ? ; கால்=இரண்டு நுனி; வளைவரி= வளைத்துக்கட்டிய; ஏய்க்கும்=ஒக்கும்; மால்வளை=மய க்கஞ்சூழ்ந்த; இகந்திட=நீக்கும்படி.

(ருசு) மன்ன=அரசனே; புல்லரேம்=அற்பராகியஎங்கள்; புர ந்தருள்=கிருபைசெய்து இரட்சி.

கோவிரு கோக்கள் சேப்ப, வாட்டமில் குமுதச் செய்ய வாயிதழ் துடிப்ப வீந்த, நாட்டர சளித்தநீதி நன்று நன்றென்ன நக்கான். (௫௭)

சீற்றமீக் கூரநின்ற சேனைகா வலரை நோக்கி, மாற்றரும் படிறனாகி மறைக்குலந் தோன்றி னோனைக், காற்றென விரைந்து சென்றிக் கணத்தினிற் கொணர் மினென்று, வேற்றுரி முரச நாண விடியென முழங் கிச் சொன்னான். (௫௮)

குரைகடல் விடத்திற் றோன்றுங் கூற்றுவன் றாத ரொப்பா, ரரைநொடிப் பொழுதி லோடி யந்நகர் முழு துந்தேடி, வரையில்புன் றொழில்க ளாற்று மறைய வன் றன்னைப்பற்றி, விரைவுடன் கொணர்ந்து கொற்ற வேந்தர்கோன் றிருமுன் விட்டார். (௫௯)

வெய்யவேல் விடலை தூர்த்த விப்பிரன் றன்னை நோக்கிச், செய்யநான்மறையோர்நீதிதிறம்பிடுமிவனைச்

---

(௫௭) கைப்போது=மலர்போன்ற கரம்; இளர்=விளங்குகிற; செவித்துளைகள்=காதுகளை; கோட்டமில்=கோணுதலில்லாத; ஓச்சும்=செலுத்தும்; கோ=அரசன்; இருகோ=இரண்டுகண்; வாட்டமில் = வாடுதலில்லாத (அஃதாவது அப்பொழுது மலர்ந்த); குமுதச்செய்ய=அல்லிமலர்போற் செவந்த; நக்கான் = சினநகைசெய்தான்.

(௫௮) சீற்றம்=கோபம்; மீக்கூர= அதிகரிக்க; மாற்றரும்= ஒழிக்கப்படாத; படிறன்=வஞ்சகன்; ஏற்றுஉரி=காளையினது தோல்.

(௫௯) குரை = சப்திக்கின்ற; விடத்தில்=விடத்தைப்போல; வரையில் = அளவில்லாத; கொற்ற = வெற்றியுற்ற; வேந்தர்கோன்=அரசருக்கரசன்.

சென்னி, கொய்திட வேண்டு மென்னக் குலீமுறை யவ்வைரக்கோற, லேயநின் மரபு நீதிக் கடாதஹென் றமைச்சர்கூற. (சுo)

கோமுகங் குளிர்ந்துகோபக் கொடுங்கன றணிந்துபின்ன, ரேமுகக் கருங்கண் மாதர்க் கிசைந்தகற் பெனுங் கான்காம, மாமுகத் தீயி னூற்சுட் டரும்பழி சுமந்த விந்தக், காமுகன் றனைநம் மெல்லை கடத்தினீர் விடுத்தி ரென்றான். (சுக)

அனையரவ் வுரைகேட் டந்த வந்தணன் றன்னைப் பற்றி, வனைகழன் மன்னன் காக்கு மாநிலங் கடத்தி யப்பால், வினைவலி யுனக்குச் சூழ்ந்த தென்றவர் விடுத்து மீண்டார், சினைவளர் தருக்கண் மேவுங் கானெறி சேணிற் சென்றான். (சுஉ)

விண்ணுறு வரைகளென்ன விளங்குதன் றனைத் தோள் சேர்ந்த, பண்ணுறு மொழியினாளை நினைதொறும் பரிந்து நீண்ட, கண்ணுறு புனலா றென்னக் கலுழவேள் கணைகள் பாய்ந்த, புண்ணுறு மார்பிற்றென்றல் புகுந்தழல் போலவீச. (சுங)

(சுo) வெய்யவேல் = கொடிதாகிய வேலாயுதத்தை யுடைய; விடலை = எவ்வன்பப்பருவமுடைய அரசன்; தூர்த்த = காமுகனாகிய; விப்பிரன் = பிராமணன்; திறம்பிடும் = தவறிநடக்கும்; கோறல் = கொல்லுதல்.

(சுக) கோ = அரசன்; ஏ = அம்புபோன்ற; முகம் = முகத்தினுள்ள.

(சுஉ) வனைகழல்மன்னன் = வீரக்கழலையணிந்த அரசன்; கானெறி = காட்டுவழி; சேண் = தூரம்.

(சுங) விண்ணுறு = ஆகாயத்தையளாவிய; பண்ணுறு = இனிமை பொருந்திய; கலுழ = அழ.

அடுசினக் கூரடி கோடி யாடுநீ டரவமாளி, படும தக் கலுழி தூங்கும் பிணைக்கைமால் யானைபாயுங்,கொடுவரிப் புலிவாழ் காட்டிற் கூளிபோற் றனித்துத் துன்பத், தொடுதிரிந் துழல்வா னங்கோ ரோடையை யடைந்தா னன்றே. (௬௪)

தத்திவீழ் திரைக ளெற்றத் தவழ்ந்துசூற் சங்கமீன்ற, நித்திலங் கரைகடோறு நிலவுகாளிழனீர்ப் பொய்கை, மெத்திய நீளமாழம் விரிவுறுமகலமெல்லா, மத்தியென் றுரைப்ப தல்லா லாரதன் பெருமை சொல்வார். (௬௫)

அம்புய முகமென்காவி யம்பக மாம்பல் வாய்வெண், கம்புகந் தரங்கோ கங்கொங் கைகணைக் கால்வரால்கூர், மம்புகழ் புறந்தாண் ஞெண்டு வருமுழந் தாள்களாகப், பம்புநீர்ப் படுகர் மென்சொற் பாவைய ருருவங் காட்ட. (௬௬)

முரிதிரைச் சிலைகால் கோட்டி மூசுவண் டெனுநாண் பூட்டி, விரிமலர்க் கமலங் காவி விசிகங்கள் விரை

---

(௬௪) கலுழி = வெள்ளம்; தூங்கும் = பொழியும்; பணை = பருத்த; வரி = கீற்றுப்புள்ளிகளமைந்த; கொடு = கொடிய; கூளி = பேய்.

(௬௫) எற்ற = மோத; நிலவு = பிரகாசத்தை; கால் = வீசும்; நிழல் = குளிர்ந்த; மெத்திய = பொருந்திய; அத்தி = கடல்.

(௬௬) காவி = நீலோற்பலம்; அம்பகம் = கண்; ஆம்பல் = அல்லிமலர்; வெண்கம்பு = வெண்மைநிறம் பொருந்திய சங்கு; கந்தரம் = கழுத்து; கோகம் = சக்கரவாகப்பட்சி; கூர்மம் = ஆமை; ஞெண்டு = நண்டு; பம்புநீர் = பரவிய சலம்; படுகர் = ஓடை.

விற் கோத்துப், பிரிவெனுந் துயராற்றுவிப் பிரன்ற னைப்பெருத்தபூசல், புரிதர மதனின் றென்னப் பொ ளிந்தவப் பொய்கை மன்னோ. (கூஎ)

மூண்டவெம் பசியாற் செய்ய முளரியார் முளரி யெங்கு, மாண்டமீ னிரைதேர் வன்மீன் வாய்ப்படா துகண்டு தப்பித், தூண்டகு வாளைதாவுந் துழனிகண் டெழுந்து துள்ளி, நீண்டபைங் கயலை நேடித் தூரந்து போய்ப் பாயுநீர்நாய். (கூஅ)

முத்தியி லவப்பொய் வேட முயன்றுகண் முகிழ்த்தி யோகம், புத்தியி னிருந்துதீமை புரிபவரென்னத் தூங்கித், துத்தியா டரவி னெட்டைக் கழுத்தினைச் சுருக்கி மீனைக், குத்திநுங் கிடக்கண்மூடி யிருப்பன குரண்டங்கோடி. (கூகூ)

(கூஎ) முரிதிரைச்சிலை = மடித்தலையுடைய அலைகளாகியவில்லை; கால்கோட்டி = வளைத்து; மூசு = நெருங்கிய; கமலம் = தாமரை; காவி = குவளை; விசிகங்கள் = அம்புகள்; விப்பிரன் = பிராமணன்; பூசல்புரிதர = போர்செய்ய; மதன் = மன்மதன்; னின்றென்ன = னின்றாற்போல.

(கூஅ) முளரிஆர் = முட்கள்பொருந்திய; முளரி = தாமரை; மாண்ட = நிறைந்த; இரைதேர் = இரையைத்தேடுகின்ற; வன்மீன் = முதலை; உகண்டு = துள்ளி; தூண்தகும் = தூண்போன்ற; துழனி = சப்தம்; பைங்கயல் = இளமையாகியகெண்டைமீன்; நேடி = தேடி; தூரந்து = துரத்தி.

(கூகூ) முத்தியில் = மோட்சமில்லாத; அவம் = வீண்; முயன்று = பூண்டு; முகிழ்த்தி = மூடி; துத்தி = படப்புள்ளி; அரவின் = பாம்பைப்போல; நுங்கிட = விழுங்க; குரண்டம் = கொக்கு; கோடி = அளவில்லன.

ஈட்டுவல் வினையின் கொட்பா லெடுத்திடு மியாக் கைமாண்டு, மீட்டும்வந் துலகிற் றோன்றும் விகற்பமித் தன்மை யென்னக், கோட்டுவெண் டிரைகண் மோதுங் குரைகடற் புவியுள் ளோர்க்குக், காட்டுவ தென்ன நீரிற் குளித்தெழு காண்டங் கொள்ளை. (௭௦)

தூயவெண் ணிறக்கூன் சங்கஞ் சூலுளைந் தேறி முட்டாண், மேயசெங் கமலப் போதின் மீதிருந் தொளிருந் தோற்ற, மாயர்கண் படைகண் டன்றோ ரகத்துறி சரித்து மாயன்,செய்கைத் தலத்தில் வாரித் திரட்டிய வெண்ணெய் போலும். (௭௧)

கல்லுநீர்க் கயத்து மீனைக் கதுவ வீழ்ந் ததுபெறு மற், சில்லுகிர்ச் சிரலை வெட்கிச் சிறைவிரித் திருப்ப தோர்பாற், சொல்லுநற் றிகிரிப்புள்ளுந் துணைச்சிறை புலர்த்திக் கோதிப்,புல் லுயிர்ப்பேடையோடுபுளினமே னடப்ப தோர்பால். (௭௨)

---

(௭௦) வினையின் சொட்பால் = வினைவசத்தினால்; விகற்பம்= வேறுபாடு; கோட்டு=கரைகளில்;காண்டம்=நீர்க்காக்கை; கொள்ளை=அளவில்லன.

(௭௧) சூல்உளைந்து=கர்ப்பத்தால் உபாதியதிகரித்து; முள்தாள்மேய=முட்களுள்ள காம்புகள்பொருந்திய; ஒளிரும் =விளங்கும்; ஆயர்= இடையர்; கண்படை =நித்திரை; செய=சிவந்த.

(௭௨) கல்லு=அலைகளால்கரையைஇடிக்கிற; கதுவ=பிடிக்க; பெறுமல்=அடையாமல்; சில் உகிர்=சிறியநகம்; சிரலை = மீன்குத்தி; திகிரிப்புள்= சக்கரவாகப்பட்சி; புலர்த்தி=உலர்த்தி; கோதி=மூக்கினால்கிண்டி; புல்= சேரும்; உயிர்=உயிர்போன்ற;புளினம்=மணல்மேடு.

மண்டனி லுயர்ந்த பெண்ணைக் கிழங்கினை வகிர்ந்தா லன்ன, துண்டவண் டானஞ் சூழ்ந்த தொழுதிக ளொருபா னீருட், கொண்டருந் திரகநீங்கிக் குதிக்குமாவினங்க ளோர்பா, லொண்டழைச் சிறைப்பாலன் னங் கின்னர மிதுன மோர்பால். (எங)

இன்னதன் மையநீர்வாவி யிருங்கரை தன்னினெய்தித், தன்னமர் பேடை தன்னைத் தழீஇச்சிறைக் கரத்துள் ளாக்கி, யன்னமா தரவிற் புல்லு மதுதெரிந் தணங்க ஞர்மேற், பன்னரு மாசை கூர விருந்தனன் பரிவழ்றிப்பால். (எச)

வேறு.

பஞ்சணி பதப்பரி புரத்தொலி பரப்ப
நஞ்சன விழிக்கடை குழைக்கய னடப்பக்
குஞ்சர மருப்பினிரு கொங்கைகள் குலுங்க
வஞ்சியென வோர்புலை மடந்தையவ ணுற்றுள். (எரு)

(எங) பெண்ணை = பனை; துண்டம் = மூக்கு; வண்டானம் = நாரை; தொழுதிகள் = கூட்டங்கள்; மாவினங்கள் = மிருகவர்க்கங்கள்; ஒண் = அழகிய; தழை = தழைத்த; பால் = பாலின்நிறம்பொருந்திய; மிதுனம் = ஜோடியாகிய; கின்னரம் = கின்னரபட்சி.

(எச) இரும் = பெரிய; தன்னமர் = தனதுவிருப்பத்திற்குரிய; தழீஇ = அணைத்து; சிறைக்கரம் = சிறகாகிய கை; ஆதரவில் = ஆசையினாலே; அணங்கனார் = ஸ்திரீகள்; பன்னரும் = சொல்லுதற்கரிய.

(எரு) பதம் = பாதம்; பரிபுரம் = காலிலணியும் ஓராபரணம்; ஒலிபரப்ப = சப்திக்க: நஞ்சு அன = நஞ்சையொத்த; மருப்பின் = கோடுபோன்ற; வஞ்சியென = வஞ்சிக்கொடிபோன்ற; புலைமடந்தை = நீசஸ்திரீ.

மன்றல்கமழ் மாலையணி வார்குழ றனக்கு
மின்றமிழ் மொழிக்குமை விழிக்குமெய் யொளிக்கு
மென்றளி ரடிக்குநிகர் வேறுலகி லொப்புண்
டென்றவ டனக்குவமை யாவர் புகல்கிற்பார். (எசு)

ஏர்மருவு நூனிகரி டைக்கொடி நுடங்கத்
தார்மருவு வார்குழல் சரிந்திட விரிந்தே
யார்பத மிரங்கவரு மன்னநடை மின்னை
மாரனிக ரானசுகு மாரனெதிர் கண்டான். (எஎ)

பொன்னுலகில் வாழுமட மாதுகொல் பொறிப்பைப்
பன்னக நகர்க்கணுறை பாவைகொல் பசுங்கார்
மின்னவிர் சிலம்பினுறை மெல்லியல்கொ லென்று
வின்னன நினைந்துபி னெழுந்தருகி லெய்தி. (எஅ)

சேயவரி வாள்விழி யிமைத்திடு திறத்தாற்
றேயநில மீதடி மிதித்திடு சுவட்டா
லாயபுவி மீதுவள ரன்னமிவ ளென்னத்
தீயகுண வேதியன் மனத்திடை தெளிந்தான். (எகூ)

(எசு) மன்றல் = வாசனை; வார் = நீண்ட; மின் = பிரகாசிக்கும்.

(எஎ) ஏர் = அழகிய; நூல்நிகர் = நூலையொத்த; நுடங்க = துவள; தார் = மாலை; ஆர்பதம் = வண்டு; இரங்க = ஒலிக்க.

(எஅ) பொன்னுலகு = இந்திரவுலகம்; பொறி = புள்ளிவாய்ந்த; பன்னகநகர் = நாகலோகம்; பசுங்கார் = நீருண்டமேகம்; மின் அவிர் = மின்னலைப்போற்பிரகாசிக்கும்; சிலம்பு = மலை; என்று = என்று; இன்னன = இப்படிப்பட்டவைகளை.

(எகூ) சேயவரி = செவ்வரி; இமைத்தல் = சிமிட்டுதல்; நிலமீது அடிதோய = பூமியிற்கால்பொருந்தும்படி; மிதித்திடும் = மிதிக்கிற; சுவட்டால் = காலடி வைத்த அடையாளம்தோன்றுதலால்; புவி = மண்ணுலகம்.

மங்குனிற முற்றிடு மடப்பிடியை நாடும்
வெங்கய மெனத்தனி விரைந்துழு னடந்தே
யிங்கெனெதி ருற்றிடுவன் யாவனிவ னென்னாத்
திங்கணிகர் வாணுத றரித்தன டிகைத்தே. (௮0)

ஏமமணி மால்வரை யெனக்குலவு கொங்கை
வேமசனி காலுமுகின் மீதெழு தடித்தின்
வாமமிகு நேரிடை மடந்தையரை வெல்லுங்
காமனிவ னுமென மனத்திடை கணித்தாள். (௮௧)

உட்புலமை யற்றுமய லுற்றசுகு மாரன்
மட்குட மெனத்திரள் வரைப்புய மிலக்காய்க்
கொட்புற நெரித்தபுரு வச்சிலை குனித்தே
கட்கணை தொடுக்கவிர கக்கடல் குளித்தான். (௮௨)

முளைத்தெரி கனற்கணெய் முகந்துகுவ தென்ன
விளைத்தமரில் வென்றிபுனை வேள்கழையி னீள்வில்
வளைத்துமண மேவுமலர் வாளிக டொரந்தான்
துளைத்தவ னுரத்தினிடை தூவலள வாழ. (௮௩)

---

(௮0) மடம் = இளமை; பிடி=பெண்யானை; வெங்கயம் = கொடியஆண்யானை; தனி=தனிமையாக; உற்றிடுவன் =வருகிறவன்; தரித்தனள்=நின்றாள்.

(௮௧) அணி =அழகு பொருந்திய; ஏமமால்வரை=பெரிதாகிய மேருமலை; என=என்றுசொல்லும்படி; குலவு = விளங்கும்; வேம்அசனி=வெப்பமுடையஇடியை; காலும் = உண்டாக்குகிற; தடித்தின் = மின்னலினை; நேர்=ஒத்த; வாமமிகும் இடை = அழகுமிகுந்த இடுப்பு; கணித்தாள்=எண்ணினாள்.

(௮௨) உட்புலமை= உள்ளறிவு; வரை=மலையினை ய; மட்குடமென—மண்குடம்போற் றிரண்ட; கொட்புற=வளைவுற; நெரித்தபுருவம்=மேலேறும்படி செய்தபுருவம்; குனித்து=வளைத்து;கண்கணை =கண்ணாகிய அம்பை; தொடுக்க=எய்ய.

மெய்வசமிழிந்துதழன் மீதின் மெழு காகிப்
பொய்வசன மன்றிது புலங்கொளுதி பொன்னே
உய்வதரி தாமுயி ருலந்துபடு முன்னுன்
கைவசமெனுவிவை கரைந்தன னிரங்கி. (அச)

இக்குவளை வார்விலி னிருந்திமத னேவு
மக்குவளை வாளிவரு மென்றுமன மஞ்சேன்
மிக்குவளை மீதுலவி மீளுநின் முகத்தின்
மைக்குவளை தானருள் வழங்கலுறின் மாதோ. (அரு)

தீரமுறு வேலைவரு செய்யதுவர் வாயி
னாரமுறு வாணில வரும்பிடி னனுத்தான்
கோரமுறு மாரழ லெனக்குட திசைக்க
ணீரமுறு வாணிலவ தென்செயு மெழுந்தே. (அசு)

(அங) முளைத்து= தோன்றி; முகந்து=மொண்டு;உகுவது= சொரிவது;அமர்விளைத்து=காமப்போரையுண்டாக்கி; கழையின்=கரும்பினுலாகிய; வாளி=அம்பு; துரந்தான்=எய்தான்; உரம்=மார்பு.

(அச) புலங்கொளுதி =கேட்பாயாக; பொன்னே =இலக்குமிபோன்றவளே; உன்கைவசம் உயிர்=எனது உயிர் உனக்குஅடைக்கலம்;எனு=என்று; இவைகரைந்தான் =இவைகளைச்சொன்னான்.

(அரு) இக்கு =(இட்சு)கரும்பு; வளை=வளைந்த; விலின்—வில்லினிடத்தில்; அம்குவளைவாளி=அழகிய நீலோற்பல மலரம்பு; மிக்கு=(மேன்மை)மிகுந்த; வளைமீதுலவி= வள்ளைக்கொடிபோன்ற காதினளவுஞ்சென்று;(வள்ளை யென்பதை வளையெனல் இடைக்குறையாம்) மை= கறுத்த; குவளை=குவளைமலர்போன்ற கண்.

(அசு) தீரமுறு =கரையையுடைய; வேலைவரு=சமுத்திரத்திலுண்டாகும்; துவர்=பவளம்; ஆரம்=முத்து; வாள் =ஒளிபொருந்திய; நிலவு=பற்கள்தோன்ற (ஆகுபெயர்); அரும்பிடில்=நகையுண்டானுல்; கோரம்=அச்சம்; குடதிசை=மேற்குத்திக்கு; ஈரம்=குளிர்ச்சி.

கூடவிணை யாகவளர் கும்பமுலை யென்னு
மாடன்மத மால்களிறெ னங்கைவச மாகு
நீடனுவ ணக்கியமர் நித்தமுமி யற்றும்
வேடனுயர் வேழமதை வேறன்மிகை யன்றே. (அஎ)

தூயகுமு தத்தினொடு தொண்டைதுவ ரொக்கும்
வாயினித ழுற்றகுடி நீரது வழங்கிற்
காயமுட னத்திகள் கனற்றிவரு பித்த
மேயவிர கப்பெரிய வெப்பவியு மெற்கே. (அஅ)

என்றலை மருட்டுகுழ லுக்கினைய கூறித்
துன்றலை கடற்படு துரும்பினிலை யற்றோன்
மன்றலை மிகக்கமழு மலர்க்கர மெடுத்துத்
தன்றலை குவித்திரு சரண்டொழுது நின்றான். (அகூ)

மம்மருற வேள்கணை வருத்தமய லென்னு
மம்மகர வாரிதி யடக்கலரி தாகி
விம்மமன மீதது வெளிப்படைசெய் வாளாய்ப்
பொம்மன்முலை யாள்சிறிது புன்னகை புரிந்தாள். (கூ0)

(அஎ) கூட = நெருங்க; ஆடல் = கொல்லுந்தொழில்; நீள்தனு வணக்கி = நீண்டவில்லைவளைத்து; வேள்தன்வேழம் = மன்மதனது யானை (அஃதாவது இரவு); வேறல் = வெல்லுதல்; மிகை = பெரிது.

(அஅ) குமுதத்தினொடு = செவ்வல்லிபோன்ற; துவர் = பவளம்; இதழ் = அதரம்; காயமுடன் = உடலோடு; அத்திகள் = எலும்புகளை; கனற்றல் = எரித்தல்; பித்தமேய = பித்தம் பொருந்திய; வெப்பு = உஷ்ணம்,

(அகூ) அலைமருட்டும் = அலையைமயங்கச்செய்யும்; குழல் = கூந்தலுடையாள் (பெண்); இனைய = இவைகளை; துன்று = பொருந்திய; துரும்பின் = துரும்பைப்போல; சரண்தொழுது = பாதத்தில் வணங்கி.

(கூ0) மம்மர் = மோகமயக்கம்; மயல் = விரகம்; அம்மகரவாரிதி = முதலையையுடைய அழகியகடல்; விம்ம = பொங்க; பொம்மல் = பருமன்.

செம்பவள வாயிதழ் திறந்தெயி றிலங்கக்
கும்பமுலை யாண்முறுவல் கொண்டகுறி கண்டே
வெம்புதழ லொத்தவிர கத்தினின் மிகுத்தோ
னம்புய மலர்க்கையவ ளங்கைமலர் பற்றி. (கூக)

ஏகமன மாகியிரு வோருமெவ ராலும்
போகவரி தாகுமொர் பொதும்பரிடை புக்கு
மேகநிற மானபிடி யுங்கரட மேவு
நாகமு மெனக்கலவி நன்னல நுகர்ந்தே. (கூஉ)

வேறு.

இன்றளவு மன்றுடல மெத்துணைநா ளினியிருக்கு, மன்றளவும் பிரியாம லிருப்போமென் றலராத, மென்றளவ முகைநகையும் வேதியனு மிசைந்து தம்மிற், புன்றசைகண் முடைகமழும் புலைப்பாடி தனிற்புகுந்தார்.

தரைபயிலான் பசும்பச்சை தனைக்கவ்வி யிசித்துகளுங், குரைமுகநாய்ச் சிறுபறழின் குறுங்கழுத்தி னொடுங்கயிற்றுற், சுரைபடர்நீள் புற்குரம்பை துன்று கரும் புதல்வர்பிணித், தரையினசைத் திடுசதங்கை கறங்கிட வீர்த் தாட்டயர்வார். (கூ௩)

(கூக) இலங்க=பிரகாசிக்க.

(கூஉ) பொதும்பர்= சோலை; புக்கு=புகுந்து; பிடி=பெண் யானை; கரடம்மேவு=மதம்பொருந்திய; நாகம்=ஆண் யானை.

(கூ௩) தவளம்= முல்லை; முகை=அரும்பு; தசைகள்=மாமிச ங்கள்; முடை=துர்நாற்றம்; கமழும்=வீசும்; புலைப் பாடி=பறைச்சேரி.

(கூ௪) தரைபயில்= தரையில் வசிக்கிற; ஆன்=பசுவினது; பசு ம்=உலராத; பச்சை=தோல்; உகளும்=ஓடும்; முக ம்=வாய்; நாய்ச்சிறுபறழ்=நாயின் சிறியகுட்டி; துன் று=வசிக்கிற; கரும்புதல்வர்=கருநிறம்வாய்ந்தபிள்ளை கள்; பிணித்து=கட்டி; அரையின்=இடுப்பின்; கறங் கிட=சப்திக்க.

அணைதிரைநன் மணிவரன்றி யார்த்திடுமோர் கலி யமிழ்திற், கிணைபுகல்மென் மொழிபயிலா விளங்குழவி யசிக்கிரங்கித், துணைமுலைப்பால் சுரந்தருத்தித் தோற் பாய றனிற்றுயிற்றிப், பிணைவிழிப்புன் புலைமகளிர் தா லாட்டு மிசைபெருகும். (கூரு)

பிறங்கியபுன் மாலைகளிற் பெருங்குடம்பெய் பிழி பருகிக், கறங்குபறை முகத்தறைந்து களித்தாடிக் களை த்துவிழுந், துறங்குபறைப் புருடர்துயி லொழிந்தெழு வான் புலரிதனின், மறங்குலவு முட்படைக்கால் வார ணங்க ளோலமிடும். (கூசா)

இத்தகைய புலைச்சேரி தன்னிலிருந் திருண்டமன, மத்த னெனப் புலவுதின்று மதுப்பருகி வசமழிந்து, முத்தநகைப் புலைமகடன் முலைநலத்தே றலுநுகர்ந்து, சித்தமிகக் களிகூர்ந்து சிலவைகல் கழித்ததற்பின். (கூஎ)

பங்கயக்கட் புலைமகளாற் பன்னமெனப் பகர்வயிற் றுச், செங்கனிகழ் மழவிடைபோற் செனித்துதித்தார்

(கூரு) அணை= மோதும்; வரன்றி=வாரி; ஆர்கலி=சமுத்திரம்; பாயல்=பாய்; பிணை=பெண்மான்.

(கூசா) பிறங்கிய= விளங்கிய; புல்=சேருகின்ற; பிழி=மது (கள்); கறங்கு=ஒலிக்கும்; பறை=தம்பட்டம்; உறங்கு=தூங்கும்; பறைப்புருடர்=ஆண்பாற் பறையர்கள்; புலரி=விடியற்காலம்; மறம்—வீரம்; முள்படை=முள்போன்ற நிகமாகிய ஆயுதத்தையுடைய; வாரணம்= கோழி.

(கூஎ) மத்தன்= மயக்கமுடையவன்; புலவு=மாமிசம்.

(கூஅ) ஆல்பர்ணம்= ஆலிலை; மழவிடைபோல் = இளங்காளை போல; பிசிதம்=மாமிசம்; அருத்தி=ஊட்டி; அருத்தியின்=ஆசையோடு; பங்கம்=அலை.

சிறுவனாவ, ரங்கவர்க்கு மதுப்பிசித மருத்தியருத் தியின்வளர்க்கப், பங்குமிகுங் கடற்புவியிற் பாதகமைந் தெனவளர்ந்தார். (கூஅ)

மன்னுநெடும் பொதியவரை மன்றல்கமழ் தென் றலுடன், பன்னுதமிழ் பயந்ததெனப் பண்ணவர்பற் பலர்பயிலும், பொன்னுலகி லரம்பையுருப் பசிநிகராம் பொற்பினுடன், பின்னுமிரு கன்னியரைப் பெற்றுமனப் பிரியமுற்றான். (கூகூ)

மறமறலியையவரென வளருமைந்து மைந்தருடன், கறைவடிவாட் படைகதைகூர்ங் கணைநெடுங்கார் முகந் தாங்கி, யறைதருபே ரடவிகளி லாறலைத்துப் பொருள் கள் வவ்விச், சிறைபடுநீர்க் கயல்கவர்ந்த சிரலையெனக் கடிதகல்வான். (க00)

அந்தணரெண் ணிலர்குழக்கன் றானிடப மளவிற ந்த, கொந்தவிழ்நாண் மலர்க்கோதைக் கோதையர்கள் குதலைமொழி, மைந்தர்நரை முதிர்விருத்தர் வருந்துற வர் வருந்துறக்கொல், விந்தவிதக் கொலைகடம்மை யா வர்கணித் தெடுத்துரைப்பார். (க0க)

(கூகூ) பண்ணவர்=தேவர்; பயிலும்=தங்கும்; பொன்னுலகம் =விண்ணுலகம்.

(க00) மறமறலி=வீரம் பொருந்திய இயமன்; கறை=இரத்த க்கறை; வாள்படை = வாளாயுதம்; கதை = தண்டு; கணை=அம்பு; நெடும் கார்முகம்=நீண்டவில்; அறை தரு=சொல்லப்படும்; ஆறலைத்து=வழிப் பறிசெய்து; வவ்வி=அபகரித்து; சிறைபடுநீர்=கரையினது காவலி னுள்ளடங்கிய சலம்; சிரலை=மீன்குத்தி,

(க0க) குழக்கன்று=இளங்கன்று; ஆன்=பசு; மலர்க்கோதை =மலர்மாலை அணியும்; கோதையர்கள் = ஸ்திரீகள்; வரும்துறவர்=வருகின்ற துறவிகள்;வருந்துற=துன் புற; கொல்=வருத்தும்.

புக்குபுனற் றடங்கரையிற் புரிதருகண் ணியிற்ப டுத்துத், தொக்கநெடுங் கயலிரைதேர் தோலடிப்புட்டு வர்முட்டாண், மிக்குயர்வண் டானமுடன் விரிந்தசிறை ப் பெரும்போதாக், கொக்குமுதற் பக்கிகளைக்கொன்று கொன்று தின்று பின்னும். (கo௨)

மேவிவளர் வனங்கடொறும் வில்வணக்கி விறற் பகழி, தூவிவெருவொடுகுதித்துத் துள்ளுபுள்ளி மா னினங்க, டாவியுகளிரலையுரற் றலைக்கேழன் மரைக்குல ங்க,ளாவிசெகுத்தூனருந்தி யடுபுலிபோற் றிரியுமந்நாள்.(கoங)

விரிந்தகொடு வினைவசத்தான் மெய்யிற் பிணிகள் பிடித் தலைத்துப், புரிந்தசுருளிருளோதிப் புலைமகள் பொன் றிடப்புலம்பிப், பரிந்தனலின் மெழுகாகிப் பற் பலநாட் பயில்பெடையைப், பிரிந்தவன்றிற் சேவலெ னப் பெருந்துயரக் கடல்வீழ்ந்தான். (கoச)

(கo௨) புனல்தடம்கரையில் புக்கு=விசாலமாகிய நீர்க்கரையில் போய்; புரிதரு=முறுக்கப்பெற்ற; கண்ணி=புள்படுக் குங்கயிறு; படுத்து=சிக்கச் செய்து; தொக்க=அங்கு சேர்ந்திருக்கிற; கயல் இரைதேர்=கயல்மீனை இரையா கத்தேடும்; தோலடிப்புள்=கால்விரல்களுக் கிடையில் தோல்விரவியபட்சிகள்; துவர்=செகப்பு; முள்தாள்= முள்ளைப்போன்ற நிகமுடையகால்; வண்டானம்=நா ரை;பெரும்போதா=பெருநாரை; பக்கி=பட்சி.

(கoங) வில்வணக்கி=வில்லைவளைத்து; விறல்=வலிமைபொரு ந்திய; பகழி=அம்பை; தூவி=எய்து; வெருவொடு= அச்சத்தோடு; தாவிஉகள்=தாண்டிக்குதிக்கும்; இரலை =கருமான், அல்லது கலைமான்; உரல்தலைக்கேழல்= உரல்போன்ற தலையினையுடைய பன்றி; செகுத்து= கொன்று.

(கoச) புரிந்தசுருள்=பின்னிச்சுருட்டிய; இருள்=இருள்போ ற்கறுத்த; ஓதி=ஸ்திரீகளின் கூந்தல்; பொன்றிட = இறக்க; பயில்=பழகிய; அன்றில்=அன்றிற்பட்சி; சே வல்=கோழி.

எழுமியங்கு முளந்தோழு தேங்குமுடற் பொறை சோர்ந்து, விழுமிருகட் புனல்குமிழி விட்டோட விம்மி விம்மி, யழுமசனிக் குடைந்துபுர ளரவெனநீ ணிலந்தலையா, அழுமிரங்கும் வெதும்புறுநெட் டுயிர்ப்புயிர்த்துப் புழுங்கிடுமால். (கoரு)

கண்மணியே யெனதாசைக் கங்குல்விடிந் திடவுதித்த, விண்மணியே யிப்பியின்வாய் விண்டுமிழும் வெண்டாளத், தண்மணியே பாற்சலதி தருமமுதே தயங்குகதி, ரொண்மணிநீத் திடுமரவி னுனையிழந்து முய்வேனோ. (கoசு)

துப்புறழ்செவ் வாயிதழுந் துடியிடையுங் கடிதடமு
மைப்புருவக் கார்முகமு மதிமுகமு மிருவிழியுங்
கொப்புலவு மிருகுழையுங் குருகுலவு கரத்தழகு
மெப்பிறவிப்பிறந் துனைநா னினிக்காண்ப தென்றயரும்.

ஓங்கினைய பெருந்துயர முழந்துமிக வருந்துமந்நாட், பூங்கமலக் குறுமுகைபோற் புடைத்தரும்பிக் குமிழ்த்தெழுந்து, கோங்கமுகை யெனக்குலவக் கொங்

(கoரு) உடற்பொறை = தேகச்சுமை; அசனிக்கு = இடிக்கு; உடைந்து=பயந்து; புரள் அரவென= புரளும் பாம்பைப்போல; நீள்நிலந் தலையாலுழும்=தலையைப்பூமியில் தேய்க்கும்; நெட்டுயிர்ப்பு உயிர்த்து=பெருமூச்சுவிட்டு.

(கoசு) விண்மணி=சூரியன்; இப்பி=முத்துச்சிப்பி; சலதி=கடல்; தயங்கு = விளங்குகிற; கதிர் = பிரகாசிக்கும்; ஒண்மணி=அழகிய இரத்தினத்தை; நீத்திடும்=இழந்த; அரவின்=பாம்பைப்போல.

(கoஎ) துப்பு=பவளம்; வாயிதழ் = உதடு; துடி = உடுக்கு; மைப்புருவம்=கறுத்தபுருவமாகிய; கார்முகம்=வில்லை; குருகு=வளையல்.

கைகளங் கவனளித்த, மாங்குயிற்சொல் வியர்விரக மரு வுழுங்கைப் பருவமுற்றார். (க0அ)

மாரிவளந் தருமுகிலை மணிக்கருநீ னிறமணலை, வேரிகமழ் செழுந்துணர்கள் விளங்கிதழிக் கருங்கனி யை, நீரிலெழுஞ் சைவலத்தை நிகர்த்துநெய்த்து நெறி த்திருண்ட, காரிருளின் பிழம்பென்னக் கவின்கொண்ட கருங்குழல்கள். (க0௯)

கஞ்சநெடுங் கயல்கமழுங் காவிபிணை கணைக்கிணையா யஞ்சனந்தோய்ந் தடலனங்க னைகமங்கற் றலைகடவி னஞ்சமுதங் கலந்திலங்கு நகுமணிப்பொற் குழைகிழித்து வஞ்சமிகுங்கொலைபயின்றுமதர்த்தனவால்வரிவிழிகள்.

கன்னியர்களின்னணநற் கலைவளர்ந்த மதியமொ ப்பத், துன்னியமுட் டாட்கமலத் தாயமுகை முறுக்கு டைந்து, மன்னியமென் றோடவிழும் பதநோக்கி மது நுகர்வா, னின்னிசைப்பூம் பொறிச்சுரும்ப ரிருந்ததெ ன விருந்தவனும். (கைக)

(க0அ) ஓங்கு = மிகுந்த; குறுமுகை=அரும்பு; குமிழ்த்து= எழுந்து; கோங்க முகை=கோங்கின் அரும்பு.

(க0௯) மணிக்கருநீல் நிறமணலை=அழகியகருநீல நிறம்பொருந் திய மணலை; வேரி=வாசனை; இதழிக்கருங்கனி=கறு த்த கொன்றைப்பழம்; சைவலம்=கொடிப்பாசி; நெய் த்து=தைலப்பசை பொருந்தி; நெறித்து = இடையி டையே சுருளவுற்று.

(கக0) நெடுங்கயல்=நீண்ட கெண்டைமீன்; காவி=கருங்கு வளை; பிணை=பெண்மான்; கணைக்கு=அம்புக்கு; இணை யாய்=ஒத்ததாய்; அடல்=வலிமை.

(கைக) தோடவிழும் = இதழ்விரிகிற; பதம் = காலம்; பூம் பொறி=அழகியபுள்ளியுடைய; சுரும்பர்=வண்டு.

செக்கரெழு மிளமதியுந் தென்றலுமன் றிவும்ப கைப்பக், கைக்கணைகொண் டடர்ந்துமதன் கடும்பூசல் பொரக்கனலின், மிக்கொடுங் காமமெனும் விடந்தலைக் கொண் டாற்றிலனாய், மக்களிரு வரையுமன மருண்டு மனையெனமணந்தான். (ககஉ)

பெருவரைபோ லகன்மார்பிற் பிறங்கியபொற் சுண ங்குபொடித், திருவரைக ளனவளரு மிளமுலைக்கோ டுழுதுழக்கப், பொருவருமா தரவினுடன் புணர்ந்துநல னுகர்ந்திடுநாண், மருவருபூங் குழலியரு மைந்தரிரு வ ரைப்பயந்தார். (ககங)

தரைமிசைத்தன் புதல்வியர்க டாமீன்ற தனயரி ரு, வரையுமன மகிழ்ந்தெடுத்து மடிமீது வைத்துமுரி, திரையெறிவா ரிதிபிறந்த தெள்ளமுதக்குதலைகள்கேட், டுரைதருவெண் ணுரைச்சுரையூ ணூட்டி வளர்த்துவப் புற்றான். (ககச)

வேறு.

இவ்வண்ண மிங்கிவன்றா னிருந்திடுநாட் பசும்பு ரவி யிரவிதன்னை, மைவண்ணப் பாந்தள்பகு வாயினிற்

(ககஉ) செக்கரெழும்=சிகப்புத் தோன்றும்; கடும்பூசல்பொர =கொடியயுத்தஞ்செய்ய; மருண்டு=மயங்கி.

(ககங) பொடித்து=தோன்றி; கோடு=மலைச்சிகரம்; உழுது உழக்க=குத்தியுரஞ்ச: ஆதரவு=விருப்பம்.

(ககச) தனயர்=புதல்வர்; திரையெறி = அலைவீசும்; உரை தரு = சொல்லப்படுகிற; நுரைச்சுரை = நுரையை யுடைய கள்.

(ககரு) பசும்புரவி=பச்சைக் குதிரை; மைவண்ணம்=கருமை நிறம்பொருந்திய; பாந்தள்=பாம்பு (இராகு); பகு= பிளந்த; வாயினிற்பெய்து=விழுங்கி; செவ்வண்ணக் கனகம்=செம்பொன்; செருத்தல்=மடி; நல்லான்= பழுதகன்ற பசு; கொய்வண்ணம்=பறிக்கப்பெறுந்தன் மைபெற்ற; கோதை=மாலை; கோமகன்=அரசன்.

பெய் துமிழ்காலை மறையோர்க் கெல்லாஞ், செவ்வண்ணக் கனகமுதற் கலைமுலைப்பாற் றுரைவிடுஞ் செருத்தனல்லான், கொய்வண்ண மலர்க்கோதைக் கோமகன்றன் றனமிகக் கொடுப்பவாங்கி. (௧௧௫)

வந்தநல்லந் தணர்கடம்மை வனச்சரியின் மறித்துருத்து மைந்தரோடுங், குந்தநெடுங் கதைவடிவாள் கொடுமரஞ்சா யகங்களினுற் கொடிறு தந்தஞ், சிந்தவுடற் செதுக்கைசெய்து கலக்கியவர் கைப்பொருள்கள் சேர வவ்வி, வெந்தழலார் விழித்தறுகண் மிருகாரியெனத் தனதின் மேவினனே. (௧௧௬)

பல்லொடிந்து கவுளொடிந்து பழுவொடிந்து முழவெழுவிற்பணைத்த திண்டோட், கல்லொடிந்து கரமொடிந்து காலொடிந்து மார்பொடிந்து கலங்கிவாயிற், சொல்லொடிந்து பனவரெல்லாம் பகைத்திமிரந் துடைத்திலங்குஞ் சுடர்வேன் மன்னன், செல்லொடிந்து முடிதவழுங் கோயில்வா யிலைநோக்கிச் சென்றானன்றே. (௧௧௭)

---

(௧௧௬) வனச்சரியின்=காட்டுப் பாதையில்; குந்தம்=சூலாயுதம்; நெடுங்கதை=நீண்ட தண்டாயுதம்; கொடுமரம்=வில்; சாயகம் = அம்பு; கொடிறு=கன்னம்; செதுக்கைசெய்து=வெட்டி; கலக்கி=கலங்கச்செய்து; தறுகண்=அஞ்சாமையுடைய; மிருகாரி=சிங்கம்; தனது இல்=தனது வீடு.

(௧௧௭) கவுள்=கன்னம்; பழு=முதுகெலும்பு; முழவிலெழு=மத்தளம்போற் புடைப்புற்ற; திண் தோள்கல் = கல்லைப்போன்ற வலிமையுற்றபுஜம்; சொல்லொடிந்து=பேச்சற்று; பனவர் = பிராமணர்; திமிரம் = இருள்; செல் = மேகம்; ஒடிந்து=பிளவுபட்டு; கோயில் = அரண்மனை.

சென்றுமுறை யோமுறையோ வென்றசொற்றிண் டிறல்வேந்தன் செவியிற்கேட்டுக், குன்றுறழ்கோபுரவாயிற் காவலரைக் கூயவரைக் கொணர்மி னென்னப், பொன்றுயிலு மணிமார்ப னரசிருக்கு மண்டபத்திற் புகுத்தப்போனார், கன்றுமனத் துடனவர்தங் காயமுறுங் காயமெல்லாங் கண்ணிற் கண்டான். (௧௧௮)

யாவரிது செய்தனரிங் கெனவினவ நீயெமக்கீண்டீந்ததெல்லாம், பாவநெறிச் சண்டாள னொருவன்மைந்த னுடன்மறித்துப் பறித்துக்கொண்டே, யாவவெனவளைத்தடித்திட் டாயுதத்தா லவஞ்செய்தெமை யடர்த்தானென்னக், காவலன்வா யிதழ்துடிப்பக் கட்டழல்கான் றொருகைமற்றைக் கையிற்றாக்கி. (௧௧௯)

முன்னின்ற முடங்குளைவான் மடங்கனிகர் படைத்தலைவர் முகத்தை நோக்கி, மின்னின்ற விறற்றானைக் கரத்தானை சிலகொடுபோய் விளங்கு செங்கே, ழென்

(௧௧௮) திண்திறல்=மிகுந்தவலிமை; கூய்=கூப்பிட்டு, பொன்=இலட்சுமி; துயிலும்=தங்குகிற; மணி=அழகிய; கன்று=கன்றிய.

(௧௧௯) ஆவ என=தமக்குரியனவென்று; அவம்=தீமை; அடர்த்தான் = வருத்தினான்; கண்தழல் =கண்ணினின்றும் அக்கினியானது; கான்று=வெளிப்பட்டு.

(௧௨0) முடங்கு=வளைந்த; உளை=பிடரிமயிர்; வான்=பெரிய; மடங்கல்=சிம்மம்; மின்=ஒளி; நின்ற=பொருந்திய; விறல்தானை=வெற்றிபொருந்திய ஆயுதத்தைத் தரித்த; கரம் = கையினையுடைய; தானை = சேனைகளை; செங்கேழ்=சிவந்த நிறமுள்ள; எல்=ஒளி; நின்ற= பொருந்திய; கதிர்=கிரணங்களை; குடதிசை=மேற்குத்திக்கு; கடல்வாய் = கடலினிடத்து; எய்தும்= அடையும்; கல்நின்ற=கல்லைப்போன்ற.

னின்ற கதிர்சுருக்கி யிரவிகுட திசைக்கடலிவா யெய்து முன்னர்க், கன்னின்ற மனத்தவனைக் கடிதோடிக் கொணர்மினெனக் கற்பித்தானே. (௧௨)

ஆயவரும் விரைந்துகதை யாழிசிலை வாளியொள் வா ளயில்வே லேந்திக், காயவருங் கடுமறலி தூதரிவ ரெனவெருவக் கண்டோர் கானிற், போயவனை முடுக்கர்மரப் பொதும்பர்செறி யடவிதொறும் புழைக்கை வேழஞ், சீயமுய லெண்குபுலி திரிசரிக டிரிவியெங்குந் தேடலுற்றார். (௧௨௧)

கையரிக்கொண் டிடுஞ்சேனைக் கணங்கண்டு மருண்டுமனங் கலங்கிக்காதன், மையரிக்கண் ணியரோடு மக்களொடு மவ்வனத்தின் மறைந்து வைகி, நெய்யரியிற் றீக்கொண்டு நன்ககற்றும் படிற்றொழுக்க னெடிக ளோதை, செய்யரிற்கா னகன்றிரவிற் பற்பலகா வதங் கடந்து சென்ற பின்னர். (௧௨௨)

---

(௧௨௧) ஆயவர்=அப்படிப்பட்ட சேனைவீரர்; ஆழி = சக்கரம்; ஒள்=ஒளிபொருந்திய; அயில்=கூர்மையாகிய; காய வரும்=கொல்லவரும்; கடுமறலி = கொடிய இயமன்; வெருவ=அஞ்ச; முடுக்கர்=மலைக்குகை; பொதும்பர் =சோலை; செறி=அடர்ந்த; புழை=துளை; சீயம்= சிங்கம்; எண்கு=கரடி; திரி=சஞ்சரிக்கிற; சரிகள்= மலைச்சாரல்கள்; துருவித்தேடி=ஆராய்ந்து தேடி.

(௧௨௨) கை=கையினிடத்து; அரி = ஆயுதத்தை; கொண்டிடும் = தரித்துக் கொண்டிருக்கும்; சேனைக்கணம்= படைக்கூட்டம்; மருண்டு=பயந்து; வைகி=தங்கி; நெய்யரியில்=பன்னாடையை; தீக்கொண்டு=கொளுத்திக்கொண்டு; படிற்றொழுக்கன்=வஞ்சகனாகிய சுகுமாரன்;நெடிகள்=செள்வண்டு; ஓதை செய்யும்=சப்திக்கும்; அரில்=புதரடர்ந்த.

காட்டியசெந் நிறச்சூட்டு வாரணங்கூ யழைப்ப வொற்றைக்காற்றேர் தூண்டிச், சேட்டிளஞ்செங் கதிர்ப்பரிதி கீழ்த்திசைக்க ணுதயவரை சேருங்காலை, நாட்டியதீ வினைக்கொடியோன் பயமூல மாநடந்து நருக்கின்ப, மூட்டியவூ ணவதேயப் புடையிலொரு வரைச்சார லொளித்திட்டானே. (கஉங)

தொல்வினையின் படிநெடிய வரைவனங்க டொறுமுழன்று தொடர்ந்து கானிற், பல்வினையம் புரிந்துவழி மறித்திரலை முயலுடும்பு பன்றி மான்கள், கொல்வினையஞ் செய்துகடுங் கொடுங்கூற்ற மிவனெனப்பேர் கொண்டுநாளு, நல்வினைய மொன்று மின்றித் தீவினைமேம் படச்செலுத்தி வாழு நாளில். (கஉச)

அவ்வரையி னெடுஞ்சாரற் கரைக்காதத் தளவையின்மா லயன்புத்தேளிர், தெவ்வரைவென் றிடுகுலிசப் படையோன்மா னுடரெவருந் திரண்டுபோற்றக், கைவரையொன் றுரித்தருளுங் கறைமிடற்றுக் கண்ணுதல்கட் கருணை நல்கிச், சைவரையீ டேற்றுகிற்பான் வீற்றிருக்கு நாககர் தானொன் றுண்டால். (கஉரு)

(கஉங) காட்டிய=தோன்றிய; தூண்டி=செலுத்தி; சேடு=அழகிய; பயம் மூலம்=பயம் காரணமாக; நருக்கு இன்பம் ஊட்டிய=மனிதர்கட்கு இன்பத்தைக் கொடுத்த; ஊணவதேயம்=மிலேச்சநாடு; புடை=பக்கம்; வரைச்சாரல்=மலையின் அடிவாரம்.

(கஉச) பல்வினையம்=பலதந்திரம்; இரலை=கலைமான்; கொல்வினையம் =.கொல்லுந் தொழில்; கடுங்கொடுங் கூற்றம்=மிகக்கொடிய இயமன்; செலுத்தி=செய்து.

(கஉரு) காதம்=பத்துநாழிகைவழி; புத்தேளிர் தெவ்வர்=தேவர்கட்குப் பகைவர் (இராக்கதர்); குலிசப்படையோன்=வச்சிரா யுதத்தையுடைய இந்திரன்; கைவரை=யானை; நாககர்=நாகநகரம் என்னும் ஒரூர்.

அந்தநகர்ப் பூசுரர்பார்த் திவர்வணிகர் சூத்திரர் முன் ளுயினோரும், பந்தணிகைச் சந்தமுலைப் பண்டருசொற் பைந்தொடியார் பலரும்பானற், கொந்தவிழ்நாண் மலர்வாசங் கமழோடை களிற்குழுமிக் குளிர்நீராடிச், சுந்தரஞ்சே ராசார முடுத்தபின்னு சாரமிகு சுத்தராகி. (௧உ௬)

வெய்யகொடும் பாதகங்க ணீருக்குந் திருநீறு விரவச் சாத்தித், துய்யமணிக் கண்டிகையின் ருடைபுனைந்தஞ் செழுத்தோதித் துலங்குஞ் சோதிச், செய்யமணிக் குண்டலங்கண் முதலாம்பொற் கலனிலங்கச் செக்கர்மேனி, யையனுறைந் தருடருநா கேச்சுரத்திற் சென்றுதொழு தன்புகூர. (௧உ௭)

வெண்டரளத் தொடைநாற்றி விதானித்து நெய்த்தகளி விளக்குமேற்றி, வண்டமரும் வலம்புரிமா தவிமுல்லை மல்லிகைசெவ் வந்திபிச்சி, தண்டளிர்சேர் மணமிகுந்த மந்தாரங் கரவீரஞ் சாதி வாசப், புண்டரிகங் கருங்குவளைப் போதுகடே யருச்சனைகள்புரிந்துபோற்றி.

(௧உ௬) பூசுரர்=பிராமணர்; பார்த்திவர்=க்ஷத்திரியர்; முன்ளுயினோர் = முதலாயினோர்; பந்தணி கை= பந்தையணிந்த கை; சந்தம்=சந்தனம்; பண்தருசொல்=ராகம் போன்ற மொழி; பானல்=நீலோற்பலம்; குழுமி= கூடி; ஆசாரம் உடுத்தபின்=வஸ்திரந்தரித்தபின்; ஆசாரமிகு=ஒழுக்கம் மிகுந்த

(௧உ௭) விரவ=விளங்க; செக்கர்மேனி=செவ்வானம் போன்ற திருமேனி.

(௧உ௮) தொடைநாற்றி = மாலைகளைத் தொங்கவிட்டு; விதானித்து=மேற்கட்டுக்கட்டி; தகளி=அகல்; வலம்புரி= நந்தியாவட்டை; மாதவி=குருக்கத்தி; பிச்சி = சிறு சண்பகம்; கரவீரம்=அலரி; சாதி=சாதிமுல்லை; கருங்குவளை=கருநெய்தல்.

சங்குபடகந்துடிமத் தளந்தாளந் தழங்கியசல் லரி மல்லாரி, மங்குன்முழக் கெனமுழங்கப் பரதவிதிப் படி நடன மகளிராடக், கங்குறனிற்கண்டுயிலா தண்டர்பிரா னருட்கோலக் கடலிற்காரி, நுங்குசிவ் நிசிவிரத மாசியி ற்பிற் சதுர்த்தசியி னோற்கலுற்றார். (௧௨௯)

ஈதுணரா னல்வினையொன் றிருந்ததனாற் சுகுமார னிருபொற்றேட்டின், மீதுலவு தடநெடுங்க ணுமைபாக ன் சந்நிதிமுன் மேவிவாசத், தாதுலவு நந்தனங்க டடவிமட மனைவியர்கூந் தற்குச்சூட்டப், போதுகொய் வான் போதுமந்தப் போதுகண்டா னவணடந்த புது மையெல்லாம். (௧௩௦)

இங்கிதொரற்புதமிதுவென் னிரவிலென்றத் திசை நோக்கு மெல்லைமாந்த, ரங்கணிறைந் தரகரசங் கரவெ னமூ வைந்துகன்ன லகன்ற பின்னர்த், தங்கியபொங் கொளித்தீபத் தட்டேந்திப் பரிமாறுஞ்சமயந்தன்னிற், றிங்களணி செஞ்சடையோ னினிதுறையுஞ் சிவலிங்கந் தெரிசித்தானே. (௧௩௧)

மீட்டுமந்த வனத்திலெய்தி வெவ்வினைகள் பலபுகு ந்து விருப்பநெஞ்சிற், காட்டுமனைக் கிழத்தியரோ டின் பநல நுகர்ந்து சின்னாட் கழிந்தபின்னர், வாட்டுபெரும்

---

(௧௨௯) படகம்=பம்பை; துடி=உடுக்கு; தழங்கிய=ஒலித்த; சல்லரி=ஓர்வகைவாத்தியம்; மல்லாரி=ஓர்வகைவாத் தியம்; அருள்=வட்டமாகிய; கோலக்கடல்=பாற்க டல்; காரி=விஷம்; நுங்கு=உண்ட.

(௧௩௦) தடம்=பெருமை; நந்தனம்=நந்தனவனம்; தடவி= (இருட்பொழுதில் கையினுல்) ஆராய்ந்து; போதுகொ ய்வான்=மலர்பறிப்பதற்கு; போதும்=போகிற; அந்த ப்போது=அந்தக்காலத்தில்; அவண்=அவ்விடத்தில்.

(௧௩௧) எல்லை=காலம்; அங்கண்=அவ்விடத்து; பரிமாறும்= ஆராதனை செய்யும்.

பிணையலைப்ப மத்துடைக்குந் தயிரின்மன மறுகிமாழ்கி,
யிட்டுபெரும் பாதகந்தா னிறந்தனெனத் தனுடனீத்
திற்றிட்டானே. (கநூஉ)

வேறு.

பெரிய வாயரகல் வானினூற்றசிறு பிறையெயிற்றர்
சிகை பெற்றெழுந்,தெரியுநீள்வடவை யொத்தகுஞ்சிய
ரிடித்தசொல்லினர் துடித்துநீர், சொரியுமாரிமுகி லால
காலமிவை தொக்கநீலவரை யொக்குமா,கரியமேனியர்
சிவந்தகண்ணினர்கள் காலதூதர்பலர் மேவினார்.

தாலமொத்தகர மீதெடுத்தசிலை தண்டுவாளிவளை
சக்கரஞ், சூல மிக்கவடி வாள்கிரத்தொகை துணிக்கு
நீடிய கணிச்சிகூர், வேலழற்கழுமுள் பிண்டிபாலமொடு
வீசு பாசமிவை கொண்டு நீள், வாலசைத்துமிகு புலி
புல் வாயினை வளைத்ததா மென வளைத்தனர். (கநூச)

(கநூஉ) நெஞ்சில் விருப்பம் காட்டும்=மனதிற்கு இச்சையைக் கொடுக்கும்; மறுகி=சுழன்று; மாழ்கி=மயங்கி; உடல் நீத்து=தேகத்தையொழித்து.

(கநூங) குஞ்சி=குடுமி; இடித்த=இடிபோன்ற; துடித்து=அசைந்து; தொக்க=கூடிய.

(கநூச) தாலம்=பனைமரம்; மிக்கவடிவாள்=மிகுந்த கூர்மை பொருந்திய வாள்; கணிச்சி = ஓர்வகைச்சூலம்; கழுமுள்=ஓர்வகைச் சூலம்; பிண்டிபாலம் = யுத்தத்தில் எறிந்துகொல்லும் ஆயுதம்; மிகுபுலி=பலபுலிகள்; புல்வாய்=பசு;

சூலமானது இருகிளைச்சூலம் முக்கிளைச்சூலம் இருதலைச்சூலம் என்பன முதலியபல பிரிவினையுடையதாயிருத்தலால், இச்செய்யுளில் சூலமெனவுங் கணிச்சி யெனவுங் கழுமுள்ளெனவும் கூறினர். இவற்றுள் சூலம், கணிச்சி, கழுமுள் என்பவை இவ்விவ்வகைச் சூலமென இப்பொழுது விளங்கவில்லை.

பற்று மென்பர்சிலர் பாவியாவி பதறிப்பதைக்க
விரி பாறையி, னெற்று மென்பர்சில ரீரநாவதனை யீரு
மென்பர்சிலர் பாரெலா, முற்றுணர்ந்துகொலை செய்த
கால்கர மொடித்தி ரென்றிவை யுரைத்துமுன், மற்ற
டம்புய முரிந்து சிந்திட வரிந்து கட்டினர் வருத்தியே (௧௱௫)

அடிப்பர் பற்பல விலங்கு கொன்றுதசை யன்று
மென்றுகனி தின்றபல்,லொடிப்பர் மார்புபழு வூடுதைப்
பர்கதை யோச்சிமேலிட வுரப்பிமே, லிடிப்பர் பாசமது
கொண்டு கண்டமதி லிட்டிறுக்கியிரு கையினும், பிடிப்
பர்கண்ணிணை பிதுங்க வீர்த்துநெறி பேருவார் முபது
மெல்லையில். (௧௱௬)

வணங்கி முந்தியெதிர் நின்றநந்திதனை வருகவென்
றமது வாயில் வாழ், கணங்கள் சென்றெய்திக் கணத்தி
னெய்தியடு காலதூதர் கொடுபோகுமுன், குணங்கெடா
தசுகு மாரனைக்கயிலை கொடுவரச்சடுதி கூறெனப், பண
ங்கொள் பாம்புமதி பாணிமேவணியணி பரமனற்கருணை
பண்ணினான். (௧௱௭)

போற்றியங்குவிடை கொண்டுவாயிலிடை போ
ந்து நந்திகண நாதர் போய்க், கூற்றினாருயிர் குடித்த
காலனருள் கூரவந்தசுகு மாரனைத், தேற்றியாதரவு

(௧௱௫) ஈரும்=பிளவும்; மல்தடம் புயம்=மல்லயுத்தஞ் செய்யும் பருத்த புஜம்.

(௧௱௬) பழுவூடு= எலும்பில்; கதைஓச்சி=தண்டைவீசி; மேலிடவுரப்பி=மிக்க அதட்டி; இடிப்பர் = மோதுவர்; இட்டு=போட்டு; நெறி பேருவர்=வழிச்செல்லும்படி; எல்லையில்=காலத்தில்.

(௧௱௭) சென்றெய்தி=போய்ச் சேர்ந்து; பணம்=பாம்பின்படம்; பாணி=நீர்.

(௧௱௮) அருள்கூர=அருள்பெற; அற்பினொடு=அன்பினோடு.

செப்பி யற்பினொடு செம்பொன் மாமணி விமானமீ, தேற்றி யோர் நொடியில் வம்மினீரென் வியம்பி யங்க வுரை யேவினன். (கருஅ)

நீறணிந்திலகு நெற்றியார்மிக நெடுத்த புன்சடை முடித்துளா, ரூறணிந்தருளு மெந்தை சேவடி யகத்தி ருத்திபரு ளன்பினொ, ருறணிந்துவரு முக்குறும்பற வொருக்கி யோசைகள் பெருக்கநற், பேற ணிந்துகிளா ரிரசிதக்கிரி பிரிந்தி டாமனுறை பெட்பினர். (கருக)

தாம மாகமிகு கண்டிகைத்தொடை தரித்துளார் வினை யரித்துளா, ரேமமால்வரை யசைத்தொர் கை யினி லெடுக்கு மற்புய மிடுக்கினர், நாமவேறிகிரி கொ ந்த முற்கழுமு ணருக கதைப்படைக ணவியநீள், வாம மேவுவடி வாளினோடுதிறன் மறலிதூதரிடை மருவியே. (கசo)

(கருக) நெடுத்த=நீண்ட; ஊறு அணிந்து = விக்கினங்களை யுடைத்தாய்; ஒருக்கி=கெடுத்து; ஓசை பெருக்க= கீர்த்தி யதிகரிக்க; நற்பேறு அணிந்து=நல்லபயனை யுடையதாய்; கிளர்=பிரகாசிக்கும்; இரசிதக்கிரி=வெ ள்ளிமலை; பெட்பு=விருப்பம்.

(கசo) தாமமாக=விருப்பமாக; மிகு கண்டிகைத் தொடை= மேலான ருத்திராக்க மாலைகள்; அரித்துளார்=ஒழித் திருக்கிறவர்கள்; ஏமமால்வரை=பெரிதாகிய பொன் மலை; மிடுக்கு = வலிமை; நாமவேல் = அச்சந் தரும் வேலாயுதம்; திகிரி=சக்கரம்; கொந்து=கொத்துகிற; அழற்கழுமுள்=அக்கினியைக் கக்குகின்ற சூலாயுதம்; நகு = விளங்குகிற; கதைப்படை = தண்டாயுதம்; நவியம் = மழுவென்னும் ஆயுதம்; வாமம் = அழகு; திறல்=வலிமை.

விடுமி னிந்தமறை வேதியன்றனைவி டுத்தி டாவி டில்விறற்படை, யெடுமி னெம்முட னெதிர்ந்துவெஞ் சம ரியற்றியுங்கள்வலி யாவையும், கெடுமி னங்குமூ புயமெ னும்பெரிய கிரியிழந் துயிரை யெமது கைக், கொடுமி னென்றுசில வாசகங்க ளெதிர் கூறினார் வலி மை கூரவே.　(௧௬௧)

வேறு.

முனிவர் போன்மிக நீறுபூசி முறுக்கி வேணி முடித்துளீர், தினையி லோரொரு பாதி நீதிகள் செய்திலீ ரமை வெய்யதீ, யனைய வாய்மொழி பேசியேசி யடர்த்து வன்மை நடத்துவீ, ரினையராயிது செய்த நீரிவண் யாவ ரேவலி னெய்தினீர்.　(௧௬௨)

என்று வன்றிற லியம தூதரி யம்பலுந்தவ ரென்று பொற், குன்று கொண்டுமுன் முப்புரந்தழல் கொள்ள மென்னகை கோட்டி மான், கன்று கொண்டகரத்தனையெதிர் காமனைக்குள விழியழற், கன்ற ளித்தருளாதி நாயக னன்பர் பின்பிது கூறுவார்.　(௧௬௩)

துண்ட வான்மதி கங்கை மாநதி சூடினோ னிசைபாடிமா, வண்ட ருமலர் முண்ட காசன மறையவன்

(௧௬௧) மறைவேதியன்=வேதத்தினை யோதும் பிராமணன்; முடி=தலை.

(௧௬௨) வன்மை=பலாத்காரம்; இனையராய் = இத்தன்மையுடையராய்.

(௧௬௩) தவர்=வில்; குளவிழி=நெற்றிக்கண்; அழற்கு அன்று அளித்த=முன் நாளில் எரித்த.

(௧௬௪) வண்டு இசைபாடி அரு = வண்டுகளானது ரீங்காரஞ் செய்து நீங்காது வசிக்கும்; முண்டகாசன மலர்மறையவன்=தாமரை மலரில் வசிக்கும் பிரமன்; பொறை= பாரம்; இம்பர்=இப்பொழுது; எண்தரா = நினைக்கக் கூடாத.

பொறை மண்டல, முண்ட மான்முத லும்பர் மங்குவ ரிம்ப ரென்பதை புன்னிமு, ளுண்ட ராவிட முண்ட ரீாவணி கண்ட மீதி லிருத்திரேன். (கசச)

காலனுருயிர் காலவேயொரு காலினுலுதை செய் துநீ, டாலமேகிக ரந்தகாசுர னவனைமுத்தலை யயிலெ டுஞ், சூலமேகொடு குத்திமார்பு துளைத்துவானிலு யர்த்தியோ, லோலமேயென வாவிபாவிபு லக்குமட்டு முணக்கினேன். (கசரு)

திருக ணுசல மதனை யம்மைதி டுக்கமெய்த வெ டுத்தவ, னுரிய மாமணி முடிபு னைந்தக மொருப துங் கர மிருபது, நெரியநாரண னெனமாய்முத னேடுபாத மிரண்டி லோர், விரியுநாண்மல ரடியினுயக விரலழுத் தி மிதித்துளான். (கசசா)

உறுதி வானவர் மானவர்க் கிடை யீடுறுமல் வில க்கவுஞ், சிறுமை தீர்தர முத்தி பத்திகள் செய்தவர்க் கருள் செய்யவு, மறுவி லாமதி போலவால மருப்பு நெற்றியி னங்கணும், பெறுமதாசல வதனனுயொரு பிள்ளை பெட்பொடு பெற்றுளோன். (கசஎ)

(கசரு) உயிர்கால=உயிர்நீங்க; அயில்=கூர்மை; ஆவி=உயிர்; உலக்கும்=நீங்கும்; உணக்கினேன் = வாட்டினேன்.

(கசசா) கணுசலம்=கைலைமலை; உரிய=தகுந்த; கம்=சிரசு; முதல்=முற்காலத்தில்; நாயகவிரல்=பெருவிரல்.

(கசஎ) உறுதி = வயிராக்கிய முள்ள; மானவர் = மனிதர்; இடையீடு=விக்கினம்; தீர்தர=நீங்க; வால் = வெ ண்மையுற்று; அம்=அழகிய; மருப்பு=தந்தம்; நெற் றியின் அம்கணும்=நெற்றியில் அழகியகண்ணும்; மதாசலம்=மதமுடைய யானை.

நாலுமா மறையோது நான்முக னாரிநாசி நறுக்கிவந், தாலுநீடிரை யத்தி யுற்றெழு மர்க்கர் பற்கடகர்த்துநற், சாலு மாமதி விட்டிகற்புரி தக்க னைத்தலை வெட்டிமுற், கோலும் வேள்வி யழித்தி யென்றொரு கோர வீரனை நல்கினேன். (௧௪௮)

கொடிய தாரக னாயிரந்தலை கொண்ட சிங்கமு கன்கடற், படியின் மிக்குயர் சூரநீதிசெய் பற்பறானவர் குலமெலாம், வடிகொள் வேல்கொடு கொன்று பொன்றிகழ் வானநாடு புரப்பதற், கடியர்தீவினை யறவருட்டரு மறுமு கத்தனை யருளினேன். (௧௪௯)

ஏவயாமிவ ணெய்துகின்றன மிங்கி வன்றனைவிட்டுநீர், போவதேகட னென்று நின்றுள பொறுமையோடிவை புகலவும், பாவ சாகர மான மானமில் பனவனைப் பல நரகின்வாய், மேவவேவிட லன்றிமீளவி டோமெனா வலி பேசினார். (௧௫௦)

---

(௧௪௮) நான்முகன் நாரி = பிரம்மாவின் பத்தினி; வந்து= தோன்றிவந்து; ஆலும் = சப்திக்கிற; நீள் திரை = நீண்டஅலை; அத்தி=சமுத்திரம்; அர்க்கர்=பன்னிரு சூரியர்; நற்சாலும் = நன்மை பொருந்திய; மா மதி விட்டு=சிறந்த புத்தியையொழித்து; இகல்புரி=(பரமேசுவரனைப்) பகைத்த; முன் கோலும் = முன்னே செய்த.

(௧௪௯) கடல் = சமுத்திரஞ் சூழ்ந்த; படியின்=பூவுலகத்தில்; மிக்குயர்=அதிமேன்மை பெற்ற; சூர்=அசுரன் (சூரபத்மன்); அநீதி=அக்கிரமம்; பற்பல=பலபல; தானவர்=அசுரர்; பொன்திகழ்=பொன்மயமாய் விளங்குகிற; புரப்பதற்கு=காப்பதற்கு.

(௧௫௦) பனவன்=பிராமணன்; எனா=என்று; வலிபேசினார்= வன்மையாகப் பேசினார்.

மட்டறப்புரி புன்றொழிற்கரு மனாரராவரைப்புயக், கட்ட றுத்தன ருட்க றுத்தனர் கட்கனற்பொறி கக்க வாய், விட்ட ழைத்திதழ் பற்கடித்து விடுத்துநேமியெடு த்துவே, றொட்டி லக்கமில் வாளிமாமழை தூவினார்சிவ தொண்டரே. (கருக)

கரமு றிந்தனர் வார்கழற்புனை காறுணிந்தனர்கவு ளுடன், சிரமுடைந்தனர் சூலவேல்கதை திகிரிகால் வளை சிலைநெடுஞ்,சரமி ழந்தனர் குடர்சரிந்தனர் சவிகு றைந்தனர் தமதுவென், னுரமெ ரிந்தனர் தென்பு லத்திடை யோடி னார்யம தூதரே. (கருஉ)

வேறு.

படிபுகழ்விஞ் சையர்நரப்புக் கருவிதட விச்சுரு திப் பண்கள்பாட, விடியொலியின் மிகவதிரு மந்தர துந் துபிமுழங்க விரண்டு பாலுங், கொடிகுடைகள் பலநிலவக் குலவியநற் கற்பகப்பொற் கோட்டிற் பூத்த, கடிகமழ்பூ மழைபொழியக் கற்றைமணித் திரணெடுங் காற் கவரி வீச. (கருங)

(கருக) மட்டு அற=அளவில்லாமல்; ஆரம் = சந்தன விருட்சமடர்ந்த; வரை = மலைபோலும்; உட்கறுத்தனர் = கோபித்தனர்.

(கருஉ) கால் துணிந்தனர்=காலைவெட்டப் பெற்றனர்; கவுள் =கன்னம்; கால்வளை சிலை=இருநுனிகளையும் வளைக்கப்பட்ட வில்; சரம்=அம்பு;சவி=பெலம்; வென்= முதுகு; உரம்=மார்பு.

(கருங) படி=உலகம்; விஞ்சையர் = வித்தியாதரர்; நரப்பு= நரம்பு (தந்தி); தடவி=மீட்டி; சுருதி=இசை; பண் =இராகம்; அந்தரதுந்துபி=தெய்வ வாத்தியம்; குலவிய=விளங்குகின்ற; பொன்கோடு = அழகிய கிளை; கற்றை=அடர்த்தியான; மணி திரள் நெடுங்கால் = திரட்சியுற்று அழகியநீண்டகாம்பினை உடைய.

நகுமார நகைக்கருங்க ணரம்பையர்பல் லாண்டி
சைப்ப நவையிற் றீர்ந்த, சுகுமாரன் றனைக்கவின்செய்
மானமிசை கொண் டணைந்தார் சுரர்கள் போற்றத்,
தகுமார னுடலடலை படவிழித்த தனிநுதற்கட் டலை
வன்வைகு, மிகுமாரத் திரள்சாயத் தள்ளியரு விப்பு
னல்பாய் வெள்ளி வெற்பில். (௧௫௪)

பொங்குகதிர் விமானத்தி னின்றிழிந்து நந்திவி
டப் புகுந்துபொற்பார், மங்குறவழ் வரையரசன் மடப்
பாவை யிடப்பாக மருவத்தான, வெங்கரிக்கூற் றேந்
தணையின் வீற்றிருக்கும் விமலனைவெண் டிரைகள்
வீசுங், கங்கைநதி முடித்தசடைக் கண்ணுதலைக் கண்
குளிரக் கண்ணுற் றானே. (௧௫௫)

கறைசெறியுங் கருந்தாதைச் செந்தாதிற் புரிந்த
தன்மை கடுப்ப நீதி, பொறை யறிவொன் றில்லேனை
நல்லறிஞ ருடன்கூட்டிப் புரந்தாய் போற்றி, யிறைவ

---

(௧௫௪) நகும் = விளங்கும்; ஆரம் = முத்தைப் போன்ற; நகை = பல்லையும்; நவையில்தீர்ந்த = குற்றத்தினின்றும்நீங்கிய; மானம் = விமானம்; தகுமாரன் = தகுதியுள்ள மன்மதன்; மிகும் = மிகுதியாகிய; ஆரம் திரள் = சந்தனவிருக்ஷக் கூட்டம்.

(௧௫௫) மடப்பாவை = அழகிய பதுமைபோன்ற பார்வதிதேவியார்; தானம் = மதம்; கரிக்கூற்றன் = யானைக்குச் சத்துருவாகிய சிங்கம்; எந்து = சுமக்கும்; அணை = ஆசனம்.

(௧௫௬) கறை = கறுப்புநிறம்; செறியும் = பொருந்திய; கருந்தாது = இரும்பு; செந்தாது = பொன்; புரிந்த = செய்த; கடுப்ப = ஒப்ப; பொறை = பொறுமை; புரந்தாய் = இரட்சித்தவனே!; எமதுஉரு = எமதுசாரூபம்; அறைதரு = புகழப்படுகிற.

பரம் பரவெனவிழ்ந் திறைஞ்சுதலு மெய்துருப்பெற்
றிருத்தியிங்ங, னறைதருநற் கணங்களுட னெனத்திரு
வாய் மலர்ந்தமல னருளிச் செய்தான். (கருசு)

அக்கணத்திற் சுகுமார னரனுருப்பெற் றுண்
டிருந்தா னமரிற் றேற்றுத், தெக்கணத்திற் சென்ற
டைந்த தூதர்சமன் றனைத்தொழுது திரைநீ ருண்ட,
மைக்கணத்தி னசனியென்ன வந்தெம்மை யடித்தறி
வின் மறையோன் றன்னைப்; பொக்கணத்திற் பலியிரப்
பான் கணங்கள்கயி லையிற்கொண்டு போனா ரென்றார். (கருஎ)

கேட்டவுட னிருவிழியுங் கனற்பொறிகான் றிடச்
சினமீக் கிளரச் செய்ய, வாட்டடக்கை புடைத்துநன்
றெம் மதிகார மெனப்புகன்று வரைகள்போலுந், தோ
ட்டடங்கள் குலுங்கநக்குச் சித்திரகுத் தனைநோக்கிச்
சுகுமாரன்பா, லீட்டருநற் புண்ணியங்க ளுண்டுகொ
ளீ தெரிந்துவிரைந் தியம்பென் றனல். (கருஅ)

மற்றவனுந் தேர்ந்துசுகு மாரனெனுங் கோரமிகு
மறையோன் றீமை, முற்றுமியற் றித்திரிந்தான் சென்
மமுத லின்றுடல முடியுங்காறு, நற்றவம்புண் ணிய
மொழுக்க மிறையளவு மில்லெனப்பின் னமனுநெஞ்
சிற், செற்றமுட னெழுந்துநதிச் சென்னியான் முன்
னியான் செல்வ னென்றே. (கருகூ)

(கருஎ) ஆண்டு=அவ்விடத்தில்; அமர்=யுத்தத்தில்; சமன்=இயமன்; மைக்கணம்=மேகங்களின் கூட்டம்; பொக்கணம்=கபாலமாகிய ஓடு; கணங்கள்=படைகள்.

(கருஅ) மீக்கிளர=அதிகமாகப் பொங்க; செய்ய=அழகிய; வாள் தடக்கை=வாள்பொருந்திய பருத்தகை; புடைத்து=அடித்து; நக்கு=சிரித்து.

(கருகூ) இறை=அணு; செற்றம்=கோபம்;

நிழலுமிழஞ் சனக்கிரியி னீலமுகி லிருந்ததனை
நிகர்ப்ப நீண்ட, சுழறருநாக் கண்டைகண்டத் தசைந்
தடிபேர்த் திடுந்தோறுந் தொனிக்கவந்த, வழலுமிழ்
கட் பெரும்பகட்டின் மிசையேறிக் குறையிறைவதி
கறைவான் செம்பொற், கழலணிசித் திரகுத்த னுடன்
றூதர் சூழ்வரத்தின் கயிலையெய்தி. (க௫௦)

அண்ணலுவ ணப்பாக னடலயிரா வதப்பாக னன்
னப்பாகன், பண்ணமர்யாழ்க் கந்தருவர் விஞ்சையர்
வா னவர்முனிவர் பலரும்போற்ற, வொண்ணறுமா ம
லர்க்கரத்திற் பிரம்புபற்றிச் சுற்றிநந்தி யுலவவந்தி, வ
ண்ணனுறை பேரவைக்கட் புகுந்தொதுங்கி யொல்கி
நின்று வழுத்தல் செய்வான். (க௫க)

ஆதிநடு வீறிலியா யாணுடன்பெண் ணலியலவா
யவையுமாகிச், சோதிபெறு மருவுருவாய்த் தோற்றுச
ரா சரமனைத்துந் தோய்ந்துந் தோயாப், பாதிமதி நுதற்
பேதை பாகனுமா யேகனுமாய்ப் பகர்தற்கெட்டாப், பூ
திபுனை திருமேனிப் புனிதநின்றா மரைத்தாள்கள்
போற்றி போற்றி. (க௫உ)

இத்தலையா ரமுதமெழ வேண்டுமெனப் பாப்புவட
மியாப்புற் றோங்கன், மத்தலையா வமரர்கடைந் திடவட

(க௫௦) நிழலுமிழும் = ஒளிவீசும்; அஞ்சனக்கிரி = நீலமலை; சுழல் தரு = சுழலுகின்ற; நா = நாக்கினையுடைய கண்டை = மணி; கண்டத்து = கழுத்திலே; பகடு = எருமைக்கிடா.

(க௫க) உவணப்பாகன் = கருடனைவாகனமாகவுடைய திருமால்; அயிராவதம் = வெள்ளையானை; அவை = சபை.

(க௫௩) இத்தலை = இவ்விடத்தில்; பாப்பு = பாம்பு; யாப்பு = கட்டு; ஓங்கல் = மலை; அலையா = சுழற்றி; கத்து = சப்திக்கிற; கருதார் = பகைவர்; வேல் = சூலம்.

வை கருநிறமாய் வந்ததென்னக், கத்தலைவாரி தியுதிக் குங் கடுவொடுக்கு மணிமிடற்றுங் கருதாருனுண், மு த்தலைவேற் கராநாலு மறைபுகழு மைந்துமுக முதல்வா போற்றி. (௧௬௩)

உலகுயிர் யாவையும் படைத்தற் கயனாகிப் புரந் திடுதற் குவணமூரு, மிலகுமணி மார்பினனாய்த் துடை த்திடுதற் குருத்திரனு யிவையுமன்றி, யலகிறிரு வினை யாடல் புரிந்தருளும் பராபரனீ யாதலா னுன், சலசமல ர் மருட்டிப்பே வடியடியேன் புன்றலையிற் சாத்தினே னால். (௧௬௪)

என்றினைய துதிகூறி விழுந்தெழுந்து வாய்புதை த்தங் கெறியும்பாசம், வன்றிறல்சேர் தண்டமுதன் முத்திரையைத் திருமுன்னே வைத்துத் தாழ்ந்து,நின் றினிமே லடியேற்கிவ் வதிகாரம் போதுமென நிகழ்த் தவீச, னுன்றிறம்யா துன்னுளத்தி னுறுகுறையே தெ ம்முனநீ யுரைத்தியென்றான். (௧௬௫)

அரியயனே முதலமரர்க் கடுத்ததொழில் செயப்பு ரிந்தா யவர்களங்கங், குரியபடி நினதேவற் படிபுரிந்தார் குறையிலரெற் குலகத் துள்ளோர், புரிகொடுந்தீ வினை களறிந் ததற்கினைய தண்டமெனைப் புரிதியென்று, யெரிநரகி னவரவர்கள் வினைகளறிந் தூட்டுவித்தே னி ன்றுகாறும். (௧௬௬)

---

(௧௬௫) வன்திறல்=மிகுந்த வலிமை; முத்திரை=(இயமனுக் குரிய) சின்னம்; திறம்=பட்சம் (விவாதம்).

௧௬௬) ஊட்டுவித்தேன்=அனுபவிக்கச் செய்தேன்.

எம்பெருமா னீபணித்த கற்பனைக டவறிலனீ டிஞ்சி யோங்கி, யும்பருல களவளவுங் குஞ்சரநற் புரியி னிரைத் தொலிக்கு முந்நீ, ரம்பரவம் பரப்புடவித் தேவர்குலத் தினிற்றோன்றி யறத்தை நீத்துக், கம்பமி லா துளத்திரவிற் கலைகலன்பொன் றினந்திருடுங் கள் வனுகி. (கசஎ)

விலைமகளி ரல்லார்தங் கற்பழித்து முலைப்போகம் விழைவிற் றுய்த்துப், புலைமகடோ ணலநுகர்ந்தங் கவ ளுயிர்த்த புதல்வியரைப் புணர்ந்துசாதி, நிலைதவறி யூ னருந்தி வேதியரா னினமடவார் நீத்தோர் தம்மைக், கொலைபுரிந்த கொடுமறவன் சுகுமார னென்றொருபேர் கொண்டதீயோன். (கசஅ)

உயிருலக்குங் காலமது கண்டெனது தூதரடைந் துருத்து நெஞ்சி, லயிரளவு மிரக்கமின்றிப் பாசமதிற் பிணித்துவரு மந்தவேலை, மயிருறுசெ னிகண்மூளை யுகத்தகர்த்து நின்கணங்கள் வலிமைகாட்டிச், செயிரு டனஞ் சேனையெல்லா முரிந்திரிந்து குன்றவென்றி செ ய்த பின்னர். (கசகூ)

(கசஎ) கற்பனை=கட்டளை; அளவும்=அளாவிய; இரைத்து= இரைந்து; முந்நீர் = படைத்தல், காத்தல், அழித்த லென்னு மூன்று தன்மையுடைய நீர்; அம்பரம் = கடல்; அம்பரப்புடவி=வஸ்திரமாகத் தரித்தபூமி; உ ளத்து=மனதி னிடத்து; கம்பமிலா = கலக்கமில்லா து; கலை=வஸ்திரம்; கலன்=ஆபரணம்.

(கசஅ) விழைவில் = விருப்பத்தோடு; துய்த்து = அனுப வித்து; நலன்=இன்பம்; உயிர்த்த=பெற்ற; கொடு மறவன்=கொடும்பாவி.

(கசகூ) அயிர்=சிறுமணல்; உக=சிதற; தகர்த்து=உடைத்து; செயிர்=கோபம்; முரிந்து=தோற்று; இரிந்து=ஒடி; குன்ற=மெலிய.

மைதவழுங் கிரிச்சிறையீர் வச்சிரத்தேவன் முதல மரர் வணங்கி வாழ்த்தச், செய்தவமொன் றில்லானை நவமணிக ளிழைத்திடும்பொற் றேரிலேற்றிக், கைதவ மற் றருந்தவங்க ளிழைத்துமிக விளைத்தவர்க்குங் கற் பஞ்சென்று, மெய்தரிய நினதுபதத் தெய்துவித்தா ரி துகுறையென் றியம்பிப் பின்னும். (கஎ0)

கனமிருண்டு துளித்தமழைத் தாரைகளைக் கணக் கிடினுங் கடலின் றீர, வனவரிவா லுகங்கடனை வான்மீ னைக் கணித்தொருவர் மதித்திட் டாலுந், தினமிவன் றுன்புரிந்தகொடும் பாதகங்கட் கிலக்கமில்லைச் செப்பு மன்னே, யனவரத தாண்டவநின் பதம்பெறவும் வழக் குளதோ வறைதி யென்றான். (கஎக)

அந்தகனைக் கடைக்கணித்தங் கரனுரைப்பா னந் தணரா னினமானேர்கட், பைந்தொடியார் பாலர்வதை மீன்மிருகம் பறவைகொன்று பகர்தறின்ற, நந்தைகுரு தாய்பிரம சந்நியாசி சதுர்வேதந் தம்மை நாளு, நிந்தை செய்த னீதிபிழைத் தொழுகல்பொய்ச்சான் றுரைத்து நிதி கவர்தலின்னும். (கஎஉ)

கன்னிகைபொற் கலனிழந்த கைமைகுரு வின் றேவி கணிகைதாசி, யன்னியர்பெ ணன்னையவ ளுடன்

(கஎ0) மை = மேகம்; சிறையீர் = இறகை யறுத்த; கைதவ மற்று=வஞ்சகமற்று.

(கஎக) கனம் = மேகம்; துளித்த = பெய்த; தீரம் = கரை; வனம்=அழகிய; அரி=ஒளியுள்ள; வாலுகம்=வெண் மணல்; வான் மீன்=ஆகாய நட்சத்திரங்கள்; அனவர தம்=சதாகாலம்.

(கஎஉ) பகர்தல்=விற்றல்; பிரம்ம சந்நியாசி=பிராமண சந்நி யாசி; பிழைத்து=தவறி; சான்று=சாட்சி; கவர்தல்= பலாத்காரமா யெடுத்துக்கொள்ளுதல்.

பிறந்தார் தன்புதல்வி யன்றிமாமன், பன்னிசகோ தரி தாரத் திரிவுடனே பதிவிரதை பழிக்குஞ்சாதி, மின்னிடையார் தமைக்கூடன் மிருகங்க டமைப்புணர்தல் விரதம்விடல். (கஎ௩)

குளங்கூப நந்தவனங் கோயின்மடங் களைச்சிதைத்தல் குதிரையானை, யளந்திடுமெள் ளெண்ணெய் நெய் பொன் னுபயகோ முகிதான மாகவாங்கல், வளர்ந்த பெரு மரங்கடமைத் தறித்தன்முகை விரியாத மலரைக் கொய்தல், விளங்குசிவா லயந்தீர்த்தங் களின்மலமூத்திரம்விடுதல் விளம்பி வற்றில். (கஎச)

மனமறிய வுச்சிட்ட மிடல்கனகந் திருடல் கள்ளுன் மதித்து விற்குஞ், சொனகுலரூண் சூதகவீட் டனம்பிதிர்போ சனந்தூர்த்தர் சோறுதின்றல், தினகரனை யராத்தீண்டு நாளேகா தசிதசமி திகழுவாவி, லனமருந்த லிடக்கரத்தா லெடுத்தொன்றை யயிறலனு சாரஞ் செய்தல். (கஎரு)

(கஎ௩) பொற்கலன் = திருமங்கல்யம்; கணிகை=விலைமாது; தாசி=ஆலயப் பணிவிடை செய்பவள்; பழிக்குஞ்சாதி =பறைச்சாதி; விரதம் வீடல்=விரதந் தவறுதல்.

(கஎச) கூபம்=கிணறு; சிதைத்தல்=அழித்தல்; உபயகோமுகி=இருபுறமுந் தலையுள்ளபசு, அஃதாவது வயிற்றினின்றுங் கன்றின் றலைமாத்திரம் வெளிப்படுங்காலத்திய பசு.

(கஎரு) உச்சிட்டம்=எச்சில்; சொனகுலர்=சொன்ன குலத்தவர்கள்; ஊண்=சாப்பாடு; பிதிர்போசனம்=அன்ன சிரார்த்தத்தில் பிதிர்த் தேவதையாகப் பாவித்த பிராமணர்களுண்ட மிச்ச அன்னத்தை யுண்ணல்; தூர்த்தர் =காமுகர்; தினகரனை அராத்தீண்டுநாள் = சூரியகிரகணகாலம்; அயிறல்=உண்ணல்.

துள்ளுநடைப் பரிமுலைபால் சுரந்தெரிழுகு செரு
த்தனல்லான் சுருதிதூயோர், விள்ளுமுருத் திரமணிமந்
திரந்தேவ விக்கிரகம் விபூதி யேகங், கொள்ளுமத கரி
யடிமை யவுடதங்கள் னிகைதவளங் குலவு பன்னல், லெ
ள்ளுநறு நெய்தயிர்பா லெண்ணெயொடு கள்ளுவிற்ற
லிவைகளாதி. (௧௭௬)

எண்ணருந்தீ வினைபுரிந்த கொடியோருஞ் சிவநி
சிநோற்றியாம நான்குந், தண்ணறும்பூ வாலூறங் கடை
யாம லருச்சித்தோர் சமானமில்லார், நண்ணருமா மக
ம்புரிந்து நதிபடிந்து தானமிக நல்கி னாலும், பண்ண
ருநற் பலவிரத மிழைத்தாலு மிதுபோலப் பயன்றரா
தே. (௧௭௭)

அன்னசிவ நிசிவிரதத் தாசகனு கேச்சுரத்தி லமு
த மூறுங், கன்னன் மொழி யுமையொடெமைக் கண்
டிடப்பெற் றனனதனாற் காயும் வெய்யோன், முன்ன
ரெதி ரிருளிமம்போ லுடைந்தகன்ற திவன்முதனாண்
முயன்ற பாவ, மென்னருநற் கணங்களுடன் கூடுகின்ற
வின்பமுத்தி யீதுபெற்றான். (௧௭௮)

என்றிறைவன் கூறுதலுந் தண்டதரன் மீண்டுரைப்பா
னிரக்கமின்றிக், கொன்றினமான் றசையருந்தி மதுக்
குடித்து மனைவியர்தங்குழற்குச் சூட்ட, மன்றன்மலர்

---

(௧௭௬) செருத்தல் = மடி; விள்ளும் = புகழும்; தவளம் = வெண்மை; பன்னல்=பருத்தி.

(௧௭௭) ஊறுஅங்கு அடையாமல்=அதில் குற்ற மில்லாமல்; நதிபடிந்து=யாகமுடிவில் அபவிரத ஸ்நானஞ்செய்து அல்லது கங்காநதியில் மூழ்கி.

(௧௭௮) முதல்நாள்=முன்னாட்களில்.

(௧௭௯) தண்டதரன் = தண்டத்தைத் தரித்தஇயமன்; ஆன் இனம்=பசுவர்க்கம்.

கொய்திடுவரின் வந்ததன்றி யன்புகொடு வந்தானல்ல, னுன்றனருளிதுவெனின்மற் றுரைப்பதெவ னெனப் பரம னுவனைநோக்கி. (கஎகூ)

எண்டருமெட் டுணையுளத்தன் பிலரேனு முளரே னு மிந்நா ளெம்மைக், கண்டவர்நோற் றவர்பூசை பண் ணினர்நற் கதியடைவர் காலநீநந், தொண்டர்தமைக்கொ டும்பாசந் தனில்வீக்கித் துட்டவுருத் தோன்றக் காட் டித், தண்டமிழைக் குதறவிருன் றாதருக்கு மிந்தவழி சாற்றுகென்றான். (கஅ௦)

செறிந்தவுயிர் கவருதற்குச் சேணெறிபோய் மற ந்தெனது சினவேற்றூதர், நெறிந்தபுரி சடைப்பரம நின்னடியா ரென்பவரை நினைவிற்றேறு, தறிந்தறியா திழைப்பர்தண்ட மவர்செயன்மற் றடையாள மறைதி யென்ன, மறிந்ததிரைக் கடல்விடமுண் டருடிருவாய் மலர்ந்திறைவன் வகுத்துச் சொல்வான். (கஅக)

சிரங்களங்கா திரண்டுதடந் திண்டிறற்றோ டாழ்ந் தவிரு செங்கைவாய்ந்த, வுரந்தனிற்கண் டிகைபுனை வோ ருருத்திரமந் திரநவில்வோ ருற்று வேண்டும்,

---

(கஅ௦) எள்துணை = எள்ளளவு; வீக்கி = கட்டி; துட்டஉருத் தோன்ற = கோரவடிவம் விளங்க.

(கஅக) செறிந்த = பொருந்திய; சினவேல் = கோபமுள்ளவேல்; நெறிந்த = சுருண்ட; தண்டம் = தண்டனை; அறைதி = சொல்லுக.

(கஅஉ) உற்றுவேண்டும் = விருப்பமுற்றுக்கேட்கிற; கடாடம் = மதச்சுவடு; கடம் = மதம்; மாமுகன் = யானைமுகன்; பூ = அழகிய; முகங்கொள் = நுனியினை யுடைய; தச முகன் = இராவணன்.

வரங்கடரு காடகட மாமுகனைப் பூமுகங்கொள் வடி வேற்றானை, கரங்கொள்விறற் சண்முகனைத் தசமுக னொடாக்கர்தமைக் காய்ந்த மாலை. (கஅ௨)

பரைசிவரு பமதாகுஞ் சிவலிங்கந் தனைப்பூசை பண்ணு வோர்நல், விரைகமழு நந்தவனம் வைத்திடு வோர் கற்புடைய மின்னார் மிக்க, வுரைபெறுவெண் டிருநீறு பூசிடுவோர் சிவாலயங்க ளுஞற்றுகின்றோர், திரையெறிவா ரிதியுலகி லெமதடியார் தமைப்பூசை செய்யு மேலோர். (கஅ௩)

நின்மலமா மஞ்செழுத்தை யுளத்தழுத்திச் செபி த்திடுவோர் நிகரின் மாக, நன்மதிநீ ராடிடுவோர் பஞ் சபா தகந்தவிர்ந்தோர் நாள்கடோறுந், துன்மதியி லாத துற வந்தணருக் காடையன்னஞ் சொன்னமீவோர், மன்மதியாற் குளங்கூவல் கல்லுவிப்போர் நிழல்சாலை வழியில் வைப்போர். (கஅ௪)

காசியிரா மேச்சுரம்பொற் கனகசபை யாரூர்கா ளத்தி காஞ்சி, மாசில்கழுக் குன்றமுது குன்றமொற்றி யூர்மருதூர் மதுரை யையா, றுசின்மறைக் காடுவெண் கா டானைக்கா மாயூர மருணை புள்ளூர், தேசுதருஞ்சிர புரநற் றிருப்புகலூர் முதற்றலங்கள்செகத்தி லுண்டால்.

அத்தலங்க டமையடைந்து புனிதநீர்ப் படிந்தா டி யமலமாகிச், சித்தமகிழ்ந்தியாமுறையுஞ் சிவலிங்கந்

(கஅ௩) பரை=சத்தி; விரை=வாசனை; உஞற்றுகின்றோர் = கட்டுகின்றவர்.

(கஅ௪) மாகநல்மதி=நல்லமாசி மாதம்.

(கஅ௫) முதுகுன்றம்= விருத்தாசலம்; புள்ளூர் = வைத்தீசு வரன் கோயில்; சிரபுரம்=சீகாழி.

அங்குலச் சருக்கம்.

இன்னு பிரசியிற் சிவநிசிப் பெருமையொன், றிசைப்பேன், மின்னு வார்சடைத் துறவிர்கா ளுமக் கென விழைவாற், றுன்னு நான்மறைப் பொருடெரி வியாதனைத் தொழுது, பின்னு மாதவச் சூதமா முனி வரன் பேசும். (க)

களங்க மாய்க்குறு முயலுறு கதிர்மதி தவழ, விளங்கு மிஞ்சிசூழ்ந் தளகைமா நகரினை வென்ற, வளங் கொள் சாகர புரத்தயல் வளர்வரை வனத்தி, லுளங் கொ ளோகையோ டுறைபவன் றோலுடை யுடை யோன். (உ)

வெண்ணி ணத்தடி முடைகமழ் வெடிக்குரல் வாயா, னெண்ணில் வேட்டுவக் கிளைஞரோ டின்பமுற் றென்று, நண்ணி வாழ்பவன் காதினி னுலநால் வா யின், றண்ணி லாமருப் பரிந்தது குழையெனத் தரிப் போன். (ங)

(க) விழைவால் = விருப்பத்தினால்; துன்னும் = நிறைந்த;

(உ) குறுமுயல்=குறுகிய முயல்போன்ற; தவழ=ஊர்ந்து செல்ல; இஞ்சி=மதில்; ஓகை=மகிழ்வு; தோலு டையுடையோன்=தோலை ஆடையாகத்தரித்த வே டன்.

(ங) வெள் நிணம்=வெண்மையாகிய கொழுப்புள்ள; தடி= மாமிசம்; முடை = துர்நாற்றம்; வெடிக்குரல்=வெ டிபோன்ற பெருந்தொனியுடைய; நண்ணி=கூடி; நால = தொங்கும்படியாக; நால்வாயின் = யானை யின்; தண்ணிலாமருப்பு=குளிர்ந்த பிறைச்சந்திரன் போன்ற வளைவும் வெண்ணிறமுமுடைய கோட் டினை; அது=அதை; குழை=குண்டலம் (காதணி).

தேனு நீடணில் வாற்குரற் செந்தினை மாவுஞ், கானி னீயலுங் கபித்தநற் கனிகளுங் கங்குன், மானு மேனமான் மரைமுயன் முதலிய மாவி, னூனு மைவனத் துண்டியு முண்டிகொண் டுவப்போன். (௪)

பொங்கு வெஞ்சினத் தழல்விழிப் பொறிப்புலி போல்வான், கங்கு லஞ்சனக் கிரிமுழக் கொடுமழை காலு, மங்கு லோருருக் கொண்டுவந் தாலென வடிவந், தங்கு மங்குல னென்றுள னொருதனிச் சவரன். (௫)

பொன்றி கழ்ந்திடு மவ்வரைக் கருகொரு புனத்திற், குன்றி யின்வடக் குடமுலைக் குழைக்கலை யுடுக்கு, மின்றி ருந்திடைக் கொடிச்சியோர் கொடிச்சியை வேட்டாங், கன்றி லுஞ்சிறைச் சேவலு மாமென வணைந்தான். (௬)

---

(௪) நீடு அணில் வால் = நீண்ட அணிற்பிள்ளையினது வால் போன்ற; குரல் = கதிர்; ஈயல் = ஈசல்; கபித்த நற் கனி = நல்ல விளாம்பழம்; கங்குல் = இருளை; மானும் = ஒத்த; ஏனம் = பன்றி; ஐவனத்து உண்டி = மலைநெல் உணவு; உண்டிகொண்டு = உணவாக அருந்தி.

(௫) பொங்கு = எழுகின்ற; பொறி = புள்ளி; கங்குல் = இருளையும்; அஞ்சனக்கிரி = நீலமலையையும்; முழக் கொடு = இடியோடு; மழைகாலும் = மழையைப்பொழிகின்ற; மங்குல் = மேகமும்; ஒருதனிச்சவரன் = ஒப்பற்ற ஒருவேடன்.

(௬) பொன் = அழகு; புனத்தில் = புன்செய் நிலத்தில்; குன்றியின் = குன்றிமணியின்; வடம் = மாலை; குழைக் கலை = தழையாடை; மின் = மின்னல் போன்று; திருந்து = அழகிய; இடைக்கொடிச்சி = கொடி போன்ற இடையையுடையவளாகிய; ஓர் கொடிச்சி = ஒரு வேடப்பெண்; வேட்டு = மணம்புணர்ந்து.

கொடிய கோளரிப் பிணவுவெங் குருளையின்றென்னப்
பிடிந டைக்குறப் பேதையங் கிருமகப் பெற்றுள்
கடிய புல்லுகிர்ச் சுட்டியோ டரைமணிக் கவடி
வடிவு சேர்தரு புதல்வருக் கணிந்துள மகிழ்வான். (எ)

உரையிற் நீர்மையிற் களிப்புறு மெயினனங் கொருநாள், வரையி னீண்மரத் துரித்திடும் வற்கலை வாங்கி, யரையி னீர்த்துமான் றோற்செருப் படிகளிற் றொட்டு, விரையி னீடிருட் குஞ்சிமென் கயிற்றினால் விசித்து. (அ)

தூரக்கும் வெஞ்சரத் தூணிதன் வெரிநிடைத் தூக்கித், தரக்கின் றோலுறைச் சுரிகைசேர்த் தஞ்சன சயிலத், துரக்குந் தோளில்வார் விற்றரித் துயர்சுவா வினங்கொண், டிரக்க மச்சமொன் றில்லவன் வேட்டமே லெழுந்தான். (கூ)

(எ) கோளரிப்பிணவு = பெண்சிங்கம்; வெங்குருளை=கொடிய சிங்கக்குட்டி; கடிய=கொடிய; புல்உகிர்=புலியின்நகம்; மணி = அழகிய; கவடி=சோழி (பலகறை).

(அ) உரை = சொல்லுகின்ற; எயினன் = வேடன்; வரையின்=மலையிலுள்ள; வற்கலை=மரவுரி; ஈர்த்து= இழுத்துக்கட்டி; அடிகளிற்றொட்டு=கால்களிற்றரித்து; விரையின் = வாசனையுள்ள; நீடு = நீண்ட; குஞ்சி=குடுமியை; விசித்து=கட்டி.

(கூ) தூரக்கும் = எய்யும்; வெம்சரம் = கொடிய அம்பு; தூணி=அம்புவைக்கும்பெட்டி; வெரின்இடை = முதுகில்; தரக்கின்=புலியின்; தோலுறை=தோலினாற் செய்த கவசம்; சுரிகை=கத்தி; அஞ்சனசயிலத்து=நீலமலைபோன்ற; உரக்கும்=வலிமையுறும்; சுவா=நாய்; இல்லவன் = இல்லாதவன்; வேட்டமேல்=வேட்டைக்கு.

இலவு தேக்ககி லிரத்திவே லெட்டிபுன் ஞாகங்,
குலவு கூவிளங் கொன்றைபூங் குரவுசோ ரீரப், பலவு
பாடலம் வன்னிசண் பகம்பட ரழிஞ்சி, னிலவு பாலை
பைந் தாதுபொன் னிறத்தநீள் வேங்கை. (கo)

விரித டஞ்சினைச் சந்தனம் பொரியரை வெள்
ளில், பெரிய வாகைபிப் பிலம்பிசு மந்தமுட் பிடவங்,
கரிய காதிரங் கழையிருண் மதுமலர்க் கடம்பம், வரி
கொ ளார்பதஞ் செறிதரு மராமரம் வகுளம். (கக)

மரவ நாகநல் வழைமுதன் மரங்களா னெருங்கி,
யிரவ லாற்பக லில்லையாங் கிலங்குமா யிரஞ்செங், கரவ
ரோதயன் கதிரொளி புகுந்திடாக் கறங்கு, மரவ மாரு
தம் புகுந்திடா வனத்திலங் கடைந்தான். (கஉ)

(கo) இரத்தி = இலந்தை; புன்ஞாகம் = புன்னை; கூவி ளம்=வில்வம்; குரவு=குராமரம்; ஈரப்பலவு=வேர்ப்பலா; பாடலம் = பாதிரி; பொன்னிறத்த பைந் தாது=பொன்போன்ற பசியமகரந்தப் பொடியினை யுடைய.

(கக) தடம் = பருத்த; பொரி=பரணி; அரை = மரத்தின் மத்தியபாகம்; வெள்ளில்=விளா; பிப்பிலம்=அரசு; பிசுமந்தம் = வேம்பு; பிடவம் = பிடவமரம்; கரிய காதிரம்=கருங்காலி; கழை=மூங்கில்; இருள்=வெ ளிச்சமின்றி அடர்ந்த; ஆர்பதம்=வண்டுகள்; செறி தரு=நெருங்கியிருக்கிற; வகுளம்=மகிழமரம்.

(கஉ) மரவம் = குங்குமமரம்; வழை=சுரபுன்னை; ஆயிரஞ் செங்கர = சிவந்த ஆயிரங்கிரணங்களையுடைய; வர உதயன்=மேன்மையுள்ள சூரியன்; கறங்கு=சுழலு கிற; அரவம்=ஒலியையுடைய; மாருதம்=காற்று.

புட்டீ ருங்குலந் தொறும்பயில் பொங்கிருட்
புனத்திற், கட்டு பூழ்பொறிக் கூருகிர்க் கவிழ்தலை
யுளிய, மட்ட றுச்சித லெடுத்துயர் பாழிவன் மீகந்,
தொட்ட கழ்ந்ததிற் சோறுக ளருந்துமங் கொருபால்,

துறுமயிர்ச்செறி மடிசெவித் துடிக்குநற் செந்நாய்
தெறுசி னத்துடன் சிலீமுகஞ் செல்கதி யினிற்சென்
றுறுசெ வித்துணை நிமிர்த்துகள் குமிழிநே ரொண்கட்
குறுமு யற்சிறு குருளையைத் துரத்திடுமொருபால். ()

வளைந்த வாலுளை மடங்கல்கைம் மாவின்மத் தக
த்தைப், பிளந்து கோடுகள் பிடுங்கியே கறித்திடத் தெ
றித்து, விளங்கு நித்திலஞ் சோரியிற் றுவண்டதால்
விரிமா, துளஞ் செழுங்கனி விரையெனத் துளங்குமங்
கொருபால். (கரு)

(கஙு) தருக்குலம் = விருக்ஷவர்க்கம்; புள்பயில் = பட்சிகள் வசிக்கிற; கூர்உகிர் = கூரியநகம்; கவிழ்தலை = குனிந்ததலை; உளியம் = கரடி; மட்டற = அளவற்ற; சிதல் = கறையான்; பாழி = பெரிய; வன்மீகம் = புற்றில்; தொட்டுஅகழ்ந்து = தோண்டி; சோறு = உணவு.

(கச) துறுமயிர் = நெருங்கியமயிர்; செறி = உடைத்தாயிருக்கிற; மடிசெவி = மடிப்புற்ற காது; துடிக்கும் = அசையும்; தெறு = கொடிய; சிலீமுகம் = அம்பு; செல்கதியினில் = செல்வதுபோலவேகமாய்; உகள் = துள்ளிக்குதிக்கும்; குமிழிநேர் = நீர்க்குமிழிபோன்ற; ஒண்கண் = ஒளியுள்ளகண்; சிறுகுருளை = சிறுகுட்டி.

(கரு) வால் = பளபளப்புள்ள; உளை = பிடரிமயிர்; மடங்கல் = சிம்மம்; கைம்மாவின் = யானையினது; கறித்திட = கடித்திட; தெறித்துவிளங்கும் = (அதிலிருந்து) சிதறிப்பிரகாசிக்கும்; நித்திலம் = முத்துக்கள்; சோரியில் = அவ்வியானையினது இரத்தத்தில்; துவண்டதால் = புரண்டதால்; துளங்கும் = விளங்கும்.

இடிமுகிற்குரற் றழைசெவித் துணைமருப் பேய்ந்த
கடிசினப்புழைக் கரக்கடக் கவுட்பெருங் களிறு
துடியடிக்கய முனிகள்பின் றொடர்ந்திடத் துன்னும்
பிடிநதிப்புனல் படிந்துடன் பிளிறுமங் கொருபால். (கசு)

முழைக்கட் டுஞ்சிடு கொடுவரிப் புலியின முழங்கி, யுழைத்த பேரொலி கேட்டுவல் லுளிமரை வரையா, டிழைத்த காரிரும் பென்னவே நீண்டகோட் டிரலை, யுழைக்குலம்பயந் தொதுங்கியே யொடுங்குமங் கொருபால். (கஎ)

நீடு வேற்கரக் குமரவே ணெடியமா குலங்க
ளூடு வைத்தபல் லாயிரஞ் சுடர்விளக் கொப்பப்

(கசு) இடிமுகில் = மேகத்தினது இடிபோன்ற; குரல் = தொனியையும்; தழைசெவித்துணை = தொங்குகின்ற இரண்டுகாதுகளையும்; மருப்பு = தந்தங்களையும்; எய்ந்த = பொருந்திய; கடிசினம் = அதிககோபத்தையும்; புழைக்கரம் = துவாரமுள்ள துதிக்கையையும்; கடக்கவுள் = மதம்பொழிகின்றகன்னம்; துடியடி = உடுக்குப்போன்றகால்; கயமுனி = கரடி; துன்னும் = நெருங்கும்; பிடி = பெண்யானையானது; பிளிறும் = கத்தும்.

(கஎ) முழைக்கண் = குகையினிடத்தில்; துஞ்சிடும் = தூங்கும்; கொடுவரிப்புலியினம் = வளைந்தகோடுகளையுடைய புலிக்கூட்டம்; முழங்கிஉழைத்த = கர்ச்சித்துச்செய்த; பேரொலி = பெரியசப்தம்; வல்லுளி = பன்றி; வரையாடு = மலையாடுகள்; உழைக்குலம் = பெண்மானின் கூட்டம்.

(கஅ) நெடிய = நீண்ட; மா = பெருமையுற்ற; குலங்கள் = மலைகள்; ஊடு = இடையிடையே; பாடு = பெருமை; உயிர்ப்பெறிந்து = பெருமூச்சுவிட்டு; படி = பூமி; நாகம் = பாம்பின்; அவிரும் = பிரகாசிக்கும்.
ஈண்டு குலம் என்பது வடசொல். குன்றுந்தோறாடிய வரும் குறிஞ்சி நிலக்கிழவரும் முருகக் கடவுளாதலால் குமரவேளுக்குச் சொந்தமாகிய மலையெனக் கூறினர்.

பாடு சேர்படம் விரித்துயிர்ப் பெறிந்துநற் படிமின்
ருடு நாகநன் மணிகிடந் தவிருமங் கொருபால். (கஅ)

வேறு.

இத்திற நிகழும் வனத்திலவ்வேட னிருஞ்சிறைப் புட்குலம் படிக்குங், குத்திரக் கண்ணி பற்பல வூன்றிக் குலவுமா வினங்கொலை புரிவான், புத்தியி னியற்று மியந்திரப் பொறிகள் புடவியிற் புதைத்துய ரடவிப், பத்திர மரத்தி னடிகளிற் றொடுத்தும் பலவலை வளைவு றப் பூட்டி. (கக)

மடிசெவி வளைவான் ஞாளிக ளேவி வாளிக டுரந்துமின் குறிய, தடிகளி னெறிந்து கற்றிர ளிருத்துந் தட்டைகள் சுற்றியே வீசிச், செடிவளர் வனத்தில் விலங்குகள் கலங்கச் செய்தவன் றூரத்தலும் வலையி, னடிகளிற்பிணிக்கப் புதைத்திடும் பொறியி லகப்படா தகன்றவங் கனைத்தும். (உ0)

புன்புல வருந்துந் தந்தவாய் திறந்து பொதும் பரிற் புகுந்துமா வினங்கண், மென்சிறைப் பறவைக் குலமெலா மருள விளித்தவை போலவின் றழைக்குந்,

---

(கக) இருஞ்சிறை=பெரியசிறகு; புள் குலம்=பட்சிசாதிகளை; படிக்கும் =பிடிக்கும்; குத்திரக்கண்ணி=தந்திரமாக வைத்திருக்கிற முடிகயிறு; மாவினம் = மிருகவர்க்கங்களை; யந்திரப்பொறிகள்=சூத்திர யந்திரங்கள்; பத்திரம்=இலை.

(உ0) மடிசெவி = மடிப்புப்பெற்ற காதுகளையும், வளைவால் = வளைந்தவாலையும்; ஞாளிகள்=நாய்கள்; கல்திரள்=உருண்டையான கல்; தட்டைகள் = கவண் கற்கள்; பிணிக்க=சிக்கிக்கொள்ளச்செய்ய.

துன்புட னுழையின் கவையடி மிதித்த சுவடுகளை
நெறி தொடரு, மென்செய்கே னினியென் றங்கைகள்
வங்கி விடும்புகு முடும்பு நேடற்கே. (உக)

வார்சிலை வணங்கி விடுத்திடும் வயிர வாளியான்
ஞாளியால் வயங்குங், கோரவெங் குந்தப் படையினாற்
றிரண்ட கொடுங்கடுங் கதையினாற் குணிலா, லேர்பெ
றும் பெருங்கண் வலையினாற் புதைத்தவ் வியந்திரப்
பொறியினா லெதிர்ந்தங், கோர்விலங் கோர்புட் கொன்றி
டக்கிடையா துள்ளுறு கவலையுற் றுடைந்தான். (உஉ)

இன்னணம் வேட்டத் துலைந்தவன்மேனி யிளைத்
திடத் தழைத்த கட்டெழுந்து, துன்னரு முதாத்
தழல்சுடமெலிந்து சோகமோடிருந்தபின் பரமன், பன்
னருமிரவி தென்றறிந் தவன்போற் பதங்கனோர் பதங்
கொடேர் கடவி, மன்னெடுங் கயிலை மலைவலங் கொள்
வான் பச்சிம திசையதின் மறைந்தான். (உங)

(உக) விளித்து = கூவி; துன்புடன் = துன்பத்துடன்; உழை = பெண்மான்; வங்கு = வளை அல்லது பொந்து.

(உஉ) வார்சிலை = நீண்டவில்; வணக்கி = வளைத்து; வயிர வாளி = பராக்கிரம அம்பு; வயங்கும் = விளங்குகிற; கோர வெம் குந்தப் படையினால் = பயங்கரத்தினை யுண்டாக்குங் கொடிய சூலாயுதத்தினால்; கொடுங் கடுங்கதை = மிக்க கொடிய தண்டம்; குணில் = குறுந்தடி; உடைந்தான் = வருந்தினான்.

(உங) இன்னணம் = இவ்விதம்; வேட்டத்து = வேட்டைத் தொழிலில்; உலைந்தவன் = வருந்தினவன்; அகட்டெழுந்து = வயிற்றிற்றோன்றி; உதாத்து அழல் = ஜாடராக்கினி; பதங்கன் = சூரியன்; ஓர்பதங்கொள் = ஒற்றைச் சக்கரமுடைய; கடவி = செலுத்தி; பச்சிம திசை = மேற்குத்திக்கு.

கொய்யுளைப் பரியேழ் கொளுவுமோ ராழிக் கொடிஞ்சியந் தேரொடு குடபால், வெய்யவன் கற்றைக் கதிர்க்கரஞ் சுருக்கி வீரிதிரைப் புணரிவீழ்ந் திடலுஞ், செய்யகோ லோச்சி யுலகினி தளிக்குந் திறன்மிகு மரசர்போ யொதுங்க, வையமா ளுதற்குக் குறுநில வேந்து வந்தபோல் வந்ததான் மாலை. (உச)

ஒருருட் டேரோன் குடதிசைக் கடலி லொளித்துறக் குளித்ததற் பின்னர், வாருறு வரிவிற் றடக்கையங் குலன்றன் வடிவுநன் ககற்றிவெந் தீமை, கூருறு மவன்றன் செய்கைகுத் திரங்கள் குடிகொளு முளமும்போற் கருகிப், பேருலகனைத்தும் விழுங்கிமா திரம் விண் புதைத்தது காரிருட் பிழம்பே. (உரு)

குனிசிலைச் சவரர் குலத்தினி லுதித்துக் கொடுங்கொலை புரிந்தவங் குலனுந், தனியிருந் தாண்டு மீண்டியா மெய்தச் சரிதெரி யாதிவண் டரிக்கி, லினியவூ ணின்றி மனைவியுஞ் சிறுவ ரிருவரும் பசிப்பரென் றிரங்கித், துனியுற லொழிந்து தெளிந்துளந் தேறிச் சொல்லருஞ் சூட்சியொன் றுணர்ந்தான். (உசு)

(உச) கொய்=கத்திரித்த; உளை = பிடரிமயிர்; கொளுவும்=பூட்டிடும்; குடபால்=மேற்குத்திசை; வெய்யவன் = சூரியன்; புணரி = சமுத்திரம்; செய்யகோல்=செங்கோல்; மாலை=அந்திப்பொழுது.

(உரு) ஒளித்து=மறைந்து; உறக்குளித்ததன்பின்=பொருந்த முழுகியபின்; வடிவும்=தேகமும்; நன்ககற்றி=நன்மையையொழித்து; கூருறும்=நிறைந்த; செய்கை=பாவம்; குத்திரம்=வஞ்சனை; மாதிரம்=திசைகள்; புதைத்தது=மறைத்தது.

(உசு) சவரர்=வேடர்; மீண்டியாம் = நாம்திரும்பிப்போக; எய்த சரி=வந்தவழி; துனி = வருத்தம்; சூட்சி= உபாயம்.

பாவியேன் வாளா வெறுங்கையேக டெய்திற் பய னிலை பனியிருட் பொழுதில், வாவிக டுருவிக் குளிர் புனல் பருக வருமிரு கங்களுக் கயிலம் பேவியே வதை ந்துத் தடிகொடு போத லியல்பென மதித்துட னெழு ந்து, தூவியஞ் சிறைப்புட் குலம்பயின் றிடுமோர் சூழி யின் கரைக்கணுற் றனனே. (உஎ)

முறுகிய சினக்கோ ளரிவயப் புலிவெம் மும்மதக் கரடமால் யானை, குறுகு மென்றஞ்சிப் பாழிநீர்ச் சூழிக் கோட்டுறு கூவிளங் கோட்டி, லுறவ னென்றே றிச் சுரிகையான் மறைக்கு முலவைக ளரிந்தரிந் தொ துக்கி, மறுகிய மனத்தா னேனமான் மரைகள் வரு மென வரவுபார்த் திருந்தான். (உஅ)

வடிசெய்து வகுத்த வைதிகசைவ வழிமொழி வழாமன்மந் திரத்தாற், படியின் முற்பகலோர் முனி வரன் பூசை பண்ணிய தெண்ணிய படியே, கடியவெந் தொழிற்செய் கிராதனுங் காணன் கவடுவிட் டுயருமா லூரத், தடியினுக் கருகிற் புராதன விலிங்க மமர்ந்தினி திருந்ததொன் றன்றே. (உகூ)

(உஎ) துருவி = தேடி; அயில் அம்பு = கூரியஅம்பு; தடி = மாமிசம்; தூவி = மிருதுவாகியமயிர்; அம்சிறை = அழகியசிறகு; பயின்றிடும் = தங்கும்; சூழி = குளம்.

(உஅ) முறுகியசினம் = முதிர்ந்தகோபம்; வயம் = வெற்றி; கரடம் = மதச்சுவடு; குறுகும் = வரும்; பாழிநீர்ச் சூழி = அகன்று நீர்பொருந்திய குளத்தின்; கோட்டு று = கரையிலுள்ள; கூவிளங்கோடு = வில்வமரக் கிளை; சுரிகை = கத்தி; உலவை = கொம்புகள்; மறு கிய = பொங்கிய.

(உகூ) மொழிவழி = சொல்லுகிறநெறி; வழாமல் = தவறு மல்; படியின் = பூமியில்; முற்பகல் = முன்நாளில்; முனிவரன் = ஓர் இருடி; கடிய வெம்தொழில் = மிக்க கொடுந்தொழில்; கிராதன் = வேடன்; மாலூரம் = வில்வ மரம்.

அன்றரா னிரவென் றறிந்திலன் ஞெருடுக்கு மம்
பிடை தடுக்குமென் றிழிந்து, தன்றடங் கையா லெறீந்
தனைத் தழையுந் தனியிருந் திடிற்றுயில் வருமோ
யென்றது விலக்கி யிருட்பொழு தகற்றற் கெண்ணி
னன் கொய்துவிட் டெறிந்த, மென்றழை முழுதும்
பழுதிலவ் விலிங்க வியன்முடி மீதுவீழ்ந் ததுவே. (௬௦)

குறுந்துளித் திவலைப் பனிநனி மூழ்கிக் கொடும்
பசிக் கருந்திடா தொழிந்தூ, ணுறுந்துயி லறந்து
புராரிசந்நிதியி லூறின்மா லூரவெண் டழையாற், றெ
றுந்தழ னுதற்கட் சிவநிசி யதனிற் சிவார்ச்சனை புரிந்து
வெந் தீமை, யறுந்தவ முடையோ ரொத்தனன் வே
டன் கொடிச்சிதன் றிறமினி யறைவாம். (௬௧)

வேறு.

உன்ன ரும்பெருங் காட்டினில் வேட்டமே லுற்றான்
வன்ன வார்சிலை வலவனென் னுயிர்த்துணை மகிழ்ந
னின்னமெய்திலனென்கொலோ வெனமனத்தெண்ணி
யன்னமென்னடைக் குறத்திகண்டுயின்றிடா தரற்றும்.

---

(௬௦) தனியிருந்திடில் = ஒன்றியாயிருந்தால்; துயில் = நித்திரை; வியன்முடி = பெருமையுள்ள முடி.

(௬௧) குறுந்துளித் திவலை = சிறியதுளிகளாலாகிய சொட்டு, (இருபெயரொட்டுப் பண்புத்தொகை); பனி = பனியில்; நனிமூழ்கி = மிகநனைந்து; உறும்துயில் = அடையும் நித்திரை; புராரி = திரிபுரமெரித்தோன்; ஊறு இல் = குற்றமற்ற; வெண்தழை = தூய்மையாகிய இலை; தெறும் = அழிக்கின்ற; கொடிச்சி = வேடச்சி.

(௬௨) வேட்டமேல் = வேட்டைத் தொழிலில்; வன்னம் = அழகு; வலவன் = வல்லவன்; அரற்றும் = அழுவாள்.

தஞ்ச மொன்றிலன் றமியனாய்ச் சென்றனன் றகைசா
லுஞ்ச னக்கிரி யரிமென வுருத்தெதி ரடர்ந்து
மஞ்செ னப்பொழி மதசதுப் பதத்துணை மருப்புக்
குஞ்ச ரக்குலங் கொன்றதோ வென்றுளங் குலையும். (௩௩)

கரிய நீண்மயிர்க் கூருகிர்க் கவிழ்தலைக் கரடி
சரியில் வந்துயிர் கவர்ந்ததோ வென்னமெய் தளரு
முரிய வெஞ்சினக் கொடுவரி கறுத்தொறுத் துடலைப்
பெரியவாயினிற்பெய்ததுகொல்லெனப்பிதற்றும்(௩௪)

அளையு றும்பணி விடங்கலுழ்ந் துமிழ்ந்திடு மகல்வாய்த்
துளையெ யிற்றினே றுண்டது வோவெனச் சோருங்
கிளையு டன்றிரி கரிவழிப் பகையதாங் கிளர்வா
லுளைம டங்கலா லுயிருலந் தனன்கொலென் றுன்னும்.

---

(௩௩) தஞ்சம் = ஆதரவு; தமியனாய் = ஒன்றியாய்; தகைசால் = பெருமை நிறைந்த; உருத்து = கோபித்து; மஞ்சுஎன = மேகத்தைப்போல; சதுப்பதம் = நான்கு பாதம், (சதுர் பாதம் என்னும்வடமொழியின் றிரிபு); குஞ்சரம் = யானை; உளம்குலையும் = மனம் நடுங்குவாள்.

(௩௪) சரி = வழி; உரியவெஞ்சின = கோபத்தினை உரிமையாகவுடைய; கொடுவரி = புலி; கறுத்து = கோபித்து; ஒறுத்து = வருத்தப்படுத்தி.

(௩௫) அளை = வளை; பணி = பாம்பு; கலுழ்ந்து = பெருகி; துளையெயிற்றின் = (விஷம்வெளிப்படும்) துவாரமுள்ள பல்லினால்; எறுண்டதோ = கடிபட்டனனோ; கிளையுடன் = தன்னினத்தோடு; கிளர்வால் = விளங்கும் வால்; மடங்கல் = சிம்மம்; உயிர் உலந்தனன் = உயிரிழந்தனன்.

நாட்ட மன்னநின் புதல்வர்வெம் பசியினு னலிந்து
கோட்ட முற்றனர் கொழுந்தசை கோற்கொளீஇ வெதுப்பி
யூட்ட வந்திலே னென்றனக் குரிமையா மெனது
வாட்ட நோக்கிலை யென்கொல்செய் தாயென மயங்கும். (கசு)

என்றி ருந்தருந் துயருழந் திடைக்கொடிக் கொடிச்சி
குன்றி யின்வடங் கிடந்தொளிர் கொங்கைகள் குளிப்ப
வென்றி யங்கதிர் வேல்விழி நீருகுத் திடும்பை
யன்றி யொன்றில ளயர்ந்தன ளிருந்திடுமமையம். (கஎ)

பரவி யந்தணர் வந்தனை புரிந்துமுன் பழிச்ச
விரவி யம்புயம் பொற்கதிர்க் கரங்களால் விரித்துப்
புரவி யேழ்நுகம் பூட்டிய பொற்றடந் தேரூ
ரிரவி யுங்குண புலத்துய ரிரவியி லெழுந்தான். (கஅ)

புலவு வாய்கம ழங்குலன் றினந்தொறும் புரிந்த
வலகில் பாவவல் லிருள்களைத் துரந்தகற் றுதலா
னிலவு நீறணி நீள்புரி சடைச்சிவ னிசியு
முலகி னீடிருட்கடிபகற் கதிருமொத் துளதால். (கக)

(கசு) நாட்டம் அன்ன = கண்ணையொத்த; கோட்டம் = தளர்ச்சி; கோற்கொளீஇ=கொம்பிற்கோத்து.

(கஎ) கொடிச்சி = வேடச்சி; குன்றியின்வடம் = குன்றி மணிமாலை; வென்றி = வெற்றி; இடும்பை = துன்பம்; அமையம்=வேளை.

(கஅ) அந்தணர்பரவி=பிராமணர்கூடி; முன்வந்தனை புரிந்து = எதிரில் நின்றுவணங்கி; பழிச்ச = துதிக்க; விரவி=தோன்றி; பொன்=அழகிய; புரவிஏழ்= ஏழுகுதிரை; நுகம்பூட்டிய=நுகத்தடியிற் கட்டிய; இரவியில்=உதயகிரியில்.

(கக) அலகில்=அளவில்லாத; இருள்கடி=இருளைத்துரத் தும்; பகற்கதிர் = பகற்காலத்திற் குரிய சூரியன்; இது சிவராத்திரிக்கும் சூரியனுக்குஞ்சிலேடை.

மேவி ளங்கதிர் விரிந்திட விடிந்ததன் பின்னர்
ஏவி ளஞ்சிறு மீன்விழி யெயிற்றிதன் மைந்த
னாவி ழந்தகன் றுவரென் றங்குல னினைந்து
கூவி ளம்பணைநின் றிழிந்தனன்வழிக்கொண்டான். (௪0)

ஈறி லாத்துய ருற்றிடு மெயிற்றிதன் னிதயந்
தேறி வேடனைத் தேடுவா னடந்துறு செப்பத்
தூறி லான்வரல் கண்டெதிர்ந் தோகையிற் றழுவி
மாறி லாதுயர் புற்குடின் மேவினர் வந்தார். (௪க)

வந்து செந்தினை மாவுடன் வம்பமர் வரைத்தேன்
முந்து புற்பத மேவுநீ வாரவெண் சூர
னந்து நற்றசை நறவுக ளொடொறு நாடித்
தந்து மற்றவ ளோடுபன் னுளவண் சார்ந்தான். (௪உ)

முருந் தியற்றரும் பற்கழன் றிடநரை முதிர்ந்திட்
டருந்து தற்கரி தாயுடல் பலங்கெடு மந்நாட்

(௪0) வாவு = தாண்டிச்செல்லுகிற; ஆவிழந்த கன்று = பசுவையொழித்த கன்றினைப்போல; கூவிளம் பணை = வில்வமரக்கிளை; வழிக்கொண்டான் = பிரயாணப்பட்டான்.

(௪க) உறு செப்பத்து = அடைந்த வழியில்; ஊறிலான்வரல் = கெடுதியில்லாதவனுய்வரக்கண்டு; குடில் = குடிசை; மேவினர் வந்தார் = விரும்பி வந்தார்.

(௪உ) வம்புஅமர் = வாசனைபொருந்திய; புல்பதம் = புல்லரிசிச்சோறு; நீவாரம் = நீவாரமென்னும் புல்லரிசியினுலாகிய; வெண்சூரல் = வெண்மையாகிய சோறு; நந்து = மிகுந்த; நல்தசை = மாமிசம்; நறவு = வாசனையுள்ள; கள் = மலர்த்தேன்; நாடி = தேடி; சார்ந்தான் = சேர்ந்திருந்தான்.

பெருந்திரைக்கடற் கடுவுழற் பெரும்பிணி பிணிக்க
வருந்திமற்றவன் சடந்துறந் திறந்தனன் மன்னோ. (சங)

வேறு.

சூலமொடு வாளிசிலை தோமர முலக்கை
பாலமயில் வேல்விசிறு பாசமவை கொண்டே
வாலமதி போலெயி றிலங்கவட வைத்தீ
யாலநிகர் தூதுவர்க ளவ்வயி னடைந்தார். (சச)

பற்றினர் புயத்துணைகள் பாசமத னாலே
சுற்றின ரடித்தனர் துடித்திட விடித்துக்
குற்றின ருடற்சவி குறைத்தவச மேன்மே
லுற்றிட வுதைத்துவழி யொல்லைபட ரெல்லை. (சரு)

மங்கையொரு பங்கன்மழு மான்மறி மரைப்பூஞ்
செங்கையி லிருத்திறை சிலாதரன் மகற்கூய்ச்
சங்கைபெறு மங்குல னனுஞ்சவ ரணைத்தங்
மங்கைகொள் கயிற்றினிடை யாத்தியம தூதர். (சசா)

(சங) முருந்து = பட்சிகளினிறகின் அடிபோன்ற; இயல் தரும் = அழகுபொருந்திய; அருந்துதற்கு = சாப்பிடு தற்கு; கடுவுறழ் = விஷத்தையொத்த; பிணிக்க = பற்ற; சடம் = தேகம்.

(சச) தோமரம் = எறிந்து கொல்லும் ஆயுதம்; உலக்கை = இருப்புத்தண்டம்; பாலம் = மழு; அயில்வேல் = கூர் மையான வேலாயுதம்; வால மதி = இளஞ்சந்திரன்; ஆலம் = விஷம்; அவ்வயின் = அவ்விடத்து.

(சரு) இடித்து = மோதி; சவி = பெலம்; அவசம் = அறிவழி தல்; ஒல்லை = சீக்கிரம்; வழிபடர் = வழிச்செல்லுகிற; எல்லை = பொழுது.

(சசா) மான்மறி = மான்கன்று; சிலாதரன்மகன் = சிலாதர முனிவரது புதல்வராகிய நந்திதேவரை; கூய் = கூப் பிட்டு; சங்கை = பெருமை; அங்கை = அழகிய கை; யாத்து = கட்டி.

சென்றனர் விலக்கியொளிர் செம்பொனணி தேர்மே
னின்றவனை யேற்றியொ ரிமைப்பி னிவணெய்தக்
குன்றன புயத்துவலி குன்றமரு வாரை
வென்றகண நாதரை விடுத்திடுதி யென்றான். (சஎ)

நாதன்விடை கொண்டுகண நாதரை யழைத்தே
யேதமறு மங்குலனை யின்றுகொடு போகுந்
தூதர்தமை வென்றுவினை விற்சுடர் விமான
மீதினி லிருத்திஇவண் மேவவிடு கென்றான். (சஅ)

நந்திமொழி கொண்டுகண நாதர்கள் விரைந்து
வந்தியம தூதரை வருத்திவலி செய்தே
முந்தியவன் மொய்ம்புகள் முரிக்கவிசி பாசஞ்
சிந்திமணிமொய்த்தொளிகொ டேரின்மிசைவைத்தார்.

யாவர்பணி கொண்டிவ ணெதிர்ந்திது புரிந்தீர்
போவதிவ னெங்ஙனமொர் புண்ணிய மிலாதான்
மேவவுவ னுமினி விடோமென வெகுண்டு
காவல்புரி காலபடர் காய்ந்தெதிர் கதித்தார். (நு0)

உங்கடலை வன்றன தூரத்திடை யுதைத்தோ
னெங்கடலை வன்பிணியி தென்றுமுச லத்தாற்

(சஎ) இன்று=இப்பொழுது; இமைப்பில் = இமைப்பொழுதில்; எய்த=அடையும்படி; மருவார்=பகைவர்.

(சஅ) ஏதம் அறும்=குற்றமற்ற; மேவ=அடைய.

(சகூ) வலிசெய்து = பலாத்காரமாய்; மொய்ம்புகள்=புஜங்கள்; முரிக்க = நொறுக்க; விசி = கட்டி; சிந்தி= அறுத்து; மொய்த்து=அடர்ந்து.

(நு0) பணி=ஏவல்; உவன் மேவ=அவன்அடைய; எதிர் கதித்தார்=கோபித்து எதிர்த்தார்.

செங்கடலை நேர்குருதி சிந்தவெம தூதர்
தங்கடலை மோதினர் திரித்திவ ரகன்றார். (ருக)

வென்றிதரு வானவர் விரைததருவி னற்பூப்
பொன்றிகழ் செழுந்துணர் பொழிந்தனர்கள் வாழ்த்த
லன்றியர மங்கையர்க ளங்கிரு மருங்கு
நின்றிணைகொள் வெண்கவரி நேசமொடு வீச. (ருஉ)

விண்டல முதிக்குமதி வெண்குடை நிழற்றப்
பண்டரு மிசைப்பனுவல் கந்தருவர் பாடக்
கொண்டலிடி யொத்ததிர் குரற்குட முழாநற்
றொண்டகம தோடமர துந்துபி முழங்க. (ருங)

போயமலன் முன்புக விடுத்தபொழு தெம்பா
லேயகண மாயிவ ணிருந்திடுதி யென்றே
நேயமிக வைத்தெழில்கொ ணெற்றிவிழி யுற்ற
நாயக னுரைத்துவர நல்கின னயந்தே. (ருச)

(ருக) உரத்திடை = மார்பினிடத்து; முசலம் = இருப்புல க்கை; கடலைநேர் = சமுத்திரத்தை யொத்த; செங்கு ருதி = சிவந்த இரத்தம்.

(ருஉ) பொன்திகழ் செழுந்துணர் = பொன்போல் விளங் கும் அழகிய கொத்துகளாய; நற்பூப்பொழிந்தனர் = நல்ல பூக்களை இறைத்தனர்; அரமங்கையர் = அரம் பா ஸ்திரீகள்; இணைகொள் = இரட்டையாகிய.

(ருங) விண்தலம் = ஆகாசமாகிய இடத்தில்; நிழற்ற = நிழ லைச்செய்ய; பண்தரும் இசைப்பனுவல் = இராகத் தோடுங்கூடிப் பாடுகிறபாட்டுகள்; அதிர்குரல் = பே ரொலி; குடமுழாம் = ஓர்வாத்தியம்; தொண்டகம் = ஓர்வாத்தியம்; அமரதுந்துபி = தெய்வ வாத்தியங்கள்.

(ருச) நயந்து = விரும்பி.

செங்கணெயி னன்கயிலே சேர்கணம தாகி
யிங்கணமர் வுற்றபி னருந்துயர்கொ டூதர்
திங்கண்முடி யானடியர் செய்ததிற மெல்லாம்
வெங்கண்மற லிக்குமுன் விளம்பவிரை வுற்றார். (நரு)

பாசமெறி தாரைதொடர் பாறுபடி சூலம்
வீசுசுடர் வேன்முசல மின்னுகதை நன்று
ராசமுட னங்குசம தங்கையிரு நான்கிற்
றேசுற வுரத்தினிடை செந்தொடை விளங்க. (நசா)

எற்றிய கடற்றிரை யிருத்திய தெனக்கார்
முற்றிநெளி வுற்றபுரு வத்துணை முரிப்புப்
பெற்றிடி யெனக்குரல் பிறங்குபில வாயும்
பற்றிய தழற்குநிகர் பங்கியும் விளங்க. (நஎ)

வாதகப பித்தமுத லானபிணி மற்று
மேதமிகு சொற்பணி யியற்றியப னிற்பப்

(நரு) செங்கண்=சிவந்தகண்களையுடைய; எயினன் = வேடன்; தூதர்=இயம படாள்; வெங்கண்=கொடுமை.

(நசா) எறிதாரை = எறிந்து கொல்லுஞ் சக்கரம்; தொடர் பாறு=நாற்றம்பற்றித் தொடர்ந்துவருகிற பருந்தானது; படி=அடையும்படியான; சூலம்=சூலாயுதம்; முசலம்=இருப்புலக்கை; நாராசம்=இருப்புக்கம்பி; (அது என்பது பகுதிப்பொருள் விகுதி) தேசுற=பிரகாசிக்க; செந்தொடை=சிவந்தமாலை.

(நஎ) எற்றிய கடல் திரை=கடலினது கரையை மோதுகின்ற அலையை; இருத்தியதென = வைத்ததுபோலும்; கார்முற்றி = கறுப்பு மிகுந்து; நெளிவுற்ற=வளைந்த; முரிப்புப்பெற்று = (புருவத்தை) ஏற்றுந் தன்மைபெற்று; பிலவாயும்=குகைபோன்ற வாயும்; பற்றிய=எரிகிற; பங்கி= தலைமயிர்.

பாதகர் வெருக்கொடு பதைத்திட வருத்துந்
தூதரிரு பக்கமுறை சூழ்றினர்கள் சூழ. (நிஅ)

சாலமொழி மாதர்பல சாமரை யிரட்ட
வாலமதி யாமென வளைந்தெயி றிலங்க
நீலவரை போனிதி நெடுந்தவி சிருக்குங்
காலனிரு காலிலிவர் கைதொழுது வீழ்ந்தே. (நிகூ)

மூடனை யறத்திற முயன்றறித லில்லா
வேடனை வடத்தினிடை வீக்கிவரு காலைப்
பாடனை வருக்குமிது பண்ணிவள ரொற்றைக்
கோடனை யளித்தவர்க ணங்கள் கொடுபோனர். (கூ0)

என்றிவை யுரைத்திட வெயிற்றித ழதுக்கித்
தென்றிசை நகர்க்கிறை திரண்டெழ வளர்ந்த
குன்றின்மிகை பெற்றிடு புயத்துணை குலுங்க
நன்றிது வெனத்தனி நகைத்துட னெழுந்தே. (கூக)

சஞ்சரிக மொய்த்துமுர ருர்களசை யப்போ
பஞ்சன வரைக்குநிக ரானபக டேறி

(நிஅ) சொற்பணி = சொல்லுகிற ஏவல்; அயல் = பக்கத்திலே; பாதகர்=பாவிகள்; வெருக்கொடு=பயங்கொண்டு; முறை=முறைப்படி.

(நிகூ) சால = நிறைந்த; வாலமதி = இளம்பிறை; நீலவரைபோல் = நீலமலையை யொத்து; எயிறு = பல்; நிதி=பொன்.

(கூ0) வடம் = பாசம்; வீக்கி=கட்டி; இதுபாடு = இந்தத் துன்பத்தை; அனைவருக்கும் = எங்கள் எல்லோருக்கும்; ஒற்றைக்கோடன்=ஒற்றைக் கொம்பையுடைய விநாயகர்.

(கூக) குன்றின்மிகை = குன்றைப்போன்ற; தனிநகைத்து=ஒப்பின்றிச் சிரித்து.

விஞ்சிய கணக்கரொடு வீரர்பலர் சூழ
மஞ்சன மிடற்றிறைவன் வாழ்கயிலை வந்தான். (சஉ)

வேறு.

அரியமா தவத்தோ ருள்ளமொத் துயர்ந்தோ ரணுவினுங் களங்கமொன் றின்றிக், கரியமா முகில்கள் படிதடஞ் சாரற் கயிலையிற் கனகமா மணியா, லுரிய நான் முகத்து விதிவிதிக் கரிய வொளிதிகழ் கதிர்களா யிரமும், விரியுமா தவரோர் கோடிவந் துதித்து விளங்கல்போற் றுளங்குமண் டபத்தின். (சங)

ஐம்படை தரித்த தண்ணறுந் துளபத் தண்ணலு மண்முதற் படைத்த, வம்படை கமலத் தவிசுறை யயனும் வரைச்சிறை யறுத்திடும் வசிச்சம், பம்படை யெனக்கொள் பாகசா தனனும் பன்னிரண் டருக்கரு மொற்றைக், கொம்படை களிற்று முகம்படைத் தருளுங் குடவயிற் றைங்கரக் கோவும். (சச)

(சஉ) முரல் தார் = வண்டுகள் ரீங்காரம் செய்து வசிக்கிற மாலை; விஞ்சிய = மேம்பட்ட; மஞ்சு அன = மேகம் போன்ற.

(சங) ஓர் அணுவினும் = ஒருஅணுவளவேனும்; முகில்கள் படி = மேகங்கள் தங்கும்; விதி = பிரமனால்; விதிக் கரிய = படைத்தற்கரிய; கனகமாமணியால் = பொன்னாலும் இரத்தினங்களாலும்; ஆதவர் ஓர்கோடி = கோடிசூரியர்; துளங்கும் = பிரகாசிக்கும்.

(சச) ஐம்படை = ஐந்து ஆயுதம், அஃதாவது சங்கு, சக்கரம், வாள், கதை, சாரங்கம் என்னும் ஐந்துமாம்; வம்பு அடை = வாசனையுற்ற; தவிசு = பீடம்; சிறை = சிறகு; வசி = கூர்மைபொருந்திய; சம்பம் = வச்சிராயுதத்தை; படையெனக்கொள் = ஆயுதமாகக்கொண்ட; பாகசாதனன் = இந்திரன்; அருக்கர் = சூரியர்; கொம்பு அடை = கொம்பையுடைய.

வார்பெறு கலச முலைக்குறக் கொடியை மணந் தருண் மகிழ்நனீற் கீடப்பநீ தார்பெறு புயத்தோனீ ருரகன் சினக்கே சரிமுகன் றகுவர்கட் கிறையாஞ், சூர்பெறு வரங்க டொலைத்தவை வேலோன் றோகை மே வொகரமூர்ந் தருள்வோன், கூர்பெறு முட்டாட் செந்நிறக் குடுமிக் கோழிசேர் கொடிக்கரக் குகனும்.

உலகமுற் றுருடுங்குங் காலையி லெழுந்த வூழி வெந் தீயென வுருத்துத், திலகமுற் றிடுவா ணுதன் மறைக் கொடிதோள் சேர்ந்திடுஞ் சிறுவிதி விதியிற், கலகமுற் றிகலிப் புரிமக மரைக்காற் கணத்தினிற் சிதைத்தவன் பிறைபோ, லிலகவிட் டெறிக்குங் கதி ரெயிற் றலைகை யேறிடும் வீரபத் திரனும். (சுசு)

புடத்திடு பசும்பொற் குழைகிழித் திடுங்கட் பூரணை புட்கலை தரள, வடக்குட முலைக ளுழுதுழு துழக்கு மார்பினன் மாலென முழங்கி, முடக்கிய தடக்கை நீட்டிமூச் சொடுக்கி முரிதிரைக் கடலெலா முகந்துள், ளடக்கியே யுமிழ்வெள் ளாணைமே லேறு மரிகரகுமார னவனும். (சுஎ)

(சுரு) கேசரிமுகன் = சிங்கமுகன்; தகுவர் = அசுரர்; சூர் = சூரபத்மன்; வைவேல் = கூர்மையுள்ள வேலாயுதம்; தோகைமேவு = இறகையுடைய; ஒகரம் = மயில்; முள் தாள் = முள்போன்ற நகங்களுள்ள கால்.

(சுசு) திலகம் = நெற்றிப்பொட்டு; மறைக்கொடி = வேத வல்லி (வேதவல்லியென்பவள் தக்கன் மனைவி); சிறு விதி = தக்கன்; விதியில் = விதிவலியால்; இகலி = பகைத்து; இலக = விளங்க; விட்டு எறிக்குங் கதிர் = கதிர் விட்டுப்பிரகாசிக்கும்.

(சுஎ) புடத்திடும் = தீயிலிடும்; பூரணை, புட்கலை = ஐயனார் மனைவியர்; உழக்கும் = கலக்கும்; மால் = மேகம்; முடக்கியதடக்கை = நீண்ட துதிக்கை.

வள்ளெனக் குரைக்குங் கரியநா யூரும் வடுகனு மாருதத் தேவு, மள்ளலஞ் சேற்றுக் கருங்கடற் கிறையு மக்கினிக் கடவுளு மளகைக், கெள்ளறுந் தலைமை பூண்டபிங் கலனு மிருஞ்சிறைச் சுரும்புபாட் டயர்ந்து, கள்ளருந் திடுந்தார் நிருதியுஞ் சுருதி கருதுமீ சானனென் பவனும். (சுஅ)

மேவரு விரிவெண் டிரைக்கட லேழும் விலங்கலின் குலங்களோ ரேழும், பூவருங் கங்கை முதனதி யேழும் பொற்புறு கற்பக நிழல்வாழ், தேவரு முயர்கந் தருவரு நித்த சித்தரு முத்தரா முனிவர்,யாவருஞ் செங்கை குவித்தா கரவென் றிருமருங் கினுந்திரண் டேத்த. (சுகூ)

பாரதன் மேலா மண்டகோ ளகைபொற் பருப்பதந் திருப்பவும் வல்ல, சாரதக் குழுவுங் குழிவிழிப் பேழ்வாய்த் தளர்நடைப் பேய்களுஞ் சார, நாரதன் மகதி யாழ்நரம் புளர நந்திகைப் பிரம்பெடுத்துலவக், காரதன் வடிவு பெறுநறுங் கூந்த லரம்பையர் கவரிகா லசைப்ப. (எ0)

(சுஅ) வடுகன்=வயிரவக்கடவுள்; மாருதத்தேவும் = வாய்வு தேவனும்; அள்ளல் அம் சேறு = குழைந்த சேறு, (அம்சாரியை) இது இருபெயரொட்டு; கடற்கு இறை= வருணன்; எள்ளறும் = இகழ்வற்ற; பிங்கலன் = குபேரன்; இரும்=பெரிய; சுரும்பு=வண்டு; பாட்டயர்ந்து=பாடி; தார்=மாலையை யுடைய.

(சுகூ) மெவஅரும்=கடத்தற்கரிய; விலங்கல்=மலைகள்; பூவருங்கங்கை=பூமியில்வந்தகங்கை; நதிஏழு=சப்தநதிகள், அவை கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நிர்மதை, சிந்து, காவேரி என்பவைகளாம்.

கொலைபயி னயனத் தஞ்சன மறுவுங் குளிர் மொழி யமிழ்தமூங் குலவு, மலைமகள் வதன முழும திக் குடைந்து வாளெயிற் றரவினுக் கிடைந்து, கலை வள ராம லுடல்குறைந் தொதுங்கிக் கடுக்கைமா லூர மார் கபித்த, நிலைபெறு சடைக்காட் டலைநதிக் கயல் வெண் ணிலவுகான் றிளமதி கிடப்ப. (எக)

கறங்கிடுந் திரைநீர்க் கங்கையஞ் சடையிற் கட் செவிக் கடும்பணி சீற, வுறங்கிட றவிர்ந்து கரநக நுதி யா லுரித்துமுன் மருங்குற வுடுத்த, மறங்கிளர் தமற் கட் கொடுவரிப் புலித்தோ லுடையனுங் கிடுந்தொறு மருண்மா, னிறங்கிட வெருவிக் குதித்தெழுந் தற்ற நோக்கியங் கிடக்கரத் திருப்ப. (எஉ)

(எ0) பார் அதன் மேலாம்=உலகத்தில் மேலாகிய; அண்ட கோளகை=வானவட்டம்; பொன்பருப்பதம்=மேரு மலையையும்; சாரதக்குழுவும் = பூத கூட்டங்களும்; மகதியாழ்=யாழ்வகை நான்கினொன்று, அந் நான்கா வன, பேரியாழ், சகோடயாழ், மகதியாழ், செங் கோட்டியாழ் என்பனவாம், மகதியாழை மகரயாழ் எனவும் வழங்குவர்; உளர=கையாற்றடவி வாசிக்க; கார் அதன்=மேகத்தினது.

(எக) மறுவும் = களங்கமும்; உடைந்து=தோற்று; வாள் எயிற்று அரவு=பரமேசுவர ரணிந்துள்ள வாள்போ ன்ற பற்களையுடைய பாம்பு; இடைந்து = பயந்து; மாலூரம்=வில்வம்; ஆர்=ஆத்தி; கபித்தம்=விளா; வெண்ணிலவு=வெள்ளிய வொளி; கான்று=வீசி.

(எஉ) கறங்கிடும்=ஒலிக்கும்; கட்செவிக்கடும்பணி = கண் ணையே செவியாகவுமுடைய பாம்பு; நுதி = நுனி; மருங்கு = இடை; மறங்கிளர் = வீரம்பொருந்திய; கொடுவரி = வளைந்தகோடுகள்; அனுங்கிடுந்தொ றும்=அசையுந்தோறும்; மருண்மான்=மருளுகின்ற மான்; வெருவிஇறங்கிட = பயந்து இறங்குதற்கு; அற்றம்=சமயம்.

கோல்வரை நிகர்க்கும் வரிநெடுந் தடங்கட் குவி
தீனத் திரதிதோ டோய்ந்த, சேல்வரை துவசச் சித்தச
னெரியத் திறந்தகண் டிருநுதற் றிகழக், கால்வரை
யளித்தற் கரிதென விரிந்த கடுநுகர் களனும்வித்
துரும, மால்வரை யருவி யென்னமுப் புரிநூல் வயங்
குமார் பழுமிக விளங்க. (எ௩)

தூய செந் தமிழ்ச்சுந் தரன்றனக் காகத் தூது
போய்ப் பரவைபா னடந்து, மேயவன் றிறல்சே ரந்தக
னுக விலங்கன்முன் கலங்கிட வுதைத்துச், 'சேயசெங்
கமல மெனச்சிறந் தன்பர் சிந்தையம் போருக மலரக்,
காய்கதிர் விரிக்குஞ் செழுமணிச் செம்பொற் கனை
கழற் றுளிணை கவின. (எச)

சும்மையார் கலிசூ ழுலகினிற் புகலி தோன்றிய
கவுணியச்சேய்க்குக், கொம்மைவார்முலையா ரமுதமுத்

(எ௩) கோல் வரை=சக்கரவாளகிரி; வரி=செவ்வரி; நெடுந் தடங்கண் = நீண்டுவிசாலித்த கண்; சேல்வரை = மீனெழுதிய; சித்தசன்=மன்மதன்; நுதல்=நெற்றியில்; கால்வரை = கால அளவை; அளித்தற்கு= கூறுதற்கு; களனும்=கழுத்தும்; வித்துரும மால் வரை=பெரிய பவளமலை; அருவியென்ன=நதிபோல; மார்பம்=மார்.

(எச) தூது நடந்துபோய் = தூதனாய் நடந்துபோய்; மேய=பொருந்திய; வன்திறல்சேர்=மிக்க வலிமையுள்ள; ஆக விலங்கல் = சரீரமாகிய மலை; கலங்க= நடுங்க; சேய=அழகிய; காய்கதிர் விரிக்கும்=(சூரியகிரணங்கள்போலும்) பிரகாசிக்கும் கிரணங்கள் எழும்; செழுமணி=அழகியமணிகள் பதித்த; கவின =அழகுசெய்ய.

தமிழுங் குழைத்துமுன் குடித்திடப் பருக்கு, மம்மை யோர் பாக மாகவிற் றெவர்க்கு மருள்குளித் திடும்விழி ரப்பி, வெம்மையார் மடங்க லாசனத் தெமையாள் விமலனங் கினிதுவீற் றிருந்தான். (௭௫)

முந்தைநாட் களினித் தன்மையி னிகழ்ந்த முழு வது நினைந்துநீண் முடிக்கிட், கிந்தைமா விந்த நிகர்த் தகோ புரஞ்சேர் கீழ்த்திசை வாயில்போய் நந்தி, யெந் தையே வலிஞ லடுந்திறற் கால னிருகர மிருசர ணந் தன், சிந்தைகம் பிதத்தோ டெம்பிரா னிருக்குந் திருச் சபை யூடுபோய்த் துதிப்பான். (௭௬)

பொங்கர விதழிப் புதுமலர் புனைந்த புரிசடைப் புனிதவம் புயத்தோன், கங்கர கங்கா தரகர வரையுங் காய்சினத் தரக்குமுன் னுரித்த, துங்கர வியனன்

(௭௫) சும்மை = ஒலியினையுடைய; ஆர்கலி = சமுத்திரம்; கொம்மை = இளமை; ஆரமுது = அருமையான அமு தம்; ஓர்பாகமாக = ஓர்பா லமர்ந்திருக்க; விழிபரப்பி = கண்ணால் நோக்கி.

(௭௬) நீள் முடி = நீண்ட சிகரங்களையுடைய; மாவிந்தம் = பெரியவிந்தமலை; அடுந்திறல் = கொல்லும் வல்லமை யுடைய; இருகரம் = இருகையும்; இரண்டு சரணம் = இரண்டு காலும்; கம்பிதத்தோடு = நடுக்கத்துடன்.

(௭௭) பொங்கு அரவு = சீறுகின்ற பாம்பு; இதழி = கொன் றை; அம்புயத்தோன் = பிரமனது; கம் = கபால முடைய; கர = கையனே; கரவரை = யானை; தர க்கு = புலி; துங்க = பரிசுத்தமானவனே; ரவி = சூரி யன்; அனல் = அக்கினி; மதி = சோமன்; முக்கண் ஆம் = மூன்றுகண்களாகவுடைய; சுர = தேவனே; நரைவிடை வரை = வெளுத்த இடபமெழுதிய; துவச = கொடியையுடையவனே; திகம்பர = திசைகளை வஸ்திர மாகத் தரித்தவனே.

மதியமுக் கண்ணுஞ் சுரநரை விடைவரை தூவச, சங்கப
விமல திகம்பர வும்பர் தலைவநின் றுணைமலர் போற்றி. ()

மன்றன்மைக் கூழை மலைமகட் புணர வருத்துதி யென்றசொன் மரூஉம, லன்றம ரருக்காச் சென்றுடற் றுவனென் றங்கணை யைங்கணைக் கிழவன்,பொன்றமத் தகக்கட் புலக்கனல் கொளுத்திப் புன்னகை புரிந்து முப் புரமுங், குன்றவிற் கனகக் குன்றவிற் குனித்த குழகநின் குரைகழல் போற்றி. (எஅ)

ஒருமலை யெடுத்த விருந்திற லரக்க னுரனுடைந் துட்கமுன் னூன்றிப் , பொருமலைச் சலதி கடைந்திடு மந்நாட் புத்தமு தத்துட னுதித்து, வருமலைப் பழித்த குழற்றிரு மணாளன் மலர்விழிப் போதணிந் தடியார், கருமலை வகற்றி யின்பவீ டளிக்குங் கனைகழற் றுணை மலர் போற்றி. (எகூ)

(எஅ) மைக்கூழை=கரியகூந்தல்; மலைமகள்புணர = பர்வத ராஜன் புத்திரியாகிய பார்வதிதேவியை மணக்க; வருத்துதி=வருத்தப்படுத்து வாயாக; உடற்றுவன்= போரிடுவேன்; அங்கு=அவ்விடத்து; அணை=அடைந்த; ஐங்கணைக்கிழவன் = மன்மதன்; பொன்ற = அழிய; மத்தகக் கட்புலன் = நெற்றிக்கண்; கனல் கொளுத்தி=தீயாலெரித்து; வில்=ஒளியுள்ள; கனகக் குன்றவில்=தங்கமலை (மேருமலை) யைவில்லாக; குனித்த=வளைத்த; குழக=என்றும் இளமையுடையவனே; குரை=ஒலிக்கின்ற; கழல் = வீரகண்டையைத் தரித்த திருவடி, அன்மொழித்தொகை.

(எகூ) இருந்திறல் = மிகுந்தவலிமை; உரன்உடைந்து=வலிமைகெட்டு; உட்க = தளர; முன் = முன்னாளில்; பொரும் அலை = கரையைமோதுகின்றஅலை; அலை (அல்லை)=இருளை, அல்லையென்பதை அலையெனல் இடைக்குறை; பழித்த = நாணுறச்செய்த; திரு = இலக்குமி; கரு=பிறவி; மலைவு=துன்பம்.

வேறு.

எனப்பல துதிகள் கூறி யீசனை யிறைஞ்சி யேத்தி, மனப்படு மச்ச நீங்கி வாய்புதைத் தொதுங்கி நின்றங், கனப்பதி பாகன் றன்னை யவனிமுற் படைக்கச் செய் தாய், கனப்படு முலகங் காக்கக் கண்ணனைக் கற்பித் தாயே. (அ0)

கண்ணழல் கதுவும் வெள்ளைக் கடமால் யானை யூரு, மண்ணலைப் புலவர் பொன்னு டளித்திடற் கரு ளிச் செய்தாய், தண்ணொளுங் கதிர்கள் வீசுஞ் சந் திரா தித்தர் தம்மை, விண்ணினி னுலவி வையம் விளக் குவீ ரெனவிடுத்தாய். (அக)

ஏர்பெறு மளகை தன்னை யிருநிதிக் குபேரற் கீந் தாய், பார்முத லெங்கும் வீசப் பவனனைப் பணித்தாய் மற்றை, வார்தருஞ் சலதியாள வருணனை வைத்தாய் தன்மச், சீர்கெடு மவர்க்குத் தண்டஞ் செய்வதற் கமைத்தா யென்னை. (அஉ)

(அ0) இறைஞ்சி = வணங்கி; ஏத்தி = துதித்து; மனப் படும்=மனத்திலுண்டாகும்; அனப்பதி=அரச அன் னம்; பாகன்=ஏறிநடத்துவோன்.

(அக) கண் அழல் கதுவும்=கண்ணில் அனல்வீசும்; வெள் ளை மால் யானை=பெரியவெள்ளையானை; ஊரும்= செலுத்தும்; அண்ணலை=இந்திரனை; புலவர்=தே வர்களது; பொன்னுடு=சுவர்க்கலோகம்.

(அஉ) அளகை = அளகாபுரி; இருநிதி=சங்கநிதி பதுமநிதி என்பனவாம்; பவனன் = வாய்வு தேவனை; வார் த ரும்=நீண்ட; சலதியாள=சமுத்திரத்தைப் பரிபாலி க்க; தன்மச்சீர்கெடுமவர்க்கு=தருமச் சிறப்பு அழிந் தவருக்கு.

திரிபுவ னத்து நீதான் செய்தகற் பனைக ளெல்லாஞ், சரிவர நடந்த தின்றுந் தமியனேன் பிழைத்த தில்லை, புரிசடைப் பரம வென்று புரிநெடும் பாசத் தோடு, முரிசெயற் கரிய தண்ட முதலமூத் திரைமுன் வைத்து. (அங)

ஆக்குவா னழிக்க வெண்ணி லாரது காக்க வல்லார், நீக்குவா யிதனை மற்றோர் பணிசெய நிறுத்து கென்று, தூக்குநீ டிலைக்கோ லன்னோன் சொற்றது கேட்டு நெஞ்சிற், றாக்குமா றின்று வந்த தாழ்வென் கொல் சாற்று கென்றான். (அச)

கண்ணிக ளூன்றிக் கையிற் கார்முகங் குனித்தம் பேவி, மண்ணின்மா வினங்கள் கொன்றும் வாய்த்த புட் குலங்கண் மாய்த்தும், வெண்ணிணத் தடிக டின்று வீக்கிய சடத்தா னன்றோன், றுண்ணிகழ் வில்லா வேட னுன்பதத் துறைத லுற்றான். (அரு)

(அங) திரி புவனம் = சுவர்க்க மத்திய பாதலம் என்னு மூவுலகம்; கற்பனை = கட்டளை; பிழைத்ததில்லை = தவறினேனில்லை; புரி = முறுக்கிய; முரி செய்தற்கு அரிய = அழித்தற்கரிய; முதல = முதலிய.

(அச) ஆக்குவான் = உண்டாக்குகிறவன்; காக்க = தடுக்க; இதனை = இத்தொழிலை; மற்றோர் பணிசெய நிறுத்து = மற்றொருவரை நியமனஞ்செய்; தூக்கு = நிறுக்கும்; தாக்குமாறு = வருத்தும்படி.

(அரு) மண்ணில் = பூவுலகத்தில்; வாய்த்த = கிடைத்த; வீக்கிய = பருத்த; சடம் = தேகம்; நன்று ஒன்று = ஒரு நன்மையும்; உள் நிகழ்வில்லான் = மனத்தின்கணுண்டாத வில்லாதவன்; உறைதலுற்றான் = வசிக்கப் பெற்றான்.

பரிமகமும் புரிகின் றுனே பகர்தரு மாக மாதத், துரியநீர் படிகின் றுனே யுயர்சிவ லிங்க பூசை, புரிதரி நினைகின் றுனே புண்ணியத் தலத்தி லுன்னைத், தெரிசனஞ் செய்கின் றுனே சிவநிசி நோற்கின் றுனே. (அரு)

எத்தவம் புரிந்தா னிங்ஙனெய்துதற் கிறைவ னுன்றன், சித்தமே தெரிந்து நீதி திறம்பிடி லறங்க டேயு, முத்தரும் பவங்கள் செய்யு மூர்க்கருஞ் சரியா மெண்ணிற், றத்தலைக் கடனீர் சூழ்ந்த தாரணி கவிழு மன்றே. (அள)

என்னுடைத் தூதர் தம்மை யிகல்புரிந் திவனு லின்றிங், குன்னுடைக் கணங்கள் செய்த துரைத்திடக் கேட்டி யோட்டி, மின்னுடைப் படையாற் றண்டால் வெட்டியும் புடைத்துஞ் சென்னி, முன்னுடைத் துதிரத் தோடு மூளைகள் சிந்தி னோ. (அஅ)

தாவரும் பவங்கள் செய்வார் தாஞ்சிவ லோக மேவில், யாவரைத் தண்டஞ் செய்வ தென்றெதி ரிய மன் கூறத், தேவரு முனிவர் தாமுஞ் சிந்தையிற் றியானஞ் செய்யு, மூவருந் தானய் நின்ற மூர்த்தியு மொழிவ தானன். (அக)

(அரு) பரிமகம் = அசுவமேதயாகம்; புரிதர = செய்ய.

(அள) தெரிந்தும் = அறிந்திருந்தும்; நீதி திறம்பிடில் = நீதி தவறினல்; தேயும் = அழியும்; தத்துஅலை = தாவ கின்றஅலை; கவிழும் = தலை கீழாக மாறும்.

(அஅ) இகல் புரிந்து = யுத்தஞ்செய்து; ஓட்டி = துரத்தி; மின்னுடை = பிரகாசமுடைய.

(அக) தாவரும் பவங்கள் = அழியாத பாவங்கள்; எதிர் = விடை.

விற்பயில் வேடன் முன்னாள் வேட்டமே லெழு ந்து நந்த, மற்படு காலையுண்டி யினைந்தலற் றருகிற் சார் ந்து, பொற்பமர் வில்வஞ் சாத்திப் பூசனை புரித லாலே, சொற்பயில் பாவவேலை சுவறிடத் தூர்த்திட் டானே. ()

இத்திற மறியாய் நீயு மெழுதருங் கணக்கில் வல் ல, சித்திர குத்தன் றானுந் தெரிந்தில னென்று திங் கட், சத்திரன் றனைக் காய்ந்த சங்கர னுரைப்பத் தீட் டும், பத்திர மெடுத்துப் பார்த்துக் கணக்கனும் பரிந்து போற்றி. (கூக)

சிவநிசி யென்ப தோரான் றின்பதற் கூன்கிட் டாம, லுவவசி யாகிநின்று னுவாப்புலி யெண்கு சிங்க, மவமெனைச் செய்யு மாலென் றஞ்சியவ் வில்வத் தே றித், தவர்விடுங் கணைக ளோவிற் றடைசெயு மிடையி லென்றே. (கூ௨)

கூர்தருஞ் சுரிகை யாலக் குழைகளைக் கொய்து வீழ்த்தா, னீர்தரு கண்க டன்னி னித்திறை வந்தா லிந்தப், பார்தனில் வீழ்வே னென்று பயந்ததிற் பன் னம் பண்ணி, யேர்தரு மனைமான் பன்றி யின்றிவண் வருமென் றெண்ணி. (கூங)

(கூ0) நந்தம் அல் = நமக்குரிய இரவு, (சிவராத்திரி); படு காலை = உண்டானபொழுது; அநந்தல் = நித்திரை; பொற்புஅமர் = அழகு பொருந்திய; சொல் பயில் = சொல்லப்படுகிற; பாவவேலை = பாவமாகிய சமுத்தி ரத்தை; தூர்த்திட்டான் = ஒழித்தனன்.

(கூக) திங்கள் சத்திரன் = சந்திரனைக் குடையாக வுடைய வன் (மன்மதன்.)

(கூ௨) உவவசி = உபவாஸம்; உவா = யானை; எண்கு = கரடி அவம் எனை = எனக்குத்துன்பம்; செய்யும் = புரியும், ஆல் அசை; வில்வத்து = வில்வ மரத்து; தவர் = வில்.

(கூங) குழை = தழை; வீழ்த்தான் = தள்ளினன்; பன்னம் பண்ணி = பத்திரமாகச் செய்து (தற்காப்புச் செய்து).

சுசிகரு மில்லா வேடன் றாயிறுறந் திருந்தா னீச, னிசியென நினைந்து தோன்றா னீதியிற் செய்த தன்றென், றுசிதமாய்க் கணக்க மேதை வொண்டமூற் சுடலை தன்னிற், பசிதமே பூசு மேனிப் பரமனும் பகரும் பின்னும். (கூச)

அதையுனக் கறைவங் கேட்டி யறிந்திடா தியற்ற லாலே, சிதைவிலாக் கணத்திற் சேர்ந்தான் சித்திநன் முத்தி நல்கும், விதைநிகர் கங்கு றன்னில் விதித்தநூல் வழிவ ழாம, லிதையமீ தறிந்து செய்தா லியாமவ னவன்றே. (கூரு)

செவ்விர வணைய கூந்தற் சிவைமுத னேற்றல் செய்யு, மிவ்விர தத்தின் மேன்மை யாவரோ கணிக்க வல்லார், கைவிரல் கண்ணிற் பட்டாற் செய்வதென் கவலை நீக்கி, மைவிர வியகார் மேனி மறலிநின் றாத ரோடும். (கூசு)

வைத்தமுத் திரையை வாங்கி வழிக்கொள்வா யென்ன ஞான, வித்தகன் கருணை யோடு விடைகொடுத் தருள வேண்டி, முத்தலைப் படைகொள் காலன் முதல்வனை முறையிற் றாழ்ந்து. சித்தமுந் தெளிந்து தேறித் தென்புலத் தெய்தி னானே. (கூஎ)

(கூச) உசிதமாய்=தகுந்தபடி; பசிதம்=பஸ்மம்.

(கூரு) சிதைவிலா=அழிதலில்லாத; சித்தி=இஷ்ட பூர்த்தி; நன்முத்தி = மோட்சம்; விதைநிகர் கங்குல் = வித்தைப் போன்ற சிவராத்திரி; அவன் யாம் ஆவன் = சாயுச்சிய மடைவன்.

(கூசு) செவ்விரவு=மிகுந்த இருட்டு; மறலி=இயமனே.

(கூஎ) வழிக்கொள்வாய்=போவாயாக.

வேறு.

வெங்கொ டுங்கொலை புரிந்த வங்குலனும் வெள்ளை வெற்பிலொரு புள்ளிமான், செங்கை கொண்டருளு மண்ணல் கண்ணருடி னங்தொ றும்பெறு கணங்களுக், கங்க ணற்றலைமை பெற்றி ருந்தபினெ ணைந்து பைந் தரு வளந்தருந், துங்க முற்றகன கந்தி கழ்ந்திலகு சுரர்கள் வாழுலக மேவினன். (கூஅ)

ஆட கப்பொனல கத்தி னீடுகொடி யாடுமாடு திகழ் மாடமேற், காட கத்தினுறை வேடனுற்றலர் கொள் கற்ப கத்தினிழ லுற்றடிப், பாட கத்தொலி பரப்ப ரம்பையர்கள் பலரு நின்றருகு பணிசெய, மாட கத்திவவின் யாழின் விஞ்சை யர்கள் வந்து பாடநனி வைகினன். (கூகூ)

(கூஅ) வெம்கொடும் = மிகக்கொடிய; அங்கண் = அவ்விடத்தில்; ஐந்து பைந்தரு = ஐந்து பசியதருக்கள், அவை அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பனவாம்; வளந்தரும் = வளப்பம் நல்கும்; துங்கமுற்ற = பரிசுத்தம் பொருந்திய; பொன்திகழ்ந்து = பொன் மயமாக; இலகு = விளங்குகிற

(கூகூ) ஆடகப்பொன் = பொன்வகை நான்கினுென்று, அவை ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூனதம் என்பனவாம்; மாடு = பெருமை; காடு அகத்தின் உறை = காட்டினிடத்து வசிக்கும்; உற்று = பொருந்தி; அலர் கொள் = மலரையுடைய; அடி = கால்; பாடகம் = காலி லணியும் ஓ ராபரணம்; பரப்பு = பரவச்செய்கிற; மாடகம் = முறுக்காணி; திவவு = வீணையின் கட்டு; நனி வைகினன் = சிறந்து வசித்தான்.

அளவி லாததின மங்கி ருந்துபுக ழளகை மாந கரின் வளமெலாந், தளர்வி லாதவ ணருந்தி முந்திமிகு சாடியிற் றயிர்நெய் தேடியே, களவி னாலிடையர் பாடி யிற் றிருடு கண்ணன் வண்ணமுறு கன்றினை, விளவின் மீதெறிமு குந்த னங்கணார விந்தன் வாழுலக மேவி னான். (க00)

கொண்டல் வண்ணமுடல் கொண்ட கண்ணன ருள் கொண்டு வைகிடுவை குண்டமீ, தண்ட ரண்டி னர்செய் தொண்டு கொண்டதனி லானபோகமவை யாவுமுண், டெண்ட விர்ந்ததின மங்கிருந்துபி னிருந்த வத்தினர் பொருந்திடு, முண்ட கந்தனி லிருந்தி டுஞ் சதுர் முகன் றிருப்பதவி முன்னி னான். (க0க)

ஓதி மக்கொடி யுயர்த்த நான்முக னுவந்த லோ கமதி லுற்றதிற், கோதி றப்புரவு துய்த்த பின்பு நகை கொண்டு முப்புர மெரித்திடு, மாதி நற்கயிலை யுற்று

(க00) இடையர்பாடி = இடைச்சேரி; வண்ணமுறு = அழகு பொருந்திய; கன்றினை = கன்றுக்குட்டியை; விளவின் = விளாமரத்தின்; அரவிந்த அம் கண்ணன் = தாமரை மலர் போலும் அழகிய கண்களை யுடையவன்.

(க0க) கொண்டல் வண்ணமுடல் = மேகம்போன்ற நிறத்தையுடைய தேகத்தை; கொண்ட = உடைய; அருள் கொண்டு = கருணையையுடையவனாய்; வைகிடு = வசிக்கிற; அண்டர் = தேவர்கள்; அண்டினர் = சமீபத்திலிருந்து; உண்டு = அநுபவித்து; எண்தவிர்ந்த = கணக்கற்ற; சதுர்முகன் திருப் பதவி = சத்திய லோகம்; முன்னினான் = போய்ச்சேர்ந்தான்.

ளத்தினி லரும்பெரும்பொருள் விரும்பவே, யீதிவற்கர
ன் மருதுதந்தருள வின்பமுற்றினி திருந்தனன். ()

கைத வத்தினுயர் வேடனீடுசிவ கங்கு லென்பது
ண ராமலே, செய்த வத்திலிது பெற்ற னன்பரம சிவநி
சிப்பெருமை சிந்தையிற்,பெய்த ருச்சனை புரிந்து கண்
டுயில் பிரிந்த ருந்துத றவிர்ந்துளா, ரெய்து தற்கரிய
முத்தி வீடதனி லெய்து வார்களிலை யையமே. (கOரு)

என்று சூதமுனி யோத மாதவர்கள் யாரு மேருவி லெ
டுத்தெயி, லன்று நீறுபட நூறு மாறுபுனை யரச னுக்குரிய
விரசனி, யொன்று பாவவல் விருட்க ருக்கனிக ரொக்கு மெ
ன்பதை யுணர்ந்தன, நன்று தேசிகநின் னெனுமுடி துள
க்கி நன்மொழிக ணல்கினர். (கOசு)

(கOஉ) ஓதிமக்கொடி = அன்னக்கொடி; உவந்த=விளங்கு கிற; கோதில்=குற்றமற்ற; துப்புரவு=போகங்களை; துய்த்தபின்=அனுபவித்த பின்பு; ஆதி=முதற் கடவுள் (பரமேசுவரன்); அரும்பெரும்பொருள் = அருமையும் பெருமையும் பொருந்திய வீடுபேறு.

(கOரு) கைதவத்தின்=வஞ்சகத்தில்; நீடு சிவகங்குல்=உயர்ந்த சிவராத்திரி; செய்தவத்தில்=செய்த தவத்தினால்.

(கOசு) எயில்=கோட்டை; நீறுபட=சாம்பராக; நூறும்=நொறுக்கிய; ஆறு=கங்கை; அரசன் = இறைவனும் பரமேசுவரன்; இரசனி ஒன்று = ஒரு சிவராத்திரி; அருக்கன்=சூரியன்; நிகர்வொக்கும்=சமானமாகும்; உணர்ந்தனம் = தெரிந்தோம்; எனுமுடிதுளக்கி = என்று தலையையசைத்து; நல்மொழி=உபசாரவசனம்.

வசனம்.

நைமிசாரண்ய வாசிகளே! இச் சிவராத்திரியின் சரிதம் இன்னு மொன்றுரைப்பேன் கேட்பீராக வெனச் சூதமா முனிவர் சொல்லுவாராயினர்.

சந்திர சூரியர் தவழ்ந்து செல்லுமாறு உயர்ந்து விளங்கு மதில்களையுடையதாயும், அளகாபுரியைவென்ற பல வளங்கள் பொருந்தியதாயும் விளங்கும் சாகரபுரம் என்னும் நகரினுக்கு அருகிலுள்ள மலையைச்சார்ந்த காட்டில்; நீலமலையினையும் மேகத்தினையும் ஒத்த கருநிறம் வாய்ந்த தேகமுடையவனும், புலிபோன்ற பராக்கிரமமுடையவனும், தோலை ஆடையாக இடையிற்றரித்தவனும், இளம்பிறைபோன்ற யானையினது கோடுகளையரிந்து குண்டலமாகக் காதிற்றரித்தவனும், தேன், தினைமா, கனிகள், மலைநெற்சோறு, மிருகங்களினூன் இவற்றையுண்பவனும், அளவில்லாத சுற்றத்தினரையுடையவனும், அங்குலனென்னும் பெயரையுடைய ஒரு வேடனிருந்தனன். அவன் அழகுபொருந்திய அந்தமலைக்கு அருகிலுள்ள ஓர் புலத்தில்; தழைகளை ஆடையாகவும், குன்றிமணி மாலையை ஆபரணமாகவும், தரித்துவாழும் வேடர்குலத்தில் மின்னற்கொடிபோல் விளங்கும், அழகிய இடையினையுடைய ஓர் கன்னிகையை மணம்புரிந்து அன்றிலும் சேவலும் போலக் கூடியிருந்தனன். அந்த வேடஸ்திரீயானவள் சிங்கக்குட்டி போல இரண்டு மகவைப்பெற்றனள். அங்குலன் அப்புதல்வர்கட்கு நெற்றியிற் புலியின் நகத்தாற்செய்த சுட்டிகளையும் இடுப்பில் பலகறை மாலைகளையுந்தரித்து உளமகிழ்ந்து மழலை கேட்டிருந்தனன். இப்படியிருக்கையில் ஒருநாள் அவ்வங்குலன் மரவுரியையும் மான்றோற் பாதரட்சையையுந் தரித்து, குடுமியைக் கயிற்றினுலிழுத்துக் கட்டி அம்புப்பெட்டியை முதுகிலும் நீண்ட வில்லைத் தோளிலுந்தரித்து, கத்தியைக் கையிற் பிடித்துக் கொண்டு நாய்க்கூட்டங்கள் சூழ்ந்துவர வேட்டைக்குப் புறப்பட்டனன்.

இலவு, தேக்கு, அகில், இலந்தை; வேல், எட்டி, புன்னை, வில்வம், கொன்றை, குரவு, அசோகு, பலா, பாதிரி, வன்னி, சண்பகம், அழிஞ்சி, பாலை, வேங்கை, சந்தனம், விளா, வாகை, அரசு, வேம்பு, கருங்காலி, கடம்பு, மரா, மகிழ், வாழை, குங்குமம், நாகை முதலிய விருட்சங்களடர்ந்து சூரியனது கிரணங்களும் காற்றுஞ்செல்லாதபடி இருண்மயமாயிருக்கும் ஓர் வனம் அங்கிருந்தது. அவ்வனத்தில் பட்சிசாதிகள் மரங்களின்மீது நிறைந்து வசிக்கும்; அன்றியும் அங்கு மிருகக் கூட்டங்களுலாவித்திரியும் ஓர்பால்; செந்நாய்கள் அம்பு செல்வதுபோல் அதிவேகமாய்ச் சென்று முயற்குட்டிகளைத் துரத்தும் ஓர்பால்; சிங்கங்கள் யானைகளின் மத்தகத்தைப் பிளந்து மருப்புகளைப்பிடுங்கிக்கடிக்க, அம்மருப்புகளி லிருந்து சிதறிய முத்துக்கள் அந்த யானைகளின் இரத்தத்திற் புரண்டு மாதளம்பழ விரைபோல விளங்கும் ஓர்பால்; நீண்ட துதிக்கையையுடைய யானைகளானது தத்தங்கன்றுகள் தொடர்ந்துவரச்சென்று நதிகளிற்படிந்து பிளிறுமோர்பால்; இரும்பினுற் செய்ததுபோலும் நீண்ட கொம்புகளையுடைய மான் வர்க்கங்களும்,வரையாடுகளும்,பன்றிகளும்,புலிகள் உறுமும் பேரொலி கேட்டுப்பயந்து ஓடிப்பதுங்கும் ஓர்பால்; பண்டைக்காலந்தொடங்கிப் புறச்சமயிகளாலும் குறிஞ்சிக் கடவுளெனப்போற்றி வணங்கப்படும் குமாரக் கடவுளுக்குரிய மலைகளின்மீது வைத்த பல்லாயிரஞ்சுடர் விளக்கைப் போற் பாம்புகளின் மணிகள் கிடந்து பிரகாசிக்கு மோர் பால்.

இத்தன்மையாக விளங்கும் அவ்வனத்தில் மேற்சொல்லிய அங்குலன் என்னும் வேடன் சென்று பட்சிகள் படுக்குங் கண்ணிகளைக்குத்தியும்,வலைகளைக்கட்டியும், மிருகங்களைப்பிடிக்கும் சூத்திரயந்திரங்களைப் பூமியிற்புதைத்தும், மரத்தினடியிற்கட்டியும் வைத்துவிட்டு நாய்களை ஏவியும் அம்புகளை விடுத்தும் குறியதடிகளை யெறிந்தும் கவண்கற்களைவீசி யெறிந்தும் அவ்வனத்திலுள்ள மிருகங்களையும் பட்சிகளையும் மருட்டித்துரத்தினன். அம்மிருகங்களும் பட்சிகளும் அவன் வைத்த

யந்திரங்களிலும் வலைகளிலும் ஒன்றேனும் அகப்படாது அகன்று ஓடிப்போயின. பின்னர் அங்குலன் ஒரு புதரிற் சென்று மறைந்து, மிருகங்கள் போலக் கத்தியும் பட்சிகள் போலக் கூவியும் அழைத்தனன்; பின்னர் மானின்றோலைப் போர்த்திக்கொண்டு மிருகங்கள் சென்ற அடிச்சுவடுபற்றிப் போய்த்தேடினன்; அன்றியும் சத்தஞ்செய்யாது அங்குள்ள வளைகளிற் கையை விட்டு உடும்புமுதலிய ஜந்துக்களுள்ளனவோவெனத்தேடினன். இங்ஙனம் பலதந்திரங்களைச் செய்தும், ஓர்விலங்கேனும் ஓர் பட்சியேனும் அகப்படவில்லை. அதனால் அவன் மிகுந்த கவலையுற்று வருந்தினன். இங்ஙனம் வருந்தும் அங்குலன், வயிற்றிற் பசித்தீயெழுந்து வருத்துவதாலும், பட்சிகள் மிருகங்கள் அகப்படவில்லையே யென்னுங் கவலையினாலும் தேகமிளைத்துக் களைப்புற்றிருந்தனன். இங்ஙனமிருக்கையில் சூரியன் மேற்றிசைக்கடலை யடைந்து மறைய, அவ்வங்குலனது தேகத்தையும் அவனது தீமையே குடிகொண்ட உள்ளத்தையும் போன்ற கருநிறம்வாய்ந்த இருளானது யாண்டுஞ் சூழ்ந்தது. பின்னர் அங்குலன் சற்று இளைப்பாறி நாம் வெறுங்கையோடு குடிசைக்குப்போனால் மைந்தரும் மனைவியும் பசியால் வருந்தி மெலிவரானதால் அதற்கு என்செய்வோமெனக் கவலையுற்று யோசித்து இவ்விரவில் தண்ணீர் குடிப்பதற்குக் குளங்கள் தேடிவரும் மிருகங்களை அம்பை எய்து கொன்று அவற்றின் மாமிசங்களைக் கொண்டு போவதே உசிதமெனத் தீர்மானித்துக் கவலையகற்றி அருகிலுள்ள ஒரு குளக்கரையை யடைந்து மான் மரை முதலிய மிருகங்களின் வருகையை யெதிர் பார்த்திருந்தனன்.

இங்ஙனமிருக்கையில் அவன் புலி சிங்கமுதலிய துஷ்டமிருகங்கள் வரின், அவை நம்மைக்கொன்றுவிடு மாகையால் நாம் இங்குள்ள வில்வமரத்தின்மீது ஏறி மறைந்திருந்து அம்பையெய்து தந்திரமாய் அவைகளைக் கொல்வோமென நினைத்து அம்மரத்தின்மீது ஏறி ஓர் கிளையில்உட்கார்ந்தனன். பின்னர் அவனிருக்கும் வில்வமரக்கிளை தழைத்துத் தாழ்ந்து

இருந்ததால் அத்தழைகள் தாம்விடுக்கும் அம்பைத் தடுக்குமென்றுன்னி அங்கிருந்தபடியே அத்தழைகளைக் கத்தியாலரிந்து கீழேயெறிந்து முன்போல் மிருகங்களின் வருகையை எதிர்பார்த்திருந்தனன். அவனது நல்லூழின்வலியால் அப்பொழுதும் மிருகங்கள் வாராதிருந்தன. அதனால் அவன் மிக்க கவலையுற்றிருந்தனன். பின்னர் இரவின்முற்பொழுது அகல நித்திரையானது அவனிடம் நெருங்கிற்று. அதனையறிந்த அங்குலன் தன்னை நித்திரை பற்றின் கீழேவிழுந்து இறந்து விடுவோமாதலால் யாதேனும் ஓர் வேலைசெய்து அந் நித்திரையை யகற்றுவதே தகுதியாமெனத் தீர்மானித்து அக்கிளையிலுள்ள இலைகளை ஒவ்வொன்றாகக் கையினாற் பறித்துக் கீழேயெறிதலாகிய வேலையைச்செய்து நித்திரை தன்னை நெருங்காதபடி இராப்பொழுதைப் போக்குவானாயினன். அவன் முற்பிறவிகளிற் செய்த புண்ணியமே திரண்டு ஒருவடிவாயெழுந்ததுபோல, முன் ஓர் இருடியால் பிரதிஷ்டைசெய்து வேதாகமவிதிப்படிப் பூசிக்கப்பட்ட சிவலிங்கமொன்று அவ்வில்வமரத்தின் அடியினுக்கருகிலிருந்தது அன்றியும் அன்று சிவராத்திரிகூடிய உத்தமோத்தம சுபதினமாகவுமிருந்தது. அங்குலன் முன்னர்க் கத்தியாலரிந்தெறிந்த தழைகளும் பின்னர் ஒவ்வொன்றாகக் கையினாற் பறித்தெறிந்த தழைகளும் அங்குள்ள சிவலிங்கத்தின் முடிமீது வீழ்ந்தன. அங்குலன் செய்தி இங்ஙனமிருக்கக் குடிசையிலிருந்த அவனது மனைவியானவள் வேட்டைக்குப்போன நம்முயிர்த்துணைக் கணவன் மாலைப்பொழுதிலேயே வருகிறது வழக்கமாயிருக்க இன்று பாதி யிரவாகியும் அவன் வாராதது யாது காரணமோவென மனத்தெண்ணிக் கண் துயிலாது வருந்துவாளாயினள். நங்கொழுநன் தனித்துப்போனதால், தறுகண்யானைகள் தடிந்து கொன்றனவோ, கரடிகள் புலிகள் கவர்ந்துகொன்றனவோ, சிங்கம்வந்து செகுத்துத் தின்றதோ, வளையுறும்பாம்பு வல்விடஞ்சிந்தும் துளையெயிற்றினாற் றீண்டிக் கொன்றதோ, அந்தோ அந்தோ பர்த்தாவைப்பிரிந்த பாவையாயினேன் கணவனைப்பிரிந்த காரிகையாயினேன் புருஷனைப்பிரிந்த பூவை

யாயினேன் என்செய்கேன் என்செய்கேன் ஓ ஆத்மநாத! எங் குற்ருய் எங்குற்ருய் கண்களை யொத்த நின்புதல்வர் பசியான் மெலிந்து வாடுகின்றனரே அவர்கட்கு, உண்ணுமாமிசம் ஊட் டவந்திலை, வருந்தும் அடியாள் வாட்டம் நோக்கிலை, அச்சோ அச்சோ என்செய்கேன் என்று புலம்பிக் கண்ணீர் தாரை தாரையாக வுகுத்துக் கதறியழுவாள் சோர்ந்துவிழுவாள் எழு வாள் வெளியில்வருவாள் குடிசையுட்புகுவாள்வாயில்வந்தவாறு பிதற்றுவாள் இவ்வாறு துன்பத்துழன்று பொழுதுபோக்கி யிருந்தனள். இங்ஙனமிருக்கையில், அங்குலன் புரிந்த அள வில்லாப்பாவமாகிய கறுத்த இருளையகற்றியதால் கதிரவனை யொத்த அவ்விரவு நீங்க, ஒற்றையாழியந்தேரின்மீது ஆரோ கணித்துச் சூரியன் கீழ்த்திசை யுதயகிரியிலெழுந்தனன். சிவராத்திரிதினத்தில், பனியால் நனி மூழ்கி ஊணும் உறக்க முமொழித்துப் பரமேசுவரன் முடிமீது பொழுதுவிடிகிற வரைக்கும் ஏராளமான வில்வத்தளங்களைப் பெய்ததால், கொ டிய வினைகளை யொழித்த, அருந்தபசிகளையொத்த அங்கு லன் யாதொரு பட்சியேனும் மிருகமேனும் அங்கு வாரா மையால் பொழுதுவிடிந்தவுடன் வில்வமரத்தினின்றிறங்கித் தன்குடிசைக்குச் சென்றனன். இராமுழுதும் ஆற்ருத்துயரக் கடலிலழுந்திய அவ்வேடச்சி பொழுதுவிடிந்தவுடன் தன் கணவனைத் தேடிக்கொண்டு காட்டிற்குச் சென்று எதிரில் வ ரும் அங்குலனைக் கண்டு நடந்தவைகளைக் கேட்டு உவகை யோடு அவனைத் தழுவி மகிழ்ந்தனள். உடனே அங்குலனும் அவன் மனைவியும் அங்கிருந்து புறப்பட்டுத் தனது குடிசை யை யடைந்தனர். பின்னர் அவ்வங்குலன் தேன், தினை, புல் லரிசி, மாமிசம் முதலிய உணவுகளை நாள்தோறும் சம்பாதி த்துக் கொணர்ந்து மனைவி மைந்தர்கட்குக் கொடுத்துத் தா னுமுண்டு அம்மனைவியோடு கூடி நெடுங்காலம் வாழ்ந்து, ந ரைமுதிரப்பற்கள் கழல வில்லைப்போற் றேகம் வளையத் தேக பலமொடுங்கப் பெற்றனன். இங்ஙனஞ் சின்னளிருந்து அவன் பெரும் பிணியாற் பிணிக்கப்பட்டு இறந்தனன். உடனே எம

தூதர்கள் சூலம் வாளி முதலிய ஆயுதபாணிகளாய்வந்து அங்குலனைப்பிடித்துக் கட்டிக்கொண்டு தமது தலைவனிடம் போகுமாறு அங்கு நின்றும் புறப்பட்டனர். இங்ஙன மிருக்கக் கைலாயபதியானவர் நந்திதேவரையழைத்துச் சாகரபுரத்திற்கருகிலுள்ள காட்டிலிருந்த அங்குலனென்னும் வேடனை எமதூதர்கள் கட்டிக் கொண்டுபோகின்றனராதலின் உடனே அங்கு நமது கணங்களை யனுப்பி அத்தூதர்களை விலக்கி அவ்வங்குலனை விமானத்தேற்றி ஓர் நொடிப்பொழுதில் இங்கு கொண்டு வரும்படி செய்வாயாகவென்று ஆஞ்ஞாபித்தனர். நந்திதேவர் அங்ஙனமே அங்குள்ள சிவகணங்களுக்குக்கட்டளையிட அக்கணங்கள் ஓர் இமைப் பொழுதில் அங்குசென்று பலாத்காரமாய் எமதூதரை விலக்கி, அங்குலனது புயம் முறியும்படி அத்தூதர் கட்டிய கட்டுகளை அறுத்தெறிந்து உபசரித்து அவனைத் தெய்வ விமானத்திலேற்றினர். அப்பொழுது இயமதூதர், கணங்களை நோக்கி இவ்வேடனை எமதுதலைவன் கட்டளைப்படி யாங்கள் கட்டிக்கொண்டு போவதைத்தடுத்து அவனை உபசரிக்கும் நீவிர் யாவர் கட்டளையின லிங்ஙனம் புரிகின்றீரென்று கேட்க, சிவகணங்கள் எமதூதரைப் பார்த்து தூதர்களே! முன்னர் உங்கள் தலைவன் மார்பினிடத்து வுதைத்து வீழ்த்தி யிருத்தியவனும் எங்கள்தலைவனுமாகிய கைலாயபதியின் கட்டளைப்படி செய்கின்றோமாதலின் நீவிர் செல்வீராகவென்றன. கடுகளவும் புண்ணியஞ்செய்யாத பாவியாகிய இவனை எம்முலகத்தினுக்குக் கொண்டுபோவதே நியமமாகையால் உங்களுடன் அனுப்போமென்றுஅத்தூதர்கள் எதிர்க்க, சிவகணங்கள் தத்தங் கைகளிலிருந்த ஆயுதங்களால் உதிரவெள்ளம் பெருக்கெடுத்தோடுமாறு அத்தூதர்களை யடித்தன. அத்தூதர்கள் கணங்களை வெல்லும் வலிமை குன்றி ஓடிவிட்டனர். பின்னர்த் தேவர்கள் புஷ்பமாரி பொழியக் கந்தருவர் கீதம்பாடிப் பலவாத்தியங்கள் முழக்க, கணங்கள் அங்குலனை விமானத்தோடு கொண்டுபோய்க் கைலையி லிறக்கிப்பரமேசுவரன் முன் விட்டனர். கைலாயபதியானவர்

அங்குலனைப்பார்த்து நீ எமது கணங்களோடு கூடி இங்கு வாழக் கடவாயெனத் திருவாய் மலர்ந்தருள, அங்ஙனமே அங்குலன் சிவகணத் தன்மைபெற்று அங்கிருக்குங் கணங்களோடு கூடி இனிது வசித்தனன்.

இது நிற்க, வன்மை குறைந்து கணங்களுக்குத் தோற்றோடிய கால தூதர்கள் தங்கள் தலைவனாகிய இயமதருமராஜனிடஞ் சென்று நமஸ்கரித்து; கிஞ்சித்தேனும் புண்ணியஞ்செய்யாத பாதகனும் வேடனை, தங்கள் கட்டளைப்படி யாங்கள் பாசக்கயிற்றினாற் கட்டிக்கொண்டு வரும்பொழுது சிவகணங்கள் வந்து எங்களை கைகா லொடியும்படி அடித்து வருத்தித் துரத்திவிட்டு அவனைத் தெய்வவிமானத்திலேற்றிக் கயிலைக்குக்கொண்டு போயின என்று கூறினர். அதனைக் கேட்ட காலன் கோப மதிகரித்தவனாய்ப் பல்லைக்கடித்துச் சினநகைசெய்து எழுந்து சித்திரகுப்தனும் சில தூதுவர்களும் சூழ்ந்துவரத் தன் வாகனமாகிய பகட்டின்மீதேறிச் சென்று கயிலையை யடைந்தனன்.

நெடுநாள் அருந்தவம் புரிந்து வினைகளை யொழித்த ஞானிகளது உள்ளம்போற் களங்கமற்று விளங்கும் கயிலைவரையின் செம்பொற்றிருக்கோயிலிலே பிரம்மாதிதேவர்கள் நந்திதேவரால் விலக்கப்பட்டுச் சந்நிதியினிருபுறமுங் கைகுவித்து நிற்ப; கண்களிற்றீட்டிய அஞ்சனமாகிய களங்கமும் இனிய குளிர்மொழியாகிய அமுதமும் விளங்கும் உமாதேவியாரது முகமாகிய பூரணச்சந்திரனுக்குத்தோற்று வெட்கியும், பாம்பினுக்குப் பயந்தும் நாளுக்கு நாள் உடல் குறைந்து கலைவளராமல் கொன்றையும் வில்வமுமேவிய சடைக்காட்டினிடத்து அலைநதிக் கயலிலே இளமதி கிடப்ப; சடையினிடத்திருந்து அரவஞ் சீறுவதாலும் இடையிற்றரித்த புலித்தோலுடை அடிக்கடி அசைவதாலும் மானனது மருண்டு உறங்குதல் தவிர்த்து இறங்கியோடுதற்குக் குதித்தெழுந்து சமயம் நோக்கி இடக்காத்திருப்ப; பெரிய பவளமலையிலுண்டாகிய

அருவிபோல முப்புரிநூல் மார்பினிடத்து விளங்க; அடியவர் பால் கிருபாநோக்கம் பரப்பிப் பொற்சிம்மாசனத்தில் உமா நாதர் உறைந்திருந்தனர்.

இது நிற்க, தென்னாட்டிலிருந்து அக்கயிலைக்கு வந்த அந்தகன் அந்தத் திருக்கோயிலின் கீழ்த்திசைக் கோபுர வாயிலையடைந்து நந்தியம் பெருமான்பால் விடைபெற்று உள்ளேசென்று சங்கரருறையுந் திருச்சபை யூடுபோய்த் தோத்திரித்து வணங்கி வாய்புதைத் தொதுங்கி நின்று பாசம் முத்திரை முதலியவைகளைத் திருமுன்னே வைத்து அடியேனை இவ்வதிகாரத்தினின்றும் நீக்கி வேறு யாரையாவது நியமனஞ் செய்யும்படித் திருவுள்ளம் பற்றுமாறு பிரார்த்திக்கின்றேனென்றனன். அதனைக்கேட்ட பரமபதியானவர் நின் மனத்தின்கணுற்ற குறையாதோ அதனைச் சொல்வாயாக வென்று கேட்க அந்தகன் புண்ணியமென்பதைக் காதிலுங் கேட்கப்பெறாது, சதாகாலமும் கண்ணிகளூன்றியும் அம்பை விடுத்தும் பட்சிகளையும் மிருகங்களையுங் கொன்று தின்று தனது வாழ்நாட்களை யொழித்திறந்த அங்குலனென்னும் வேடனை எனது தூதர்கள் கட்டிக்கொண்டு வருங்கால் நினது கணங்கள்வந்து அத்தூதர்களை தலை மூளைகள் சிதறும்படி அடித்துத் துரத்திவிட்டு அவ்வேடனைக் கொணர்ந்து நினது பதத்தெய்துவித்தன. கணக்கில்லாத பாவங்களைச் செய்தவர் நினது அரியபதமேவில் அடியேன் யாரைத்தண்டஞ்செய்வது என்றனன். அதனைக்கேட்ட இறைவர் அவ்வேடன் வேட்டைக்குப்போன காலத்து நமது இரவு கூடிய சுபதினத்திலே ஊண் உறக்கமொழித்து யாமுறையுஞ் சிவலிங்கத்தினுக்கு இரவுமுழுதும் வில்வத்தளங்களா லர்ச்சித்ததால் அவன் செய்த பாவமாகிய சமுத்திரத்தைத் தூர்த்திட்டனன். அதனை நீ யுணர்ந்திலைபோலும் என்று கூற, அந்தகன் சுவாமி! புலி சிங்கமுதலியவைகட்குப் பயந்து மரத்தின் மீதேறி நித்திரையகற்ற வில்வத்தழைகளைப் பறித்தெறிந்தும் தின்பதற்கு ஊன்கிட்டாமல் பட்டினியிருந்தும் பொழுது

போக்கினனேயன்றி இன்று சுபதினமென்றும் இங்கு சிவலிங்க மிருக்கிறதென்றும் அறிந்து பக்தியோடு செய்தானில்லையானதால், அவ்வ சிவார்ச்சனை செய்தலும் விரதமிழைத்தலுமாதல் யாங்ஙனமென்று வினவினன். இதனைக்கேட்ட பரமபதி அவன் அறியாது செய்ததால் நமது கணத்து ஒருவனாயினன் அறிந்து செய்திருந்தால் நமது சாயுச்சிய பதவியடைந்திருப்பன். ஆகையால் அந்தகா! மனக்கவலையொழித்துத் தூதர்களோடு நின்நகரெய்தி முன்போல் வாழக்கடவாயென்ன, அதனைக்கேட்ட அந்தகன் வைத்த முத்திரை முதலியவைகளை யெடுத்துக்கொண்டு இறைவர்பால் விடை பெற்றுத் தூதரோடு தென்புலத்தெய்தி முன்போலிருந்தனன்.

அங்குலன் ஆங்குள்ள கணங்களுக்குத் தலைமையெய்தி கயிலை நாதன் கிருபையைப்பெற்று நெடுங்காலம் அக்கயிலையில் வசித்துப் பின்பு வைகுண்டம் பிரம்மலோகம் இந்திரலோகம் அளகாபுரி முதலிய இடங்கட்குச் சென்று ஆங்காங்குள்ள போகங்களையனுபவித்து மீட்டுங் கயிலையையடைந்து பரமபதியைப்பணிந்து போற்றி என்றும் அழியாத சாயுச்சிய பதவிதந்தருளவேண்டுமெனப்பிரார்த்தித்தனன். பரமகருணாநிதியாகிய இறைவர் அங்ஙனமே திருவருள் பாலிக்க அங்குலன் அப் பதியினோடு இரண்டறக் கலத்தலென்னும் சுத்தாத்துவித முத்தியடைந்து இன்புற்றிருந்தனன் என்று சூதமாமுனிவர் சொல்ல நைமிசாரண்ணிய வாசிகள் கேட்டு உளமகிழ்ந்தனர்.

அங்குலச் சருக்கம் முற்றிற்று.

சவுமினிச் சருக்கம்.

வாதரா யணனென் றோது மறைதெரி முனிவர் கோமான், பாததா மரைக் ஞன்னிப் பரவசத் தோடும் போற்றிச், சீதநாண் மதியஞ் சூடுஞ் சிவநிசிப் பெருமை யின்னுஞ், சூதமா முனிவன் மற்றை முனிவரர் தமக்குச் சொல்வான். (க)

தோடுறு கமலத் தோடு துளிமதுக் குவளை யாம்பற், காடுறு கமல வாவிக் கயலினங் குதித்தங் காடக், கோடுறு தவளக் கோடு குமிறுந்தண் பணைசூழ்ந் தம்பொன், னூடுறு மமரர் தாமு நாடுங்கே கயநன் னாடு. ()

அரும்புறு கமலச் சூழி யதனினின் றெழுந்து வாளை, சுரும்புறு மலர்த்தண் சோலைச் சூதநற் கனிகள் சிந்துங், கரும்புறு வேலி சூழ்ந்த கழனியிற் கதிர்ச்செஞ் சாலி, விரும்புறு முத்து நத்தி னித்திலம் விளங்கு மெங்கும். (௩)

(க) வாதராயணன் = வியாசர்; கோமான் = தலைவர்; நாள் மதியம் = ஒருகலைச் சந்திரன்.

(உ) தோடுறு = இதழ்பொருந்திய; கமலத்தோடு = தாமரையுடனே; மதுத்துளி = தேன்சொட்டுகிற; ஆம்பல் காடுறு = அல்லிகள் மிகுந்த; கமலம் = ஜலம்; கோடுறு = கரைகளிலுள்ள; தவளக்கோடு = வெள்ளிய சங்கம்; குமிறும் = ஒலிக்கின்ற; பணை = வயல்; அம்பொன் நாடு = அழகிய தெய்வலோகம்; நாடும் = விரும்புகிற.

(௩) கமலச்சூழி = தாமரைத் தடாகம்; சுரும்பு உறு = வண்டுகள் பொருந்திய; சூத நற்கனி = நல்ல மாங்கனி; விரும்புறுகதிர்ச் செஞ்சாலி முத்து = விரும்பத்தக்க கதிர்களையுடைய செந்நெற் பயிரிலுண்டாகும் முத்துக்களும்; நத்தின் = சங்கினுடைய; நித்திலம் = முத்துக்களும்; முத்துப் பிறக்குமிடம் இருபதிலொன்று செந்நெல்.

புனறலைக் கரியசெங்கட் புரிமருப் பருமை வா யான், மன்றலைக் கமழும் வாவி மலர்பல மேய்ந்து வாவித், துன்றலைப் புனல தார்ந்து சுரந்துறச் சொரி யுந் தீம்பால், கன்றலைத் துண்ணவூட்டிக் காஞ்சிமா நிழலிற் றுஞ்சும். (ச)

நிறம்பயின் முந்நூல் பெற்றோர் நீதிமா மறை நூல் கற்றோர், திறம்பயி லரசர் வாசச் சீரகத் தாமர் கொங்கைப், பறம்பயி னெடுங்கட் செவ்வாய்ப் பார்ம மகள் புதல்வர் முன்னா, யறம்பயில் குடிக டுன்று மந் தநாட் டகத்தி லுள்ளான். (ரு)

வெந்தழல் வேள்வி செய்யும் விப்பிர னொருவன் முன்னாட், டந்தருண் மடப்பொற் பாவை சவுமினி யென்னும் பேரா, ளந்தர வானில் வாழு மரம்பையை யனையாண் மாரன், கந்தமா னைந்து தண்பூங் கணைக் கிலக் காக நிற்பாள். (சு)

(ச) புன்தலை=சிறிய மயிருள்ள தலையும்; கரிய=கருநிறமும்; செங்கண்=சிவந்தகண்ணும்; புரிமருப்பு = முறுக்கிய கொம்பும் பொருந்திய; வாயால் = வாயினால்; மன்றலைக்கமழும்=வாசனையை வீசும்; வாவி=குளத்தின்; துன்று அலை = அலைபொருந்திய; ஆர்ந்து = குடித்து; காஞ்சி = ஓர்மரம்; மா=விசாலித்த; துஞ்சும்= தூங்கும்.

(ரு) நிறம்=மார்பில்; பயில்=பொருந்திய; முந்நூல்=மூன்று சரடு, அஃதாவது பூணூல்; திறம்பயில்=வல்லமைபொருந்திய; சீரகத்தாமர்=வணிகர்; கொங்கைப்பறம்பு = தனங்களாகிய மலைகள்; அயில்நெடுங்கண் = வேல்போன்று நீண்ட கண்; முன்னாய் = முதலாக; துன்றும்= நிறைந்த.

(சு) விப்பிரன் = பிராமணன்; தந்தருள் = பெற்ற; மடப்பொன் பாவை = அழகிய பொன்னாற்செய்த பதுமை போன்ற பெண், உவமையாகுபெயர், அல்லது மடமைத்தன்மை வாய்ந்த அழகிய பெண் எனவுமாம்; அந்தரவான்=ஆகாயத்திலுள்ள விண்ணுலகம்.

வளமிகு செல்வந் தன்னில் வளர்ந்துவற் சரமோ ரேழிற், றளவமென் மூரற் பேதைத் தையலா ரோடு கூடி, யுளமகிழ் சிற்றில் கோலி யுறீகழங் கூச லாடி, யிளமயி லனையாண் மங்கைப் பருவமவ் வெய்து கின்றாள். (எ)

வேறு.

தடங்கி டந்திடுந் தாமரை யரும்பெனத் தடித்துப், படங்கி டந்தபாம் பேந்துபார் பகர்ந்திடத் தரள, வடங்கி டந்திப மருப்பிணை மருட்டிமா மணிப்பொற், குடங்கி டந்தெனக் குலவிய கொம்மைவெம் முலையாள் (அ)

வடித்த நெட்டிலை வேலொடு மாவடு வடிவாட், டுடித்த செங்கயல் சுரும்புவேள் கரும்பினிற் றொடுக்குங், கடிக்க ருங்குவ ளைகடமைக் கடுத்துநீள் வள்ளைக், கொடிக்கி ணைக்குழைக் குழைகளிற் குதிக்குநீள் விழியாள். (கூ)

(எ) வற்சரம் = வயது; மென்தவளம் = மிருதுவாகிய முல்லை யரும்பையொத்த; மூரல் = பல்; பேதைத்தையலார் = பேதைப்பருவ முடைய பெண்கள்; சிற்றில் = பிள்ளைகள் விளையாட்டிற் கட்டும் மணல் வீடு; கழங்கு = அம்மனை; ஊசல் = ஊஞ்சல்; மங்கைப்பருவம் = ஒன்பது வயது; எய்துகின்றாள் = அடைபவளானாள்.

(அ) தடம் = தடாகம்; படம் கிடந்த = படத்தையுடைய; பாம்பு = ஆதிசேடன்; பார் பகர்ந்திட = உலகத்தை விலைமதிக்க, அல்லது உலகத்துள்ளார்புகழ.

(கூ) துடித்த = துள்ளுகிற; செங்கயல் = அழகிய கெண்டைமீன்; கடிக் கருங்குவளை = வாசனைபொருந்திய நீலோற்பலம்; கடுத்து = ஒத்து; கொடிக்கு இணை = கொடியையொத்த; குழை = குண்டலங்களையணிந்த; குழைகளில் = காதுகளில்; குதிக்கும் = தாவிச்செல்லும்.

கருகு கங்குல்பைங் களங்கனி முழங்கிடுங் கடனீர், பருகு மங்குனற் பதிகமொத் ததிபரி மளங்கண், மருவி நெய்த்துநீண் டூளிக்குலம் விருந்துண மலர்ந்த முருக லர்த்தொடை சூட்டியே முடிக்குமொய் குழலாள். (௧0)

கயிர வங்கவிர் தொண்டைமென் கனிகடற் பவளஞ், செயிர றுஞ்செழுஞ் செங்கிடை கொங்கிடையிலவம், பயில் கொழுந்துண ரனைத்தையும் பழித்துமைக் கடைக்க, ணயில் விடங்கொளு மவர்க்கமு துதவுசெவ் விதழாள். (௧௧)

சலந்த ரும்பொலந் தாமரை மலர்நிகர் முகத்தாள், கலந்த ருந்தட மார்புடைக் காளைய ரெனுமா, வலந்த ருங்கட கரிகளை வணக்குமங் குசமாய், நலந்த ருந்திலந் திகழ்குமிழ் நணுநா சியினாள். (௧௨)

---

(௧0) கருகு கங்குல்=கறுத்த இரவு; பைங்களங்கனி = அழகிய கிளாப்பழம்; பதிகம்=கொடிப்பாசி; நெய்த்து= நெய்ப்பசை யுற்று; முருகு=தேன்; மொய்=அடர்ந்த.

(௧௧) கயிரவம் = செவ்வல்லி; கவிர்=முள் முருக்கிதழ்; தொண்டைக்கனி = கொவ்வைப்பழம்; செயிரறும் = குற்றமற்ற; செழுஞ்செங்கிடை = செழித்த செங்நெட்டி; கொங்கு = வாசனையை; இடைபயில் = தன்னிடத்துப்பொருத்திய; இலவு=முள்ளிலவு; பயில்=உள்ள; கொழுந் துணர் = அழகிய பூ; கண்அயில் விடம் = கண்ணாகிய வேலினது விஷம்.

(௧௨) சலந்தரும் = நீரிலுற்பவிக்கும்; பொலம் = அழகிய; கலம் தரும்=ஆபரணம்பூண்ட; மாவலந்தரும்=மிகுந்த வெற்றியையுடைய; திலம் = எள்ளின் பூவும்; நலந் தரும்=அழகுள்ள; குமிழ்=குமிழம்பூவும்; நாணும் = வெட்கப்படும்.

கருகு கங்குல்பைங் களங்கனி முழுங்கிடுங் கடனீர், பருகு மங்குனற் பதிகமொத் ததிபரி மளங்கண், மருவி நெய்த்துநீண் டொளிக்குலம் விருந்துண மலர்ந்தி, முருக லர்த்தொடை சூட்டியே முடிக்குமொய் குழலாள். (கo)

கயிர வங்கவிர் தொண்டைமென் கனிகடற் பவளஞ், செயிர றுஞ்செழுஞ் செங்கிடை கொங்கிடையிலவம், பயில் கொழுந்துண ரனைத்தையும் பழித்துமைக் கடைக்க, ணயில் விடங்கொளு மவர்க்கமு துதவுசெவ் விதழாள். (கக)

சலந்த ரும்பொலந் தாமரை மலர்நிகர் முகத்தாள், கலந்த ருந்தட மார்புடைக் காளைய ரெனுமா, வலந்த ருங்கட கரிகளை வணக்குமங் குசமாய், நலந்த ருந்திலந் திகழ்குமிழ் நணுநா சியினாள். (கஉ)

(கo) கருகு கங்குல் = கறுத்த இரவு; பைங்களங்கனி = அழகிய கிளாப்பழம்; பதிகம் = கொடிப்பாசி; நெய்த்து = நெய்ப்பசை யுற்று; முருகு = தேன்; மொய் = அடர்ந்த.

(கக) கயிரவம் = செவ்வல்லி; கவிர் = முள் முருக்கிதழ்; தொண்டைக்கனி = கொவ்வைப்பழம்; செயிரறும் = குற்றமற்ற; செழுஞ்செங்கிடை = செழித்த செங்கெட்டி; கொங்கு = வாசனையை; இடைபயில் = தன்னிடத்துப்பொருத்திய; இலவு = முள்ளிலவு; பயில் = உள்ள; கொழுந் துணர் = அழகிய பூ; கண்அயில் விடம் = கண்ணாகிய வேலினது விஷம்.

(கஉ) சலந்தரும் = நீரினுற்பவிக்கும்; பொலம் = அழகிய; கலம் தரும் = ஆபரணம்பூண்ட; மாவலந்தரும் = மிகுந்த வெற்றியையுடைய; திலம் = எள்ளின் பூவும்; நலந்தரும் = அழகுள்ள; குமிழ் = குமிழம்பூவும்; நாணும் = வெட்கப்படும்.

தேன லந்தரு சருக்கரை செழுங்கனி கரும்பு, பான றும்பொழிற் பசுங்கிளி மொழிகளைப் பழித்துப், பேன வெண்டிரை கடைந்துமுன் றுளவணி பெருமான், வான வர்க்கருண் மருந்தெனு மதுரமென் மொழியாள். (கங)

பாரின் மேல்வளர் மரங்களிற் படர்ந்தமென் கொடியைக், காரின் மேலெழு மின்னை நுண் ணூலினைக் கடிந்திட், டேரி னுயர் மதனர சிருந்திடு மல்குற், றேரின்மீதவ னெழுந்துநின் றொத்தசிற் றிடையாள். (கச)

ஊற்றி ருந்தமு தொழுகிடு மல்குலுக் குலகின், மேற்றி ருந்தர சிலையொடு தொடுகடல் விடுதேர், காற்றி ரும்பசிக் கருந்திடுங் கட்செவிப் படமுந், தோற்றி ருந்தவென் றுலதற் குவமையென் சொல்வாம். (கரு)

மஞ்சஞ் சீறர வெனத்துயின் மாயவன் மணக்கு, நஞ்சஞ் சீர்விழித் திருமக ளொடொறு நயக்குங், கஞ்சந் தோற்றிடிற் கழியனப் பெடைநடை கற்கு, மஞ்செஞ் சீறடிக் குவமைமற் றியாதெடுத் தறைவாம். (கசு)

(கங) நலந்தரும் = இன்பந்தரும்; பேனம் = நுரை; வெண்டிரை = பாற்கடல், சினையாகு பெயர்.

(கச) காரின் = மேகத்தின்; ஏரினால் = அழகினால்; நின்று = நின்றதை.

(கரு) திருந்து அரசிலை = அழகிய அரசிலை; இரும்பசிக்கு = மிகுந்த பசிக்கு.

(கசு) சீறுஅரவு = சீறுகின்ற பாம்பு; மஞ்சமென = சயனமாக; நஞ்சம் = விஷத்தையொத்த; சீர்விழி = அழகிய கண்; நயக்கும் = விரும்புகிற; கழி = சிற்றாறு; அம்செம் சீறடி = அழகிய சிவந்த சிற்றடி.

இனைய் பேரெழில் வாய்ந்திடு மிளங்கொடி தனைக் கண், டனைய தந்தைதாய் மிகமகிழ்ந் தகமதின் முந் நூல், புனையும் பூசுர னொருவனுக் கிசைந்துளம் பொருந்தி, மனையி னுன்மறைச் சடங்குடன் வதுவைசெய் தளித்தார். (௧௭)

நாம னுங்கலைப் பனவனு நளிர்மதி முகத்துப், பூம னுங்குழற் பூவையும் புரிவொடு வைகிச், சோம னும்புக லுரோணியுந் துவசமீ னுயர்த்த, காம னுந்துணைத் தேவியு மெனக்களித் திடுநாள். (௧௮)

புலந்து றந்துவெம் பிணிகளாற் புணர்ந்துபூ சுரனு, நிலந்து றந்துட லிறந்திட நன்மதி நீங்கிக், குலந்து றந்திடா நீதியைக் குறித்தவள் களத்திற், கலந்து றந் துளாள் கலங்கினள் கைமையுற் றிருந்தாள். (௧௯)

---

(௧௭) அனைய = அந்த; அகமதில் மிகமகிழ்ந்து = மனதில் மிக்க சந்தோஷித்து; மனையில் = தனது வீட்டினில்; மறைச்சடங்கு=வேத விதிப்படி செய்யும் விவாக கன்மம்.

(௧௮) நாமன்னும் = நாவிற் பொருந்திய; கலைப் பனவனும்= வேதமோதும் பிராமணனும்; பூ மன்னும் (இடைக் குறை)=மலர்விளங்கும்;குழல்=கூந்தல்; புரிவோடு= விருப்பத்தோடு; வைகி=சேர்ந்து; துவசமீன்=மீனக் கொடி; உயர்த்த=கட்டிய.

(௧௯) புலந்துறந்து=அறிவு கெட்டு; உடலிறந்திட=சரீரத்தை நீத்து (பிணமாக); நன்மதி நீங்கி = நற்புத்தி கெட்டு; குலந்துறந்திடாநீதி = நீக்கப்படாத சாதியாசார முறைமை; குறித்து = கருதி; களம் = கழுத்து; கலம் = மாங்கல்யம்; துறந்துளாள் = நீங்கப்பெற்றவளாய்; கைமை=விதவைத் தன்மை.

வேறு.

வனவரிக் குயிலு மன்றிலும் வானில் வருநில வெ
ழுமதிக் கொழுந்துந், தினநிரை புரக்கு மாயர்வேய்ங்
குழலுந் திறம்பெறக் கறங்கு சேமணியு, மனலெனக்
கனலுங் காமவெந் தீயை யனிலமொத் தனுதின மூட்
டக், கனதனக் கிரிகள் பசலைபூத் தணையிற் கண்படை
பொருந்திலள் கலங்கி. (உ0)

கோடுவாய் கூடக் கலைவளர் திங்கட் குடைமதன்
படைபடும் பசும்புண், ணூடுநீ டழற்கோ னுழைந்தெ
னத் தென்ற லுலவநெட் டுயிர்த்துள முருகி, வாடுநா
லிடைபோ லங்கமு மெலிந்து மதனநோய் பொறுக்
கரிதாகித், தேடுமா டவர்கள் பலரையுங் காவிற் சிந்தனை
களித்திடச் சேர்ந்தாள். (உக)

மலைக்கிணை யெனப்பொற் சுணங்கலர்ந் தகன்று
வட்டமிட் டெழுந்திறு மாந்த, முலைக்கிடை யிடையுந்
தடித்தரி விளரி முரல்செழு முளரிபோன் முகமு,

(உ0) வரிக்குயில்=கோடுகளுள்ள குயில்; அன்றிலும்=அன்றிற்பட்சியும்; நிலவெழும் = ஒளிவீசும்; தினம்=பிரதிதினமும்; நிரை=பசுக்கூட்டம்; புரக்கும் = காக்கும்; ஆயர்=இடையரது; வேய்ங்குழல் = பொள்ளாங்குழலும்; திறம்பெற=திறமைபொருந்த; கறங்கு=ஒலிக்கின்ற; சே=இடபத்தின்; மணி = கழுத்திற்கட்டிய மணியும்; கனலும்=எரிக்கிற; அனிலம்=காற்று.

(உக) கோடுவாய் கூட = கீற்று வடிவாகிய சந்திரனது இரண்டு முனைகளுங் கூடும்படி; படை = அம்பு; பசும்புண்ணூடு = புதியபுண்ணினுள்; நீடு அழற்கோல் = அழலிற்காய்ச்சிய நீண்ட இருப்புக்கோல்; நெட்டுயிர்த்து=பெருமூச்சு விட்டு.

மலைக்கிடை யுதிக்கு மதியமொத் துடனு மந்திற மாயமு தூறு, மிலைக்கிடை மலர்ச்செவ் வாயிதழ் வெருப்பக் கருப்பமுற் றிருந்தன ளிப்பால். (௨௨)

அந்நக ருறையு மறையவ ரொவரு மறிந்தன ரவட்கடிந் தகற்ற, வின்னலுற் றிரங்கித் துணைவிழிப் புனலா லிணைமுலை களைக்குளிப் பாட்டிக், கன்னலிற் கனிந்த மொழிச்சவு மினியுங் கான்வழிச் சென்றிடுங் காலைப், பின்னவர் குலத்தில் வருமொரு காளை பிறைநுதலவள்கரம் பிடித்தே. (௨௩)

எக்குலத் துளைநீ யார்மனை பேரோ தெவ்விடத் தெய்துதி யென்ன, மைக்குழற் குயிலு முற்றவா றனைத்து மற்றவற் குணர்த்திட மயல்கூர்ந், திக்குவிற் குனிக்கு மதனனுக் குடைந்தாண் டிங்கிவள் கொங்கைமேற் காதன், மிக்குனக் கினியான் பதியெனத் தனது வியன்மனை மீதுகொண் டணைந்தான். (௨௪)

---

(௨௨) பொன்சுணங்கு = பொன்னிறத்தேமல்; அலர்ந்து = பூத்து; இடை இடையும் = தோற்கும் இடுப்பும்; தடித்து = பெருத்து; அரி = வண்டு; விளரி = எழுவகையிசையிலொன்று; மூரல் = பாடுகிற; மலைக்கு இடை = உதயகிரியின் மத்தியில்; இலை = இலைகளையுடைய; கிடை = செங்கெட்டி.

(௨௩) இன்னல் = துன்பம்; இரங்கி = வருந்தி; கன்னலின் = கரும்பைப்போலும்; கனிந்த = முதிர்ந்த ருசியுள்ள; பின்னவர் = சூத்திரர்.

(௨௪) உளை = உள்ளவள்; மனை = மனைவி; எய்துதி = போகின்றாய்; குயில் = குயில்போன்ற பெண், உவமையாகுபெயர்; மயல்கூர்ந்து = மோகித்து; ஆண்டு = அப்பொழுது; மிக்கு = மிகுந்து; வியன் = பெரிய.

மருவுயிர்த் திடுதண் மலர்க்குழ லணங்கு மற்ற வன் ருனுமா மலரிற், றிருவுயிர்த் திடுமைங் கணைக்கிழ வனுநற் றேவியு மாமெனக் கூடி, யிருவுடற் குயிரொன் றுமெனத் தழுவி யின்பமுற் றிருந்திடு நாளிற், கருவு யிர்த் தனள்பைங் காவியங் கண்ணி கணவனுந் தனதுள ளங் களித்தான். (உரு)

இன்னணஞ் சிலநாட் கழித்தனள் வேற்றார்க் கிவ ளுயிர்க் கணவனை குதலுந், தன்னலங் கெடுக்குங் களி மதுநுகர்ந்து தமியளா யிருந்துகங் குலின்வாய், மின்ன லந் தருநுண் ணிடைமடக் கொடியும் விரகவெந் தீச் சுட வெதும்பி, நன்னலந் துறந்தா னருந்திடும் வேட் கை நனியுறத் தனியிது புரிவாள். (உசா)

நடைதரு கொச்சை நாகுடன் புனிற்று னல்லி ளங் கன்றுறு தொழுவி, னிடைபுகுந் தருந்து மதுச் செருக் கதனு லிரங்குமா னீன்றகன் றிணைக்கொான்,

---

(உரு) மருவுயிர்த்து=வாசனைவீசுகிற; மா மலர் = பெருமை பொருந்திய தாமரை மலரை; இல் = வீடாகவுடைய; திரு = இலக்குமி; உயிர்த்திடும் = பெற்ற; கருவுயிர்த் தனள் = மகவை யீன்றனள்; பைங்காவி = அழகிய நீலோற்பலம்.

(உசா) தன் நலம்=தனக்குண்டாகிய நன்மைகளை யெல்லாம்; களி = மயக்குகின்ற; தமியளாய் = தனித்தவளாய்; கங்குலின்வாய் = இராத்திரியில்; மின்னலந்தரும் = மின்னலைப்போன்ற; மடம்=மடமைபொருந்திய; நல் நலம்=நல்லறிவு; தனி = தனிமையாக.

(உஎ) கொச்சை=பெண் ஆடு; நாகு=இளமைப்பருவமுள்ள; புனிற்று ஆன்=இளம் பசுவினது; இரங்கும் = வருந் தும்; ஆன் ஈன்ற=பசுவானதுபெற்ற; மிடையிருள்= அடர்ந்த இருளை; கடிய = அகற்றுதற்கு; தகழி = அகல்; வாக்கி=வார்த்து.

றுடையதன் னகத்திற் கொண்டுசென் றிரவி னூன ருந் திடுவதற் கெண்ணி, மிடையிருட் கடியத் தகழி நெய் வாக்கி மென் றிரி விளக்குமேற் றினளால். (உஎ)

அவ்வயிற் செருத்த தாவிளங் கன்றென் றறிந்த ன ளயர்ந்தனண் மயங்கிச், செவ்வயிற் கண்ணாள் கன்ன லோ ரிரண்டு சிவசிவ வெனத்தியா னித்துப், பவ்வநீ ருலகோர் பழித்தகட் குடித்த பழுதுவந் ததுவெனப் பயந்து, மெவ்வ மிலாம லூனுணத் துணிந்தாள் யாவ ரே விதிவலி கடப்பார். (உஅ)

புள்ளெனுங் கண்ணாள் புள்ளம தெடுத்துப் புர ணிக ளுரித்தரிந் துரிசை, யுள்ளவள் ளூரங்கள் வேறு வேறமைத்திட் டுவப்புறக் கருணைசெய் தருந்தி, வள் ளவாய்க் கமல நாயகன் பூரு வத்திசை வரும்புல ரியின் வாய், வெள்ளெனும் பனைத்து மள்ளினள் கொணர் ந்து வீதியிட் டிவையிசைத் திடுவாள். (உகூ)

வெய்யதீச் சுழல்கட் கொடுவரி வடிவால் மென்கு ழக்கன் றினை யொறுத்தின், றையகோ தின்று போயது

(உஅ) அவ்வயின் = அவ்விடத்து; செவ்வயிற்கண்ணாள் = கட் குடித்ததாற் சிவந்த வேல் போலுங் கண்களையுடைய வள்; கன்னல் = நாழிகை; பவ்வநீர் = ஒளியுள்ள சமுத் திரம்; பழுது = பாவம்; எவ்வம் = குற்றம்.

(உகூ) புள் = வண்டு; புள்ளம் = அரிவாள்; புரணி = மேற் றோல்; வள்ளூரம் = ஆவின் மாமிசம்; கருணை = பொரிக் கறி; வள்ளவாய் = கிண்ணம்போன்ற வாய்; கமல நாய கன் = சூரியன்; பூருவத்திசை = கிழக்குத்திக்கு; புலரி யின்வாய் = உதையவேளையில்; இசைத்திடுவாள் = சொல்லுவாள்.

மறுகி லனைவருங் காண்மினென் றெறிந்து, தையன்
மீண் டிற்பா லெய்தினள் வேளாண் டகைபெறு காளை
கேட் டெய்திச், செய்யவாய் மயிலை பிழைத்தனை
போலு மெனவவட் டேற்றின னிருந்தான். (௯0)

வெறுத்தன னிகவா னங்கவள் கொங்கை விழை
நலவேட்கைமீ தூர்ந்திட், டிறுத்தபே ரன்பா லன்று
போ லென்று மின்பமுற் றிருந்திடு நாளிற், கறுத்த
வல் விடத்தை நிகர்த்தவெம் பிணிகள் காயமீ துடற்
றிடத் தேம்பி, மறுத்தவிர் மதியை மருட்டுவாண் முக
த்தாள் வருந்தினண் மரணமுற் றனளே. (௯௧)

வேறு.

அச்சமை யத்தினி லடர்ந்து வாரியிற்
கைச்சமைக் கடுநிகர் கால தூதுவர்
பொய்ச்சமை மின்னிடைப் பூவை மென்மொழி
மச்சமை விழியுயிர் வெளவி யேகினர். (௯௨)

---

(௯0) கொடுவரி=புலி; வடிவால்=தொங்குகின்ற வால்; குழக்கன்றினை=இளங்கன்றை; ஒறுத்து=கொன்று; மறுகில்=வீதியில்; இல்பால்=வீட்டினிடத்து; வேள்=மன்மதன் போலும்; ஆண்தகைபெறு=ஆண்தன்மையுள்ள; செய்ய வாய் மயில்=சிவந்தவாயினையுடைய மயில்.

(௯௧) வெறுத்தனன் இகவான் = வெறுத்து நீங்காதவனாய்; விழை = விரும்பத்தக்க; நலவேட்கை = சிற்றின்ப ஆசை; இறுத்த=தங்கிய; உடற்றிட=வருத்த; மறு தவிர்=களங்கம் நீங்கிய.

(௯௨) வாரி=சமுத்திரம்; கச்ச(கைத்த)=கசந்த; பொய்த்து அமை மின் இடை=உளதாயும் இலதாயுமிருக்கிறமின்னல்போன்ற இடுப்பு; பூவை=நாகணவாய்ப்புள்; மச்சமைவிழி=மீன்போன்ற கருவிழிகளையுடைய பெண், அன்மொழித்தொகை; வெளவி=கவர்ந்து.

நந்தலி றென்புல நண்ணி நண்ணரும்
வெந்திறற் கூற்றின்முன் விடுப்ப நான்முகத்
தந்தமி றீவினை யுனைத்து மாய்ந்து பின்
பைந்தொடி முகத்தினைப் பார்த்துக் கூறுவான். (௩௩)

அன்றிருட் பொழுதினி லானின் கன்றினைக்
கொன்றிருந் தரன்றிரு நாமங் கூறிய
நன்றியிற் கொடுந்தழ னரகந் துய்த்திடு
மொன்றிய தீவினைக் குரிய எல்லைநீ. (௩௪)

சிலைமக ளாக்கிய தேவன் பின்வரு
மலைமகட் குடலிடம் வழங்கி வானதி
யலைமகட் சூடினோ னருளிற் கூறினான்
புலைமக ளாய்ப்புவி போதி நீயென்றே. (௩௫)

அந்தக னணையா லழகின் மேனியு
நொந்துடல் பொறுக்கொணா நோய்க ளுங்கொடு
கந்தமார் குவளைநேர் கண்க ளின்றியே
வந்தொரு புலைமகள் வயிற்றிற் றோன்றினாள். (௩௬)

---

(௩௩) நந்தலில் = அழிவில்லாத; நண்ணரும் = நெருங்கக் கூடாத; வெம்திறல் = கொடுந்தன்மை; நூல் = அவரவர் புரியும் வினையின்பதிவு கணக்கு; பைந்தொடி = வளையலையணிந்த பெண், அன்மொழித்தொகை.

(௩௪) நன்றியில் = புண்ணியத்தினாலே; துய்த்திடும் ஒன்றிய = அனுபவிக்கும்படிப் பொருந்திய; தீவினைக்கு = கொடுஞ்செய்கையை அனுபவித்தற்கு.

(௩௫) சிலை = கல்லை; மகள் = பெண்; வான் அலைநதிமகள் = அலையினையுடைய ஆகாய கங்கையாகிய பெண்; அருளில் = கிருபையைப் பெறுதலில்லாத; போதி = போவாயாக.

(௩௬) அழகில் = அழகில்லாத.

அறந்தவாத் துறவிர்கா ளணங்கு நோயுடன்
சிறந்தவாட் படைநிகர் திருட்டி யின்றியே
மிறம்புரி புலையர்தங் குலத்தில் வீந்தவள்
பிறந்தகா ரணமினிப் பேசக் கேட்டிரால். (௩எ)

உம்மையிற் கற்பொரீஇ யுளத்த வாக்கொடு
கைம்மையிற் பலரையுங் கலந்த தீமையாற்
செம்மையின் மேனியிற் றீய குட்டமும்
வெம்மைகொள் சூலைநோய் முதல்வி யாதியும். (௩அ)

பெற்றன ளவளொரு பிடிய தாயினு
மற்றவர் பசிக்கன லவிக்க விட்டுணுக்
குற்றம தாற்பசிக் கொடுமை கூர்துய
ருற்றவ டேம்பிடு முடலந் தாங்கினள். (௩கூ)

பலத்தினை மிகத்தரும் பசுவின் கன்றினை
வலத்தினிற் செகுத்தவள் ளூரங்கண் மாந்தலா

(௩எ) தவா = நீங்காத; அணங்குநோய் = துன்பஞ்செய்கிற நோய்; திருட்டி = (கண்) பார்வை.

(௩அ) உம்மை = முற்பிறப்பு; கற்பு ஒரீஇ = கற்பு நீக்கி; சூலைநோய் = வயிற்றுவலி.

(௩கூ) அற்றவர் = வறுமையாளர்; பசிக் கனல் = பசித்தீ; கூர் துயருற்று = மிகுந்த துன்பம்பொருந்தி; தேம்பிடும் = வருந்தும்.

(சO) பலத்தினை மிகத்தரும் = அதிக பயன்களைக்கொடுக்கிற, அஃதாவது பால், தயிர், நெய், கோசலம், கோமயம் இவைகளைக்கொடுத்தலும், பூசிப்பவருக்குப் புண்ணியங்களைக் கொடுத்தலும், அவரதுபாவங்களை யொழித்தலுமாம்; வலத்தினில் = பலத்தினால்; செகுத்து = கொன்று; வள்ளூரம் = பசுவின் மாமிசம்; கள் = கள்ளு; மாந்தல் = புசித்தல்; கொடிய நீர்மையாள் = தீயகுணத்தையுடையவள்.

னிலத்தினிற் புன்றொழி னீச ரென்றிடுங்
குலத்தினிற் றோன்றினள் கொடிய நீர்மையாள். (சo)

எண்ணுநல் வினையினை யிகந்து தீவினை
பண்ணிட வியற்றுகட் குடித்த பான்மையாற்
கண்ணிணை யின்றிமைக் கடலு டுத்திடு
மண்ணின்மேற் றோன்றிமெய் வருந்தி னாளரோ. (சக)

வேறு.

இனைய நீர்மைய ளீன்றதாய் தந்தைய ரிறப்ப
மனையெ னத்தனை மணந்துகொள் வார்களு மின்றி
யனைய வூர்ப்புலைச் சேரியி னையமேற் றருந்தித்
தினையி னோர்நல னின்றிநல் குரவொடு திரிந்தாள். (சஉ)

திரைமு திர்ந்தொர்மாத் திரையுநித் திரையிலாள் களத்த, மரைமு திர்ந்திடக் குரைத்திட வளைந்துமெய் கூனி, யுரைமு திர்ந்தவ ருவமமிட் டுரைத்தகொக் கொப்பாய், நரைமு திர்ந்துநல் விளமைபோய் முதுமைநண் ணியபின். (சந)

சொன்ன மாகநற் சிவநிசி நோற்றிடத் தொடங்கி, யன்ன மாநகர்ச் சனஞ்செல வறிந்தவர் கூடப், பின்ன மன்றிமற் றொருபுலை மடந்தைதோள் பிடித்துக், கன்ன லார்வய றுன்னுகோ கன்னமீ தடைந்தாள். (சச)

(சக) எண்ணும்=மதிக்கத்தக்க; இகந்து = ஒழித்து; இயற்றும்=செய்யும்; மைக்கடல்=கருங்கடல்.

(சஉ) நீர்மையள்=தன்மையுடையவள்; நல்குரவு=தரித்திரம்.

(சந) திரைமுதிர்ந்து=சரீரத்தின்தோல் சுருங்கி; களத்து= கண்டத்து; அமர் = பொருந்திய; ஐ=கபம்; குரைத்திட=இரும; உரைமுதிர்ந்தவர்=கற்றவர்.

(சச) சொன்ன=மேற்சொன்ன; அன்ன = அத்தன்மையாகிய; பின்னம்=நீங்காமல்; கோகன்னம் = கோகர்ன மென்னும் நகர்; இந் நகரின் எல்லை பசுவின்காது போலிருத்தலானும், இராவணன் சிவலிங்கத்தை யெடுத்த காலத்து அது பசுவின் காதுபோற் குழைந்து நீண்டதாலும் அந் நகர் கோ கர்ன மெனப் பெயர்பெற்றது.

தீய வெம்பசி கனற்றவோர் தெருத்தனி யிருந்து, தூய கண்ணிலேற் குதவுமின் சோறெனா விசந்து, கூய போதிலம் மறுகிடைக் குறுகுமோர் களிய, னாய வில்வ நிற் குணவிதென் றவள்கரத் தளித்தான். (௪௫)

புன்மை யாலவ னிட்டகூ விளிதனைப் புசித்தற், கன்மை யாலய லெறிந்தன னாங்கது பழைய, தன்மை யாகிய சிவலிங்க நாயகன் றலையிற், றின்மை தீர்ப்பவர் சாத்திய தழையெனச் சிறந்த. (௪௬)

அற்றை நாட்சிவ ராத்திரி யனந்தலூ ணகற்றிப், பற்றை நேர்கரப் பரையொரு பாகமாம் பரமன், கற்றை வார்சடை முடியெறி கவின்கொள்வில் வத்தாற், பிற்றை நாட்சிவ பூசனை புரிபலன் பெறுவாள். (௪௭)

யாம நான்குமன் றிரவுபத் துகமென வெண்ணித், தூம மாரழற் பசியினாற் றுயின்றில ளிருந்தாள், சேம மார்தடந் தேர்கடி தருணன்முன் செலுத்தக், காமர் செங்கதிர்க் கடவுளுங் குணபுலந் துதித்தான். (௪௮)

(௪௫) கனற்ற = எரிக்க; கூயபோதில் = கூவியபொழுது; அம்மறுகு இடை = அந்தத்தெருவினிடத்து; குறுகும் = வரும்; களியன் = மதர்த்தவன்; ஆய = தன்னுதாகிய.

(௪௬) புன்மையில் = அறிவின்மையால்; அன்மையால் = அல்லாததால்; அயல் = பக்கத்திலே; பழைய தன்மை = பழைமையான; தின்மை = தீமை.

(௪௭) அனந்தல் = நித்திரை; பற்றை = செங் காந்தள்; பிற்றைநாள் = மறுநாள்.

(௪௮) பத்து உகம் = பத்து யுகம்; தூமம் = புகை; சேமம் = தற்காப்பு; கடிது = விரைவில்; அருணன் = சூரியனதுதேர்ப்பாகன்; காமர் = அழகிய; செங்கதிர்க் கடவுள் = சூரியன்; குணபுலம் = கிழக்குத்திக்கு.

விடியலில் காண்டலு மீண்டொரு தெருத்தலை மேவி, யடிசிலேற்பிமற் றப்புலை யரிவைதோள் பற்றி, நெடிது சேறலுங் காறளர்ந் துயிர்நிலை நீங்க, மிடிசெய் மூப்புவெந் நோய்பசி விருத்திட வீழ்ந்தாள். (சகூ)

ஆத பத்தழல் கொளுத்திய நிலத்தில்வீழ்ந் தழுந்தி, யேத முற்றவள் பட்டவெந் துயரளவிலைப்பின், பாத கப்புலை மகளுட றணந்துயிர் பறிந்து, போத லுற்றிடத் தொடங்கியே புறப்படும் போதில் (௫0)

பணிப்ப ணிப்புயக் கணிச்சியம் படைப்பர னருளா, லெணிக்க ணிக்கருங் கணங்களை யேவிநீர் மேவிக், குணிக்கரும்புலை மகளுயிர் கொணர்மினென் றுரைப்ப, மணிச்செ ழுஞ்சுடர் விமானமோ டிம்பரின் வந்தார்.

அன்ன காலையிற் புலைமக ளாவியைப் பொலமென், றன்ன வேவருந் திவ்விய வுருவினிற் சேர்த்துக், கின்ன ராதியர் பாடிடக் கிளிமொழித் துவர்வாய்ச், சின்ன நூலிடை யரம்பையர் நடம்பயில் செய்ய.(௫உ)

(சகூ) விடியல் = உதயம்; அடிசில் = சோறு; நெடிது = தூரமாக; சேறலும் = செல்லலும்; கால் தளர்ந்து = கால் சோர்ந்து; உயிர் நிலை நீங்க = உயிரானது தன் நிலையினின்று நீங்கும்படி; மிடி = தரித்திரம்.

(௫0) ஆதபத்தழல் = சூரியவெப்பம்; கொளுத்திய = சுட்ட; ஏதம் உற்றவள் = குற்றம் பொருந்தியவள்; உடல் தணந்து = உடலைவிட்டு; உயிர் பறிந்து = உயிர் நீங்கி; போதலுற்றிட = போகுமாறு; தொடங்கிப் புறப்படும் = ஆரம்பித்து வெளிப்படுகிற.

(௫க) பணி = சர்ப்பங்களை; பணி = ஆபரணமாகப்பூண்ட; புயம் = புஜத்தில்; கணிச்சி அம்படை = அழகிய சூலாயுதத்தைத்தரித்த; பரன் = பரமேசுவரன்; எணி = எண்ணி; கணிக்கரும் = அளவிடற்கரிய; குணிக்கரும்; = மதித்தற்கரிதாம்; இம்பரில் = இவ்வுலகத்தில்.

(௫உ) பொலம் என்று உன்ன = பொன்னாற் செய்ததென மதிக்கும்; திவ்விய வுருவினில் = புண்ணியப் பயனையருந்துதற்குரிய தெய்வீகசரீரத்தில்.

தக்க துந்துபி முழக்கிடச் சாமர மிரட்ட, வக்க
ணத்தினி லவிர்மணித் தேர்மிசை யேற்றித், தொக்க
வெண்ணிறச் சோதிவிட் டொப்பறத் துலங்கு, மிக்க
பேரெழிற் கயிலையிற் செல்லுவான் விரைந்தார். (௫௩)

கண்ண னாயிரங் கண்ணனெண் கண்ணனற் கதி
ர்க, டண்ணெ னாண்மதிக் கடவுளுஞ் சலசநட் புடை
ய, வண்ண வான்கதிர் வானவர் முனிவர ருரகர், விண்
ணு லாவிய சித்தரோ டியக்கர்விஞ் சையர்கள். (௫௪)

பரிந்து போற்றினின் றவர்க்கெலா மருள்விழி பர
ப்பி, வரிந்த நீள்குரன் மாடகத் திவவியாழ் வாங்கிப்,
புரிந்த வார்சடை நாரதன் புகலருஞ் சுருதி, தெரிந்து
பாடிய பாடலிற் செவித்துணை கொடுத்து. (௫௫)

கையின் மான்மழுப் பிறங்கிடக் கனற்பிழம் பனை
ய, மெய்யி னீற்றொளி விளங்கிட விடநுகர்ந் திருண்ட,
மையி னிற்றிகழ் கண்டமும் வண்டொண் மிழற்றச்
செய்யி னூறுசெங் கமலநேர் வதனமுந் திகழ. (௫௬)

---

(௫௩) தக்க = அவனுக்குத்தகுந்த; சோதிதொக்க = பிரகாசம் பதிந்த; செல்லுவான் = செல்லும்படி; விரைந்தார் = விரைவாகச்சென்றார்.

(௫௪) கண்ணன் = திருமால்; ஆயிரங்கண்ணன் = இந்திரன்; எண்கண்ணன் = பிரம்மா; தண் என் கதிர்கள் = குளிர்ந்த கிரணங்களையுடைய; நாள்மதிக்கடவுள் = பூரணச் சந்திரன்; வண்ணம் = அழகில்; வான் = சிறந்த.

(௫௫) வரிந்த திவவி = இறுக்கிய கட்டுகளையும்; நீள் குரல் = நீண்ட நாதத்தையும்; மாடகம் = முறுக்காணிகளையும் உடைய; புரிந்த = முறுக்கிய; சுருதி = சுரம்.

(௫௬) பிறங்கிட = விளங்க; இருண்ட மையினில் = கறுத்த மை போல; பாண் = இராகத்தை; மிழற்ற = பாட; செய்யில் = வயலில்; ஊறுகிற = உற்பத்தியாகிற.

படருமென் கொடி யறுகிலைப் பசுமையாற் பொறிப்பை, விடநெடும்பணிச் சுடிகையிற் றிகழ்மணி வெயிலா, லடர்த டந்திரைக் கங்கையா லணிசடா டவியிற், றொடருஞ் சந்திர னிந்திர சிலையெனத் தோன்ற. (௫௭)

உழலை சேர்பவ வெயிற்கொதுங் கிடத்தன துபய, கழலை நீழலா யடியவர்க் கருள்புரி கந்தன், குழலை யாழினை யமுதினைக் குழைத்தன குதலை, மழலை கேட்டுள மகிழ்ந்திடு வாணகை வயங்க. (௫௮)

கலக வாள்விழி யரம்பையர் கவரிகா லசைப்ப, வுலகி லாருயி ரனைத்தையும் பெற்றசிற் றுதரத், திலக வாணுத லுமையுடன் செம்பொனு லியன்ற, விலகு மாமணி யாசனத் திருந்தன னிறைவன். (௫௯)

---

(௫௭) மென்கொடி = மெல்லிய கொடியாகிய; அறுகு = அறுகம்புல்; இலை = மற்றைப் பத்திரங்கள்; பொறி = புள்ளியுடைய; பை = படம்; சுடிகையில் = உச்சியில்; திகழ்மணிவெயிலால் = விளங்கும் மாணிக்கத்தினது ஒளியினால்; சடாடவி = சடைக்காடு; தொடரும் = தவழும்; இந்திரசிலை = வானவில்.

(௫௮) உழலைசேர் = வெப்பத்தையுடைய; பவ வெயிற்கு = பிறவியாகியவெய்யலுக்கு; கழலை = திருவடியை, நீழலாய் = நிழலாக; குழைத்தன = குழைத்தது போன்ற; குதலைமை = விளங்காதசொல்; மழலை = நிரம்பாத இளஞ்சொல், அஃதாவது சொல்நிரம்பாவிடினும் பிறருக்கு விளங்கக்கூடிய வார்த்தையாம். குதலை, மழலை என்பவற்றிற்கு, திருக்கோவையாருரையில் உரையாசிரியர் சிகாமணியாம் பரிமேலழகர் இங்ஙனம் பொருள் கூறி யுள்ளனரென்க.

(௫௯) கலகம் = மனக்கலக்கத்தை யுண்டாக்கும்; கவரி = வெண்சாமரையால்; கால் அசைப்ப = காற்றையுண்டாக்க; உதரம் = வயிறு; திலகம் = நெற்றிப்பொட்டு; இயன்ற = செய்த.

ஆறு சூடிய வண்ணன்முன் னந்தரத் தியங்கு,
மேறு சீர்மணி விளங்கிய விமானமின் றிறக்கிக், கூறு
மிப்புலை மடந்தையை விரைந்துடன் கொடுபோய்,
வீறு சேர்கண நாதரக கணத்தினில் விடுத்தார். (சுo)

எம்பிரான்றிரு வுளங்கனிந் திரங்கியங் கவடன்,
வம்பு லாந்திரு மலர்முக நோக்கியிவ் வனைக்க, ணம்பு
லாம்விழி மாதரோ டிருத்திமற் றதற்பி, னும்பர் நாடரு
முத்தியுந் தருதுமென் றுரைத்தான். [சுக)

அனைய வவ்வுரை கேட்டன ளகமகிழ்ந் திருந்தா,
ளினைய மாக்கதை படித்தவர் கேட்டவரெவரும், வினை
யொழிந்தர னருள்பெறு வாரென விரித்துப், புனைநெ
டுஞ்சடைச் சூதனம் முனிவர்க்குப் புகன்றான். (சுஉ)

(சுo) இயங்கும் = செல்லுகிற; சீர் ஏறு மணி=சிறப்பு மிகுந்த மணி; வீறு=பெருமை; அக்கணம்=அந்த க்ஷணம்.

(சுக) கனிந்து இரங்கி = உள்ளமிளகிக் கருணைசெய்து; வம்பு லாம் = வாசனை பொருந்திய; அம்புலாம் = அம்பு போன்ற.

வசனம்.

நைமிசாரண்யவாசிகளே! இச் சிவராத்திரியின் சரிதங்கள் இன்னும்பலவுள அவற்றிலொன்றினைக்கூறுவேன் கேட்பீராகவென்று சூதமாமுனிவர் சொல்வாராயினர்.

விண்ணவராதியர்விரும்பும் பல வளங்கள் பொருந்திட கேகய நாட்டின் ஓர் நகரில், தராதலம்புகழுஞ் சதுர்மறையோதும் பிராமணனொருவன் பெறுமகவின்றி அருந்தவம் புரிந்து அளவிலாத் தூற்குணம் நிரம்புமோர் பெண்ணை நியதியாற் பெற்றனன். அவன் அப்பெண்ணுக்குச் சவுமினியெனப்பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தனன். அச்சவுமினி யென்பவள் அரம்பையை யொத்த அளவிலா வனப்பு வாய்ந்து வளர்ந்து சிற்றிலிழைத்தல் சிறுதேருருட்டல் முதலிய குழவிச்செயல்களைப் புரிந்து பேதைப்பருவமடைந்து தன்னைப்போன்ற பெண்களோடு கூடி, கழங்கு ஊசல் முதலியன ஆடி, மகிழ்ந்து காலங் கழித்து வந்தனள்.

பின்னர் அச்சவுமினி யென்பாள்: கறுத்த இருள், களாக்கனி, கருமேகம், கொடிப்பாசி, கூந்தற்பனை, கொன்றைக் கனி, வண்டு, கருமணல் இவற்றையொத்து, நெறித்து விளங்கும் கூந்தலினையும்; மூன்றாம் பிறையை யொத்த நெற்றியினையும்; வில்லையொத்த புருவங்களையும்; வேல், மாவடு, வாள், கயல்மீன், வண்டு, குவளைமலர், தாமரைமலர், நீலோற்பல மலர், காக்கணமலர், அம்பு, விஷம், அமுதம், மான், இவற்றை யொத்த விழிகளையும்; வள்ளைக் கொடியை யொத்த குழைகளையணிந்த காதுகளையும்; எள்ளின்மலர், குமிழமலர், இவற்றை யொத்த நாசியினையும்; செவ்வல்லி, முள்முருக்கிதழ், கொவ்வைக்கனி, செந்நெட்டி, பவளம், இவற்றையொத்து கண்ணுகிய கூரியவேல் தைத்தலாலுண்டாம்விஷத்திற்கு விஷமாகிய அமுதத்தினைநல்கும் சிவந்த இதழையும்; வெண்

முத்து, முல்லையரும்பு, பட்சிகளிறகினடி இவற்றை யொத்த பற்களினையும்; தேன், சருக்கரை, கற்கண்டு, முச்சுழுங்கனி, கரும்பிரசம், பால், அமுதம், பசுங்கிளி, குயில், குழல், யாழ் இவற்றை யொத்த குளிர்ந்த மொழியினையும்; சந்திரன், தாமரைமலர், இவற்றையொத்த முகத்தினையும்; கமுகை யொத்த கழுத்தினையும்; மூங்கிலை யொத்த தோள்களினையும்; மகரயாழையொத்த முன்கைகளினையும்; தாமரைமலர், மாந்தளிர், செங்காந்தண் மலர் இவற்றை யொத்த அங்கைகளினையும்; கிளிமூக்குப் போன்ற கரநகங்களினையும்; தாமரையரும்பு, யானையின் மருப்பு, பொற்குடம், தென்னங்குரும்பை, சக்கரவாகப்பட்சி, உயர்ந்தமலை இவற்றை யொத்த குஜங்களினையும்; படருங்கொடி, பூங்கொம்பு, மேகத்தினது மின்னல், மதனனது உடல், மெல்லிய இழை, சிம்மம், உடுக்கு, இவற்றை யொத்த இடையினையும்; திருமகளுறையுந்தாமரை மலர் போன்ற பாதங்களினையும் உடையவளாய் சுக்கிலபக்கத்துச் சுதாநிதி போல வளர்ந்து மங்கைப்பருவமடைந்தனள்.

அதனைக்கண்ட தாய்தந்தையர் அகமிகமகிழ்ந்து தமது மரபில் ஒரு பிராமணனுக்கும் சவுமினிக்கும் சுபமுகூர்த்தத்தில் திருமணம்புரிவித்தனர். அந்தப்பிராமணனும் சவுமினியும் முறையே பிரம்மதேவன் சரஸ்வதிபோலவும், சந்திரன் ரோகணிபோலவும், மன்மதன் ரதிபோலவும், கூடிக்களித்து வாழ்ந்திருந்தனர்.

இவ்வாறிருக்கையில் அந்தப்பிராமணன் வெம்பிணிகளாற் பீடிக்கப்பட்டு வருந்தியிறந்தனன். உடனே சவுமினியென்பவள் தம்மரபு வழக்கப்பட்டி நாணிழந்து கைமையுற்றிருந்தனள்.

பின்னர், குயில், அன்றில், சந்திரன், வேய்ங்குழல், இடபத்தின்மணி இவைகள் காற்றையொத்து வெங்காமத்தீயை மூட்ட, மதனன் எய்யும் பாணங்கள் தைத்தபுண்களில், நெருப்பிற் காய்ச்சிய இருப்புக்கோல்களை நுழைத்தது போற் றென்றல் வீச, குஜங்களிற் பசலைபூப்ப; வாடுமிடைபோல்

அங்கமுமெலிந்து அணையிற் கண் துயில் வாராது கலங்கி வருந்தி மதன நோயைச் சகியாதவளாய் ஆடவர் சிலரை, கரவிற் கூடி உள்ள முவந்தனள். ஆனதால் நூல்போன்ற இடைதடிப்ப; தேகம், முகம், இதழ் இவை சந்திரனைப்போல் வெளுப்பக் கருப்ப முற்றிருந்தனள். அந்நகரில் வசிக்கும் பிராமணர்களெல்லாம் அதனையறிந்து அவளைக் கடிந்து அந்நகரைவிட்டு அகற்ற; அவள் தீராத்துயரமுற்றுக் கண்ணீர் தாரை தாரையாகச் சிந்த அழுது கொண்டு அருகிலுள்ள ஒரு காட்டினிற் சென்றனள். இங்ஙனஞ் செல்லுகையில் அக்காட்டிற் செல்லும் காளைப்பருவமுள்ள ஒரு சூத்திரன் கண்டு பெண்ணே! நீ எந்தவூர், என்னஜாதி, யார்மனைவி, நின்பெயரென்னை, எங்குபோகின்றாய் என்று கேட்க, சவுமினி தனது விருத்தாந்தங்களைக் கூறியழுதனள். அந்தக்காளை சவுமினிமேல் காதல் கொண்டு பெண்மயிலே! உனக்கு நானே நாயகனாக விருக்க இச்சிக்கின்றேன் அது உனக்குச் சம்மதமோ வென்று கேட்க, அவள் அதற்கிசைந்தனள். உடனே அக்காளை அவளையழைத்துக்கொண்டுபோய்த் தன்வீட்டையடைந்தனன். அன்றுமுதல் அவ்விருவரும் மதனனும் ரதியும் போலக் கூடி வாழ்ந்திருந்தனர்.

இங்ஙனஞ் சின்னாட்சென்றபின் அவள் ஓர் மகவைப்பெற அதனைக்கண்டு அவ்விடலை அகமகிழ்ந்திருந்தனன். பின்னரோர் ஞான்று அவ்விடலை அயலூருக்குச் சென்றிருந்ததால் அன்றிரவு சவுமினி தனியேயிருந்து, நன்மைகளையெல்லாங் கெடுக்கும் மதுபானம் பண்ணினாள். உடனே மாமிசம்புசிக்கும்விருப்பம் அதிகரித்ததால்,அவள் ஒரு கத்தியை யெடுத்துக்கொண்டு ஆடுமாடுகள் கட்டுந் தொழுவத்திற்குச் சென்று அங்கு இருளாயிருந்தாலும் தனக்குக் குடிமயக்கம் அதிகரித்திருந்ததாலும் அத்தொழுவத்திற் கட்டியிருந்த பசுவின் இளங்கன்றினை ஆடெனநினைத்துக் கத்தியாலரிந்து எடுத்துக்கொண்டு வீட்டிற்குட்சென்று விளக்கு வெளிச்சத்திற் பார்க்க, தான் கொன்றது ஆடல்லவென்றும் பசுவின் கன்றுமென்றும் தெரிந்தனள். அவள் தீமைக் களஞ்சியமாயிருப்பவளே யாயினும், பிராமண

குலத்திற்பிறந்தவளானதாலும், கோவதை செய்தல் மகாபாதக மெனத் தன் தந்தை கூறியுள்ளதைக் கேட்டிருந்தவளான தாலும், முற்பிறவிகளில் அவள் செய்த புண்ணியத்திறு லும், அப்பொழுது சற்று நல்லறிவு தோன்ற மனதில் ஒரு வித அச்சமுண்டாய், உலகத்திலுள்ள உத்தமரா லிகழப்பட்ட கள்ளைக்குடித்ததாலல்லவோ இப்பாதகஞ்செய்ய நேர்ந்ததுஎன நினைத்து அயர்ந்து இரண்டு நாழிகை நேரம் சிவ சிவ சிவ சிவ வெனத்தியானித்திருந்தனள். உடனே அவள் ஆணவ மலத் த டிப்பினுல் திரோதானசத்தி வயத்தினளாய், கொன்று விட் டோம் இனிவருந்துவதிற் பயனென்னை நமது இச்சையை முடித்துக்கொள்வதே தகுதியாமெனத் துணிந்து அக்கன்றின் மாமிசத்தை யுண்ணுமாறு கத்தியால் அதன் தோலையுரித் தெ றிந்துவிட்டு மாமிசங்களை யெடுத்துச் சமைத்து ஆசைதீர அரு ந்திமகிழ்ந்துறங்கினள். மறுநாள் உதயகாலத்திலெழுந்து அவள் அத்தெருவிலுள்ளார் கேட்கும்படி ஐயையோ காட்டில் வாழும் புலி என்வீட்டில் வந்து பசுவின் கன்றைக் கொன்று தின்று போயிற்றே என்செய்கேனெனக் கூச்சலிட்டு அந்தக் கன்றின் தோலையும் எலும்புகளையும் வாரியெடுத்துக்கொண்டு போய்த் தெருவிலெறிந்து இருந்தனள். பின்னர் அயலூருக்குச்சென்றி ருந்த விடலையாகிய அவளது கணவன் வீடுவந்து சேரலும், அவனிடமும் அவள் அங்ஙனமே புலி வந்து கன்றினைக்கொ ன்று தின்று போயிற்றெனக்கூறி அதற்காக மிகுந்த துக்கப் படுபவள்போற் பாசாங்கு செய்தனள். அவ்விடலை கேட்டுப் பெண்ணே! அந்தப்புலி வீட்டினுள் வந்து உன்னைக் கொல்லா து யோனதைப்பற்றி மகிழ்ச்சியடைவதை யொழித்து ஒரு பசு வின் கன்றினுக்காக நீ இப்படி இரங்குதல் தகாதென்று சொல் லி அவளைத் தேற்ற, அவள் அதனைக்கேட்டு மனந்தேறினவள் போலிருந்தனள். பிறகுஅவ்விடலையும் சவுமினியும் முன்போற் கூடி இன்பமுற்று நெடுங்காலங் கழித்தபின்னர் அந்தச் சவுமி னியென்பாள் கொடியபிணிகளால் வருத்தப்பட்டு மரணமுற் றனள். அப்பொழுது எமதூதர் அங்கு வந்து அவளுயிரைப்

பாசத்தாற் பிணித்துக்கொண்டுபோய்த் தென்புலஞ் சேர்ந்து கூற்றன் முன் விடுப்ப, அக் கூற்றன் சித்திரகுப்தனால் அவள் செய்த தீவினையனைத்தும் ஆய்ந்தனன்.

பின்னர் அந்தகன் பரமேசுவரனது திருவருளை முன்னிட்டு அவளைப்பார்த்து நங்காய்! நீ பல தீவினைகளைப் புரிந்துள்ளனையாயினும் அன்று இருட்பொழுதினில் பசுவின்கன்றைக் கொன்றவுடன் சிவபிரானது திருநாமத்தை இரண்டு நாழிகை நேரம் ஜபித்ததால் இங்குள்ள நரகங்களையனுபவிக்கு முரிமையொழிந்தது. ஆகையால் பூவுலகின்கண் புலையர் குலத்திலே, இரண்டு கண்களுமின்றிக் கோரரூபத்துடனும், உடல் பொறுக்கொணு நோய்களுடனும் பிறக்கக்கடவாயெனக் கட்டளையிட்டனன். அவள் உடனே இப்பரதகண்டத்துத் தென்பாங்கிலே கோகர்ன மென்னும் உயர்ந்த சிவத் தலத்தினுக்குச் சிறிது தூரத்திலுள்ள ஒரு சிற்றூரிலே, அந்தகன் கூறிய அடையாளப்படி ஓர் ஏழைப் புலைச்சி வயிற்றிலே மகவாய்ப்பிறந்து வளர்ந்தனள். இங்ஙனம் சில ஆண்டுகள் சென்றபின் அவள் தாய் தந்தையர் இறந்தனர். அதனாலும், குட்டமுதலியநோய்களையுடைத்தாயிருக்குந் தன்னை மணம் புரிவாரில்லாமையானும் அந்தப்புலைச்சேரியில் இரந்துண்டு தரித்திரத்துடன் தினையளவேனும் இன்பமின்றித் துன்பமுற்றிருந்தனள்.

சவுமினி யென்பாள் பிந்திய பிறவியில் கண்களில்லாது நோயாளியாய்ப்பிறந்து இரந்துண்டு காலங்கழித்த காரணம் யாதோவெனின்? அவள் கைமையுற்றபின் கற்பு என்பதை அறவொழித்துப் பலபுருஷர்களைச்சேர்ந்த பாவத்தால் குட்டம், சூலை என்னும் வியாதிகளையுடையவளாயினள்; அன்றியும் பசுவின் கன்றினைக்கொன்று அருந்திய பாவத்தால் புலையர் குலத்திற் பிறந்தனள்; கட்குடித்த பாவத்தால் குருடியாயினள்; அவள் வாழ்நாட்களில் ஒரு நாளிலாவது பசித்து வந்தவருக்கு ஒரு பிடியன்னமும் இடாத பாவத்தால் ஏழைப்புலைச்சி வயிற்றிற்பிறந்து இரந்துண்டு வருந்துவாளாயினள் என்பனவேயாம்.

அவள் இங்ஙனமிருந்து காலங்கழித்து இளமைப்பருவங் கடந்து முதுமைப்பருவமடைந்து, கொக்கைப்போல் வெளுத்த நரையுந் திரையும் பொருந்த, சரீரம் வில்லைப்போல் வளைய, ஒரு கணமும் நித்திரை பொருந்தவொட்டாது கண்டத்திலே கபம்சிக்கி இருமலையெழுப்ப,துன்புற்றிருந்தனள். இப்படியிருக்கையில் முன்னர்க்கூறிய சிவராத்திரி விரதமிழைத்தற்கு அந்நகரிலுள்ளஅநேக மனிதர்கள்,சமீபத்திலுள்ள கோகர்ணம் என்னுந்தலத்திற்குச்சென்றனர். இந்தப்புலைமாதுஅதனைத்தெரிந்து ஐயமேற்றுண்ணுமாறு மற்றொரு புலைமடந்தையின் கரத்தைப் பற்றிச் சென்று அந்தக் கோகர்ணமென்னுந் தலத்தையடைந்து சந்நிதிவீதிக்கு எதிரிலிருந்து ஐய! கண்களில்லாதவளாகிய எனது வயிற்றில் மூளுந்தீயையவித்தற்குச் சோறிடுங்கள் சோறிடுங்கள் என்று கூவிக்கொண்டிருந்தனள். அன்று சிவராத்திரி தினமானதால் ஏராளமான மனிதர்கள் அந்நகரில் வந்து நிறைந்திருந்தனர். அப்படியிருந்தும் இப்புலைமாதின் நல்லூழின்றால் அன்று பகல் முழுதிலும் ஒருவரேனும் அவளுக்கு உணவளித்தாரில்லை.

பின்னர் இரவிலும் அவள் அவ்வாறே கூவிக்கொண்டிருந்தனள். அப்பொழுது அவ்வீதியின் வழியே செல்லும் துஷ்டனொருவன் அவளைப்பார்த்து விளையாட்டாக அணங்கே! இதோ உனக்கு உணவளிக்கின்றேன் வாங்கிக் கொள்ளென்று சொல்லி அருகிலிருந்த வில்வமரத்திலுள்ள தழைகளைப்பறித்து அவள்கரத் தளித்துச் சென்றனன். அந்தப் புலைமாது வாங்கிக் கையாற்றடவிப்பார்த்து அது உணவு அல்லாததால் அத்தழைகளைப் பக்கத்தி லெறிந்தனள். அப்படி அவள் எறிந்த வில்வத்தழைகள், அரிய சிவபூசைசெய்து வினைகளை யொழிப்பவர் அர்ச்சிக்கும் மலர்போலப் பக்கத்திலிருந்த பழைமையாகிய ஒரு சிவலிங்கத்தின் முடிமீது வீழ்ந்தன. பின்னர் அவ்விரவு முழுதும் அவள் அங்ஙனமே கூவிக்கொண்டிருந்தும் எவரும் உணவளித்தாரில்லை. இங்ஙனம் சிவராத்திரிதினத்தில் கோகர்ணமென்னுந் தலத்தையடைந்து அற்றைப் பகலிரவு முழுதுமவள் பட்டினியிருந்ததாலும், நித்திரை யகற்றியதாலும், வில்வத்

தழைகளைச் சிவலிங்கநாயகன் முடிமீது எறிந்ததாலும் அவளது ஆகாமியம் சஞ்சிதமென்னும் வினைகளைப் பற்றறவொழித்துப் புனிதையாயினள்.

பின்னர் அப் புலைமாது பலநோய்களினு மிகுந்து பசிநோய் வருத்தியதால் அவ்விரவு முப்பதுநாழிகையை முப்பது யுகமாகக் கழித்துப் பொழுது விடிந்தவுடன் சோறு இரப்பதற்கு அவ்விடத்தையகன்று முன்போல் மற்றொரு புலைமடந்தை கரத்தைப்பற்றிச் சிறிது தூரஞ்சென்றனள். அப்பொழுது கொடிய பல பிணிகளோடு, பசி, மூப்பு என்னும் பிணிகளும் பிணித்துவருத்த அவள் கைகால் தளர்ந்து சூரியவெப்பம் பதிந்த பூமியில் விழுந்து மரணவேதனையென்னும் அளவிலாத் துன்பமுற்று இறந்தனள்.

அப்பொழுது கயிலாயபதியானவர் கருணைகூர்ந்து தமது கணங்களை யழைத்து நீவிர் நமது கோகர்னமென்னுந் தலத்தை யடைந்து, அங்குத் தனது தூலவுடலை நீக்கும் புலை மாதினை விமானத்தேற்றிக் கொணர்மின் எனத் திருவாய் மலர்ந்தனர்.

உடனே அக்கணங்கள் பெருமான் ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டு அழகிய மணிகள் பதித்த விமானத்துடன் புறப்பட்டு ஆகாய மார்க்கமாய்ச்சென்று கோகர்னம் என்னுந் தலத்தையடைந்து அப்புலைமாதினுயிரை, புண்ணியப் பயனை யருந்துதற்குரிய தெய்வீக சரீரத்திற் பொருத்தித் தாம்கொணர்ந்த விமானத்திருத்தி, எடுத்துக்கொண்டு அந்தரதுந்துபி முதலிய தேவவாத்தியங்கள் முழங்கப் புறப்பட்டு முன்போலக் ககனமார்க்கமாய் விரைந்துசென்று அழகிய கயிலையை யடைந்து அப்புலைமாதினை விமானத்தினின்றிறக்கி, கங்கையைச் சடையிற்றரித்த பரமேசுவரன் சந்நிதியில் நிறுத்தினர். பரமபதி அப்புலைமாதினைக் கடைக்கணித்து நீ இம்மலையின்கணுள்ள மாதர்களோடு கூடி வாழ்ந்திருப்பாயாக, பின்னர் தேவர்கட்குங் கிட்டுதற்கரிய மோட்ச சாம்பிராச்சிய மளிப்பேம் எனத் திருவாய் மலர்ந்தனர். உடனே அம்மாது உளமகிழ்ந்து பெருமான் ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டு அவ் வரையிலுள்ள மாதர்களோடு கூடி அத்தெய்வீக சரீரத்தோடு வாழ்ந்திருந்தனள்.

சவுமினிச் சருக்கம் முற்றிற்று.

கன்மாட பாதச் சருக்கம்.

ஏதமற் றுயர்ந்த சீர்த்தி பெம்பிரா னிரவின் காதை, யோதமற் றுளதொன் றுங்கட் குணர்த்துவன் கேண்மி னென்று, மாதவத் துயர்ந்த செய்ய மறைதெரி முனிவர் கேட்பச், சூதனுற் றமுதமாரி சொரிந்தெனச் சொல்லலுற்றான். (க)

பைம்புலி புலர்த்துங் கொங்கைப் பாவைய ரூடுங் காலச், சம்புலி வருந்த மாலைச் சமனெயி றென்னவேக, வெம்புலி யென்ன முன்னி மேற்றிசை தோற்று மென்கீற், றம்புலிக் கொழுந்தூ ரிஞ்சி யயோத்திமா நகரொன் றுண்டால். (உ)

(க) ஏதமற்று = குற்ற மற்று; செய்ய மறை = சிறந்த, வேதம்.

(உ) பைம்புலி=சிறந்த சாந்தினை; புலர்த்தும்=பூசும், அல்லது உலரச்செய்யும்; ஊடுங்கால்=ஊடலைச்செய்யுங் கால்; அச்சம்புல்லிவருந்த = அச்சமடைந்து வருந்தும் படி, ஈண்டு புலியெனலிடைக்குறை; மாலைச்சமன் = மாலைக்காலமாகிய இயமனது; எயிறன்ன = வளைந்த பல்லைப்போலவும்; வேகவெம்புலி=வேகமாய்ப்பாயும் கொடிய புலிபோலவும்; முன்னி = எதிர்ப்பட்டு; மென்கீற்று அம்புலி=மெல்லிய பிளப்புவடிவாகிய சந்திரன்; ஊர்=தவழ்ந்து செல்லுகிற; இஞ்சி=மதில்.

கருத்து.

பசிய களபத்தினை யணியும் தனங்களையுடைய மடந்தையர் ஊடலைச்செய்யுங்காலத்து அவர் அச்சம் பொருந்தி வருந்துமாறு, மாலைக்காலமாகிய இயமனது வக்கிரதந்தம்போலவும், வேகமாய்ப்பாயும் புலி போலவும், மேற்குத்திக்கிற்றோன்றி எதிர்ப்படும் கீற்று வடிவாகிய சந்திரன் தவழ்ந்துசெல்லும் மதில்களையுடைய அயோத்தி நகர் என்பதாம்.

மன்னர்தம் மன்ன னென்ன வருந்தசரதன்பான் முன்னாட், பன்னக மீதிற் றுஞ்சும் பசுந்துழாய் முகுந்தன் மேன்று, மங்கக ரீஷிக்கும் வேந்த னுதயன் குலத்தில் வந்தோன், கன்னலந் தருதிண் டோளான் கருதலர்க் கடியும் வாளான். (௩)

குத்திர மறவோர் செய்ய கோல்வளை யாமற் கோளிப், பத்திர சயன னென்னப் பரிந்துயிர் பாதுகாப்போ, னத்திர நயனச் செவ்வா யரிவையர்க் கனங்க னன்னுன், மித்திர சகன னமம் விளங்கிலை யலங்கல் வேலோன். (௪)

குன்றென வளர்ந்து வீங்குங் குவிமுலைப் பவளச் செவ்வாய், மன்றலங் கோதைக்கோதை மதயந்தி யென்னு மாதைத், தன்றடஞ் செங்கை பற்றிச் சடங்குசெய் தழல்சான் ருக, முன்றவ முடிவான் மன்றன் முடித்தவன் முயங்கு நாளில். (௫)

---

(௩) வரும் = தோன்றிய; துஞ்சும் = தூங்குகிற; தோன்றும் = அவதரித்த; கல்நலம் = மலையின்றன்மை பொருந்திய; கருதலர் = பகைவர்; கடியும் = கொல்லுகிற.

(௪) குத்திரம் ஆற = வஞ்சனை நீங்க; ஓர் = ஒப்பற்ற; செய்ய கோல் = செங்கோல்; கோளி = ஆலமரத்தின்; பத்திரம் = இலை; அத்திரநயனம் = அம்புபோன்றகண்ணையும்; மித்திரசகன நாமம் = மித்திரசகனன் என்னும் பெயரையுடைய; இலை = இலைவடிவினதாகியும்; அலங்கல் = மாலையைத்தரிக்கப் பட்டதாகியும் விளங்கும்; வேலோன் = வேலாயுதத்தை யுடையவன்.

(௫) அம் கோதை = அழகிய மாலையை யணிந்த; கோதை = கூந்தல்; சான்ருக = சாட்சியாக; முன் தவ வடிவால் = முன்செய்து முடித்த தவத்தினால்; முயங்கும் = தழுவி வாழும்.

விலங்குபுள் கலங்க மாய்க்கும் வேட்டமேல் விருப்ப முற்றி, யுலங்கெழு வயிரத் தோளா னொண்மலர் பொதுளிப் பூத்த, பொலந்திரு சினைகள் வானம் போனவெங் கானம் போவான், பலங்கொள்கா ழகப் பட்டாடை பட்டிகை மருங்கிற் சேர்த்தி. (சு)

செஞ்சுட ரெறிக்குஞ் செம்பொற் செழுமணி மகுட நீக்கிக், குஞ்சிபூந் தொடையிற் சூழ்ந்து குலவிட விசித்துக் கூர்மை, விஞ்சிய சுரிகை சேர்த்து வெறுக்கையி னமைத்த பச்சை, மஞ்செனத் தோற்றுஞ் சோதி மரகதக் கவச மிட்டு. (எ)

(சு) வேட்டமேல் = வேட்டையாடுதலில்; உலம் = கல்லுருண்டை; கெழு = ஒத்த (இடைச்சொல்லுமாம்); வயிரம் = பலம்; ஒள் மலர் = அழகிய புஷ்பங்கள்; பொதுளி = நெருங்கி; பூத்த = மலர்ந்த; பொலந்தரு = அழகு பொருந்திய; சினைகள் = கிளைகள்; வானம்போன = வானத்தையளாவிய; போவான் = போகவேண்டி; பலங்கொள் = வலிமை பொருந்திய (அருத); காழகம் = கருநிறமுள்ள; பட்டு ஆடை = பட்டுவஸ்திரம்; பட்டிகை = கச்சைப்பட்டை.

(எ) செஞ்சுடர் எறிக்கும் = சிவந்த ஒளி வீசுகிற; செம்பொன் = சிவந்தபொன்; செழுமணி = அழகியமாணிக்கங்கள்பதித்த; குஞ்சி = குடுமியானது; பூந்தொடையில் = பூமாலையால்; சூழ்ந்து = சுற்றப்பட்டு; குலவிட = விளங்க; விசித்து = அதை இழுத்துக்கட்டி; கூர்மை விஞ்சிய = கூர்மையதிகரித்த; சுரிகைசேர்த்து = உடைவாளைத்தரித்து; வெறுக்கையில் அமைத்த = பொன்னாற்செய்யப்பட்ட; பச்சைமஞ்சென = பசிய மேகம்போன்ற; கவசமிட்டு = மூடியைத் தேகத்திற் றரித்தும்.

கைப்புடை கட்டி வென்னிற் கடுங்கணைத் தூணி தூக்கி, மைப்புடை வரையுங் கண்ணூர் நுதனிகர் வரி வில் வாங்கி, மெய்ப்புடை மனங்கா லொத்து விரை யுமைங் கதியிற் செல்லு, நெய்ப்புடை மேனி மேக நீணிறப் பரிமேற் கொண்டான். (அ)

சங்கொடு படகந் கொம்பு தவிறுடி தழங்கி யார்ப்ப, வெங்கொடுங் கொலைசெய் வாளி வில்லொளி விளங்கும் வைவே, லங்கவை தரித்த தானை யளவில சூழ மண்ணிற், பொங்குநுண் டூளி யோரெண் புலம்புக விசும்பு போர்ப்ப. (கூ)

பெரும்புரி வலைவார் கூந்தற் பிடியினஞ் சுமந்து செல்ல, விரும்புறு வேடர் கையில் விரைந்தெதிர் குரைக்கு ஞாளி, யிரும்புறு தொடரிற் பூட்டி யீர்த்தனர்

(அ) கைப்புடை = கைக்கவசம்; வென்னில் = முதுகில்; தூணி = அம்புப்பெட்டி; புடை = ஓரத்தில்; மை வரையும் = மை தீட்டும்; மெய்ப்பு உடை = மெச்சுதலை யுடைய; மனம் = மனோவேகத்தையும்; கால் = வாயு வேகத்தையும்; ஒத்து = நிகர்த்து; ஐங்கதி = ஐந்து வகை நடை, அஃதாவது: மந்தகதி, மயூரகதி, வியாக் கிரகதி, இடபகதி, மற்கடகதி என்பனவாம்; நெய்ப்பு உடை = பளபளப்புள்ள; மேனி = தேகம்; நீணிறம் = நீலநிறம்.

(கூ) படகம் = பம்பை; கொம்பு = ஊதும்வாத்தியம்; தவில் = ஓர் பறை; துடி = உடுக்கு; தழங்கி ஆர்ப்ப = இரைந்து ஒலிக்க; வெங்கொடும் = மிகக்கொடிய; வை வேல் = கூர்மையுள்ள வேல்; அவை = அவ் வாயுதங்களை; தானை = சேனை; பொங்கு = கிளம்புகிற; நுண் தூளி = மெல்லிய தூசி; ஓர் எண் புலம் புக = எட் டுத்திக்குகளையும் அடையவும்; விசும்பு போர்ப்ப = ஆகா யத்தை மறைக்கவும்.

செல்ல வல்லே, சுரும்பிமிர் தொடையான் கானச்
சூழல்வாய்ச் சென்று புக்கான். (௧௦)

வேறு.

வலைவார்பல நிலையாநெடு வானூடு வளைப்பார், சிலைகோலினர் சிறுநாணொலி திசையேற விடுப்பார், கலைமான்மரை முகநீடிய களிறேடு களிற்றின், றலை போயற விறன்மீளிகள் சரமாரி தொடுப்பார். (௧௧)

கொடிகொண்டிடு தருவிற்படர் கொம்பேறி விழிப்பார், மடியுஞ்செவி வளைவால்கல் வாய்நாய்கள் விடுப்பார், தடிகொண்டெறி தருவார்சுழல் தழலின்க லுகைப்பார், பொடிகொண்டிடு நிலனிற்சில பொறிநின்று புதைப்பார். (௧௨)

---

(௧௦) பெரும்புரி=பெரியபுரிகளாற் பின்னிய; வார் கூந்தல்= நீண்ட பிடரிமயிர்களையுடைய; பிடி இனம்= பெண் ஒட்டகம்;விரும்புறு=வேட்டைத்தொழிலைவிரும்பும்; எதிர்=எதிர்த்து; ஞாளி=நாய்; இரும்புறுதொடர் = இரும்பினாற் செய்த சங்கிலி; ஈர்த்தனர் செல்ல=இழுத்துச்செல்ல;வல்லே=விரைவாக; கானம் சூழல்வாய் =காட்டினிடத்தில்.

(௧௧) பல வார் வலை=நீண்ட அநேக வலைகள்; நெடு வானூடு = நீண்ட வானில்; நிலையா வளைப்பார்= உறுதியாக வளைத்துக்கட்டுவார்; சிலை கோலினர் = வில்லைவளைத்து; சிறு நாண் ஒலி = வில்லிற் கட்டிய கயிற்றின் சத்தம்; திசையேற = எட்டுத்திக்குகளையும் அடைய; விடுப்பார் = கையினால் மீட்டுவர்; முகம் நீடிய களிறேடு=ஆண் பன்றியோடு; களிற்றின்=யானையின்; தலைபோயற=தலைகள்அறும்படி; விறன் மீளிகள் = சிங்கம்போன்ற வேடர்கள், உவமையாகுபெயர்.

(௧௨) கொடிகொண்டிடு=கொடிகள் படர்ந்த; படர்=விசாலித்த; விழிப்பார் = பார்ப்பர்; எறிதருவார் = எறிவர்; சுழல்=சுற்றுகிற; தழலின்=கவணினால்; கல்லுகைப்பார்=கல்லைஎறிவர்; பொடிகொண்டிடு=புழுதியுள்ள; பொறி=யந்திரம்; புதைப்பர்=நடுவர்.

அடல்சேருழை படர்தாரியி னடிதேடினர் தொடர்வார், மிடல்சேர்தரு மிருகாரியை விறல்வேலினி லெறிவார், வடவாமுக வனலார்சின வலுநீடுகி ருளிய, துடலூடுற வடிவாளிக ளுடனேவினர் விடுவார். ()

வருமித்திரன் மரபுற்றிடு மனன்முற்றரி யலர்போர், பொருமித்திர சகனுற்றொரு புரிவிற்றனி குனிவித், தருமிற்றொடு கணையிற்பல மிருகத்தை யொறுத்துத், தருமித்திற லெவரிப்புவி தனிலொப்பென நின்றான். (கச)

வேறு.

இவ்வண்ண நெடுங்கானி லடும்வேட்டம் புரிந்திடுமவ் வெல்லைகால, மைவண்ணத் தடலரக்க ரிருவரொரு

(கங) அடல்சேர் = வலிமையுள்ள ; உழை = பெண்மான்; படர் = சென்றிருக்கிற; தாரியின் = வழியில்; அடிதேடி = காற்சுவடுபற்றித்தேடி; தொடர்வார் = தொடர்ந்து செல்லுவர்; மிடல் = வன்மை; சேர்தரு =பொருந்திய ; மிருகாரி = சிங்கம் ; வடவாமுக அனலார் = வடவாமுகாக்கினியையொத்த ; சினம் =கோபத்தையும்; வலு நீடு=வலிமிகுந்த; உகிர்=நகத்தையும் உடைய; உளியம் = கரடி; உடல் ஊடுற= உடலிற்றைக்க; வடிவாளி = கூரிய அம்பு; ஏவினர் விடுவார்=ஏவி விடுவார்.

(கச) வரும்=உதிக்கின்ற; மித்திரன் = சூரியனது; மரபுற்றிடு=வமிசத்திற் பிறந்த; மனன்=மன்னன்; முன்= முதன்மையாக; தரியலர்=பகைவரோடு; போர் பொரும்=யுத்தஞ்செய்கிற; உற்று=வேட்டையிற்பொருந்தி; ஒரு புரி வில்=வரிந்து கட்டிய ஒரு வில்லை; தனி=தனியாக;உரும் இன்= இடிபோல; தொடுகணையில்=தொடுக்கும் அம்பினால்; இத்திறல்= இவ் வல்லமைக்கு;எவர்=யாவர்; இப் புவிதனில்= இவ்வுலகில்; ஒப்பென =ஒப்பென்று சொல்லும்படி.

வயிற்றுதித்தோர் வந்து தோன்றிப், பைவண்ணப்
பெரும்பாந்த ளேந்துலக மொருகுடைக்கீழ்ப் பாது
காக்குஞ், செவ்வண்ணக் கதிர்வேலோ னுடன்றருக்கி
நெருக்கியமர் செய்கின் றாரால் (கரு)

அந்நிலைகண் டன்னவரின் முன்னவனைத் துரந்
தரச னங்கை வாளாற், சென்னிதுணித் தனன்குருதி
நீரோட வாங்கதனைத் தெரிய நோக்கி, யிந்நிலையில்
வெலற்கரிதென் றிளையோனும் வஞ்சகங்க ளியற்றியா
னே, பின்னிவனை வெல்வனென மீண்டோடி மனிதரு
ருப் பெற்று வந்தான். (கசா)

வந்தரசன் றன்னிருதா டொழுதெழுது மாங்க
வனுன் வரவே தென்னச், சந்தணிகுத் திரப்புயமித்
திரசகனே யுனதேவல் சலிப்பிலாம, லிந்தவுட லுள்ள
ளவு மிழைத்திடுவா னெண்ணிவந்தே னென்ன முன்
னங், கொந்தழலி லடிசிலடும் வாலுவர்தந் தொழில
வற்குக் கொடுத்தான் மன்னே. (கஎ)

(கரு) அவ் வெல்லை = அக்காலத்தில்; கால மை வண்ணத்து = மாரிகாலத்து மேகம்போன்ற நிறத்தினையுடைய, அல்லது ஆலகாலம்போற்கறுத்த நிறத்தினையுடைய எனினுமாம்; தோன்றி = எதிர்ப்பட்டு; வண்ணப்பை = அழகிய படமுடைய; பெரும் பாந்தள் = பெரும் பாம்பு, (ஆதிசேடன்); செவ்வண்ணம் = சிவந்தநிறமாகிய; கதிர் வேலோன் = ஒளியுள்ள வேலைத்தாங்கிய மித்திரசகன்; தருக்கி = இறுமாந்து; நெருக்கி = வருத்தி.

(கசா) முன்னவனை = மூத்தவனை; துரந்து = துரத்தி; குருதி நீர் = இரத்தம், (இருபெயரொட்டு); வெலற்கு = வெல்லுதற்கு.

(கஎ) சந்து அணி = சந்தனம் அணிந்த; குத்திரம் = மலையை யொத்த; கொந்து அழல் = அக்கினித்திரள்; அடிசில் = சோறு; அடும் = சமைக்கும்; வாலுவர் = சமையல் வேலைக்காரர்.

வன்புலஞ்சா னனம்பயிலும் வனநீங்கி யயோத்தி நகர் வந்து தாங்கும், பின்புலஞ்செய் திரடோளான் மதயந்தி யுடன்வாழ்விற் பெருகு நாளிற், றென்புலஞ் சென் றடைந்தபிதிர்க் கடன்கழிக்குந் திவசமுறச் சிந் தைமேவுந், தன்புலங்கொண் டுத்தரத்திற் சாலிதவன் வரவழைத்துத் தாளிற் றாழ்ந்தே. (கஅ)

ஆசனத்தி லிருத்தியபின் னருக்கியபாத் தியமுத லர்ச் சனைகளாற்றிப், போசனத்துக் கெழுந்தருளப் புரிதியென வருந்தவனும் போந்தபோதி, னீசனெனத் தகுநிருத னடுமமுதத் தொடுதனது நினைவின் வண் ணம், பாசனத்தின் மனிதருடற் றடியரிந்து சமைத் ததனைப் படைத்திட்டானே. (ககூ)

வண்டுபடும் பசுந்துளபத் தொடையான்வெள் விடையான்றண் மலர்க ளுள்ளங், கொண்டுபெருந் தவ மியற்றும்வசிட்டமுனி முனிவுடனிக் கொற்ற வேந்தன்,

---

(கஅ) வன் = வலிமையுள்ள; புல் = புலி; அஞ்சானனம் = சிங்கம்; பயிலும் = வசிக்கும்; தாங்கும் = பூமியைச்சுமக்கின்ற; உலம் செய் = உருண்டையாகிய கல்லையொத்த; பெருகும் = மேம்படும்; தென்புலம் = பிதிர்த் தேவர்கள் வசிக்குமிடம்; திவசம் = நாள்; சிந்தைமேவும் = விரும்புகிற; தன்புலம் கொண்டு = தனது மனத்தினால்; உத்தரத்தில் = வடதிசையிலுள்ள; சாலி = அருந்ததி; தவன் = நாயகனை அஃதாவது வசிஷ்டரை.

(ககூ) அருக்கியம் = கைகழுவக் கொடுக்கும் நீர்; பாத்தியம் = கால்கழுவக் கொடுக்கும் நீர்; நீசனெனத் தகும் = புலையனென்று சொல்லத்தக்க; நிருதன் = இராக்கதன்; அடும் அமுதம் = சமைத்த சாதம்; பாசனம் = போசன பாத்திரம்; தடி = மாமிசம்.

றொண்டுபடு மிவனுடனிந் நாருனிக் கலத்தினிடச்
சொன்னா னென்று, கண்டுகனற் பொறிகாலக் கண்
ணிணைகள் சிவந்துமிகக் கனன்று நோக்கி. (உ0)

மறுவையவித் தொளிருமுழு மதிக்கவிகைத் தனி
ச்செங்கோன் மன்ன முந்நீ, ரறுவையுடைப் பெரு
நிலத்திற் றிருவிழுந்து கருநிறங்கொ ளரக்க யாக்கை,
பெறுவையெனச் சபித்திடலு மனத்தழுங்கி யரைக்
கணத்துட் பின்பு தேறித், தெறுவையயிற் கரனுயர்
மித் திரசகனு மனமதனிற் சினமீக் கொண்டே. (உக)

மனாதிகளிற் பிழைத்தறியா வெனைச்சூளிட் டனை
யுனையும் வைவே னென்னாத், தனாதிதழ்த்தா மரைக்கர
த்துச் சலங்கொண்ட சலங்கண்டு தாழ்ந்துதேவி, தினா
திபகோத் திரமுதல்வ தேசிகனே மாசின்மறை செப்
புந் தெய்வ, மெனாதினிநீ சபித்தறகா தெவராசர் குர
வரைச்சூ ளிட்டா ரென்றே. (உஉ)

(உ0) வண்டு படும் = வண்டுகள் மொய்க்கும்; முனிவுடன் = கோபத்தோடு; கொற்றவேந்தன் = வெற்றி பெற்ற அரசன்; தொண்டுபடும் = ஊழியஞ்செய்யும்; கண்டு = எண்ணி; கனன்று = கோபித்து.

(உக) மறுவையவித்து = களங்கத்தை யொழித்து (இல்பொருளுவமை); மதிக்கவிகை = சந்திரவட்டக் குடையையும்; தனிச்செங்கோல் = ஒப்பற்ற செங்கோலையும் உடைய; மன்ன = அரசனே; முந்நீர் = கடலை; அறுவை யுடை = புடவையாக அணிந்த; பெருநிலம் = விசாலித்த பூமி; திரு = அழகு; யாக்கை = சரீரம்; அழுங்கி = வருந்தி; தெறு = கொல்லுகின்ற; வை = கூர்மை பொருந்திய; அயில் = வேலைத்தரித்த; சினம் மீக்கொண்டு = கோபம் அதிகரித்து.

(உஉ) மனாதிகளில் = மனமுதலிய கரணங்களால்; பிழைத்தறியா = தவறிழைத்தறியாத; சூள் = சாபம்; வைவேன் என்னா = சபிப்பேன் என்று; கரத்துச்சலங் கொண்ட = கையில் நீரெடுத்த; சலங்கண்டு = கோபத்தைக்கண்டு; தேவி தாழ்ந்து = மித்திரசகனன் மனைவி

தன்மாடத் தளிரியனின் றனைத்திடலும் பாணி யிற்கொள் சாபப்பாணி, பொன்மாட வயோத்திநகர்ப் புரவலன்றன் குரைகழற்றாட் போதிற் பெய்தான், சொன்மாட மெனக்கறுத்த தக்கணத்தந் நீர்மையினாற் சுடர்வேல் வேந்தன், கன்மாட பாதனெனப் பேர்படைத்தா னீர்படைத்த கடற்பா ரெங்கும். (உ௩)

வேறு.

கன்றிய வெகுளி நீங்கிக் காவல னிற்ப முன்ன, ரொன்றிய தவத்தின் மேலா முறுவனுங் கோப நீங்கிப், பின்றிய வரக்கன் செய்த பிழையிது பிழைத்தொன் றென்பா, லின்றிவன் புரிந்த தீமை யின்றென யோகிற் றேர்ந்தான். (உ௪)

அவனை வணங்கி; திறைதிபன்=பகலுக் குரியவனாகிய சூரியனது; கோத்திர முதல்வ=வமிசத்திற்குத் தலைவனே!; தேசிகனே=குருவே; மாசில் மறை செப்புந்தெய்வம்=குற்றமற்றவேதங்கள் கூறுந்தெய்வமாம்; எனாது=என்று; எவர் அரசர்=எந்த அரசர்; குரவரைச்சுளிட்டார்=குருவைச் சபித்தனர்.

(உ௩) தன் மாடம்= தனது வீட்டு; தளிர் இயல்= தளிரின் றன்மையையுடைய மடந்தை (அஃதாவது மதயந்தி) அன்மொழித்தொகை; பாணியில்=கையில்; கொள்= எடுத்துக்கொண்ட; சாபப்பாணி = சாபமிடுதற்குரிய நீரை; தாள் போதில் = பாதமலரில்; பெய்தான் = விட்டான்; சொல் = எடுத்துச்சொல்லுகிற; மாடம் (மாஷம்) என = உளுந்துபோல; கறுத்தது = கருநிறம் பொருந்திற்று; அக்கணத்து = அந்த க்ஷணத்திலே; அந்நீர்மையினால் = அந்தக்காரணத்தினால்; நீர் படைத்த=ஜலம் பொருந்திய; கடல் பார்=கடல் சூழ்ந்த உலகம்.

(உ௪) கன்றிய வெகுளி=முதிர்ந்தகோபம்; ஒன்றிய = பொருந்திய; உறுவனும்=இருடியும்; பின்றிய=முன்னர் யுத்தத்தில் பின்சென்ற (தோற்ற); பிழைத்து=தவறி; ஒன்று இன்றென = ஒன்றுமில்லையென; யோகினால்=யோகத்தினால்.

விற்சர நுதற்கட் செவ்வாய் விரிதிரை யமுத மானுஞ், சொற்சர சுவதி கேள்வன் றோன்றல்மான் றடந்தேர் மன்னை, யற்சர னாகிக்கானி லடைந்துசஞ் சரித்திராறு, வற்சரங் காறு நிற்றி மாறுமுன் சாப மென்றான். (உ௫)

உளந்தனி லுணர வொண்ணு வூழ்வினை வசத்தாற் கூத்தர், வளங் கொண்முற் கோலநீங்கி மற்றொரு கோலங் கொண்டு, துளங்கிடத் தோற்றல் போலத் தொல்லுருக் கரந்து திங்க, ளிளம் பிறைக் குழவிபோலு மெயிறுடை யரக்க னானான். (உ௬)

மைக்கணத் திதழ்ப்பூங் கோதை மனைமடந்தையர்க ளெல்லாந், தெக்கணத் தியம னென்னச் சிந்தை

(உ௫) வில்=வில்லையும்; சரம் = அம்பையும் ஒத்த; நுதல் = புருவத்தையும்; கண்=கண்ணையும்; விரிதிரை=அலையினையுடைய விரிந்த கடல், சினை யாகுபெயர்; மானுஞ்சொல்=ஒத்த மொழி; தோன்றல் = புத்திரனாகிய வசிட்டன்; மான் = குதிரை கட்டிய; தடந்தேர்= விசாலமாகிய தேரினையுடைய; மன்னை = மன்னனை; அல் சரன்=இரவில் சஞ்சரிப்போன் (இராக்கதன்); வற்சரங்காறும் = வருடம் வரையில்; நிற்றி = இருப்பாயாக; மாறும் உன்சாபம்=உனக்கு யானிட்ட சாபம் (அதன்பின்) நீங்கும்.

(உ௬) கூத்தர்=கூத்தாடுவோர்; வளங்கொள் = அழகு பொருந்திய; முற்கோலம்=முன்வடிவம்; துளங்கிட=விளங்கும்படி; இளம் பிறைக் குழவித் திங்கள்=மூன்றாம் பிறையாகிய இளஞ்சந்திரன்.

(உ௭) மைக்கண் = கறுத்த கண்; அத்து=சிவந்த; இதழ் = உதடு; பூங்கோதை=புஷ்பமாலையைத் தரித்த; மனை =கன்மாட பாதனது மனைவியும்; மடந்தையர்=அவளது தோழிகளாகிய மற்றைப்பெண்களும்; வெருக்கொடு = அச்சமுற்று; அருந் தவக்கிழமை பூண்ட = அருமையாகிய தவவுரிமை பூண்ட; மெய்க்கணத்தவர் = தேகத்தினையுடைய முனிவர் கூட்டங்கள், அல்லது சத்தியந்தவறாத முனிவர்கூட்டங்கள்.

யில் வெருக்கொண் டேகி, யக்கணத் தகன்று போனு ரருந்தவக் கிழமை பூண்ட, மெய்க்கணத் தவர்கள் சாபம் யாவரே விலக்க வல்லார். (உஎ)

வேறு.

வடிக்குரன் மணியா ழிசைமுரன் றறுகால் வரிச்சுரும் பரற்றுபூ மாலைக், கடிக்குரன் மடவார் பாற்கடற் றிரையின் கற்றைவெண் கவரிகா லசைப்ப, விடிக்குரன் மடங்கல் சுமந்தபே ரணையி லிருந்தர சியற்றிய விறைவ, னடிக்குர னிகராங் கரிகொடு வரிசே ரடவியி னக்கணத் தடைந்தான். (உஅ)

பாய்கலைப் புரவிப் பவனனு மியங்காப் பசுநிறப் புரவியந் தேரோன், காய்கதிர் நுழையாக் காட்டிடை

(உஅ) வடிக்குரல்=வடித்த தேன்போலுந் தொனியையுடைய; மணியாழ்=அழகியயாழ்; இசைமுரன்று=இராகத்தைப்பாடி; அறுகால்=ஆறுகால்களையுடைய; வரிச்சுரும்பு=கோடுகளுள்ள வண்டு; அரற்று=ஒலிக்கும்; கடிக்குரல் = வாசனையுள்ள கூந்தல்; பாற்கடல் திரையின்=நிறத்தினலும் அசைவதினலும் பாற்கடலின் அலையையொத்த; கற்றை=திரள்; இடிக்குரல்=இடிபோன்ற தொனியுடைய; மடங்கல்=சிம்மம்; அடிக்கு=கால்களுக்கு; உரல்நிகராம்=உரல் ஒப்பாகின்ற; கொடுவரி=புலி.

(உகூ) பாய்=குதித்தோடுகிற;கலை=கலைமானை;புரவி=வாகனமாகக்கொண்ட; பவனன்=வாய்வுதேவன்;இயங்கா=செல்லாத; கணம் எலாம்=கூட்டமெல்லாம்; தீயவாளரக்கன்=கொடிய வாளாயுதத்தையுடைய இராக்கதன்; திரிதரு=திரிகிற; திருத்தக=அழகு பொருந்த; புதுக்கடி=புதுமணம்; தூய=பரிசுத்தமும்; வாள் நகை=ஒளியுமுள்ளபற்களையுடைய பெண், அன்மொழித்தொகை; தோன்றல்=ஆடவன்.

விலங்கின் கணமெலாங் கொன்றுகொன் ழருந்தித், தீயவா ளரக்கன் றிரிதரு காலைத் திருத்தகப் புதுக்கடி புரிந்த, தூயவா ணகையுந் தொழுகுலத் துதித்த தோன்றலு மாங்குறக் கண்டான். (உ௯)

கண்டவா ளரக்க னுவகைமீ தூரக் களித்தன னொளிக்கதிர் மதியிற், றுண்டவா ளெயிறு துலங்கிடநகைத்துத் துண்ணென நண்ணி யொண் ணிறப்பூ, முண்டகா சனன்றன் குலத்தில்வந் துதித்த முனிவரன் புதல்வனைப் பற்றிக், கொண்டவா வுடன்வெண் ணிணத்தடி யருந்துங் கொள்கையிற் கொல்லுவான் றுணிந்தான். (௩0)

அன்னகா லையிலங் கவன்முக நோக்கி யந்தணனருந்துணைத் தேவி, மன்னகேள் சால கடங்கடர் மரபில் வந்தனை யல்லைநீ முனிந்து, முன்னமே யிவனைக் கொல்லுவை யாயின் முளிதரு விறகுதீ மூட்டி, யென்னதா ருயிரு மிழப்பனின் றெனக்கோ ருயிர்ப்பலி யீதியென்றிரங்கி. (௩க)

---

(௩0) மதியின் துண்டம் = சந்திரனது பிறைபோன்ற; துண்ணென = திடீரென்று; நண்ணி = பொருந்தி; ஒள் = அழகிய; நிறப்பூ = நிறத்தினையுடைய புஷ்பம்; பற்றிக்கொண்டு = பிடித்துக்கொண்டு; வெண்ணிணத்தடி = வெண்மையாகிய கொழுப்புள்ள மாமிசம்; கொள்கையில் = செய்கையால்.

(௩க) சாலகடங்கடர் = இராக்கதர்; முளிதரு = உலர்ந்த; என்னது ஆருயிரும் இழப்பன் = எனது உயிரையுமிழப்பேன்; உயிர்ப்பலி = உயிர்ப்பிச்சை; ஈதி = கொடுப்பாயாக.

தன்றுணைத் தடங்க ணீர்முலைத் தடத்திற் றுறைவிட் டொழுகநின் றிரந்தே, யன்றுரைத் திடுஞ்சொற் செவிக்கொளா னாகி யந்தணன் மைந்தனை விரைவிற், கொன்றுடற் குருதி பிழிந்துமுன் குடித்துக் கொழுந்தசை கறித்தகல் வாயின், மென்றுட னருந்திப் பைந்தொடிக் கெதிராய் வெள்ளெலும் பனைத்தையு முமிழ்ந்தான். (௩௨)

என்செய்வா ளுமிழ்ந்த வென்பெலா மடியிட் டெடுத்தன ளெய்தியவ் வென்பை, மின்செய்தீ யதனிற் பெய்திது செய்த வேந்தர்கோன் றன்பதி மேவிப், பொன்செய்பூண் முலையார் முலைநலப் போகம் புணருநா ளிறக்கவென் றுருத்து, முன்செய்தீ வினையாற் சாபமீ திட்டு முழங்கழ லூடுபுக் கவிந்தாள். (௩௩)

வேறு.

புரமுனியும் பரமனிரு பதப்போது முப்போதும் போற்றுந் தெய்வ, வரமுனிவன் சாபமகன் றரசனிரு

---

(௩௨) கறித்து=கடித்து; பைந்தொடி=பெண்.

(௩௩) மடியிட்டு=மடிகோலி;மின்செய் தீ=ஒளிவீசுகிற நெருப்பில்; சாபம் ஈது இட்டு=இந்தச்சாபத்தைக் கொடுத்து; முழங்கு அழலூடு=ஒலிக்கின்ற நெருப்பில்; புக்கு=புகுந்து; அவிந்தாள்=இறந்தாள்.

(௩௪) புரம் முனியும்=திரிபுரத்தை எரித்தருளிய; பதப்போது=பாதமலர்; தெய்வ வர முனிவன்=இறைவனது ஆசீர்வாதம்பெற்ற இருடி; இருமருப்பு=இரண்டுகோடுகளையும்; ஒரு மும்மதம்=கன்னமதம், கபோலமதம், பீஜமதம் என்னும் மூன்றுமதமும்; நால்வாய்க்குஞ்சரம்=தொங்குகின்ற வாயினையுடைய யானை; முனி=யானையின் கன்று; வன்பிடி=வலிமையுள்ளபெண்ணானை; திரிசரிகள்=சஞ்சரிக்கிற வழிகளை; அரிதுருவும்=சிங்கங்கள் தேடும்; தடம்=விசாலித்த; கான் நீங்கி=காட்டையகன்று; கரம்=கையில்; முனியும்=வில்லும்; கணையும்=அம்பும்.

மருப்பொருமும் மதநால் வாய்க்குஞ், சரமுனிவன் பிடிதிரிச ரிகடொரிந்தே யுரிதுருவுந் தூடங்கா னீங்கிக், கரமுனியுங் கணையுமில்லாக் காமனென வயோத்தி நகர் கடிதினுற்ருன். (௩௪)

நெடிதுதினம் பிரிந்தகன்ற நீர்மையினுற் றிரண்ட திண்டோ ணிருபன்ருனு, மடியிணையா மலர்கள் கன் றிச் செப்பூர விரைந்துநடந் தன்பிஞேடும், பிடியத ணை நாடிவரும் பெருந்தடக்கைக் களிறெனவேள் பெய்யும் வெய்ய, வடியயில்வா ளியினுடைந்து வருந்தி யந்த மதயந்தி மனையுட் புக்கான். (௩௫)

வந்தவடன் றுணைமுலைகண் மருவுவான் றுணிந்திடலு மன்னகானி, லந்தநிசி சரனுகி முனிவனைக் கொன் றனையதனு லவன்றன்றேவி, வெந்தழலின் மிகச்சீறி யுன்மனைவி மார்முதலா விளம்பு மாதர், தந்தனமீ துறத்தழுவி லிறத்தியெனக் கொடுஞ்சாபஞ் சாற்றி வீந்தாள். (௩௬)

ஆதலினு லெனையணை தற் கடாதுனக்கென் றவள் கூற வரசன் மோகக், காதலினுலிடைந்து செம்பொற்

---

(௩௫) நிருபன் = அரசன்; சேப்பு ஊர = செந்நிறம் உண்டாக; பெருந் தடக்கை = நீண்டு பருத்த துதிக்கை; வடி = வடிக்கப்பட்ட; உடைந்து = தோற்று.

(௩௬) அந்த = மேற்குறித்த; நிசிசரன் = இராக்கதன்; இறத்தி = இறக்கக்கடவாய்; வீந்தாள் = இறந்தாள்.

(௩௭) அமுதம்பெற்று = அமுதத்தை யடைந்தும்; அருந்தக் கடன் = உண்ணும் செயல்; நோதகவு = துன்பம்; இல்லம் = மனைவி; உவை = இவை; நுனித்து நோக்கின் = கூர்ந்து பார்த்தால்; சாதகருக்கு = முத்திநெறி நிற்பவருக்கு; தவமீக்கொண்டு = தவச்செயலைப்பூண்டு.

கலத்தமூதம் பெற்றருந்தக்கடனி லான்போ, ஞேதக
வுற் றில்வமில்லாற் கருமகப்பே றில்லையுவை நுனித்து
நோக்கிற், சாதகருக் கிகபரத்திற் பலன்கிடையா தெ
னத்தேறித் தவமீக் கொண்டே. (௩௭)

ஒருமனமா யிருவினையின் றுவக்கறமுக் குறும்
பெறிந்திட் டுயர் நால்வேதந், தருபொருளா யைந்த
வித்தைந் தழனுப்ப ணின்றுபெருந் தவங்க ளாற்றிக்,
கருதருமா மறலிவலை கடந்துமுக்கா லமுமுணர்ந்து
கணிக்க வல்ல, பொருவருமா முனிவரர்க ளனுமதி
கொண் டரியதவம் புரியு மேல்வை. (௩௮)

வேறு.

கறைவிட முகுத்தல் போலக் காய்சின மிகுத்து
வானிற், பிறையெயி றிலங்கப் பேழ்வாய்ப் பேய்மக
ளொருத்தி பற்றி, யிறைவனை வருத்த வீதிங் கென்
னெனப் பன்னு தொன் னூன், முறைதெரிந் தருளுந்
தெய்வ முனிவரை வினவி னூனே. (௩௯)

---

(௩௮) இருவினையின் துவக்கற=புண்ணியபாவங்களின் சம்பந்தம் நீங்க; முக்குறும்பு=காமம், வெகுளி, மயக்கம் என்பன; எறிந்திட்டு=ஒழித்து; வேதந்தருபொருளாய்=வேதங்கூறும் விதிப்படி; ஐந்தவித்து=ஐம்புலங்களை யடக்கி; ஐந்தழல்=பஞ்சாக்கினி; நாப்பண்=மத்தியில்; கருத அரும்=நினைத்தற்கரிய, கணிக்க=குறிப்பிட; பொரு அரும்=ஒப்பில்லாத; எல்வை=காலம்.

(௩௯) கறைவிடம்=கறுத்த விஷம்; உகுத்தல்=சொரிதல்; காய்சினம்=வெதுப்புகின்ற கோபம்; மிகுத்து=அதிகரித்து; பேழ்வாய்=அகன்றவாய்; இறைவனை=அரசனை; அருளும்=சொல்லுகிற; தெய்வமுனி=தெய்வத்தன்மையுள்ள இருடி.

கணித்துமுக் காலந் தேருங் கடவுண்மா முனி வர் துத்திப், பணித்தலைக் கிடந்த ஞாலம் பரித்தரு ளரசே முன்னாட், குணித்தவா ளரக்க னாகிக் கோதில் வே தியனைக் கொன்று, பிணித்தவெம் பாவங் கண்டா யலகையாய்ப் பிணித்த தென்றார். (சo)

அப்பவந் தீர்ப்பா னெண்ணி யலைகடற் சேது முன்னாச், செப்பருந் தீர்த்தம் யாவுஞ் சென்றுடன் மூழ்கி மூழ்கி, யொப்பரும் பிரமன் றன்னை யுந்தியிற் றந்த மாயன், பைப்பணி சடையான் வைகும் பதிபல வணக்கஞ் செய்தான். (சக)

உந்துவெண் டிரைநீர் வேலி யுலகெலா முழந்து சூழ, வந்துமப் பிரமகத்தி மாறிடா திருத்த லாலே, யிந்துமண் டலம்போ யோங்கு மிஞ்சிசூழ் மிதுலை ஞா ங்கர்க், கந்துகொல் களிற்று வேந்தன் கவலையுற் றிரு ந்த காலை. (சஉ)

(சo) கணித்து=சோதிடத்தால் குறித்தறிந்து; தேரும்=உண ரும்;கடவுண்மாமுனிவர்=தெய்வத்தன்மையுள்ள பெ ருமைவாய்ந்த இருடியர்; துத்தி=படப்புள்ளியையு டைய; பணித்தலை=பாம்பின் றலை; குணித்த=குறிப் பிட்டுச் சொல்லப்பட்ட; கொன்று பிணித்த=கொன் றதாற் பற்றிய; பிணித்தது=பிடித்தது.

(சக) முன்னா=முதலாக; உடன்மூழ்கி=விரைந்து முழுகி; பதி=க்ஷேத்திரம்.

(சஉ) வேலி=பூமி; உழந்து சூழ=வருந்திச்சுற்றி; ஞாங்கர்= பக்கத்தில்; கந்துகொல்=கட்டுத்தறியை முறிக்கும்; களிற்றுவேந்தன்=யானைபோன்ற வலிமை பொருந் திய அரசன், அல்லது யானையையுடைய அரசன் எனினுமாம்.

மாதவர் மருங்கு சூழ வளரிள மதியஞ் சூடி, நா
தனிங் கிவனு மென்ன நானில மதிக்கத் தக்கோன்,
பாதபங் கயங்களேவப் பார்த்திவ னிருக்கும் பாங்கி
ர்க், கோதம னென்னு நாமக் குலமறை முனிவன் வந்
தான். (௪௩)

அன்றிருந் தவனைப் போற்றி யடிதொழு தங்கை
கூப்பி, நின்றிடும் வடிவேற் றானை நிருபனுக் காசி கூறி,
நன்றிருந் தனையோ வென்ன நவின்றுநின் முகத்தின்
சோதி, குன்றிய தியாது வந்த குறையெனக் கறைதி
யென்றான். (௪௪)

திருந்துதி முற்றுங் கற்றோன் றிசைமுகற் குவ
மை சான்றோ, னருந்ததித் காவி யன்ன வருண்முனி
யரக்க னாகி, வருந்துதி யென்னச் சாபம் வழங்கலால்
வந்த தென்னைப், பெருந்துதி கூறிப் பின்னு நிகழ்ந்த
வை பேச லுற்றான். (௪௫)

அரக்கனாய் வனத்தி லன்னா ளந்தணற் கொன்ற
பாவ, மிரக்கமி லல்லை யாகி யிங்கெனைத் தொடர்த
லாலே, பரக்கும்வெண் டிரைத்தீர்த் தங்கள் பற்பல
படிந்து பொற்கோ, புரக்கவின் படைத்த கோயிற்
புண்ணிய தலஞ்சே வித்தேன். (௪௬)

---

(௪௩) நானிலம்=நால்வகை நிலம் அவை குறிஞ்சி, நெய்தல்,
மருதம், முல்லையாம்; பார்த்திவன்=அரசன்; பாங்கர்
=பக்கத்திலே; கோதமன்=கௌதமன்.

(௪௪) அன்று=அப்பொழுது;இரும் தவனை=பெரியதவத்தை
யுடைய இருடியை; வேல் தானை=வேலாயுதத்தை
யேந்திய; நிருபனுக்கு=அரசனுக்கு.

(௪௫) திருந்துதி=தெரிந்துகொள்; முற்றுங்கற்ற=யாவுமுண
ர்ந்த; வருந்துதி=வருந்துவாயாக.

(௪௬) பரக்கும்=பரவிய; கோபுரக்கவின்=கோபுர அழகு.

எண்ணருந் தருமஞ் செய்தே னீறின்மந்திர நவி ன்றேன், விண்ணவர்க் கவிக ணல்கும் வேள்விகள் பல வுஞ் செய்தேன், பண்ணரும் பாவ நீங்கப் பெற்றிலே ன் படிவ வுன்றன், கண்ணருள் பெற்றே னுய்யுங் கா லமு மூளதா மென்றே. (௪எ)

அன்னமா முனிவன் றூய வடிமுடி. சேர்த்தி நி ன்ற, மன்னவன் றன்னை நோக்கி வருந்தலை மதியஞ் சூடும், பின்னலஞ் சடையாற் கன்பு பெருக்குநோன் புகட்குண் மேலா, யுன்னரும் விரத மொன்றுண் டுணர்ந்திலை போலு மானீ. (௪அ)

மாகமா மதியிற் றேய்ந்த மதியிற்பன் னுன்காம் பக்கத், தேகநா யகனைப் போற்றி யீரிரு சாமந் தோ றூந், தாகமாம் பசிக்கூண் டுஞ்ச றவிர்ந்துளத் தொரு மை கூரன், பாகமா லூரந் தன்னா லருச்சியு னரந்தை நீங்கும். (௪௯)

வரையிலக் காகத் தொட்ட வாளிக டவறு தோ ங்கித், தரைமிசை யடித்த கைதான் றப்பிடா ததுபோ

(௪எ) நவின்றேன் = ஜபஞ் செய்தேன்; பண்ணரும் = செய்த கொடிய, படிவ = முனிவனே!

(௪அ) தூயஅடி = பரிசுத்தம் பொருந்திய பாதத்தை; முடிசேர்த்தி = முடியிற்றரித்து; வருந்தலை = வருந்தாதே; பின்னல் = பின்னிய.

(௪௯) பசிக்கு ஊண் = பசிக்கு உணவையும்; துஞ்சல் = தூங்குதல்; கூர் அன்பாக = மிகுந்த அன்போடு; மாலூரம் = வில்வம்; உன் அரந்தை = உனது துன்பம்.

(௫0) தவறு = தவறுதது போலவும்; தப்பிடாதது = தப்பாதது போலவும்; புரையற = குறைவின்றி.

லீசன், குன்ரகழற் பதும நோக்கிக் குறித்தநோன்
பியற்றி நின்றுற், புரையறப் பலிக்கு மென்றுப் புர
வலற் குரைத்துப் பின்னும். (ருo)

நற்றல மதனிலிந்த நவையிலா விரத நோற்கிற்,
சற்றல மிகுதி நன்மை தந்திடுஞ் சடுதி யென்றுக், குற்
றமின் முனிவன் கூறக் குறிக்குமத் தலமு மெற்கே,
சொற்றருளைய வென்னக் கௌதமன் சொல்ல லுற்
றுன். (ருக)

வேறு.

சொன்ன தலங்களின் முன்னி வருந்திய தூயோய்நீ
யுன்ன வருங்கிரி மன்ன னளித்திடு முமைகூட
மின்னவி ரஞ்சடை முன்னவ னன்பொடு மேவுங்கோ
கன்ன மெனும்பதி யொன்றுள தங்கது காணுயால். ()

அத்தல னிற்றகை முற்று முணர்த்திட வார்வல்லார்
முத்த நகைத்திரு வுக்கிறை திக்கு முகத்தோனற்
சித்த ரியக்கர் மயக்கறு நற்றவர் சேணுடர்
நித்த மியற்று தவத்தின் முயற்சியி னிற்பாரே. (ருந)

(ருக) சற்றல=கொஞ்சமல்ல; சடுதியென்று=சீக்கிரத்தி லென்று; சொற்றருள்=சொல்லியருள்.

(ருஉ) முன்னி=விரைந்து அடைந்து; உன்ன=நினைத்தற்கு; கிரிமன்னன்=பர்வதராஜன்; அளித்திடும்=பெற்ற; உமைகூட=உமையாளோடு.

(ருந) அத்தலனின் தகை=அத்தலத்தின் பெருமையை; ஆர் வல்லார்=எவர்வலிமையுடையவர்; திருவுக்கு இறை= இலட்சுமிக்கு நாயகராகிய திருமாலும்; திக்குமுகத் தோன்=பிரம்மாவும்; சேணுடர்=வானுலகத்தவர்.

ஆடு முனிக்குழு வாயிர கோடி யரன்சீரைப்
பாடு முனிக்கண மெண்ணில சித்தி படுத்தியோகிற்
கூடு முனித்திரள் பற்பல் வுற்றிடு கோகன்னம்
வீடு பெறற்கினி யப்பதி யொப்புற வேறுண்டோ. (ருச)

அத்துடை மாதவர் வானவர் மானவ ராமேனோர்மா
சித்துடை யார்வெரு வக்கட மிக்கிடு திக்கானை
முத்துடை வால மருப்பணி மார்பின் முரித்தோன்கம்
பத்துடை யானகன் முற்பக லர்ச்சனை பணம்வண்ணி.

ஓர்சிவ லிங்க முறும்படி வானி லுயர்ந்தோங்கு
மேர்பெறு வெள்ளி விலங்கலி னற்றவ மேசெய்யக்
கார்பெறு கண்ட னரக்கர் குலத்திறை கைதன்னிற்
பேர்பெறு லிங்க மளித்தவ னேடிவை பேசுற்றான். (ருசு)

பார்தனில் வைக்கி லெடுக்க வொணாது பகர்ந்தேமுன்
னூர்தரு மூர்தி யொழிந்தனை கைக்கொடு னூர்மேவிச்

(ருச) ஆடுமுனிக்குழு = ஆடுகின்ற முனிவர் கூட்டங்கள்; சித்தி படுத்து = சித்தியடைந்து; யோகிற்கூடும் = யோகம்புரியும்; ஒப்புற = ஒப்பாக.

(ருரு) அத்து உடை = நன்னெறியுடைய; மானவர் = மனிதர்; திக்கானை = அஷ்டதிக்குக் கஜங்களுடைய; வால் அம் மருப்பு = வெண்மையும் அழகுமுடைய தந்தத்தை; அணிமார்பின் முரித்தோன் = அழகிய மார்பினால் முரித்தவனை; கம் பத்து உடையான் = பத்துச்சிரசையுடைய இராவணன்; அகல் = கழிந்த; முற்பகல் = முன்னாளில்.

(ருசு) வெள்ளிவிலங்கலின் = கயிலையங்கிரியில்.

(ருஎ) உன் ஊர்தரும் = நீ ஏறிச்செல்லுகிற; ஊர்தி = வாகனத்தை; ஒழிந்தனை = ஒழித்தவனாகி; நேர்தரும் உன்னை = யுத்தத்தில் எதிர்த்த உன்னை.

சீர்தரு லிங்க மிதைப் பிரதிட்டை செயிற்பாரி
னோர்தரு முன்னை வெலற்குரி யார்பிற ரிலையென்றே.

வித்தக ஞோதி விடுப்ப வரக்கனும் விடைகொண்டே
சித்த முவந்து நெறிக்கொடு பார்மிசை செல்போதிற்
புத்தமு தத்தினை யற்பொடு துய்த்திடு பொன்னுடர்
மத்தக வேழ முகத்த கணேசனை வந்தித்தே. (ருஅ)

எண்டகு மீச னளித்த விலிங்க மிலங்கைக்கே [தே
கொண்டகல் கின்றன னின்றெதிர் சென்றொரு கோள்செய்
தண்டரு தாண்மலர் நோவ நடந்திடை தடைசெய்ய
மண்டனி னீடிய மூடிக வாகன வருகென்றார். (ருகூ)

உற்றிடு வானவர் சொற்றிட நான்மறை யோனாகி
மற்றிர டோளவ் வரக்கன் வரும்பெரு வழிதன்னி
னிற்றிட மற்றவ னுந்தனி வந்தவ னேருற்றான்
முற்றினி லற்பச லத்தை விடுக்க முடுக்குற்றே. (கூ0)

அச்சிறு வேதிய னங்கை யிலிங்க மளித்தன்னோன்
மெய்ச்சிறு நீர்விட மேவிய காலை விரைந் திங்ஙன்

(ருஅ) விடுப்ப=அனுப்ப; நெறிக்கொடு=வழிக்கொண்டு; அற்பொடு=அன்போடு; துய்த்திடும்=உண்ணுகிற; மத்தகம்=யானைத்தலை; முகத்த=முகத்தினையுடைய.

(ருகூ) எண்தகும்=தியானிக்கத்தக்க; இன்று=இப்பொழுது; கோள்=விக்கினம்;நீடியமண்தனில்=நீண்டவுலகத்து.

(கூ0) நான்மறையோனாகி=பிராமணனாகி; மல்=மல்லயுத்தஞ் செய்தற்குரிய; நிற்றிட=நிற்க; நேர்உற்றான்=எதிரில் வந்தான்; முற்றினில்=முதிர்ந்திருக்கிற.

(கூக) முச்சொலின்=மூன்று வார்த்தைகளால்; விளிப்பன்=அழைப்பேன்; முன்னாயேல்=விரைந்து அடையா விடில்.

முச்சொலி னின்னை விளிப்ப னதற்குமுன் மூன்றுமே
லிச்சிவ லிங்க நிலத்தி லிருத்துவ னென்முறுல். (சுக)

அம்முறை யாக வரக்க னிசைந்தய லகல்போதின்
மும்முறை கூவின னெய்தில னையிரு முடியோனு
மெம்மிறை நீதி யிதென்று கணத்தவ னெய்தாமுன்
மைம்முறை யாயொளிர் கண்டனை மண்டனில்வைத்திட்டான்.

பின்பவ் வரக்கர் பிரானவ னுற்றழல் பெய்கண்ணன்
நன்புவி யிற்சிவை யோடிய தென்று நடுக்கெய்தித்
துன்போடு பத்திரு தோள்வலி கொண்டு தொடர்ந்தோடி
வன்பொ டெடுத்திது மாபெல மென்முன் வலியில்லான். (சுங)

மன்னவ மாதலின் மாநில மாபெல லிங்கம்பே
ரென்ன விளம்பிய தின்னமு மீளவி லங்கைக்கோன்
பன்னக மேவுகை பற்றி யெடுக்கப் படிமீதி
னன்ன ரிலிங்க மெலிந்து நிமிர்ந்தது நைந்தங்கே. (சுச)

(சுஉ) அம்முறையாக = அப்படியே; எம் இறை = எமது தலைவராகிய விநாயகர்; நீதி யிதென்று = இதுதான் நியாயமென்று; மை முறையாயொளிர் = ஒழுங்காய்க் கருநிறம் விளங்கும்; கண்டனை = கழுத்தையுடையவனை.

(சுங) நன்புவியில் = நல்ல பூமியில்; சிவை = வேர்; வன்பொடு = வலிமையோடு.

(சுச) நவம் = பூமியில், அல்லது புதுமையாக; மன் = நிலைபெற்றது; மாநிலம் = அகன்ற பூவுலகத்திலே; மாபெலலிங்கம்பேர் = மாபெல லிங்கம் என்னும் பெயர்; மீள = பிறகு; பன்னக மேவுகை = பல நகங்கள் பொருந்திய கை; நன்னர் = நன்மையைத்தரும்; மெலிந்து நைந்து = குழைந்து.

ஆவி னெடுஞ்செவி போல நிமிர்ந்திடு மதனுலூர்
நாவி னிடும்பெயர் கோகன மென்றனர் நனிகூரு
மேவி னலந்தரு வாள்விழி யம்பிகை யிடமேவுந்
தேவி னருஞ்சிவ லோகமி தென்றறி திணிதோளாய்.

வேறு.

மாவின்வடு நிகர்த்தவிழி மலைமகளை யிடங்கொ
ண்ட, தேவனருள் சிவலிங்க மெடுக்கநைந்தோன் சின
ங்கொண்டே, காவனைய கைத்திரளாற் கனன்றரக்கன்
மறைமதலைத், தேவனது குடுமிமுடி புடைத்தனன்
றன் சினமிகலால். (சுசு)

புடைத்தவுட னுருத்தெழுந்து பொழிமதவா
ரணமுகத்தோ, னடித்தலமு மணிமுடியு மகலிடமும்
விசும்புமுறப், படைத்தவுரு வெனநிமிர்ந்து பணைக்க
ரத்தா லிராவணனைப், பிடித்துமணிக் கழங்கென்ன
வெறிந்தெறிந்து பிடித்திடலும். (சுஎ)

(சுரு) நனிகூரும் நலமேவித்தரு = மிக்ககூர்மைபொருந்தி நன்மையைத் தரும்; தேவின் = கடவுளுடைய.

(சுசு) நைந்தோன் = எடுத்தலினால் மெலிந்த இராவணன்; கா = விருக்ஷம்; கனன்று = கோபித்து; மறை மதலை = பிராமணச் சிறுவாரய்த்தோன்றிய விநாயகக் கடவுளது.

(சுஎ) அடித்தலம் = பாதம்; மணிமுடி = அழகிய சிரசு; அகலிடம் = பூமி; உறப்படைத்த உருவென = பொருந்தும்படி அடைந்த சொரூபம்போல; நிமிர்ந்து = உயர்ந்து; பணைக்கரம் = பருத்த கை; மணிக்கழங்கு = அழகிய அம்மனை.

மறையோனென் றுனைநினைந்த மடமையினு லீ
திழைத்தேன், பிறையோங்கு மணிமகுடப் பெருங்க
ளிறே பிழைசெய்தே, னிறையோனே பொறுப்பது
னைக் கியல்பென்றென் றேத்துதலும், பொறையோடு
முமைபுதல்வன் புவியிலரக் கனைவிடுத்தான். (௬௮)

நிருதர்குலத் திகல்வேந்தே நினதுபிழை யாம்
பொறுத்தற், கிருபதுசெங் கரத்தாலு மெழின்மல
ரோன் முன்கவித்த,வொருபதுமா முடித்தலையு முறப்
புடைத்தி யெனலோடுங், குருதிநிறங் கொளப்புடைத்
துக் குதித்தாடி யுவப்பித்தான். (௬௯)

அன்னதுகண் டுவந்தருளி யைங்கரத்தோ னின்
றுமுத, லென்னருணன் னலம்வேண்டி லின்றுனைப்
போ லிருகரத்தாற், சென்னியுறப் புடைத்தவர்பாற்
சிந்தைமகி ழுவனென்று, மின்னின்மறைந் தனனிரு
தன் வேலையிலங் கையிற்புகுந்தான். (௭௦)

தென்னிலங்கை யிராவணன்பாற் சிவனுதவத் தி
றலரக்கன், பின்னிலங்கு மொருமருப்புப் பெருந்தகை
தன் கைக்கொடுப்ப, வன்னலிங்க மைங்கரத்தோ னங்

---

(௬௮) பிறைஓங்கும்=மூன்றாம்பிறைமதி விளங்கும்; பொறையோடு=பொறுமையுடன்.

(௬௯) நிருதர்=இராக்கதர்; இகல்=வலிமையுள்ள; முன்கவித்த=முன்சூட்டிய; ஒருபது=பத்து.

(௭௦) நல் நலம்=மிக்க நன்மை; மின்னின் மறைந்தனன்=மின்னலைப்போல மறைந்தனன்; வேலை=சமுத்திரத்திலுள்ள.

(௭௧) ஒரு மருப்புப் பெருந்தகை=ஒற்றைக் கொம்பினையுடைய பெருமை பொருந்திய விநாயகர்.

கையினூ ஞட்டியதா, லிந்நிலத்திற் சிவலோக மெனவி ளங்கி யிருந்துளூ தால். (எக)

வேறு.

இத்தகையை கோகன்னந் தன்னினென்ன லொருபுலைச்சி யிருகண் ணில்லாள், சுத்தவமு தெனவெளுத்த நரைதிரைநோய் மூப்புடையாள் சுருதி போற்று, மத்தனிர வெனவுணரா ளங்கடைந்து பசிமிகுத்திட் டகடு காயச், சித்தமதி லிரக்கமுள்ளோர் சோறிடுமி னெனக்கெனவோர் தெருவி லுற்றுள். (எஉ)

அத்தெருவின் றலைவருமோர் களியணிழி குலத்தவட னங்கை மீதின், முத்தளக்கூ விளமுணவென் றிடுதனுமேற் றெறிந்தனளான் முன்னூட் டாபித், துத்தமர்பூ சித்தபுரா தனவிலிங்க முடிமீதி னுளத்தன் போடும், பத்தரிடும் பச்சிலைபோ லானதவள் பசிமிகக்கண் படைசெ யாளாய். (எங)

இருளகல விடியுமட்டும் வருந்தியிருந் திரவியுதித் தெழுந்த பின்னத், தெருவினிடை யிரந்திடவோர் புலைச்சியெதிர் வழிகாட்டச் செல்லுங் காலை, மருவிய நோய் பசிமூப்பு வருத்திடவெஞ் சுடுமணற்கீழ் மயங்கி வீழ்ந்தங், கொருவியுயிர் பிரிபொழுதிற் பரமனுயர் கணங் கடமை யுற்றுநோக்கி. (எச)

(எஉ) நென்னல்=நேற்று; அகடுகாய=வயிற்றிற் பசித்தீமூள.

(எங) தெருவின் தலை=தெருவில்; எற்றெறிந்தனள்=வாங்கி யெறிந்தனள்.

(எச) ஒருவி உயிர் பிரிபொழுதில்=உயிர்விட்டு நீங்கும் காலத்தில்.

சீர்தருகோ கன்னத்திற் சிவசிசியி னுண்டிதுயி
நீர்த்து வில்வத், தேர்தருநாற் பைந்தழைகொண் டெ
ணைமையருச் சித்ததனை யிணிமக்குஞ் செம்பொற், றேர்
தனிலப் புலைமகளை யேற்றியிங்கு வருதிரெனச் செப்ப
வன்னோர், பார்தனினுற் றனைவரும்யாம் பார்த்திருக்க
வங்கவளைப் பணிந்து போற்றி. (எரு)

செம்பொனெடுங் கொடிஞ்சிமணித் தேர்மீதி லி
ருத்திமிகு சிறப்பி னோடு, மும்பர்மட மகளிர்வெண்சா
மரையிரட்டப் பைந்தருவி னுலவை யீன்ற, வம்பவிழ்
பூ மழைபொழிய வளங்கெழுதுந் துபிமுழங்க மழுமா
னேந்து, மெம்பரம னினிதுறையுங் களதபுத கிரியின்
மிசை யேகி னாரே. (எசா)

ஆதலின்மித் திரசகனே நீயுமந்தக் கோகன்னத்
தடைந்து போற்றித், தீதகலுஞ் சிவசிசிநோற் றிடினு
னது வினையனைத்துந் தீருமென்று, கோதகலும் பெரு
ந்தவத்துக் கோதமனங் கவற்குவிடை கொடுத்துப்
பின்ன, ரேதமின்மா தவர்சூழ்ந்து வரமிதுலை நகர்நோ
க்கி யேகினனால். (எஎ)

புண்ணீரின் கடிகமழப் பொருகளத்தி லொன்ன
லர்தம் புயந்தோய் மின்னார், கண்ணீர்மை கலந்தொ

(எரு) தீர்த்து=ஒழித்து; இமைக்கும்=பிரகாசிக்கும்.

(எசா) உலவை=கிளை; ஈன்ற=நல்கிய; வளங்கெழு=வளமை பொருந்திய; களதபுதம்=வெள்ளி.

(எஎ) கோதமன்=கவுதமன்.

(எஅ) புண்ணீர்=இரத்தம்; கடிகமழ்=நாற்றம் வீச; பொருகளத்தில்=யுத்தகளத்தில்; ஒன்னலர்=பகைவர்; கண்ணீர்=கண்களின் நீரானது; மைகலந்து=தீட்டிய மையோடு சேர்ந்து; கலுழ்ந்து=அழுது; கலன்வாங்க=மாங்கல்யம் இழக்க; கதிர்வேல்வாங்கி=ஒளிபொருந்திய வேலாயுதத்தைக் கொண்டு; மண்=உலகத்தை; நீர்மைபெற=ஒழுங்காக.

ழூகக் கனுழ்ந்தணிபொற் கலன் வாங்கக் கதிர்வேல் வாங்கி, மண்ணீர்மை பெறப்புரந்த மன்னவனுந் தாக முற்று வருந்தி னோர்கு ளுண்ணீர்பெற் றதுவெனத் துன் பொழிந்துயர்கோ கன்னமுற்று னுவப்பி னோடும்.

பூகநெடும் பொழில்புடைசூ ழப்பதியிற் புகல் கோடிப் புனலின் மூழ்கி, நாகர்தினந் தொழுதெழுமா பெலவிலிங்க நாயகனை நண்பிற் போற்றி, மாகமதிச் சிவநிசியின் மறைமுதலா கமத்துவிதி வழுவா தாற் றிச், சோகமிகத் தரும்பழைய வினைத்தொடர்பி னழு க்கனைத்துந் துடைத்திட் டானே. (எகூ)

வளமைதரு கோகனத்தின் மாகமதிச் சிவநிசி யை மகிழ்ந்து நோற்றுப், பழிவிளைக்கும் பிரமகத்தி பற்றறவே நீர்ந்தபின்னர்ப் பரமன் செய்ய, கழலடை ந்து பேரின்பங் கலந்திருந்தான் சிவநிசியைக் கருத்தி னுற்ற, வுளமகிழ்வா னோற்றவர்கள் பேரின்ப வீட டைவ ருண்மை யென்றான். (அ0)

என்றுயர்நை மிசவனத்தி லிருந்தவிருந் தவர்மகி ழ்ந்தாங் கிருகை கூப்பித், துன்றுசடை முடிதுளக் கிக் கேட்டுவப்ப விரித்தெடுத்துச் சொல்லினானற், கன் றுகொடுஞ் சினமயக்கங் காமமெனு முக்குறும்பைக் கடிந்து நாளும், வென்றிபெறுந் தவஞான நிலையுணர் ந்து கலங்கமின்றி விளங்குஞ் சூதன். (அக)

(எகூ) பூகம்=பாக்குமரம்; நெடும்பொழில்=நீண்டசோலைகள், புடைசூழ=பக்கத்திற்சூழ; கோடிப்புனல்=கோடித் தீர்த்தம்; நாகர்=தேவர்.

(அக) இருந்தவர்=பெரியதவத்தையுடையவர்; துன்று=நெரு ங்கிய; துளக்கி—அசைத்து; கன்று=வெதுப்புகின்ற.

நடஉ

வசனம்.

முனிவர்காள்! சீர்த்தியோங்கும் சிவராத்திரியின் திவ்வியசரிதம் திறம்பெறவின்னும் உங்கட்கொன்று உரைப்பேன் கேட்பீர் எனச் சூதமாமுனிவர் துய்ய வமுதம் சொரிவது போலச் சொல்வாராயினர்.

மேற்றிசையிற்றோன்றி வளருஞ் சந்திரன் தவழ்ந்து செல்லுமாறு விண்ணையளாவிய மதில்களையுடையதாயும், தசரத மன்னன் பால் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி இராமபிரானா யவதரிக்கப்பெற்றதலமாயும் விளங்கும் அயோத்திமா நகரிலே சூரிய வமிசத்திலே நீதி தவறாது செங்கோல் செலுத்தும் மித்திரசகனன் என்னும் பெயரையுடைய ஓர் அரசனிருந்தனன். அவ்வரசன் தனக்குரிய மரபிலே மதயந்தி யென்னும் பெயரையுடைய ஓர் இராஜ குமாரியை மணம் புரிந்து அவளோடு கூடி வாழுநாளில், காட்டினிற் சென்று வேட்டையாடுதலில் விருப்பமுற்றனன். அதனால் அவன் கருநிறமுள்ள பட்டாடையை இடையிற் றரித்து, அதன் மீது கச்சைப்பட்டையை இழுத்துக்கட்டி, சிவந்த ஒளிவீசுகின்ற மணிகள் பதித்த மகுடத்தை நீக்கிப் புஷ்பமாலைகளாற் குடுமியை யிழுத்துக் கட்டி, பசிய மேகம்போன்ற நிறத்தினையுடைய மரகத மணிகள் பதித்த பொற்கவசத்தினைத் தேகத்திற்றரித்து, கைக்குக் கவசமிட்டு, முதுகில் அம்புப் பெட்டியையும் வில்லையுந் தரித்து, உடைவாளைக் கையிலெடுத்துக் கொண்டு, மனத்தையுங் காற்றையும் நிகர்த்த வேகத்தினையுடைய நீலநிறக் குதிரை மேலேறி, சங்கு, படகம் முதலி யவாத்தியங்கள் முழங்கவும், அளவில்லாத யுத்தவீரர்கள் ஆயுதபாணிகளாகச் சூழ்ந்து வரவும், வேட்டைக்குரிய வலை முதலிய கருவிகளை ஒட்டகங்கள் சுமந்து பின்றொடரவும் அநேக நாய்களை இருப்புக் கம்பிகளாற் கட்டி வேடர்களிழுத்துப் பின்வரவும் சென்று விண்ணையளாவிய கிளைகளையுடைய தருக்களடர்ந்த காட்டினை யடைந்த

னன். பின்னர் மித்திரசகனன் என்னும் அரசனும், சிங்கம் போன்ற யுத்த வீரர்களும், வேடர்களும்; மான், மரை, முயல், பன்றி, யானை முதலிய மிருகங்களை வேட்டையாடிக் கொண்டிருந்தனர்.

இங்ஙன மிருக்கையில் நீருண்டமேகம்போற் கருநிறம் வாய்ந்த, சகோதரர்களாகிய இராக்கதர்களிருவர் இறுமாப்புற்று அங்கு வந்து யுத்தம் புரிவான் எதிர்க்க, மித்திரசகனன் அவ்வரக்கரோடு நெடுநேரம் போர்புரிந்து அவர்களில் முந்தியவனை வாளாற்றுணித்துக் கொன்றனன். அதனைக்கண்ட இளையோனாகிய இராக்கதன் இவ்வரசனை எதிர்த்து வெல்லுதல் நம்மால் முடியாதாகலின் பின்னர் வஞ்சகச் செய்கையால் இவனை வெல்வேனென்று ஓடி மறைந்து மனிதவேடம் பூண்டு வந்து அவ்வரசனது பாதத்தில் வீழ்ந்து வணங்கினன். மித்திரசகனன் அவ்வரக்கனை மனிதனென்றெண்ணி யாது பற்றி எம்மை வந்தடைந்தனை யென்று கேட்க, அவ்வரக்கன் அரசனே! நின்னிடம் எவற்றொழிற் புரிந்து காலங்கழிக்கலாமென்றெண்ணி வந்தடைந்தேன் என்றனர். மித்திரசகனன் அவனை யாதரித்து வேட்டையாடுதலை முடித்துக் காட்டை யகன்று அரக்கனுடனும், தனது சேனைகளுடனும் அயோத்தி நகரை யடைந்து அவ்வரக்கனுக்குச் சமையற்றொழி லளித்து மதயந்தியுடன் கூடி வாழ்ந்திருந்தனன்.

இங்ஙன மிருக்கையில் ஒருநாள் மித்திரசகனன் பிதிர் சிராத்தஞ் செய்யும் தினம் வரலும் அன்று தன் குலகுருவாகிய வசிட்டமுனிவரை யழைப்பித்து வணங்கி ஆசனத் திருத்தி அருக்கியபாத்திய மளித்துப் பூசித்துப் போசனமிட்டு உபசரித்தனன். அக்காலத்தில் சமையற்றொழிற் புரியும் அரக்கன் இவ்வரசனை வஞ்சிப்பதற்கு இதுதான் றருணமென்றுன்னி, பதார்த்தங்களோடு மனிதனது மாமிசத்தையுஞ் சமைத்து முனிவருண்ணும் பாத்திரத்திற் படைத்தனன். வசிட்ட முனிவர் அதனைப்பார்த்து, தன் வேலைக்காரனைக் கொண்டு நரமாமிசம் படைக்கும்படி இவ்வரசன் செய்வித்தன னென்

றெண்ணிக் கண்கள் சிவந்து தீப்பொறி பறக்கக் கோபித்து, அரசனை விளித்து நீ அழகை யொழித்துக் கருநிறங் கொண்ட இராக்கத வடிவம்பெறக் கடவாயெனச் சபித்தனர். அதனைக் கேட்ட மித்திரசகனன் மனங்கலங்கிப் பின்னர் ஒருவாறு தெளிந்து கோபமதிகரித்தவனாய், மனவாக்குக் காயங்களால் யாதொரு தீங்கு மிழைத்தறியாத என்னைச் சபித்தனை யாதலின் உனக்கு நான் எதிர்ச்சாபங் கொடுப்பேன் என்று கையில் நீரை யெடுத்து மந்திர மோதினன். அப்பொழுது அவனது தேவியாகிய மதயந்தி அதனைக்கேட்டு நடுநடுங்கிக் கணவனருகில் ஓடி வந்து வணங்கி நாயகா! தேசிகனே தெய்வமென்று வேதங்கள் கூறுகின்றன. ஆதலின் அக்குரவர் நியாயமின்றி ஒறுக்கினும் தணிந்து நடப்பதே சீடன் கடமையாமென்பதை உணர்ந்தும் உணராது போல நீ இங்ஙனஞ் சபித்தல் தகாதென்று உரைத்துத் தடுத்தனள். மித்திரசகனன் அதனைக் கேட்டவுடன் கோபந்தணிந்து சாபமிடுதற்குக் கையிலெடுத்து மந்திரித்த நீரைத் தனது பாதத்தில் விட்டனன். அந்த நீர் விழுந்த இடம் உளுந்துபோற் கறுப்பெய்திற்று. களங்கமற்ற பாதத்தில் கறுப்பாகிய கல்மஷம் ஏற்பட்ட காரணத்தால் அவ்வரசனுக்குக் கல்மாஷபாதனென உலகமெங்கும் பெயர் விளங்கிற்று. (அல்லது கல்லைப்போன்ற வலிமையும் உளுந்து என்னும் மாஷம்போன்ற வடிவமும் நிறமும் பொருந்திய காரணத்தால், கல்மாஷபாதனெனப் பெயர் விளங்கிற் றெனினுமாம்.)

பின்னர் அரசன் பலவாறு சிந்தித்து நிற்க, வசிட்டமுனிவர் அங்ஙனமே கோபமடக்கி,அரசன் தனக்கு யாதொரு தீங்கு மிழைத்தானில்லை யென்றும், மாறுவேடம்பூண்ட அரக்கன் செய்த பிழை யீதென்றும் யோகதிருஷ்டியினாலுணர்ந்து மித்திரசகனனை நோக்கி மன்னனே! யானிட்ட சாபப்படி அரக்க வுருவந்தாங்கிக் காட்டை யடைந்து பனிரண்டு வருடஞ் சஞ்சரித்த பின்னர், அவ்வுருவம் நீங்கி இச்சரீரம் பெற்று வாழ்வாயாக வென்று மறுசாபமுந் தந்தனர். கூத்தாடுவோர்

ஓர் வேடத்தை யொழித்து மற்றொரு வேடம் பூண்டு தோன்றுவதுபோல ஊழ்வினை வயத்தால் உடனே கன்மாட பாதன் அரசவுருவம் ஒழித்து பிறைபோலும் வளைந்த பற்களையுடைய இராக்கத வடிவமுற்றனன். அதனைக்கண்டு அவ்வரசன் மனைவி முதலிய மங்கையர்களெல்லாம் பயந்து ஓடி யொளிந்தனர். அரக்கவுருவந் தாங்கிய கன்மாடபாதன் உடனே நாட்டையகன்று காட்டையடைந்து எதிர்ப்பட்ட மிருகங்களைக் கொன்று கொன்று அருந்தித் திரிந்துக் காலங்கழித்திருந்தனன்.

இங்ஙன மிருக்கையில் பிரம்ம குலத்திலுதித்த ஓர் முனிவன் புதல்வனும் அவன் புதுமணம்புரிந்த மனைவியும் அக்காட்டின்வழியே போய்க் கொண்டிருந்தனர். இவ்வரக்கன் அவர்களைக் கண்டு சந்தோஷித்து உண்டு பசியகற்றுமாறு அம்முனிவனைப் பிடித்துக் கொல்ல எத்தனித்தனன். அப்பொழுது அம் முனிவனது மனைவி கண்டு நடுநடுங்கி அரசனே! நீ இராக்கதர் குலத்திற் பிறந்தவனல்லை யென்பதும் இருடி சாபத்தால் இடும்பனுயினை யென்பதும் உணர்ந்திலைபோலும். நீ இப்பொழுது எனது கணவனைக் கொல்வையாயின் யானும் தீயில் விழுந்து உயிர் துறப்பேன். இவ்விரண்டு ஹத்தியும் உன்னையே சாரும். அதனால் நீ பல துன்பத்திற்குள்ளாகி நெடுங்காலம் வருந்த நேரிடுமென்பதை யுணர்ந்து உயிர்ப்பிச்சை தரக்கடவா யென்று கண்ணீர் பெருக அழுது இரந்தனள். செவிடனருகிற் றடவும்வீணைபோல் அம்மாது கூறியனவெல்லாம் அவ்வரக்கன் செவிப்புலம் ஏற்கப் பெறுதவனுய் அம்முனிவனைக் கொன்று இரத்தத்தையும் மாமிசத்தையு முண்டு எலும்புகளை யெல்லாம் அவள் முன் உமிழ்ந்தனன். அந்தமாது தீயில் விழுந்த புழுப்போற்றுடித்து வருந்தி அவ்வெலும்புகளை யெல்லாம் மடியில் வாரிக்கொண்டு சென்று பெருந் தீயை மூட்டி, அதில் எலும்புகளை யிட்டு அத்தீயை வலம்வந்து; அநியாயமாய் எனது நாயகனைக் கொன்ற வேந்தன் தன் நகரடைந்து மங்கையர் போகந் துய்ப்பனேல் உடனே இறக்கக் கடவன் என்று சபித்து அத்தீயில் விழுந்து இறந்தனள்.

பின்னர் கன்மாடபாதன் பன்னிரு வருடங்கழித்துப் பயின்முனிசாப மொழித்து அரக்க வுருவம் நீங்கி அரசவுருவந் தாங்கி ஆரணியத்தைக் கடந்து அயோத்தி நகரை யடைந்து தனதரண்மனையிற் புகுந்து தாபமகற்றி யிருந்து நெடுநாட் பிரிந்திருந்த தன் மனைவியாகிய மதயந்தியி னிருப்பிடஞ் சென்று அவளுடன் மருவ முயன்றனன். முன் காட்டில் நடந்த விருத்தாந்தங்களைக் கேட்டிருந்த மதயந்தி நாயகா ! நீ இராக்கதனாயிருந்த காலத்து காட்டில் ஓர்முனிவனைக் கொன்று தின்றனை. அதனால் அம்முனிவனது மனைவி, உன் மனைவி முதலிய மாதர்களைத்தழுவில் இறக்கக் கடவாயெனச் சாபமிட்டுத்தீயில் வீழ்ந்திறந்தனள். ஆனதால் நீ எனையணைதற்கடாதெனக் கூறினள். அதனைக்கேட்ட கன்மாடபாதன் பொற்கலத்தில் அமுதம்பெற்றும் அதனை அருந்தக்கடனிலான் போலிருந்து மனத்துயரமுற்று நாம் மனைவியுடன் கூடிவாழாவிடின் புத்திரப்பேற்றை யடைவதில்லை. புத்திரப்பேறடையாவிடில் புத்தென்னும் நரகத்தைக் கடப்பதில்லை. இதற்கென்செய்வோமென யோசித்துத் துன்பத்தழுந்தியிருந்தனன்.

இங்ஙன மிருக்கையில், அகன்றவாயும் அழற்பெய் கண்ணும் நீண்டநகமும் நெருப்பெனரோமமும் வக்கிர தந்தமும் விகாரவடிவமும் பொருந்திய அலகையொன்று தோன்றிவந்து வெந்த புண்ணில் வேலநுழைத்ததுபோல் அவ்வரசனைப் பற்றி வருத்திற்று. அதனைக்கண்ட அரசன் பயந்து நடுநடுங்கி மனதில் ஒன்றுந்தோன்றாதவனாய், அந்நகரின் புறத்துள்ள காட்டினிடத்துப் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவம் புரியும் பெரியோர்களை யடுத்துப் பணிந்து சுவாமிகாள்! என்னைவருத்தும் அலகை எங்குள்ளது, ஏனிங்ஙனம் வருத்துகின்றது, என்செய்தாலிஃதொழியும் என்று கேட்க, பரமேசுவரனைச் சதாமனத்திருத்துந்தபசிகள் அரசனைப்பார்த்து நீ அரக்கனாகிக் காட்டிற் றிரிந்த காலத்து,பிரம்ம குலத்து முனிவனைக் கொன்றனை அந்தப் பிரம்மஹத்தி இப்படி அலகையாய்த்தோன்றி உன்னை வருத்துகின்றது. நீ பல புண்ணியத் தீர்த்தங்க

ளிற் படிந்து ஆங்காங்குத் திருவுருக்கொண்டிருக்கும் இறைவனைப் பூசிப்பையாயின் இஃது ஒழியும் என்றனர்.

கன்மாடபாதன் உடனே புறப்பட்டுச்சென்று சேது முதலிய தீர்த்தங்களிற் படிந்து ஆங்காங்குள்ள ஆலயங்களை யடைந்து பணிந்து இறைவனையருச்சித்து வந்தனன். இங்ஙனஞ் செய்தும் அந்தப் பிரம்மஹத்தி நீங்காதிருந்ததால் கவலைக் கடலிலாழ்ந்தவனாய் மிதுலைமாநகரின் பக்கத்திலே சின்னாள் வசித்திருந்தனன்.

இப்படியிருக்கையில் கவுதமரென்னும் முனி புங்கவர் மிதுலைமா நகரினுக்குச் செல்லு மாறு தஞ்சீடர்கள் சூழப் புறப்பட்டுக் கன்மாடபாதனிருக்கு மிடத்தினுக்குவரலும், அம்முனிவரை அரசன் கண்டு எதிர் சென்று பணிந்து அழைத்து வந்து ஆசனத்திருத்தி யுபசரித்தனன். கவுதமமுனிவர் ஆசிகூறிப் பீடத்திருந்து அரசனைப்பார்த்து மன்ன ! நின் முகத்தின் காந்தி குன்றிய காரணம் யாதோ அதனை யெனக்கறைதி யென்றனர். கன்மாடபாதன், வசிட்டமுனிவர் அநியாயமாய்ச் சாபமிட்டதும், அதனால் அரக்கனாகிக் காட்டிற் றிரிந்ததும், பன்னிரு வருடஞ்சென்று பழையவுருவம் பெற்று நாட்டை யடைந்ததும் விசிதமாகக் கூறி, காட்டில் முனிவனைக்கொன்ற பாவம் அலகையாய்த்தோன்றி என்னை வருத்துகின்றதால் அதனை யொழிப்பான் பலதீர்த்தங்களிற் படிந்து ஆங்காங்குத் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிரானின்ற இறைவனை யர்ச்சித்து அநேக தானதருமஞ்செய்தேன், அநேக மந்திரம் ஜபித்தேன், அநேக வேள்விகள் செய்தேன் இவ்வளவு செய்தும் அவ்வலகை யொழிந்ததில்லை. அதனால் அளவிலாத் துன்பமடைகின்றனன். இத்துன்பமொழிய இன்னும் எவ்வகைப் பிராயச்சித்தஞ் செய்யவேண்டுமோ அதனைத் தேவரீர் திருவாய் மலர்ந்தருளவேண்டு மென்று இரந்தனன்.

கவுதமமுனிவர், மன்னவ ! பரமேசுவரனுக்குரிய விரதங்களில் மேலானது ஒன்றுள்ளது. அஃது மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய சிவராத்திரி விரதமாம். அவ்விரத

தினத்தில் மேலாகிய ஓர் சிவத்தலத்தையடைந்து ஊணுறக்க மகற்றி விதிப்படி அன்றிரவின் நான்கு சாமமும் பரமேசுவரனை பூசிக்கில் தப்பாது நின் துன்பங்களெல்லாமொழியும் அஞ்ச ற்க அஞ்சற்கவென்றனர். கன்மாடபாதன் அவ்விரதமனுட்டி ப்பதற்கு, மேலாகிய சிவத்தலம் யாதோ அதனையும் அநுக்கிர கிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, கவுதமமுனிவர் பரமேசு வாருறையுந் தலங்களில் மேலானது கோகன்ன மென்னுந்தல மாம். பிரம்மாதிதேவர்களும், சித்தர் வித்தியாதரர் முதலின ரும், அத்தலத்தில் வந்து தவம்புரிந்து இஷ்டசித்திகளைப் பெ ற்றிருக்கின்றனர், பெறுகின்றனர். ஆதலின் அத்தலமே நீ செ ன்று சிவராத்திரி தினத்தில் இறைவனைப்பூசிப்பதற்குத் தகுந்த தாகும் என்று தீர்மானித்து அத்தலத்தின் வரலாற்றினைக் கூறுவேன் கேட்பாயாகவென்று சொல்லத்தொடங்கினர்.

முன்னோர் ஞான்று இலங்கைக்கிறைவனாகிய இராவண ன் ஓர்சிவலிங்கத்தினைப் பெற்று தன் நகரிற்றாபித்துப் பூசிப் பான் கயிலையங்கிரியை யடைந்து அரியதவஞ்செய்தனன். அவனது தவத்திற் கிரங்கிப் பரமபதி அவன் முன் தோன்றி ஓர் சிவலிங்கத்தினை யெடுத்து இவ்விலிங்கத்தினைப் பூமியில் வைக்கில் எடுக்கமுடியாமல் வேரிறங்கி விடு மாகையால் பூமி யில்வைக்காமல் கரத்திற் றாங்கியவண்ணமே நின் நகரடை ந்து எங்குப்பிரதிஷ்டை செய்யவேண்டுமோ அங்கு வைப்பா யாக. அன்றியும் இதனைத்தாபித்து நீ பூசிப்பையேல் எவரா லும் நின்னை வெல்லப்படாத தன்மையை யடைவாய் என்று சொல்லிக் கொடுத்தனர். இராவணன் அமலநாதன்பால் அரு ள்விடைபெற்றுக் கயிலையினின்று புறப்பட்டுப் பூமியில் வந்து இலங்கையைநோக்கிச் சென்றனன்.

இதனை யுணர்ந்த தேவர்கள் பயந்து ஒருங்கு கூடி இரா வணன் சிவலிங்கத்தினைப் பூசித்து எவராலுந் தன்னை வெல்லு தற்கரிய தன்மையைப் பெறுவனேல், குரங்கின்கையிற் கொ ள்ளி யகப்பட்டதுபோல் தன்னிஷ்டப்படி நம்மைக் கொடுந் துன்பத்திற் குள்ளாக்குவான். ஆகையால் அவன் இலிங்கத்

தைக் கொண்டுபோய் இலங்கையிற் பிரதிஷ்டை செய்யாதவகை தேடுவதே தகுதியாமெனத் தீர்மானித்து, அத்தேவர்களெல்லாம் விநாயகப் பெருமானிடத்துச் சென்று, தங்கள் கருத்தை வெளியிட்டு யாதேனும் ஓர் தந்திரஞ்செய்து, அரக்கன் இலிங்கத்தினை இலங்கைக்குக் கொண்டு போகாதவகை செய்யவேண்டு மெனப் பிரார்த்தித்தனர்.

தேவர்களது வேண்டுகோளுக் கிரங்கிய கணேசப்பெருமான் தசமுகன் வயிற்றிற் றண்ணீர் பெருக்கு மாறு வருணனுக்குக் கட்டளையிட்டு ஓர் பார்ப்பனச் சிறுவன் வடிவம் பூண்டு அவ்வரக்கன் செல்லும் வழியில் நின்றனர். இலங்கையர் கோன் கண்டு பிராமணச்சிறுவ ! நான் ஜலவிஸர்ஜனஞ் செய்து வருகிற வரையில் இவ்விலிங்கத்தைப் பூமியில் வைக்காமல் கையிற்றாங்கியிருப்பாயோ வென்ன, சிறுவ னுருக்கொடுதோன்றிய ஒற்றைக்கொம்பன் நான் நெடுநேர மிங்கிருக்க முடியாதாகையால் மும்முறை யழைப்பேன் அதற்குள் நீ வாராவிடின் பூமியில் வைத்து விடுவேன் என்றனர். வயிற்றின் நீருபாதையால் தசமுகன் அதற்கிசைந்து கொடுத்துப்போயினன். உடனே பிராமணச்சிறுவர், இராவண ! இலங்கைவேந்த !! அரக்கரிறைவ !!! என்று மும்முறையழைக்க அவன் வாராமையால் இதுதான் றருணமென்று இலிங்கத்தைப் பூமியில் வைத்தனர். பின்பு இராவணன் வந்து பார்த்துக் கயிலைநாதன் கடைக்கணித்தருளிய வாறு இலிங்கத்தின் அடியில் வேரோடியதுபோலு மென்றெண்ணி நடுங்கித் தனது வலிமை முற்றுஞ் செலுத்தி இருபது கரத்தாலும் பற்றியெடுக்க, அவ்விலிங்கம் குழைந்து பசுவின் காதுபோ லாயிற்றேயன்றிப் பூமியினின்றும் எடுக்க முடியவில்லை. அங்ஙனம் எடுக்க முடியாத தால் அவ்விலிங்கத்தினுக்கு மாபல லிங்கமெனவும் பசுவின் காது போற் குழைந்ததால் கோகர்ணேசுவரரெனவும், அவ்வீசுவர ரெழுந்தருளிய காரணத்தால் அந்நகரினுக்குக் கோகர்ணமெனவும் பெயர்கள் வழங்கி வருகின்றன.

௬.௬

சிவலிங்கத்தினை யெடுக்க முயன்று வலியிழந்த இராவ
ணன் கோபமுற்றுத் தனது இருபது கரங்களாலும் பிராமணச்
சிறுவர் தலையிற் குட்டினன். உடனே ஐங்கரப்பெருமான் ஆ
காயம் வரையிலளாவிய விசுவரூபங்கொண்டுத் தனது நீண்ட
கரங்களால் இராவணனைப் பிடித்து அம்மனைபோல் ஆகாய
த்தெறிந் தெறிந்து பிடித்தனர். அப்பொழுது இராவணன்
பிராமணருருவங்கொண்டு எதிரில் நின்றவர் விநாயகப்பெரு
மானே யென்றுணர்ந்து, 'பிறையோங்கு மணிமகுடப் பெருங்
களிற்றின் முகத்தோனே அறியாது பிழை செய்தேன் ஆதரி
த்துன் னருள் புரிவாய், என்று பெருங்கூச்சலிட்டுத் துதித்த
னன். உடனே மூஷிகவாகனர் தசமுகனைப் பூமியில் விடுத்து
அரக்கரிறைவ! நினது பிழையைப் பொறுத்தருளுமாறு நின்
னிருபது கரங்களாலும் பத்துத் தலைகளிலும் குட்டிக்கொள்
என்றனர். அரக்கர்கோன் அங்ஙனமே குருதி யொழுகுமாறு
குட்டிக்கொண்டு குதித்தாடி யுவப்பித்தனன். கஜமுகக் கடவுள்
அதனைக் கண்டு மகிழ்ந்து இன்றுமுதல் உன்னைப்போற் செ
ன்னியிற் குட்டிக்கொண்டு எம்மைத் துதிப்பவர்க்கு எமதருள்
வழங்குவோம் எனத் திருவாய்மலர்ந்து விண்ணில் மறைந்த
னர். அரக்கன் இவ்விலிங்கம் எடுக்கப்படாததெனத் தேர்ந்து
இலங்கைக்குச் சென்றனன். அவ்விலிங்கம் அநாதி முத்தனா
கிய பரமபதியின் றிருக்கரத்தா லெடுத்துக் கொடுக்கப்பட்டுப்
பின்னர் விநாயகப்பெருமான் றிருக்கரத்தாற் பூமியிற்றாபிக்கப்
பட்டதால், அக்கோகர்னமென்னுந் தலம் சிவலோகமென விள
ங்குகின்றது. இத்தகைய கோகர்னத்தில் நேற்று இருகண்ணு
மிழந்த ஓர் புலைச்சி, பிச்சை கிடைக்காததால் பட்டினியிரு
ந்து சிவராத்திரி யென்பதும் சிவலிங்கமிருக்கிற தென்பது
முணராது வில்வத்தளங்களைச் சிவலிங்கத்தின்மீது எறிந்திரு
ந்து மறுநாள் பசிப்பிணி தாளாது இறந்தனள். அதனால் அவள்
உடனே கயிலைநாதன் கழலடி யடைந்தனள். ஆதலின் கன்மா
டபாதனே! நீ அந்தக் கோகர்னத்தை யடைந்து சிவராத்திரி
விரத மிழைத்து இறைவனை யருச்சிப்பாயாக எனக் கூறி
விடைபெற்றுக் கவுதமமுனிவர் மிதுலை நகரடைந்தனர்.

கன்மாடபாதன், தாகமுற்று வருந்திஞேர் உண்ணீரைக் கண்டதுபோற் றான் பொழிந்து அக் கோகர்ன மென்னுந் தலத்தை யடைந்து ஆங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கி மாபலி லிங்கத்தினைப் பூசித்திருந்து மாகமாதத்து மகா சிவராத்திரி தினத்தில் வேதாகம விதிப்படி விரதமிழைத்து அச்சிவலிங்க நாயகனைப் பூசித்து, துன்புறுத்தும் பிரம்மஹத்தியையும் வினைகளின் தொடர்பையும் ஒழித்துச் சுகித்திருந்து பரமபதியின் திருவடி நீழலடைந்தனன்; என்று சூதமாமுனிவர் சொல்லி முடித்தனர்.

கன்மாடபாதச்சருக்கம் முற்றிற்று.

விபரிசச்சருக்கம்.

எண்டரு மறையுண ரிருடி காடிரி
புண்டர நுதலர ணிரவிற் பூசனை
கண்டவன் கதையினைக் கழறக் கேண்மினென்
றொண்டவச் சூதனு முரைப்ப தாயினன். (௧)

பாரினிற் புராதலப் பதிபு ரப்பவன்
போரினிற் றெவ்வர்மெய்ப் புலவு காரியு
மோரியு மருந்தவே லுறைக ழித்திடும்
வீரியன் விபரிச னென்னும் வேந்தனே. (௨)

---

(௧) கண்டவன்=செய்தவன்; ஒண்தவம்=அழகியதவத்தாற் சிறந்த.

(௨) புராதலப்பதி=புராதலமென்னும் நகர்; தெவ்வர்=பகைவர்; காரி=காக்கை; ஓரி=நரி.

தன்றடஞ் சிலைகொடு தானுஞ் சேனையுங்
குன்றருங் கானிடைக் குறுகி நாடொறும்
வன்றலைக் கேழன்மான் மரைபுல் வாய்களின்
மென்றசை யருந்திட வேட்ட மாடுவான். (௩)

புலந்தரு பூசுரர் புலைஞர் மற்றுள
குலந்தனி லுதித்தெழில் குலவு மாதரை
நிலந்தனி லவாவுட னேடி நித்தமுங்
கலந்துளந் தருக்கொடு களிக்கு நீர்மையான். (௪)

வேறு.

மதிவளர் பக்கங் கலைகுறை பக்க மதிதொறு மருவுபன் னொன்காந், திதிகளிற் றுயிலூண் டுறந்துதன் னடியார் சிந்தனைப்படி முடிவில்லாக்,கதிதரும் பரனை யானினைந் தாட்டிக் கடிமலர் கூவிளஞ் சாத்தி,விதிமுறைவழுவா துள்ளநெக் குருகி விருப்புட னருச்சனை புரிவான்.

மற்றவன் மனைவி யாகிய குமுத வதியவன் மலரடி வணங்கிக், கற்றடந் திணிதோட் புர்வல விரவுங் கல்வியிற் றிறலினே ரில்லாய், பொற்றரு விழுது விட்டெனக் கிடந்த புரிசடைப் புனிதனை ரிரவி,னுற்றருந் திடமூண் டுயிலொழிந் துளத்தி னுவப்புடன் பூசனை புரிவாய்.

கூனருஞ் சிலைக்கை வேட்டுவரென்னக் குலவிலங் கனைத்தையுங் கொலைசெய், தூனருந் திடுத லொழிந்

(௩) தடஞ்சிலை = பெரியவில்; குன்று = மலைகளையுடைய; புல்வாய் = கருமான்.

(௪) புலந்தரு = அறிவுள்ள; பூசுரர் = பிராமணர்.

(௬) விரவும் = பொருந்தும்; திறலில் = வலிமையில்; பொன்தரு = கற்பகவிருக்ஷம், இல்பொருளுவமை.

திலை நிலத்தி லுயர்குலத் திழிகுலத் துதித்த, தேனரு
ங் கனிபா னிகர்த்தசொற் கணிகைச் சேயிழையார்மு
லைப் போகந், தானருந் திடுதே றவிர்ந்திலை யிந்தத் தன்
மையென் சாற்றுதி யென்றாள். (௭)

என்றவண் மொழிந்த மொழிசெவிப் படலு மிள
நகை கோட்டிவே லிறைவன், முன்றவப் பயனா லிறப்
பெதிர் நிகழ்வா மூன்றுகாலங்களு முணர்வேன், துன்
றளிக் குலம்பாட் டயர்மலர்க் கோதைச் சுரிகுழால்
கேட்டியான் முன்னங், குன்றெனு மிஞ்சிப் பம்பைமா
நகரிற் குரைமுக ஞமலியா வுதித்தேன். (௮)

பாலைவென் றமுதை யடுமொழிக் கவுரி பங்கில்
வாழ் பம்பைநா யகன்ற, னாலயங் குறுகிப் பலிக்கிடு
மடிசி லருந்துவான் வருந்தியங் கடையுங், காலையிற்
கோயிற் கைவினை யாளர் கடிதெனைக் கடிந்திடக்கரு
தி, வேலையில் விடம்போற் கதைகணை குனித்த வில்
லொடுங் கல்லொடுந் தொடர்ந்தார். (௯)

ஓடினேன் வெருவி யாலயம் வலமா யுயிர்பிழைத்
துய்குவா னெறிக, டேடினேன் காணேன் பலிசொரி
பீடத் தின்னயற் சென்றுழிச்சுருதி, பாடிநான் மறை

---

(௮) துன்று=நெருங்கிய; சுரிகுழால்=வளைத்துக்கட்டியகூந்தலையுடையவளே!

(௯) அமுதை அடு=அமுதத்தை ஜயித்த; கைவினையாளர்=சிற்றாட்கள்; கடிந்திட=கொல்ல; வேலையில்=சமுத்திரத்தின்.

(௰) வெருவி=பயந்து; சென்றுழி=போனகாலத்து; பீடினால்=பெருமையோடு; பணிமாறினர்=தீபாராதனை செய்தனர்.

யோர் பழிச்சிட நெய்த்தீ பச்சுடர்த்தட்டெடுத்தேந் திப், பீடிறுற் பணிமா றினர்தரி சித்தேன். பிறைமு டிப் பிஞ்ஞகன் றன்னை. (கo)

அக்கணத் தொருவன் சரந்தொட வீந்தே னன் றிராச் சிவநிசி யதனின், மிக்கவா லயத்தை வலமதாய் வந்து விமலனைத் தரிசனை புரிந்து, நக்கனார் திருமுன் னுவிழ்த் திட்ட நன்மையாற் காலமூன் றுணர்ந்து, தக்க வாழ் வுடனு னிலம்புரந் தருளுந் தலைவனுத் தரைதனி லுதித்தேன். (கக)

இந்தநற் பலத்தைத் தந்தது பரம னிரவெனக் கருதியா னெதிர்ந்து, வந்தநற் றினங்க டொறுங்கலை நிறைந்து வருபிறை குறைபிறை யதனிற், றந்தபன் னுன்காம் பக்கமென் றுரைக்குஞ் சதுர்த்தசி களிற்றவ முமம், லந்திவா னதிச்செஞ் சடிலவா னவனை யகத்தில் வைத் தருச்சனை புரிவேன். (கஉ)

புரிந்தபூ சனையாற் பிரிந்துவெம் பாவம் போகு மோ வெனப்புகன் றனையேல், விரிந்தபைப் பணிப்பூ ணணிந்தருண் முக்கண் விமலனை வழிபடி வினன்முன், சொரிந்தவெம் பனிபோற் கொடுஞ்சிகைத் தழன்முன்

(கக) வீந்தேன் = செத்தேன்; மிக்க = பெருமை மிகுந்த; நானி லம் புரந்தருளும் = முல்லைமுதலிய நான்கு நிலங்களை யும் காக்கும்; தரை = பூமியில்.

(கஉ) எதிர்ந்துவந்த = தோன்றிவந்த; பக்கம் = திதி; சடிலம் = சடை.

(கங) பணிப்பூண் = சர்ப்பாபரணம்; கொடுஞ்சிகைத்தழல் = வெப்பமுள்ள சுவாலையினையுடைய நெருப்பு; தொக் குற = கும்பலாக; இந்தனம் = விறகு.

ெருக்குநக் குவித்தவிந் தனம்போற், கரிந்துநீ ருரும்
பரமனை நீயும் வழிபடக் கருதுகா ரிகையே. (கங)

எனவெடுத் திறைவ னியம்பலுங் கதிர்கான் றெறி
ழின்மணிக் கலன்கிடந் திமைக்குங், கனதனக் குமுத
வதியெனு மணங்கு கைதொழு தெனதுமுற் பவமு, ம
னமுறத் தெளிந்து சொல்லுநீ யெனலும் வளர்தரு
மல்லிகார்ச் சுனத்திற், சினகரத் திருக்கு மென்சிறைப்
புறவாச் சென்றுதித் திருந்தனை முன்னாள். (கச)

இறந்தமுற் பவத்திற் செந்நிறத் தசையொன் றெ
டுத்துவாய்க் கவ்வியீ வரலுஞ், சிறந்தவெங் கழுகொன்
றனைத்தொடர்ந் திடவச் சிவாலயந் தனைவலஞ் சூழ்ந்
து, பறந்தனை வந்து விடைவரை கொடிக்கம் பத்தி
டைப் பயந்தொளித் திருப்ப, மறந்தரு கங்கங் கொத்
திவாயலகால் வதைத்திட வாங்குயிர் மடிந்தாய். (கரு)

சொல்லுமக் கங்கம் புறவதா நின்னைத் தொடர்ந்
துகொன் றிடுஞ் செயல் சொல்லில், வல்லினில் விழை
வி னீகொடுவந்த வசைபடு தசையினை வவ்விச், செல்
லுவ னென்று வந்துனை வலிதிற் செருத்து நின் வாய்
ப்படுந் தசையைக், கல்லெறி விரைவி னப்புறங் கொண்
டு போனதக் கடுஞ்சிறைக் கங்கம். (கசு)

(கச) இறைவன்=அரசன்; கதிர்கான்று=கிரணங்களை வீசி; இமைக்கும்=பிரகாசிக்கும்; முற்பவம்=முற்பிறப்பு: சினகரம்=கோவில்; புறவு=புறா.

(கரு) இறந்த=கடந்த; கங்கம்=கழுகு; அலகால்=மூக்கினால்.

(கசு) வல்லினில்=வலிமையோடு; விழைவில்=விருப்பத்தோடு; வசைபடு=இழிவாகிய.

திவிழி யெருவை தொடர்ந்திட வந்தச் சிவாலய ந்தனை வலம் வரலா, லாய்பிழிக் கொன்றைத் தொடை புனை சடிலத் தண்ணன் முன்னுவிநீத் ததனாற், பாய்தி ரை யுடுத்த நெடுநிலப் பரப்புப் பரித்திடும் பார்த்தி வன் மகளாத், தூயசெங் கமலத் திருமக ளென்னத் தோன்றியென் றுணைவியு மானாய். (௧௭)

வேறு.

என்றிவை கூறக் கேட்ட வேந்திழை யெழுந்து போற்றி, நன்றிதென் றிறும்பூ தெய்தி நலனுடை நீயு நானு, மொன்றிமுன் னெடுத்த காயத் துற்பவ முரைத்தா யாங்கள், சென்றினிப் பிறக்குந் தன்மை செப்புதி தெரிய வென்றாள். (௧௮)

மென்னடை யன்ன மன்னாய் வேறினி யிரண்டா ஞ் சன்மன், பன்னக வேந்த னேந்தும் பார்மிசைச் சிந்து நாட்டின், மன்னவ னுவன் யானீ சஞ்சயன் மகளாத் தோன்றிக், கன்னலந் தருமென் றோளிற் கலந் துறக் களித்து வாழ்வாய். (௧௯)

படியிலோர் மூன்றாஞ் சன்மம் பகர்சவு ராட்ட நாட்டில், வடியயிற் சுடர்வே லேந்து மன்னவ னுவன்

(௧௭) எருவை=கழுகு; ஆய்=வண்டுகள் ஆராயும்; பிழி=தேனையுடைய; பாய்திரை=தாவுகின்ற அலையினையுடைய சமுத்திரத்தை, அன்மொழித்தொகை; நெடுநிலப் பரப்பு=அகன்ற உலகம், இருபெயரொட்டு; பார்த்திவன்=அரசன்.

(௧௮) இறும்பூது எய்தி=ஆச்சரியமடைந்து; ஒன்றி=பொருந்தி.

(௧௯) வேறுஇனி=இனிமேல் வரும்வேறாகிய.

யானீ, கூடிமதிற் கலிங்க நாட்டிற் கலிங்கர்கோன் மக ளாத் தோன்றி, யிடிமுர சதிரும் வாயி லென்மனைக் கிழத்தி யாவை. (உ௦)

மருவொரு நான்காஞ் சன்மம் வளங்கொள்காந் தார நாட்டிற், றிருவள ரரச ஞய்க்கோல் செலுத்து வன் யானீ சீறிப், பொருதரி யலரை வெல்லு மகதர் கோன் புதல்வி யாகிச், சுருதிவண் டிமிரும் பைந்தார் சூட்டியென் றுணைவி யாவை. (உக)

சிறந்ததோ ரைந்தாந் தோற்றந் திகழிய லவந்தி நாட்டிற், பிறந்தர சளிப்பன் யானீ பேருல கனைத்தும் போற்று, மறந்தரு வடிவேற் றுனைத் தாருணன் மக ளா வந்தென், னறந்தரு மனைவி யாகி யிருப்பையங் களவில் காலம். (உஉ)

முருந்துறழ் முறுவன் மானே மூவிரண் டாம்பி றப்பிற், பெருந்தமி ழருத்த நாட்டிற் பேரர சளிப்ப ன் யானீ, யிருந்தவப் பலனால் விஞ்சும் யாதிதன் மக ளாத் தோன்றி, யருந்தவத் திருமா தொத்தெ னம்புய மதனிற் சேர்வை (உ௩)

(உக) மகதர்கோன் = மகததேசத்தரசன்.

(உஉ) தோற்றம் = பிறப்பு; இயல்திகழ் = புகழ்விளங்கும்; மறம் = வீரம்; தாருணன் = தாருணன் என்னும் அரசன்.

(உ௩) முறுவல் = பல்; பெருந் தமிழ் அருத்தம் = உயர்ந்த தமிழ்ச் செல்வம்; இருந்தவம் = பெரியதவம்; விஞ்சும் = மேம்பட்ட; யாதி = யாதி என்னும் பெயரையுடைய அரசன்.

கழிதரு மேழாஞ் சன்மங் கைதவன் குலத்திற் றோன்றி, யெழில்பெறு பதும வன்ன னெனும்பெயர் பெற்று வாசம், பொழிமலர்ப் பைந்தார் வேம்பின் பூந் தொடை புனைந்து நாளும், பழிபவம் பயிலா வண்ணம் பாண்டிநா டளிப்பன் யானே. (உ௪)

நீயுமப் பவத்திற் செல்வ நிறைந்திடும் விந்த நாட் டிற், காயும்வெங் கதிர்வேன் மன்னன் கண்ணெனக் கதிர்கொண் முத்த, மேயும்வேய் மருட்டு மென்றோள் வசுமதி யென்னு நாமந், தோயுமோ ரணங்கா வந்து தோன்றிநீ வளர்வா யுன்னை. (உ௫)

மங்கல முரச மார்ப்ப மன்றல்செய் தளிப்பா னு ன்னிச், செங்கதிர் மணிகள் வேய்ந்த செம்பொன்மண் டபஞ்சோ டித்துத், துங்கவேற் கரனுன் றாதை தூதரி லோலை போக்க, வங்கண்வந் தெய்தும் வைவே லரச ரை யறையக் கேட்டி. (உ௬)

கொண்டல்கண் படுக்குஞ் சோலை குலவயோத் தியர்தங் கோமான், வண்டலம் வருந்தண் பைந்தார்

(உ௪) கழிதரும்=நீங்கும்; கைதவன்=பாண்டியன்; பதும வன்னன்=பத்மவர்னன்; வாசம்பொழிவேம்பின் = வாசனைவீசும் வேப்பமரத்தினது; மலர்ப்பைந்தார்= மலருந்தன்மையினையுடைய பசியஅரும்புகளாலாகிய; பூந்தொடை=அழகியமாலை.

(உ௫) காயும் வெங்கதிர்வேல்=கொல்லுந் தன்மையுடையதும் கிரணங்களை யுடையதுமாகிய வேலாயுதம்; முத் தம் எயும்=முத்துக்கள் பொருந்தும்;வேய்=மூங்கில்; மருட்டும்=மயக்கச்செய்யும்; தோயும்=பொருந்திய.

(உ௭) கொண்டல் கண்படுக்கும்=மேகங்கள் உறங்கும்; வண்டு அலம் வரும்=வண்டுகள் உலாவுகிற.

வனையுங்காந் தூர மன்ன, னெண்டலத் தரசர் போற்று மிருபதன் னுருப தேயன், விண்டலத் தமரர் போற்றும் விறலுடை யவந்தி வேந்தன் (உஎ)

பல்லவ தேய மாளும் பார்த்திவன் பன்னுந் தொன்னூல்
வல்லவன் யானைத் தானை வாரண வாசி மன்னன் [ல்
வில்லவ னாரின் மாலை மிலைந்திடு நேரி வெற்பன்
நல்லொளி முடிசேர் மன்னர் நன்மணச் சாலை நண்ண.

யானுமங் கெய்த நீயன் றிசையளி முரன்று பாடுந், தேனுமிழ் மலர்ப்பைந் தாரென் றிண்டிறற் றோளிற் சூட்டப், பானுவின் குலத்தோர் முன்னும் பார்த்திவ ரனேக ரீண்டி, யூனுமிழ் படைக ளேந்தி யுருத்தென்னோ டியுத்தஞ் செய்வார். (உகூ)

அங்கவர் தம்மை யெல்லா மாடல்வெங் கரிக்கூட்டத்தோர், சிங்கம தென்ன வென்று சேயிழை யுனையான் கொண்டு, சங்கமா முரசு பம்பை தழங்கிட வானில் வாழும், புங்கவர் பரவுங் கூடற் புரிதனிற் புகுந்த பின்னர். (௩௦)

அளப்பருங் கால மன்போ டாயிழை நீயு நானு, முளப்படும்போகந் துய்த்திட் டிலகொரு குடைக்கீழா

(உஅ) யானைத்தானை = யானைப்படையினையுடைய; வாரணவாசி = காசி; வில்லவன் = வில்லையுடைய; ஆர் இன் = ஆத்தியினது; மிலைந்திடு = தரித்திடும்; நேரிவெற்பன் = நேரிமலைக்குரிய சோழவேந்தன்.

(உகூ) அன்று = அப்பொழுது; அளி இசை முரன்று பாடும் = வண்டுகள் இரைந்து இராகத்தைப்பாடும்; ஊன் உமிழ்படை = மாமிசங்களைச் சிதறுவிக்கும் ஆயுதம்.

(௩௦) ஆடல் = சண்டைசெய்கிற; கூடற்புரி = மதுரைநகர்.

(௩க) உளப்படும் = விரும்பும்; களப்படும் = கண்டத்துப்பொருந்திய.

ண்டு, வளப்படு மகங்க ளாற்றி வளநிதி மறையோர்க் கீந்து, களப்படுங் கறையி னன்றன் கழகழல் பூசை செய்து. (௩௧)

வள்ளைவார் குழைதோய் கண்ணாய் மழகளி றென்ன வாங்கோர், பிள்ளையாம் பெறுவ மன்னேன் பெருங்கலை யுணர்ந்து தும்பி, கள்ளையார் கடுக்கை மாலைக் கடவுளுக் கடிமை பூண்டு, வெள்ளைவான் மதியம் போல வளர்ந்துபேர் விளங்கு நாளில். (௩௨)

அணிகெழு செழும்பொற் சோதி யவிர்மணி முடியுஞ் சூட்டி, மணிமுடி யநந்த னேந்து மாநில மவன்பா னல்கித், தணிவருஞ் சனன மென்னுந் தழலினுங் கொடிய வெய்ய, பிணிகெட வேட்கை யோடும் பெருந்தவ மியற்ற வெண்ணி. (௩௩)

தென்றலங் கன்று சந்தச் சினைமலர் வாசம் வீசுங்
குன்றமர்ந் தினிது வைகுங் குறுமுனி குறுக நம்பான்
மன்றலங் கோதை நீயும் யானுமாய் மருட்சி நீங்கி
யன்றவன் றன்னை நோக்கி யருந்தவ முழப்ப நின்றே.

அரியநற் றவஞ்செய் காலை யகத்திய னெமக்கு ஞானத்
துரியநற் சிவயோ கத்தை யுவந்துப தேசஞ் செய்வா
னெரிசுடர்ப் பிழம்பா மேனி யெந்தையைச் சிந்தை தன்னிற்
றெரியுமவ் வியோகநின்று சித்தியா முத்தி சேர்வேம்.

---

(௩௨) வள்ளை = வள்ளைக்கொடிபோலும்; வார்குழை = நீண்ட காதை; தோய் = பொருந்தும்; மழகளிறு = இளம் யானை; தும்பி = வண்டு.

(௩௩) கெழு = பொருந்திய; தணிவு அரும் = தணியாத.

(௩௪) தென்றல் அம் கன்று = இளந்தென்றல்; உழப்பம் = வருந்திச் செய்வோம்.

நவமிகு பூம்பை நாட்டி ஞயுரு வெடுத்து முன்னுட்
சிவநிசி தன்னி லீசன் றெரிசனங் கிடைத்த பேற்ருற்
பவமகன் றுய்ய நன்மை பலித்தது பாவை நீயுந்
தவமதிவ் விரதந் தானே தவறிடா திழைத்தி யென்ருன். (நக)

ஒருவருந் திங்க டோறு முபயபக் கத்திலுற்று
வருசதுர்த் தசிக டோறு மழுவலான் றன்னைவாசந்
தருமலர் கொடுபூ சித்துத் தணந்தெழு பிறப்பு நீங்கி
யிருவரும் பொருவி லாப்பே ரின்பவீ டெய்தி ஞரால். (நஎ)

சிவன்றிருக் கோயின் மேவிச் சிவநிசி விரதந் தன்ணிற், சிவன்றனைத் தெரிசித் தோருஞ் சேருவர் முத்தி யென்றே, சிவன்றனை யுணர்ந்துநாளுஞ் சிந்தைசெய் முனிவர் கேட்பச், சிவன்றனக் கடிமை பூண்ட சூதன் முன் செப்பினனே. (நஅ)

(நரு) ஞானத்து உரிய நற்சிவயோகம்=சிவஞானத்தை யடைவிக்கும் சிவயோகம்; தெரியும்=அறிகிற.

(நக) நவம்=புதுமை; தவமது இவ்விரதந்தானே=இவ்விரதமாகிய தவத்தையே.

(நஎ) ஒருவ அரும்=நீங்காத; மழுவலான் =மழுவில் வல்லவன்; தணந்து நீங்கி=விட்டு ஒழிந்து.

வசனம்.

முனிவர்காள்! இச்சிவராத்திரியின் சரிதம் இன்னுமொன்றுரைப்பேன் கேளுங்களென்று சூதமாமுனிவர் சொல்லலுற்றனர். இப்பூவுலகத்திலே புராதலம் என்னும் பட்டினத்திலே விபரிசனென்னும் வேந்தனொருவனிருந்தனன். அவ்வேந்தன் தன் சேனைகளோடு நாள்தோறுங் காட்டிற் சென்று மான், மரை முதலிய மிருகங்களை வேட்டையிற் கொன்று வந்து காலங்கழித்து வந்தனன். அரசர்கட்குரிய செய்கையின்படி இங்ஙனம் வேட்டை புரிபவனாயினும், அவன் ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறை, தேய்பிறைச் சதுர்த்தசிகளிற் றவறாது சிவராத்திரி விரதமிழைத்து அன்றிரவு நான்கு யாமத்தும் பரமேசுவரனை விதிப்படிப் பூசித்து வருவான். இங்ஙனமிருக்க ஒருநாள் அவனது மனைவியாகிய குமுதவதி யென்பாள் விபரிசனை வணங்கி நாயகா! காட்டில் வாழும் வேடர் போல விலங்குகளைக் கொல்வதை யொழிக்காது பரமேசுவரனுக்குரிய சிவராத்திரி விரதந் தவறாதிழைத்து அவ்வீசனைப் பூசித்து வருகின்றனை இஃதென்னையோ அதனைக் கூறுவாயாக வென்றனள். அதனைக் கேட்ட அரசன் புன்னகை செய்து முன் செய்த தவப்பயனால் யான் திரிகால வர்த்தமானங்களும் அறிவேனாதலால் எனது முற்பிறவியின் சரிதத்தினைக் கூறுவேன் கேளென்று சொல்லலுற்றனன்.

பம்பைமாநகரில் நாயாகப் பிறந்திருந்தேன். அப்பொழுது ஒருநாள் பம்பைநாதன் ஆலயத்திற் பலியிடுஞ் சோற்றை யருந்தும்படி அங்குச்சென்ற காலத்து, கோயிற் காவலாளர்கள் கண்டு, என்னைக் கொல்லும்படி கல்லையும் அம்போடு கூடிய வில்லையு மெடுத்துக்கொண்டு ஓடி வந்தனர். அதனைக் கண்டயான், அங்கமும் ஆவியும் மிகவாடி, அகன்று பிழைக்கும் வகை தேடி, பிரியாத் துன்பக்கடலாடி, பிரகாரத்தின் வழியோடி, ஆலயத்தை வலமாய்ச்சுற்றி, வெளியிலோட வழியில்லாததால் மீட்டும் பலிபீடத்தினருகே வந்தனன். அன்று சிவராத்திரி

கூடிய சுபதினமாகையால், அப்பொழுது பிராமணர் பலர் தட்டேந்தித் தீபாராதனை செய்ய; பிறைமுடிப் பெருமானைப் பிறேத் தரிசித்து, ஓர் நிசாணத்தி நின்று தவங்கினேன். பின்னர்த் துரத்தி வந்தவர்களி லொருவன் அம்பை யெய்து என்னைக் கொன்றனன். அச்சுபதினத்தில் ஆலயத்தை வலம் வந்து பம்பைநாதரைப் பார்த்து, அப்பெருமான் சந்நிதியிலுயிர்நீத்த காரணத்தால் முக்கால வர்த்தமானங்களு முணருந் தன்மைபெற்று, அகிலத்தை யாளும் அரசனாகப் பிறந்தேன். இங்ஙனமாய உயர்வையளித்தது சிவராத்திரி தினத்து, தண்மதி முடியோன் றரிசன விசேடமே யெனத் தேர்ந்து ஒவ்வொரு சிவராத்திரி தினத்திலும் தவறாது விரதமிழைத்துப் பிஞ்ஞகனைப் பூசித்து வருகின்றேன். இங்ஙனஞ் செய்யின் எத்தகைய பாவமும் சூரியன் முற்பட்ட பனியெனவாகும். ஆதலால் நீயும் அங்ஙனமே செய்வாயாக வென்றனன். குமுதவதி இங்ஙனஞ் சொல்லிய விபரீசனை நோக்கி நாயகா! எனது முற்பிறப்பின் வரலாற்றினைக் கூறுவாயாக வென்ன, விபரீசன், நீ மல்லிகார்ச்சுனத்தில் கோயிலில் வசிக்கும் புறுவாகப் பிறந்திருந்தனை. அப்பொழுது ஒருநாள் நீ ஓர் மாமிசத் துண்டை வாயிலே கவ்விக்கொண்டு வரலும், கழுகு ஒன்று கண்டு அந்த மாமிசத்தை யபகரிக்குமாறு உன்னைத் துரத்தி வந்தது. நீ அக்கழுகுக்குப் பயந்து ஆலயத்தைச் சுற்றி வந்து துஜஸ்தம்பத்தின் மத்தியில் ஒளித்திருந்தனை. அக்கழுகானது தொடர்ந்து வந்து மூக்கினால் உன்னைக் கொத்திக் கொன்றுவிட்டு அந்த மாமிசத்துண்டைக் கவ்விச் சென்றது. கழுகு தெருத்தக் கோயிலைச் சுற்றிவந்து அநாதி முத்தன் சந்நிதியில் ஆவிநீத்திட்ட காரணத்தால், பார்த்திவராஜன் புதல்வியாய்த்தோன்றி எனக்குப் பாரி யாயினை யென்றனன் அதனைக் கேட்ட குமுதவதி நாமிருவரும் இனிப் பிறக்குந் தன்மையையுஞ் சாற்றுவாயாக வென்றனள்.

அன்னமனையாய்! கேட்பாயாக இனி இரண்டாஞ் சன்மத்தில் யான் சிந்து நாட்டரசன் சேயாய்த் தோன்றி அந்நாட்டை

யாள்வேன். நீ சஞ்சயவரசன் சிறுமியாய்த் தோன்றி என்னை மணந்து வாழ்வாய். மூன்றாஞ் சன்மத்தில் சீவுராட்டிர நாட்டரசின் சேயாய்த்தோன்றி அந்நாட்டை யரசளிப்பேன். நீ கலிங்கநாட்டரசன் காதலியாய்த் தோன்றி என்னை மணந்து வாழ்வாய். நான்காஞ் சன்மத்தில் காந்தாரநாட்டரசன் கான்முளையாய்த் தோன்றி அந்நாட்டையரசளிப்பேன். நீ மகதராஜன் மகளாய்த் தோன்றி என்னை மணந்து வாழ்வாய். ஐந்தாஞ்சன்மத்தில் அவந்திநாட்டரசன் அணிசுதனாகி அந்நாட்டை யாள்வேன். நீ தாருணவேந்தன் தையலாய்த் தோன்றி என்னை மணந்து வாழ்வாய். ஆறாஞ்சன்மத்தில் தமிழ்ச்செல்வ நாட்டிற் பிறந்து தனியரசளிப்பேன். நீ யாதி யென்னும் அரசன் மகளாய்த் தோன்றி என்னை மணந்து வாழ்வாய். ஏழாஞ்சன்மத்தில் பாண்டிநாட்டரசன் புதல்வனாகப் பிறந்து பத்மவர்னனென்னும் பெயர் பெற்று அந்நாட்டையாள்வேன். நீ விந்த நாட்டரசன் மகளாய்த்தோன்றி வசுமதியெனப்பெயர்பெற்று வளர்வாய். அப்பொழுது நின் தந்தையாகிய விந்தர் கோமான், நின்னை மன்றல்செய்தளிப்பான் சுயம்வரம் நாட்டி மன்னர்கட்கெல்லாம் மணவோலை யனுப்புவன். அவ்வோலையைக் கண்ணுற்ற அயோத்தியரசன், காந்தாரமன்னன், துருவதேசாதிபன், அவந்திவேந்தன், பல்லவபார்த்திவன், காசியர் கோமான், சோழ பூபதி முதலிய மன்னவர்பலர் அச்சுயம்வர மண்டபத்தினுக்கு விஜயஞ்செய்வர் யானு மங்குவருவேன். அக்காலையில் நீயெனக்கு மாலைசூட்டிடுவாய். அதனால் மற்றைய மன்னர்களெல்லாம் பொறாமையுற்றவராய் என்னோடு யுத்தஞ்செய்வர். அந்தயுத்தத்தில், அநேகம் யானைக்கூட்டத்து ஓர் சிங்கம் நுழைந்தது போல நான்சென்று அவ்வரசர்களைவெல்வேன். பின்னர் நின்னை வதுவை புரிந்து நின்னோடுகூடி நெடுங்காலம் வாழ்ந்து, மதுரைக்குச்சென்று மாநிலங்காப்பேன். அன்றியும் அளவற்ற தானதருமங்களையும், அசுவமேதாதி யாகங்களையும் ஒன்றொன்று மிழைத்துவருவேன். காலகாலனைக் காலந்தவறாது கனிந்துபூசிப்பேன். அக்காலையில் நமக்குச் சிங்கமனைய ஓர் செல்வன் பிறப்பன். அவன் சந்திரன் கலைபோற் செழித்து வளர்

ந்து சகலகலைகளும் சடுதியிலுணர்ந்து ஆறணியண்ணற்கு அடிமைபூண்டு மதன்னென்ன வனப்பொடு விளங்குவன். அக்காலத்தில் அச்செல்வற்கு அண்ணல்தன்னருளால் அணிமுடிசூட்டி அரசளித்தலை அவன்பாலளித்து, தழலினுங்கொடிதாய்த் தகிக்கும்பிறவியை ஒழிக்கும் பொருட்டு ஒருதவமியற்றுவான், சந்தனவிருக்ஷத் தனிமலர் மணத்தைத் தென்றல்வீசுந் தென் பொதிகையினை, நீயும் நானும் நேடிச்சென்று, அங்குவாழும் அகத்தியமுனிவரை மனத்திலுன்னி மாதவம்புரிவோம். அப்பொழுது குறுமுனிதோன்றி நமக்குச் சிவயோகத்தையருளுவர். நாம் அதனையனுஷ்டித்திருந்து பிறவிக்கடல் கடந்து முத்தியங்கரையடைவோம்; என்று கூறிமுடித்தனன். பின்னர் விபரிசனும் குமுதவதியும்தவறாது சிவராத்திரிவிரதம்நோற்று வாழ்ந்து மேலே கூறியபடி எழுபிறப்புமடைந்து அனுபவித்து என்ஞான்றும் அழியாதபேரின்ப வீட்டையடைந்தனர் என்று சூதமாமுனிவர் சொல்லிமுடித்தனர்.

விபரிசச்சருக்கம் முற்றிற்று.

குபேரச்சருக்கம்.

ஓதமுற் றிடுபாற் கடலடுக் களைக்க ணமைத்தவா லோதன மருந்து, நாதனற் சங்கக் குழையணி காதனைத்துமுப் புரமெரித் திடுநாண், மாதனு வெனப்பொற் கிரிகுழைத் தேறும் வசுந்தரைத் தேர்நனிகடவுஞ், சூதனுக் கிணையாஞ் சூதன்மற் றின்னுஞ் சிவநிசிக் கதைதொடுத் துரைப்பான். (க)

(க) ஓதம் = நீர்ப்பெருக்கு; பாற்கடல் அடுக்களைக்கண் = பாற்கடலாகிய அடுப்பினில்; அமைத்த = சமைத்த; ஆலவோதனம் (வடமொழிச்சந்தி) = ஆலகால விடமாகிய உணவு; ஏறும் = ஏறிச்செல்லும்; வசுந்தரைத்தேர் = பூமியாகிய தேரை; நனிகடவும் = மேன்மையாகச் செலுத்தும்; சூதன் = தேர்ப்பாகன் (பிரம்மா).

முத்தவெண் மணிதோ டரித்தநூல் வடத்தின் முறைமுறை குறைவறக் கோத்து, வைத்தெனச் சிதறி விரிந்தபூம் பாளை மரகதக் கமுகினிற் குலையைத், துய் த்தலைக் கடுவன் பாய்ந்துறச் சிந்தச் சுரிமுகக் கூன்பிட ர்ச் சங்கங், கைத்தலத் தெடுத்துக் கம்பள ரெறிந்து கடிந்திடுங் காம்பிலி நாடு. (உ)

கயமலர் துவைத்துக் கரைதவழ் பணிலங் கான் றிடத் தோன்றுநித் திலத்தை, முயன்மதிப் பிள்ளை யெனப்பகற் காவி முகைமுறுக் குடைந்துதே னொழுக் கும், வயன்மருங் கெழுந்த கரும்பினைக் கவரி முறித்தி டத்தெறித்தவெண் மணிமுத், தயன் முதிர்ந் திடுசூற் றவளைமேற் படநொந் தாங்கது பொறுத்திடா தரற்றும்.

(உ) முத்தவெண்மணி = முத்தாகிய வெள்ளிய மணியை; தோ ள்தரித்த = தோளிற்றரித்த; நூல்வடத்தின் = பூணூற் புரியினில்; முறை முறை = வரிசை வரிசையாக; சித றி = பரந்து; பூம்பாளை = அழகிய பாளை; மரகதம் = பசுமைநிறம் பொருந்திய; கமுகினில் குலையை = பா க்குமரத்தின் குலையை; துய்த்தலைக் கடுவன் = மெல்லி ய தலையினையுடைய ஆண் குரங்கு; பாய்ந்து = தாவிக் குதித்து; உறச்சிந்த = பூமியிற் பொருந்தும்படி தள்ள; சுரிமுகம் = சுழித்தலையுடைய முகம்; கூன் = வளை ந்த; சங்கம் = சங்கினை; கம்பளர் = உழுதற்றொழிற் புரியும் ஓர் சாதியர்; கடிந்திடும் = ஓட்டுகிற.

ட) கயமலர் = குளத்திலுள்ள புஷ்பத்தை; துவைத்து = மிதி த்து; பணிலம் = சங்கானது; கான்றிட = ஈன; தோ ன்றும் நித்திலத்தை = விளங்கும் முத்தினை; முயல்மதி ப்பிள்ளை = முயல்போன்ற களங்கத்தினையுடைய இள ஞ் சந்திரன்; பகல் = பகலிலே; காவி = உற்பலம்; கவரி = எருமை; அயல் = பக்கத்திலே; சூல் = கர்ப்பம்.

இலைதலை விரிந்த நெட்டுடற் பூக மேற்றவொண்
டாற்றிளங் கதலி, யலைதலைத் தவிராத் தூங்கு தீங்கனி
சே ராம்பிர மனற்பொறி சிதறு, முலைமுகத் துருக்கிப்
பழுத்தபொற் சுளைக ளுற்றமுட் குடப் பழப் பனசந்,
தலைவளை குலைச்செஞ் சாலிநீள் வயலின் றலைத்தலை த
ழைத்துநின் றோங்கும். (௪)

இரும்புகாய்ந் தொத்த செக்கர்வா னெழுந்த வி
ளமதிக் குழவியை யளிகள்,விரும்புபூ மலர்த்தா தினை
ச்சிறு நுதலின் வெண்டிரு நீறெனச் சாத்தி, யரும்பெ
னுங்கலசத் துறுநறு நெய்வார்த் தடர்சினைத் தொட்

---

(௪) இலைதலை விரிந்த=நுனியில் விரிந்த இலையினையும்; நெ
ட்டுடல்==நீண்டஉடலினையுமுடைய; பூகம்=பாக்கு
மரம்; ஏற்ற=உயர்ந்த; ஒண்தாறு=சிறந்த குலையினை
யுடைய; கதலி=வாழை; அலைதலை=ஆடுகின்றதை;
தூங்கு=தங்கிய; ஆம்பிரம்=மாமரம்;உலை=உலோகங்
களை யுருக்கும் அடுப்பு; பழுத்தபொன்=பழுக்கக் கா
ய்ச்சிய பொன்போன்ற நிறத்தினையுடைய; சுளைகளு
ற்ற=சுளைகள் பொருந்திய; முள்=முட்களையுடைய;
குடம்=குடம்போன்ற; பழப் பனசம் = பழத்தினை
யுடைய பலா; தலைவளைகுலை=நுனிவளையப்பெற்ற
கதிரினையுடைய; செஞ்சாலி = செந்நெல்; தலைத்த
லை=பக்கந்தோறும்.

(௫) இளமதிக்குழவி=இளஞ் சந்திரனாகிய குழந்தையை; அ
ளிகள் விரும்பும்=வண்டுகள் இச்சிக்கின்ற; அரும்பெ
னும் கலசத்து=அரும்பாகிய குடத்து;உறுநறுநெய்=
பொருந்திய வாசனையுள்ள தேனாகிய நெய்யை; அடர்
சினைத்தொட்டில்=அடர்ந்த கிளைகளாகிய தொட்டி
லிலே; தால் இசைப்ப=தாலாட்ட; சாணை=பிள்ளை
களைப் படுக்கவைக்குஞ் சீலை.

டில்வைத் தசைத்துச், சுரும்புதா லிசைப்ப மென்றளி
ர்ச்சாணை துயிற்றியே வளர்த்திடுஞ் சோலை. (௫)

இனையன வளங்கூர்ந் திடுநெடு நாட்டி லிருங்கலை
த் துறையெலா முணர்ந்தோன், வனைதுழா யலங்கற்
கண்ணனு மறியா மலரடி வந்தனை புரிந்து, நினைவருங்
காம முதலமுக் குறும்பி னெடும்பகை கடிந்துநீ ணில
த்திற், றனைநிக ரான சுத்தநல் வேள்வி தத்தனென் று
ளனொரு மறையோன். (௬)

அன்னமா மறையோ னைம்புலப் பகைசெற் றுற்
றிய வருந்தவப் பேற்றாற்,கன்னல்வே ளெனவோர் நன்
மகப் பெற்றான் கருதருங் குணநிதி யவன்பேர்,முன்ன
முந் நூலின் வினைவிதி முறையின் முடித்தபின் முதுக்
குறை வுடையோ, னுன்னருஞ் சுருதி முதற்கலை பயி
ற்ற வோதினா னுளத்திலுற் றுணர்ந்தான். (௭)

தூமமார்ந் திருண்டு சுருண்டுநீண் டிடுமைச் சுரி
குழற் றோகையர் மருண்டு, காமனு மெனக் காமுறு
பருவ முற்றபின் கற்றைவெண் கதிர்கால், சோமனுண்
டளப்பான் முதனவக் கிரகஞ் சுகம்பெறு முகூர்த்த

(௬) இனையன = இப்படிப்பட்ட; வளம் கூர்ந்திடு = வளப்பம் நிறைந்திடும்; நெடுநாடு = பெரியதேசம்; துழாய் அலங்கல்வனை = துளபமாலையை யணிந்த; நினைவு அரும் = நினைக்கவொண்ணாத; தனைநிகர் = தனக்குத்தானே சமானமாக.

(௭) ஐம்புலப்பகைசெற்று = ஐந்து புலங்களின் சேட்டையை யொழித்து; முன்னம் = முதலில்; முந்நூல்வினை = உபநயனச் சடங்கு; முதுக்குறை உடையோன் = பேரறிவுடைய வேள்விதத்தன்.

நன் ஞானோர், வாமமே கலைப்பொற் குலக்கொடி தன்னை மறைப்படி வதுவைசெய் திட்டான். (அ)

வேறு.

இன்பமுற் றன்னை தந்தை யில்வயி னிருக்கு மந்நாண், மன்பதை மதிக்குஞ் சீர்த்தி வளர்குண நிதியா மைந்தன், புன்புல மீதூர்ந் தூழின் பொறித்திடு விதியின் கொட்பாற், றுன்பமும் பகையு நல்குஞ் சூதின்மேன் மனம்வைத் தானே. (கூ)

அற்புள ஞய தந்தை யறிவுறு வண்ணங் கல்விச், சொற்பயி லாதா ரோடு துன்னிவெங் கழகந் தன்னி,

---

(அ) தூமம் ஆர்ந்து=நறும்புகையூட்டப்பெற்று; இருண்டு=கறுத்து; சுருண்டு=சுருட்டையுற்று; நீண்டிடும்=நீண்டு வளரும்; ஐ சரிகுழல்=ஐந்துவகையாய் முடிக்கப்படும் கூந்தலினையுடைய; சோமன் = சந்திரன்; ஆண்டளப்பான்=பிரகஸ்பதி; வாம மேகலை=அழகிய மேகலாபரணம்; குல பொன் கொடி=நற்குலத்துதித்த இலக்குமி போன்ற பெண்; மறைப்படி=வேத விதிப்படி.

(கூ) இல்வயின் = வீட்டினிடத்து; மன்பதை= மனிதர்கள் புன்புலம்=புல்லறிவு; மீதூர்ந்து=பற்றி; ஊழின்=ஊழ்வினையினுல்; பொறித்திடும் = விதிக்கப்பட்ட; கொட்பால்=சுழற்சியினுல்.

(கஎ) அற்பு=அன்பு; அறிவுறுவண்ணம்=தெரியாதபடி; கல்விச்சொல்=கல்வி என்கிற சொல்லையும்; துன்னி=சேர்ந்து; வெம் கழகம்=கொடிய சூதாடுமிடம்; நன்மதி மருட்சிகூர்ந்து=நற்புத்தி மயங்கி; பொன்கலன்=அழகிய ஆபரணம், கலை = வஸ்திரம்; பொருது = சூதாடி.

னற்பக விரவெப் போது நன்மதி மருட்சி கூர்ந்து,பொ
ற்கலன் கலைபொற் காசு பொருதுநா டோறுந் தோ
ற்பான். (கo)

தனையன்யாண் டுற்று னென்று தாதைகேட் டிடு
ம்போ தெல்லா, மனைமிக வெருவி யோதற் ககன்றன
னென்றுதீய, வினையம தான சூது மறைத்தனள் விள
ம்ப முன்னூல், வனைதரு மார்பன் சற்று முணர்ந்திலன்
வாழு நாளில். (கக)

ஆய்மகன் றன்னை வாவென் றழைத்துநீ யிழைக்
கு மிந்தத்,தியசூ துந்தை தேரி னுனையுமிங் கெனையுஞ்
சீறிக், காய்வனென் றுள்ளத் தஞ்சிக் கவறுக டவறு
செய்யுந், தாயநீ யாடுஞ்சூது தனையொளித் துரைத்
தேன் முற்றாம். (கஉ)

உந்தைதன் னொழுக்க நீதி யுணர்ந்திலை யந்த ணா
ளர், மைந்தர்க ளடக்கை கண்டு மதிக்கிலை யென்று
மாழ்கிக், கந்தமைக் குவளை வாட்கண் கலுழ்ந்தவ ளு
ரைக்கு மாற்றஞ், சிந்தையிற் கொள்ளான் வஞ்சக்கணி
கையர் திறத்திற் சேர்வான். (கங)

(கக) தனையன் = புத்திரன்; அனை = அன்னை; தீயவினையம் = தீயசெய்கை; மறைத்தனள் = மறைத்து.

(கஉ) ஆய் = தாய்; உந்தை = உன் தகப்பன்; தேரின் = அறிந்தால்; கவறுகள் = தாயக் கட்டைகளால்; தவறுசெய் = தீமை விளைவிக்கும்; தாயச்சூது = சூதாட்டம் (இருபெயரொட்டு).

(கங) மாழ்கி = மயங்கி; கந்தமைக்குவளை = வாசனையுள்ள கறுத்த குவளை மலரனைய; கண்கலுழ்ந்து = கண்கலங்கி (அழுது); உரைக்கும் மாற்றம் = சொல்லுஞ் சொல்.

வாட்டடங் கருங்கட் சூளை மகளிர்மேன் மனம் வைப் போரைக், கோட்டரு கள்ளு நாளுங் குடிப்பவர் தம்மைக் கூடி, யீட்டரும் பொருளை வாவுற் றிருங்கவ் ருடு வோரை, வேட்டமேன் மனம்வைப் போரை யாவ ரே விலக்க வல்லார். (௧௪)

இனையநீர் மையினு னென்று மிசைந்துளா னில்லி னோர்நா, ளனைதுயி லமைய நோக்கி யத்தன்றன் னவ ள்பா னல்கும், புனைமணி யாழி தன்னைப் பொருக்கெ னத் திருடிப் போகி, வினையவெங் கவற்றி னுடித் தோ ற்றனன் வேறொன் றில்லான். (௧௫)

அந்தமோ திரத்தைக் கையி லணிந்துளா னொரு வன் றன்னைத், தந்தையாம் வேள்வி தத்தன் றனித் தொரு மறுகிற் கண்டு, சிந்தையிற் கவலை கூர்ந்து தெ ளிந்துபின் னறிவ னென்று, சிந்தமா மணிப்பொன் னுழி யாருனக் கீந்த தென்றான். (௧௬)

அரவின்மேற் கிடந்த வையத் தமரர்கள் பதியே யானுங், கரவினிற் கொண்ட தன்றுன் காதல்கூர் மை

---

(௧௪) சூளைமகளிர்=விலைமாதர்; கோள்தரு=தீமையளிக்கும்; ஈட்ட அரும்=சம்பாதித்தற்கரிய; வேட்டம்=வேட் டைத் தொழில்.

(௧௫) என்றும்=எந்நாளும்; இனைய=இப்படிப்பட்ட; நீர்மை யினன்=தன்மையுடையவன்; இல்லின் இசைந்து ளான்=வீட்டிலிருக்குங்கால்; அத்தன்=தந்தை; ஆழி =மோதிரம்; வினையவெம் கவற்றின்=கொடியசெய் கையாஞ் சூதினால்.

(௧௬) மறுகில்=தெருவில்.

(௧௭) வையத்துஅமரர்=பிராமணர்; சூதுபொர=சூதாட;புட டகம்==வஸ்திரம்.

ந்தன் சூது, பொரவிருப் புடையோ னேற்றெடு புட
கம் வென்று னின்றிவ், விரன்மணி யாழி தோற்றான்
மேவுவ னானை யின்னும். (கஎ)

ஓதுநூற் கலைவல் லாய்நின் னொருமகன் விலையி
லாமென், போதுபோற் கோசி கஞ்செம் பொன்புனை
கலன்கள் யாவுஞ், சூதுபோர் பொருது நாளுந் தொ
ழிலிது வாகத் தோற்பா, னீதுநீ யுணராய் போலு மெ
ன்றவ னெடுத்துக் கூற. (கஅ)

கன்னபா கத்திற் காய்ந்த கதிர்நுனிச் சலாகை
யிட்ட, தென்னவெந் துருகி யிற்பா லெய்தியில் லவளை
நோக்கி, யுன்னதா ருயிரொப் பான புதல்வனெவ் வு
ழையி லுற்று, னென்னமற் றவனீ ராட நீர்த்துறை புகு
ந்தா னென்றாள். (கக)

என்னனு நென்ன னுன்பா லெண்ணெயாட் டய
ர்போ தீந்த, வன்னநன் மணிப்பொன் னாழி தருகென
மறையோன் கேட்பக், கன்னலிற் கனிந்த மூரல் பகற்
கடன் கழித்துத் துய்த்த, பின்னர்யான் றருவலென்று
பெட்புறப் பேசலோடும். (௨௦)

(கஅ) மென்போதுபோல் கோசிகம்=மிருதுவாகிய மலர்போன்ற வஸ்திரம்; செம்பொன்புனை=சிவந்தபொன்னாற் செய்யப்பட்ட; சூதுபோர் பொருது=சூதாட்டமாடி.

(கக) கர்னபாகத்தில்=காதில்; கதிர்நுனிச்சலாகை=நெருப்பிற்பழுத்த கூர்மையுள்ளகம்பி; எவ்வுழை=எவ்விடம்.

(௨௦) நென்னல்=நேற்று; எண்ணெயாட்டயர்போது=எண்ணெ யிட்டுக்கொண்ட பொழுது; கன்னலிற்கனிந்த=கரும்புபோல் முதிர்ந்த; மூரல்=புன்னகையுடைய பெண் (சினையாகு பெயர்); பகற்கடன் கழித்து=மாத்தியான்னிக முடித்து; துய்த்தபின்னர்=சாப்பிட்ட பிறகு; பெட்புற=அன்போடு.

நெறியில்பொய் புகன்று கற்பி னீரல செய்தாள்
மைந்த, னறிவிலு னாகிவெஞ்சூ தாடியே படிற னானான்,
குறியுடைப் பெரியோர் நூலிற் கூறிய நீதி நோக்கிற்,
பொறியிலா விவரை விட்டுப் போவதே கடனென்
றெண்ணி. (உக)

பற்றொரு சுற்று மின்றிப் பாசிழைப் பவளச் செ
வ்வாய்ப், பொற்றொடி தனையும் பெற்ற புத்திரன்றனை
யு நீத்தன், றற்றொரு பதியி னெய்தி யுயர்குண வேள்
வி தத்தன்,மற்றொரு மடந்தை தன்னை மணவினை முடி
த்து வாழ்ந்தான். (உஉ)

இந்தமா நிலத்தி லிந்நாள் யான்புரி தவறு கண்டு,
தந்தையிங் கன்னை யோடென் றன்னையுந் தணந்தா
னென்று, சிந்தையிற் கவலை கூர்ந்து செய்வதொன் றறி
யான் மைந்த, னந்தமி றுன்ப வேலை யாழ்ந்தனன் க
ரைகா ணானாய். (உ௩)

கற்றிலேம் பொருள்க ளீட்டுங் கல்விக ளொழுக்க
மேன்மை, பெற்றிலே மஞ்ச லென்பார் பிறரெவ ரொ
ருவர் பாலும், பற்றிலே மற்று முள்ள பாசனத் தோர்
க ளாட்புஞ்,சற்றிலே மென்று மாழ்கிச் சலிப்புட னிரு
க்கு நாளில். (உ௪)

(உக) கற்பினீரல = கற்பினுக்குரிய தன்மையல்லாத செய்கை; படிறன் = பொய்யொழுக்க முடையவன்; குறியுடை = அறிவுடைய; பொறியிலா = அறிவில்லாத.

(உஉ) பாசிழை = பசிய ஆபரணம்; உற்று ஒருபதியின் எய்தி = வந்து ஓர் நகரை யடைந்து.

(உ௩) தணந்தான் = பிரிந்தான்.

(உ௪) பாசனத்தோர் = சுற்றத்தார்; மாழ்கி = மயங்கி.

அரனிர வதனி லீச னாலயந் தன்னி லோர்விப், பிரனுயர் பூசை செய்யச் செல்லுவான் பின்ன ரெய் திக், கரவினி லமலற் கேற்று மமுதினைக்க வர்ந்து மீள் வா,னிரவினி லற்ற நோக்கி யிருந்தனன் றுயிலி லாமல்.

எரிபெரும் பசியி னோடங் கியாம மோர் நான்கு ம் பூசை, புரிதர நோக்கி வைகி வைகறைப் போது தன்னி, லரியநல் விரத மாற்றி யமலனை யருச்சித் தே த்தித், துரிசறு மறையோன் கண்க டூங்கியே துயிலக் கண்டான். (உசு)

ஆண்டவ னெழுந்து போகி யமுதினை யெடுப்பக் கண்ணிற், காண்டல்செய் யாது மங்குங் கனைசுடர் வி ளக்கைக் கையாற், றாண்டல்செய் தீசன் முன்னர்ச் சோற்றினைக் கவர்ந்து கொண்டு, மீண்டொரு மறை யோன் காலில் விரைந்தனன் மிதிக்க லுற்றான். (உஎ)

மிதித்தவப் பொழுதி லந்த வேதியன் விழிந்து நோக்கிக், கொதித்தனன் கள்வ னென்றே கூக்குர

(உரு) செல்லுவான்பின்னர் = போகிறவனுக்குப் பின்; எற்றும்=சமைத்த; கரவினில் கவர்ந்து=திருட்டுத்தனமாய் அபகரித்து; மீள்வான்=மீளும் பொருட்டு.

(உசு) நோக்கிவைகி=பார்த்துத்தங்கி; வைகறை = விடியற்காலம்; துரிசறும்=குற்றமற்ற; கண்கள்தூங்கி=கண்களயர்ந்து.

(உஎ) கண்ணிற்காண்டல் செய்யாது=கண்ணிற் புலப்படாதபடி,மங்கும்=ஒளிகுறைந்தெரியும்; கனைசுடர்—நெருங்கிய ஒளியுள்ள; விரைந்தனன் = துரிதமாகச்சென்று.

(உஅ) கொதித்தனன்=மனப்புழுக்கமுற்று; கதித்த=சிறந்த; வெம் திறலினோர்=மிக்க வலிமையுள்ள; அக் கடிநகர் =அந்த அழகிய நகரை; அதிர்த்தனர்=அதட்டி.

லெழுப்பு லோடுங், கதித்தவெந் திறலி னோரக் கடிந
நகர் காப்போர் கேட்டங், கதிர்த்தனர் வந்து பற்றி
யவன்றலை யறுத்திட் டாரால். (உஅ)

வேறு.

அவ்வேலையி லிகலந்தக னடல்கொண்டிடு தூதர்
கைவேலயி னவியஞ்சிலை கணைவெங்கதை கொண்டே
மைவேலையில் விடமென்றிட வந்தங்கவ னிருதோ
ணைவேதர விசைத்தீர்த்தவர் நடைகொண்டது கண்டே. (உகூ)

கடுவெங்கரி யுரிகொண்டகண் ணுதறன்கண நாதர்
வடுவின்றிய மணிதுன்றிய மானத்திடை வந்தே
விடுமின்க ளிவன்றன்னை யெனச்சென்று விலக்கக்
கொடுசென்றிடு நமதூதர் குறித்திங்கிவை சொல்வார்.

பொருடங்கிய மறைவாண ரொழுக்கம்புற நீத்திட்
டருடங்கிய வவைசொற்றவை யறிவின்றி முனிந்து
மருடங்கிய சூதாடிநல் விலைமாதரை மணந்து
கருடங்கிய மனத்தான்சிவ னிருமாலியங் கவர்ந்தான்.

உய்யும்வகை யேதிங்கிவ னுறுமிப்பவ மதனிற்
செய்யுந்தவ முளதோவெனச் சிவகங்குலி னுதரம்

(உகூ) மைவேலையில் = கறுத்த கடலில்; நடைகொண்டது = போகின்றதை.

(௩0) வடுவின்றிய = களங்கமற்ற; மணிதுன்றிய = மணிகள் நெருங்கப் பதித்த; மானத்திடை = விமானத்தில்; குறித்து = சுட்டி.

(௩க) மறைவாணர் = வேதியர்; புறம் நீத்திட்டு = புறம்பாக விலக்கி; அவை (ஔவை) = தாயார்; சொற்றவை = சொன்னவைகளை; முனிந்து = வெறுத்து; நல்விலை மாதரை = மிகுந்த கணிகையரை; கருள் = இருள்.

பெய்யுந்தழ னிகர்வெம்பசி பெரிதாயெழத் துயினீத்
தெய்யுங்கணை மதனைச்சுடு மிறைதாளிணை நீண்டான். (௩௨)

அடல்சேர்விடை யுடையானெதி ரவியுஞ்சுட ர
தனை, மடல்சேர்மலர்க் கரத்தாலொளி வரத்தூண்டி
ன னதனுன், மிடல்சேர்கொடு வினையாவையும் வீத்
தான்றுயர் நீத்தான், கடல்சேர்நெடு நிலமீதுயர் கலிங்
கத்திறை யாவான். (௩௩)

என்றேசிவ கணநாத ரியம்பச்சமன் றாது, ரன்
றேயவ ரடிபோற்றிநின் றருள்சேர்குண நிதிதோட்,
குன்றேய்பிணி யவிழ்த்தாங்குநீர் கொடுபோமென வி
டுத்துச், சென்றேபுலிக் குழூவன்னவர் தென்றிக்கினி
லுற்றார். (௩௪)

வேறு.

ஈச னன்பரக் காலையிற் குணநிதி யென்பவன் மு
கநோக்கிக், காச ணிந்தபொன் முடிதரித் துயர்புகழ்க்
கலிங்கநா டளிக்கின்ற, வாச மாலிகை யருந்தமன் ம
தலையா வளங்கொளருந் தமனென்னு, மாசகன்றபே
ரொடுபிறந் திடுதியென் றறைந்தன ரகல்கின்றார். ()

---

(௩௨) செய்யுந்தவம் உளதோ என = செய்தபுண்ணியம் உ
ண்டோ வென்று (காலதூதர்) கேட்க; உதரம்=வயிற்
றில்; பெய்யுந் தழல் நிகர்=கொட்டிய நெருப்பை
யொத்து.

(௩௩) சுடர்=விளக்கு; மடல்=இதழ்; மிடல்=வலிமை; வீ
த்தான்=அழித்தான்; கலிங்கத்திறை=கலிங்க நாட்
டரசன்.

(௩௪) ஏய்பிணி=பொருந்திய கட்டினை; புலிக்குழுவன்னவர்
=புலிக்கூட்டத்தை யொத்த எமதூதர்.

(௩௫) காசு=இரத்தினம்; மாலிகை=மாலை; அருந்தமன்=
அருந்தமனென்னும் அரசனுக்கு.

அனையவனப்படிக் கலிங்கநாட் டிறைமக னாகிமுற் பவ
ந்தன்னிற், றனையு ணர்ந்தூறத் தொடர்முதுக் குறை
விஞற் சங்கரன், குலந்தோறுங், கனைசெ ழுஞ்சுடர்
நெய்விளக் கேற்றிநற் கடிகமழ் நறுந்தூபம்,புனையு மா
மலர் சாத்தியே யருச்சனை புரிந்தறம் பலசெய்தான். (௩௬)

இன்ன வாறுபற் பலதினந் தருமங்க ளியற்றி யா
யிரஞ்சென்னிப், பன்ன காதிபன் சுமந்தபார் புரந்து
நீர்ப் பட்டழிந் திடுமொக்கு, ளன்ன மானுடச் சட்
டைநீத் துத்தரத் தளகைமா நகர்காக்கு, மன்ன னா
கிவீற் றிருந்தனன் யாவரும் வந்தடி தொழுதேத்த.

சிலப கற்கழிந் திட்டபின் றெண்டிரை திரிவர ந
திசூழ்ந்து, நலமி கத்தருங் காசியிற் சிவலிங்க நாட்டி
யர்ச் சனைசெய்தா, னிலகு பேரொளிச் சுடர்ப்பிழம்
பாய்ச்சசி யிருத்திய||சடைப்பெம்மான், கலக வாள்
விழி மலைமக ளோடுமக் கணத்தினில் வெளிப்பட்
டான். (௩அ)

உன்ன ருந்தவம் வியந்தனந் தனதநின் னுளத்தி
னில் விருப்புற்ற, தின்ன தென்றுரை தருதுமென்
றுரைத்திட விரவியா யிரங்கோடி, துன்ன ருங்கதிர்

---

(௩௬) அனையன்=அவன்; தனையுணர்ந்துற=தனது முன்
பிறவியின் தன்மையை யுணரும்படி; தொடர்=தொ
டர்ந்து வந்த; முதுக்குறைவு=பேரறிவு; குலம்=
கோவில்; செழுஞ்சுடர்க்கனை=அழகிய ஒளிநிறைந்த;
கடி=வாசனை; நறுந்தூபம்=சுகந்தப்பொடித்தூபம்.

(௩எ) நீர்ப்பட்டு=நீரிற்றோன்றி; மொக்குள்=குமிழி.

(௩அ) தெண் திரை திரி=தெளிவான அலைகள் உலாவும்; வீர
நதி=கங்கை; பேரொளிச்சுடர்ப்பிழம் பாய்=மிகுந்த
பிரகாசம் பொருந்திய அக்கினித்திரளுருவாய்.

விரித்துநின் றனையமெய்ச் சோதியுன் னுருக்காண,நன்ன லந்தரு கண்ணிணை கூசிடா நல்வரந் தருகென்றான்.

காக்கு மாலயன் காணொணு வடிவவன் கட்புலங் கதுவுற்று, நோக்கு மாறருள் செய்தனன் றழனுமிழ் நுதல்விழிப் பெருமானும், பூக்கு மாமலர் மணமெனப் பொருந்திய புனிதனை யெஞ்ஞான்று, நீக்கு மாறரி தாவுறை நிமலையைப் பார்த்திது நினைக்கின்றான். (௪0)

தீது தீர்த்தருள் சிவன்றிரு மேனியிற் செறிந்து றைந் திடமுன்னாள், யாது நற்றவ மியற்றின ளிவளென வெண்ணிநோக் குறவெற்பின், மாது ளங்கறுத் திட்டன ளோர்விழி மறைந்ததங் கவற்கந்நா, ளோது மாமறை யளவிடற் கரியவ னுமையவட் கிவை சொல் வான். (௪௧)

ஊறினின் றவப் பெருமையை வியந்துளத் துவந்த னனினைக்கின்றான், வேறி வன்புரி தவறிலை முனியலை விழியிவற் கருளென்னச், சீறிவெம்பொறிக் கனலெனக் கனன்றுதன் சிந்தையுற் றெழுங்கோப,மாறி யம்

---

(௩௯) தனத=குபேரனே! ; தருதும்=கொடுப்பேம்; இரவி ஆயிரங்கோடி=ஆயிரங்கோடி சூரியர்;துன் அருங்கதிர் =நெருங்கிய அரிய கிரணம்; நன்னலம்=மேன்மை.

(௪0) அவன் கட்புலம்=அவனது கண்; கதுவுற்று=பற்றி; பூக்கும்=மலருந்தன்மையுடைய.

(௪௧) செறிந்து=பொருந்தி; உறைந்திட—வசிக்கும்படி; வெற்பின்மாது=மலைமகள்; உளங்கறுத்திட்டாள்=கோபித்தனள்; அவற்கு=அக்குபேரனுக்கு.

(௪௨) முனியலை=கோபியாதே: கனன்று=சூண்டு; அம்பகம் வழங்கினள்=கண் அருளினள்.

பிகை யழும்பகம் வழங்கினள் பொற்கண்ணுய் வயங்கிற்ருல். (சஉ)

விழியி ழுந்தது பெற்றபி னியக்கர்தம் வேந்தனும் வியப்போடவ், வுழியி னம்பிறை முடித்தருள் சடாடவி யுடைவிடைக் கொடியோனைக், கழிவ ருங்கயன் மருட்டுவாட் டடநெடுங் கட்கவு ரியைவேரி, பொழிசெ ழுந்துண ரிறைத்துநற் றுதிபல புகழ்ந்து வீழ்ந்தெழுகின்ருன். (சங)

மன்று ணட்டமே புரியரன் கைகளான் மற்றவனுடறைவந், தின்று தொட்டுநீ யென்னுடைத் தோழனுயிருத்தி யென்றிசைத்தான் பொற், குன்று கிட்டிய தனநிதிப் பெருக்கொடு குலவுபுட் பகம்பெற்றே, யன்று தொட்டவ னளகைமா நகரர சளித்தவ ணிருக்கின்ருன். (சச)

இன்ப மார்சிவ நிசியினின் மாலிய மெடுத்தருந்திடற்கீசன், முன்ப விந்திடு விளக்கினைத் தூண்டிய முற்பய னதனலே, நன்பு வித்தல மரசளித் தளகைமா நகர்தனக் கிறையாகிப், பின்ப ரன்றனைப் பிரிந்திடாத் தோழமைப் பெருமையும் பெறலுற்ருன். (சரு)

சேற்றி ஞர்செழுந் தாமரைக் கண்ணனுந் தேடருஞ் சிவன் மெய்யி, னீற்றி ஞன்றிருக் கோயிலினுயர்

(சங) அவ்வுழி=அப்பொழுது; சடாடவி=சடைக்காடு; வேரி=வாசனை.

(சச) நட்டம்=நடனம்; தைவந்து=தடவி; பொற்குன்று கிட்டிய=மேருமலையை யொத்த; தனநிதி=ஐசுவரியம்; புட்பகம்=புட்பக விமானம்.

(சரு) நன் புவித்தலம்=நல்லபூமியை,

சிவ நிசிகளி னெய்த்தீப, மேற்றி ஞர்பெறும் பேற்றி
னை விரித்தெடுத் தியம்பவெண் டிடிலெண்க, ணாற்றி
சாமுகம் படைத்தருள் விரிஞ்சனு நீவின் றிடற் கரி
தாமால். (சசு)

அன்றி யெண்ணிரண் டாமுப சாரத்திற் கடுத்த
வை யந்நாளிற், குன்றி யத்துணை யீயினு மாயிர கோ
டியாய்ப் பலனல்கு, மென்றி ருட்குறும் பறவெறி க
னைசுட ரிரவிசெங் கதிரென்னத், துன்றி ருஞ்சடைத்
துறவர்கேட் டுவப்புறச் சூதனுண் டுரைசெய்தான். ()

(சசு) எண்கண் = எட்டுக்கண்களும்; நாற்றிசாமுகம் = நான்கு திசை முகங்களும்; விரிஞ்சன் = பிரம்மா.

(சஎ) அடுத்தவை = உரியவை; குன்றி = குன்றிமணி; இருள் குறும்பு அற = அஞ்ஞானமாகிய தீமை யொழிய; கனை சுடர் = மிகுந்த ஒளியை; எறி = வீசுகிற; இரவி = சூரியனது; செங்கதிரென்ன = சிவந்த கிரணங்களைப் போல; துன்று = நெருங்கிய; இருஞ்சடை = பெரிய சடை.

வசனம்.

பெருகுந் தன்மை வாய்ந்த திருப்பாற் கடலாம் அடுப்பினிடத்துச் சமைத்த ஆலகால விஷமாம் உணவைப் புசித்த தலைவணங்கிய சங்குக் குழையணிந்த காதன், சிரித்து முப்புர மெரிக்கு நாளில், மேருமலையை வில்லாக வளைத்து ஏறும், பூமியாகிய தேரைப் பெருமையாகச் செலுத்திய பிரம்ம தேவனுக்கு ஒப்பாம் சூதமாமுனிவர் சிவராத்திரியின் மற்றொரு சரிதம் சொல்லலுற்றனர்.

கதித்த வளம்பல கலந்து விளங்குங் காம்பிலி நாட்டிலே, வேதமுதலிய கலைகளை யுணர்ந்தவனும், வேள்வி தத்தன் என்னும் பெயரைத் தரித்தவனுமாகிய ஓர் மறையவ னிருந்தனன். அம்மறையோன் தவப்பயனால் மன்மதனை யொத்த அழகு வாய்ந்த ஓர் மைந்தனைப் பெற்றனன். பின்னர் அவன் அம்மைந்தனுக்குக் குணநிதி யெனப் பெயரிட்டு வளர்த்து உபநயனச்சடங்கு முடித்து, வேத முதலிய கலைகளைப் பயிற்ற; குணநிதி கலையெலா முணர்ந்து கரைகண்டு வளர்ந்து, கண்ட மங்கையர் காமனோ இவனெனக் கருத்திற்கொண்டு காமுறும் பருவமெய்தினன். அதனைக்கண்ட வேள்வி தத்தன் தனது அருமை மைந்தனாம் குணநிதிக்குச் சுபமுகூர்த்தத்தில், நற்குலத்துதித்த ஓர் நங்கையை மறைநவில் விதிப்படி மணம் புரிவித்தனன். பின்னர்க் குணநிதி யென்போன், ஊழ்வினை வலியால் சதா துன்பம் விளைவிக்கும் சூதாட்டத்தில் மனஞ் செலுத்தி, தன்பால் தணியாத அன்புள்ள தந்தை யறியாதபடி, கல்விபயிலார் கணத்திற் சேர்ந்து இராப்பகல் முழுமையும் சூதாடி பொற்காசு, நகை, வஸ்திரம் முதலியவைகளை நாள்தோறுந் தோற்று வந்தனன்.

மைந்தன் எங்கு போயினனென வேள்விதத்தன் கேட்கும் பொழுதெல்லாம், அவன் மனைவி தன் மைந்தன் சூதாடுதற்குச் சென்றதைச் சொல்லப் பயந்து வேதமோதுதற்குச் சென்றன னென்று சொல்வாள். இதனால் வேள்வி தத்தன் குணநிதி சூதாடுதலைச் சற்று முணர்ந்திலன். இங்ஙனம் நிகழுகையில் வேள்விதத்தனது மனைவி, தன் குமாரனை யழைத்து உன் தந்தையின் நல்லொழுக்கமும் நீதியும் நமது குலாசாரமும் அறியாது, நீ சூதாடுவதை உன் தந்தை யுணரின் உன்னையும் என்னையும் சீறிக் கோபிப்பரென்று, அவருக்கு அதனை மறைத்துச் சொன்னேன். ஆகையால் நீ அச்சூதாட்டத்தை யொழிக்கின் நாம் நன்மையடையலா மென்று நன்மதி புகல; குணநிதி அதனைச் சிறிதுஞ் சிந்தையிற் கொள்ளாது பின்னும் அப்படியே சூதாடுவதுடன் கணிகையர்பாற் குறுகி இன்ப நுகருந் தீய வொழுக்கமு மடைந்தனன். குணநிதி இப்படி யிருக்கை

யில் ஒருநாள் அவன், தன் தாய் நித்திரை செய்யுஞ் சமயத்தில் தந்தை அவளிடங் கொடுத்திருந்த மணியிழைத்த மோதிரத்தைத் திருடிச்சென்று சூதாடித் தோற்றனன். மறுநாள் அத்தெருவில் வசிக்கும் ஒருவன் அந்த மோதிரத்தைக் கையிலணிந்திருக்க, அதனை வேள்விதத்தன் கண்டு இந்த மோதிரத்தை உனக்குக் கொடுத்தது யார் என்று கேட்க, அவன் பிராம்மணோத்தமரே! இதை நான் திருட்டுத்தனமா யபகரித்துக்கொண்டே னில்லை. இது நுமது மைந்தன் சூதாட்டத்திற் றோற்றதாம் என்றனன். அதனைக்கேட்ட வேள்விதத்தன் என் மைந்தன் சூதாடுகின்றனனோ வென்று திகைத்து நிற்க, பின்னும் அம்மோதிரத்தை யணிந்துளோன் வேள்விதத்தனைப் பார்த்து என் இப்படித் திகைத்து நிற்கின்றீர் நும்மைந்தன் சூதாட்டத்திற் பிரதிதினமும் காசுகளையும், பொன் நகைகளையும், வஸ்திரங்களையுந் தோற்று வருகின்றதை இதுகாறும் நீருணர்ந்திலீர்போலும் என்றனன். அவ்வார்த்தைகள் நெருப்பிற் பழுக்கக் காய்ச்சிய இருப்புக் கம்பியை சுறுக்கென நுழைத்ததுபோல் வேள்விதத்தன் காதிற் சென்றன. உடனே அவன் தன் வீட்டிற்கு வந்து மனைவியை யழைத்துப் புதல்வனெங்கே யென்று கேட்க, அவள் நீராடக் குளத்திற் கேகினனென்று கூறினள். பின்னர் வேள்விதத்தன் உன்னிடங் கொடுத்த கணையாழியைக் கொண்டுவாவென்று கேட்க, உச்சிக்கடன் முடித்துப் போசனஞ் செய்த பிறகு தருகிறே னென்றனள். அதனைக்கேட்ட வேள்விதத்தன் இவள் கற்புத்தன்மைக் குரிமையல்லாத பொய்ம்மொழி புகலுகின்றனள். மைந்தன் அறிவு கெட்டுச் சூதாடிப் படிறனாயினன். ஆகையால் இவைபற்றிப் பெரியோர் கூறிய தருமசாஸ்திரப்படி இவர்களை விட்டு நீங்கி விடுவதே தகுதியா மென்றெண்ணி, அவன் மனையாளிடத்தும் மைந்தனிடத்தும் உற்ற பற்றுக்களை யெல்லாம் அறவொழித்து, வேறொரு நகரத்திற்குச் சென்று மற்றொரு பெண்கொடியை மணந்து வாழ்ந்தான். குணநிதி, நாம் தவறிழைத்தது கண்டு நமது தந்தை, நம்மையும் நமது தாயையும் விட்டுப்பிரிந்தனனாதலால்; வயிறு வளர்க்கைக்குப் பொரு

வீட்டும் வகையொன்றுந் தெரிந்திலோம், உறவினர் நட்பும் பெற்றிலோம் இதற் கென்செய்வதெனக் கவலையுற் றிருந்தனன்.

இங்ஙனமிருக்க, சிவராத்திரிதினத்தில் ஓர்பிராமணன் இறைவனைப் பூசிப்பான் சிவாலயத்திற்குச்செல்லுங்கால், குணநிதி அவன் பின்சென்று, நிவேதன அன்னத்தைத் திருடிச்செல்லும் பொருட்டு தூங்காது அவ்வாலயத்திலேயே சமையம் பார்த்திருந்தனன். நான்கு சாமத்திலும் அந்தப் பிராமணன் இறைவனைப் பூசித்ததைக் குணநிதி பட்டினியோடு பார்த்திருந்தனன். பின்னர் பூசனை புரிந்த மறையவன் விடியற்காலத்தில் அயர்ந்து நித்திரைசெய்யக்கண்டு குணநிதி, கோயிலினுட்சென்று நிவேதித்த அன்னத்தை யெடுக்கப் பார்த்தனன். ஈசனெதிரில் எரியும் விளக்கு ஒளிகுறைந்து எரிந்ததால்; அன்னமுள்ள தட்டு இருக்குமிடந் தெரியாதிருந்தது. அவ்விளக்கைக் கையாற்றூண்டி வெளிச்சமுண்டாக்கி அன்னத்தைத்தட்டோடெடுத்துக்கொண்டு வெளியில் மீண்டனன். அப்பொழுது அங்குப் படுத்திருந்த ஓர் மறையோன் காலை குணநிதி மிதிக்க, அம்மறையோன் கண்விழித்துப் பார்த்து, கள்வன் கள்வன் என்று கூச்சலிட்டனன். அதனைக்கேட்ட அந்நகர்க் காவலாளர் ஓடிவந்து குணநிதியைப் பிடித்துக் கட்டிக் கொண்டுபோய் அவன் தலையை யறுத்து விட்டனர்.

அக்காலத்தில் காலதூதர் வந்து குணநிதியைப் பாசத்தாற்கட்டிக்கொண்டுசெல்ல, சிவகணங்கள் அங்குவந்து இவனை விடுங்கள் விடுங்கள் என்றனர். அப்பொழுது எமதூதர் சிவகணங்களைப்பார்த்து, வேதியவொழுக்கத்தினை முற்று மொழித்துப் பலதீமைகள்புரிந்து காலங்கழித்துச் சிவநின்மாலியங் கவர்ந்த இப்பாவி உய்யும்வகையேது என்றனர். கணங்கள் காலதூதரைப்பார்த்து சிவராத்திரி தினத்தில் உணவருந்தாது இரவு முழுமையுங் கண்விழித்து, பரமேசுவரனை நான்கு காலத்தும் பூசித்ததைத் தரிசித்தும், அச்சுபதினத்தில் அமலன்சந்நிதியில் அவியும் விளக்கை அங்கையாற் றூண்டி அகலொளியெழுப்

பினன். இவைகளாலிவன் இனி கலிங்கநாட்டரசனாயுதிப்பன் என்றனர். அதனைக்கேட்ட காலதூதர், கட்டுகளை யவிழ்த்து நீவிர்கொண்டு போவீரென அவனை விடுத்துத் தன்நகரடைந் தனர். சிவகணங்கள் குணநிதியைப்பார்த்து கலிங்கநாட்டரச னாகிய அருந்தமனுக்குப் புத்திரனாயவதரித்து உத்தமனென் னும் பெயர்தரித்து ஒப்பின்றி வாழ்வாயாகவென்று கூறியகன் றனர். குணநிதி அப்படியே கலிங்கதேசத்தரசன் கான் முளை யாய்த்தோன்றி வளர்ந்து அரசுரிமை பெற்றுப் பேரறிவினால் முற்பிறவியின் றன்மையை யுணர்ந்து, சிவாலயங்கடோறும் தவறாது நெய்விளக்கேற்றித் தூபதீபமிட்டு அநேக தருமங்கள் புரிந்திருந்தனன்.

இப்படிக் கலிங்கதேசத்தை அரசுபுரிந்திருந்து அவன்செ ய்த சிவபுண்ணிய முதிர்ச்சியால், நீரிற் றோன்றியழியும் குமிழி போன்ற மானிட யாக்கை யொழித்து குபேரப் பதவிபெற்று யாவரும் வந்து தொழும்படி அளகாபுரியை யரசளித்திருந் தனன்.

இங்ஙனமிருக்கையில் அவன் கங்காநதி தீரத்துள்ள காசி மா நகரையடைந்து சிவலிங்கபிரதிஷ்டைசெய்து நாள்தோறு ம் அருச்சித்துவந்தனன். அப்பொழுது ஒருநாள் அவனது பக் திக்கிரங்கிய பரமேசுவரன் உமாதேவியாரோடு பேரொளிப்பி ழம்பாய் அவன்முன் தோன்றி, குபேரனே ! நின்மனதில் வி ரும்பியதைக்கேள் தருவேம் என்றனர். அக் குபேரன் அடிப ணிந்து பெருமானே ! அநேகஞ்சூரிய ருதித்ததுபோன்ற நின் சோதி சொரூபத்தைப் பார்ப்பதற்கு எனது கண்கள் கூசுகின் றனவாதலின் அங்ஙனங் கூசாதிருக்கும்வரம் முதலிற்றரவே ண்டுமென்றிரந்தனன். அங்ஙனமே பரமபதி அருள்செய்ய, கண்கூசாது நீவண்ணப் பெருமானைத் தரிசித்து அப்பெருமா னோடு பிரியாது வாழும் உமாதேவியாரைப் பார்த்து,இப்பெரு மானோடு பிரியாது வாழ்தற்கு இவள் என்னதவஞ் செய்தன ளோவென்று மனதில் நினைத்தனன். உமையம்மையார் அதனை யுணர்ந்து கோபிக்க, குபேரனுக்கு ஒருகண் பார்வையொழிந்

த்து. அதனையுணர்ந்த கண்ணுதற்பெருமான் உமாதேவியாரைப்பார்த்து நின் தவப்பெருமையை நினைத்து வியந்தனனேயன்றி, தவறிழைத்தானில்லை யாதலின், கோபமொழித்து இவன் இழந்தகண்ணை யளிப்பாயாகவென்றனர். உமாதேவியார் அங்ஙனமே கோபமொழித்து, பார்வையற்ற கண் பொற்கண்ணாகுக வென்று நினைக்க, அப்படியே பொற்கண்ணாயிற்று. உடனே குபேரன் பரமேசுவரனையும் உமாதேவியாரையும் மலரிட்டருச்சித்துப் போற்றினன். பரமேசுவரன் தன் கைகளால் குபேரனது உடலைத்தடவி இன்று முதல் எமது தோழனாயிருப்பாயாக வென்று அருள்செய்ய, குபேரன் அங்ஙனமே யிருந்தனன்.

ஒரு சிவராத்திரி தினத்தில் அருந்துதற்கு நிவேதன அன்னத்தையெடுக்கும் பொருட்டு, கண்ணுதற்பெருமான் சந்நிதியில் விளக்கைத் தூண்டிய பலத்தினால் அரசனாகி, பின் தண்மதிமுடியோன் றோழனாயினன். என்றால் அச்சிவராத்திரி தினத்தில் விதிப்படிப் பூசித்துத் தீபமிட்டோர் பெறும்பேற்றை யெவராலுஞ் சொல்லமுடியாதென்று சூதமாமுனிவர் சொல்லி முடித்தனர்.

குபேரச்சருக்க முற்றிற்று.

சாலிகோத்திரச் சருக்கம்

கழனிமலை கயல்கள்வள்ளைக் கொடிகுதிப்ப தெனக்குழைபாய் கருங்கட் பைந்தார்க், குழனிமலை முலையமுத மணமிறைவாய் கமழமுத்தந் கொடுப்போன் போரி, னழனிமலை கடக்கரிதென் றருக்கனுளந் தடுமாற வவுணர்க் கொன்று, பழனிமலை குடிபுகுந்த பகவனிரு சரணமலர் பரவி வாழ்வாம். (க)

அங்கிராப் பிருகுவிட பன்றதீ சியத்திரிகா சிபன்சு பேதன், பங்கமில்வான் மீகிசர பங்கன்சா பாலி

(க) கழனி = வயல்களில்; மலை = ஒருவழிப்படாது சஞ்சரிக்கும், அல்லது போர்செய்யும்; கயல்கள் = கயல்மீன்கள்; வள்ளைக்கொடி குதிப்பதென = அங்குள்ள வள்ளைக் கொடியிற் குதிப்பதுபோல; குழைபாய் கருங்கண் = காதளவுஞ்செல்லும் கறுத்த கண்களையும்; பைந்தார் குழல் = அழகியமாலையை யணிந்த கூந்தலையும் உடைய; நிமலை = உமாதேவியாருக்கு; முலை அமுத மணம் = தனப்பாலின் வாசனை; இறை வாய்கமழ = மேன்மை பொருந்திய வாயில் வீச; முத்தங்கொடுப்போன் = முத்தந்தருவோனும்; அழன் = பிணங்களாலாகிய; இ மலை = இந்த மலையை; கடக்க அரிதென்று = தாண்டுதற்கு அருமையாமென்று; அருக்கன் உளந்தடுமாற = சூரியன் மனந்திகைக்க; போரில் அவுணர்க்கொன்று = யுத்தஞ் செய்து சூரபத்மனுதியரைக்கொன்று; பழனி மலை குடி புகுந்த பகவன் = ஆவினன்குடி வரையின்கண் எழுந்தருளியவனுமாகிய குமாரக்கடவுளது; இருசரணமலர் பரவி வாழ்வாம் = இரண்டு பாத தாமரைகளைத் துதித்து வாழ்வாம்.

யருட்பரத்து வாசன், றுங்கமுறு புலத்தியனற் சுசீ
லனு ரதன்மரிசி சுகன்மாங் கண்டனெங்குமிசை பெ
றுசனகன் முற்கலன்முற் படுமுனிவ ரிவர்கள் யாரும்,

பாடளிக்கு மதுவளிக்கும் பசுந்துளவோன் மு
தலமரர் படிவர் யார்க்கும், கேடளிக்க வருங்கடுவுண்
டவனருள்சேர் சூதன்முகங் கிளரநோக்கிப், பீடளிக்
குந தவமுனிவ சிவநிசிநோற் றவர்க்கிறந்த பின்பே ரி
ன்ப, வீடளிப்ப தன்றியிகம் விழைந்தனவு மளிக்கு
மோ விளம்பு கென்றார். (ங)

அரவுமதி முடித்தசடை யரனிரவிற் கண்படை
நீத் தருச்சித்தானல், குரவுதுகள் படுத்திநெடு நிலத்
தின்மிகு செல்வமெல்லாங் கொடுக்கு மைந்தாய், விர
வுகொலை முதற்பாவ வல்வினையின் வேர்பிடுங்கி வீடு
நல்கும், பரவுமிதி னிகழ்காதை யொன்றுளதென் று
யர்சூதன் பகர்வ தானன். (ச)

காலிகோத் திரத்தியல்பிற் புரந்தருளுங் கண்ணா
ன்முதல் கருதற் கொண்ணாச், சூலிகோத் திரத்தவர்
கொண் டெயிலொருமூன் றழற்களித்த தொல்லோன்
றிங்கண்,மோலிகோத் திரவருளே பெறவேண்டி யறை

(உ) அங்கிரா = அங்கிரன்; விடபன் = ஓரிருடி; முற்கலன் =
ஓரிருடி; முற்படு = முதலிய.

(ங) பாடு அளிக்கு = இராகம்பாடும் வண்டு கட்கு; மது அளிக்
கும் = தேனைக்கொடுக்கிற; முகங் கிளர நோக்கி = முக
மலரும்படி இனியமுகங்காட்டி; பீடு அளிக்கும் = பெ
ருமை விளங்கும்; இகம் = (இம்மை) இப்பிறவியில்,
விழைந்தனவும் = விரும்பியனவும்.

(ச) கண்படை = நித்திரை; நல்குரவு = தரித்திரம்; பரவும் =
சொல்லும்.

யும்மறை முறையி னின்றோன், சாலிகோத் திரனெனப் பேர் தரித்துடையா னொருவனுளன் றவத்தின் மிக்கோன். (ரு)

வேதியர்தங் குலத்தினுயர் விண்மணிகண் மணியெனவே விளங்கும் வேத, மோதியுணர்ந் தறிவரிய கலைக்கடலின் கரைகடந்திட் டுயர் நூல் வல்ல, வாதியரை வென்றுசந்தி வந்தனைகண் முப்பொழுதும் வழுவா தாற்றிச், சாதிமுறை தவறாம னீதியுட னெடிது தினஞ் சரிக்கு நாளில். (சா)

வம்பவிழுங் குழன்மனைவி மக்கள்சுற்ற முதற்குடும்ப மலிய நாளுஞ், செம்பவள விதழ்க்கமலை திருக்கடைக்க ணோக்கமின்றிச் சிறுமை யெய்த, வெம்பரமனருளினுமோ வென்செய்வே னென்னமனத் தெண்ணித் தென்பாற், கும்பமுனி வரனிருக்கு மிடந்தேடிச் செல்வனெனக் குறித்துக் கொண்டே. (எ)

(ரு) காலி = பசுக்கூட்டங்களை; கோத்திரத்து இயல்பில் = ஆயர் வமிசமுறைப்படி, (அல்லது கோத்திரத்து-காட்டினிடத்து, இயல்பில் - ஒழுங்காக எனக் கொள்ளினுமாம்); புரந்தருளும் = அன்போடுமேய்த்த; சூலி = சூலத்தையுடைய பரமேசுவரன்; கோத்திரத்தவர்கொண்டு = மலையாகிய வில்லைக்கொண்டு; திங்கண்மோலி = சந்திரனைத்தரித்த சிரத்தினையுடைய பரமேசுவரன்; கோ = மேன்மையுற்ற; திர அருள் = அழியாத அருள், (அல்லது அருட்கோத்திரமெனப் பிரித்து அருட்செல்வமெனப்பொருள் கொள்ளினுமாம்); முறை = நெறி.

(சா) விண்மணி = சூரியன்; நூல் வல்ல வாதியரை = நூல்களைக் கற்றுணர்ந்து தர்க்கமிடுவோரை.

(எ) வம்பு அவிழும் = வாசனை வீசும்; மலிய = மிகுதியாக; குறித்து = மனத்தெண்ணி.

தடங்கரைகொண் டிரங்குதிரை சுருட்டியெறிந் திடும்பெருநீர்ச் சலதி யேழுங், குடங்கையினிற் கொண்டுமுதற் குடித்தருளு முனிவனடி குறுகிப் போற்றி, விடங்கனும்பற் பணிவாயி லகப்படுமண் டூகமென்ன மிடிவாய்ப் பட்டேன், றிடங்கொடுள்ளந் தேறியுய்யும் படியடியேற் குனதருட்கண் செய்தி யென்றான். (அ)

ஆங்கவனு முளத்தருள்கூ ரந்தணனை முகநோக்கி யவனி மீதிற், றீங்ககற்றுஞ் சிவநிசிநோற் றிடில்வறுமைப் பெருங்கடலின் றீரங் காண்பாய், பூங்கமலத் தயனும் புகலரிய போகமெல்லாம் புசித்துப் பின்னர், நீங்கரிய சிவபதமும் பெறுவாயென் றுறுதியுடனிகழ்த்தி னனால். (கூ)

அனையசிவ நிசிநோற்கு முறைமறையா கமப்படிநீ யடிய னேனுக், கினையபரி செனவிரித்தீண் டியம்புகென விருக்குமுன்னு வியம்பும் வேதந், தனையுணருங் குடத்தனைய னவ்விரதந் தனைநோற்குந் தன்மை யெல்லாங், கனைகடலுண் டருடிருவாய் மலர்ந்தவனுட் புலங்களிக்கக் கழறிப் பின்னும். (கய)

(அ) இரங்கு=சப்திக்கும்; பெருநீர்ச்சலதி=மிகுந்த நீரையுடைய சமுத்திரம்; குடங்கை=அகங்கை; முதல்=முன்னாளிலே; குறுகி=வணக்கத்துடன்; மண்டூகம்=தவளை; அருட்கண்=கிருபாநோக்கம்.

(கூ) உளத்து அருள்கூர்=மனதினிடத்து ஜீவகாருண்யமுள்ள; தீரம்=கரை.

(கய) இனையபரிசு=இன்னவகை; இருக்கு முன்னும்=இருக்குவேத முதலாக; குடத்தனையன்=குடத்திலுதித்தோன் (கும்பமுனி); திருவாய் மலர்ந்து=அழகிய வாய் திறந்து; அவன் உட்புலங் களிக்க=மறையோனது மனம் மகிழுமாறு; கழறி=சொல்லி.

பொன்னிலமே வியபுலவர் புகழ்விரத மிதனிலை மை புகலற் பாற்றே, வெந்நிலமுந் தெரிழத்தகுநற் றல த்திலிருந் திவ்விரத மியற்றனுற்று, என்னிலவித் தெ னவோங்கிச் சின்னுளிற் பெரிதுபய னல்கு மென்ன, வந்நிலமு மெனக்கறியச் சொல்லுதிநல் லொதிபயிலு மறிஞ வென்றான். (கக)

சீதவனம் பொழியுமிருட் கொண்டனிறங் கொ ண்டிடு மெய்ச்செய்ய செங்கண், மாதவனம் புயன்ற வள வாரணத்தின் வருமகவான் வானில் வானோர், பா தவன சம்பரவ வுமையாளோ டுமையாளும் பரமன் வைகும், வேதவன மென்றுலகி லொன்றுளதங் கதன் றகையார் விரிக்க வல்லார். (கஉ)

முன்னுருவம் பலவெடுத்து முயன்றுசெய்தீ வி னைக்கிழங்கே மூல மாகப், பின்னுருவ மெடுத்துழலும் பித்தருமத் தலத்திறக்கப் பெற்று ரென்னிற், பொன்

(கக) பொன்நிலம் = தெய்வலோகம்; எந்நிலமும் = எவ்வுலக மும்; அந்நிலமும் = அந்த க்ஷேத்திரமும்; ஒதிபயிலும் (ஓதியென்பது ஓதி யென்பதன் குறுக்கமாம்) = பொதி கை வரையின்கண் வசிக்கும்.

(கஉ) சீத வனம் பொழியும் = குளிர்ந்த நீரைப் பெய்யும்; செ ய்ய = அழகிய; அம்புயன் = பிரம்மா; தவளவாரணம் = வெள்ளை யானை; மகவான் = இந்திரன்; தகை = பெ ருமை.

(கங) வினைக்கிழங்கே = வினையின்வேரே (சஞ்சிதம்); பித்தர் = மயக்கமுற்ற அறிவினர்; பொன்னுருவச் சடாமவுலி = பொன்போன்ற வண்ணமுடைய சடைவிளங்கும் சிரத்தினன்; தாரகப்பிரமம் = பிரணவமந்திரம்; ஆதி = சிவபெருமான்; தன்னுருவம் = சாரூபம்; இணை = ஒப் புச் சொல்லும்படி.

னுருவச் சடாமௌலிப் புனிதன்ரு ரகப்பிரமம் போதித் தாதி, தன்னுருவந் தருவதனு லத்தலத்துக் கிணை புகலச் சரிவே றுண்டோ. (கங)

பொன்னிமுத னதிப்புனல்பாய் புலவுகமழ் கடற்றீரப் புளினந்தோறும், கன்னியிளம் பெடையொடன்னங் கலந்துவளங் காட்டுமறைக் காட்டுவேணிச், சென்னிதனின் மதிமுடித்த சிவபெருமான் சந்நிதியின் றிருமுன்னுக, வன்னிமர மொன்றுளதாங் கடியர்வினைக் காடுசுடும் வன்னியாமால். (கச)

விண்ணவர்பூ சனைபுரியா மறையொழுக்கம் வழுக்கியவே தியர்கோல்கோடி, மண்ணவரை வருத்துகின்ற மன்னர்நெறி பிழைத்தொழுகும் வணிகர் முன்னு, வெண்ணவரும் பின்னவர்சங் கரசாதி யரிவையர்மற்றிவர் ருகப், பண்ணவர்நா டெனத்தகுமத் தலமேவும் பொழுதெந்தப் பதகரேனும். (கரு)

சிறையுறுமிப் பிறவியெனும் பிணிக்குடைந்தீர் வம்மினது தீர்ப்பன் யானென், றறைபறையிற் கறங்குதிரை மறைநதிக்க ணடைந்துகுடைந் தாடிக் கோடித்,

(கச) புலவு = புலால்நாற்றம்; புளினம் = மணல்மேடு; கன்னி இளம் பெடை = கெடாத இளம்பருவத்தையுடைய பேடை; வளங்காட்டும் = அழகைச் செய்கிற; வேணிச் சென்னிதனில் = சடையினையுடைய சிரத்தில்; சுடும் வன்னி = பஸ்மீகரப்படுத்தும் அக்கினி.

(கரு) வழுக்கிய = தவறிய; கோல்கோடி = செங்கோல்கோணி; நெறிபிழைத்தொழுகும் = குலாசாரந் தவறி நடக்கும்; எண்ணவரும் = எண்ணுவதில்; பின்னவர் = நான்காம் வருணத்தர் (சூத்திரர்); அரிவையர் = ஸ்திரீகள்; பதகர் = பாவிகள்.

துறையதனிற் படிந்துமுதற் சுருதிதொட்ட வாரிதனி
னூேய்ந்து றொன்னுன், முறைவழுவா துன்னிமணி
கன்னிகையிற் றுன்னியகீர் மூழ்கி யேறி. (௧௬)

விடமுனிய வருமமையத் திமையவர்க்கா வுண்டு
வட விண்டு பண்டு, தடமுனியிற் குனித்துநகைத் தெ
யிலொருமூன் றழற்களித்த தலைவற் போற்றிற், றிடமு
னிய பொருளனைத்துஞ் சித்தியுற முத்தியினுஞ் சேர்
வ ரென்றே, குடமுனிவன் சுருதிவனப் பெருமை யெ
ல்லா மவற்கறியக் கூறிப் பின்னும். (௧௭)

அத்தலமா ரூர்காசி யம்பலமற் றெவற்றினுக்கு
மதிக மென்றே, முத்தலமும் புகழுவரு முனிவரனை
வருமொழிந்தார் மொழியா நின்ற, வெத்தலமு மதிக்
குமிந்தத் தலத்திலிருந் திவ்விரத மியற்றிற் சித்தி,

---

(௧௬) சிறையுறும்=காவற்கூடமா யிருக்கிற; பிணிக்கு உடை
ந்தீர்=நோயாற் றளர்வுற்றவரே!; அறைபறையில்=
பறையறைதல் போல; கறங்குதிரை=சப்திக்கும் அ
லையினையுடைய; குடைந்தாடி=முழுகி; முதற்சுருதி
தொட்ட=முதன்மையாகிய வேதங்கள் தோண்டிய;
வாரி=தீரத்தில்; உன்னி=தியானித்து; மணிகன்னி
கையில்=மணிகர்நிகை யென்னும் தீர்த்தத்தில்; துன்
னி=அடைந்து.

(௧௭) விடம் முனியவரும்=ஆலகாலவிஷம் கொல்லவரும்;
வடவிண்டு=மேருமலையை; பண்டு=முற்காலத்தில்;
தடம் முனியில்=பெரிய வில்லாக; போற்றில்=வண
ங்கிலுல்; திடம்=நிச்சயமாக; உன்னிய=விரும்பிய;
சித்தியுற=சித்தியடைய.

(௧அ) எத்தலமும்=எவ்வுலகமும்; சித்திகாண்டி=சித்தியடை
வாய்.

கைத்தலத்தில் வைத்தநெல்லிக் கனிபோலக் காண்டி யெனக் கழறிப் பின்னர். (௧௮)

நல்வலனே யத்னமலை நங்கையொடு கிராதருரு நண்ணிக் கானிற், செல்வலனே வருங்காண வெல்வல ருச் சுனனேயெனச் செயிர்த்துப் போர்செய், மல்வல னே யுளத்திருத்தி மறைவலனும் வாதாவி மடியச்சீறி, வில்வலனே முனிந்தமுனி விடைகொடுப்ப மறைசை நகர் மேவலுற்றான். (௧௯)

உற்றவனுற் றிடும்புனித தீர்த்தமெல்லாம் படிந் தாடி யுயர்பொற்கோவில், சுற்றிவலம் வந்துகொற்ற வீரகத்திச் சேதகன்ற டொழுது முன்னு; ளற்றமிலு ன் மறைநறைப்போ தாலருச்சித் தருளிறைசே வடி கள் போற்றிக், குற்றமில்யா ழைப்பழித்த மொழியம் மை நூபுரத்தாள் கும்பிட் டேத்தி. (௨0)

ஒருபொருளை யுணர்ந்திருகண் பனிதூங்க முப் பொழுது முயர்நால் வேதந், தருபொருளா மஞ்செழு த்தை நெஞ்சழுத்தி யறுதொழிலோர் தலைவன் பாரில்,

---

(௧௯) நல் வல் அனைய = அழகிய சூதாடு கருவியை யொத்த, கிராதர்உரு = வேடருருவம்; செல்வல் = போகிறேன்; அனைவருங் காண = யாவரும் அறிய; வெல்வல் = வெல்வேன்; செயிர்த்து = கோபித்து; மல் வலனை = மல்லயுத்தத்தில் வல்லவனை.

(௨0) உற்று = சென்று; அவண் உற்றிடும் = அங்குள்ள, கொற்ற = வெற்றியுடைய; வீரகத்திச்சேதகன் = வீரரைக் கொன்ற பாவத்தை யொழித்த விநாயகர், வீரகத்திச் சேதக விநாயகர் என்பது திருமறைக்காட்டுத் தல விநாயகர் பெயராம்; அற்றமில் = குறைவில்லாத; நறைப்போது = மண மலரால்.

வருபொருளா ருயிரனைத்தும் படைத்தளிக்குந் தன்
மையினான் மண்ணோர் விண்ணோ, ரிருபெயருளென்றிடு
மயன்மாற் கெட்டாத பதம்பெறுவா னிதயத் தெண்ணி.

சிவநிசியாஞ் சதுர்த்தசியிற் றிங்கடொறுந் துயி
லுணவு சிறிது மின்றித், தவமுயல்வா னீராடி வில்வ
முடன் கந்தமலர் சந்தஞ் சாத்திப், பவமறமந் திரநவி
ன்று பரிந்துநிவே தனம்புரிந்து பாடி யாடி, நவநவமா
ச் சிவபூசை நாலுயா மமுமுடித்து நடத்து நாளில். ( )

சூடுடைய தலைச்சேவற் றுவசனைப்பெற் றெடுத்த
விடைத் துவசன் பொற்றா, ளேடுடைய மனக்கமலத்
திருத்தியருச் சித்திடுமோ ரிரவினாப்பண், கோடுடைய
கயிலைநடை கொண்டனைய வெள்விடைமேற் கொண்டு
கூந்தற், காடுடைய மலைமகளோ டெதிர்நின்றான் மற்
றவன்கண் களிக்க மன்னோ. (உ௩)

பிறைகாட்டுஞ் சடைமுடியும் பிரமரங்கா மரமு
ரன்று பிரசமாந்த, நறைகாட்டுங் கொன்றையந்தா
ரணிந்திலகு திருமார்பு நயன மூன்றுங், கறைகாட்டுங்

(உக) ஒரு பொருள்=ஒப்பற்ற பதிப்பொருள்; பனிதூங்க=ஆனந்தக்கண்ணீர் ஒழுக; அறுதொழிலோர்=பிராமணர்; பாரில்வரு=உலகத்தில் தோன்றுகின்ற.

(உஉ) தவமுயல்வான் = தவஞ்செய்கிறவனாய்; நவம் நவம்=புதுமை புதுமையாக; நடத்தும்=விரதமிழைக்கும்.

(உ௩) சூடு=கோழியின் குடுமி; ஏடுடைய=இதழுள்ள; மனக்கமலம்=மனமாகிய தாமரை மலரில்; ஓர் இரவின் நாப்பண்=ஒரு இரவின் நடுவில்; கோடு=சிகரம்; கைலை நடைகொண்டனைய=கயிலை மலையானது நடந்து வருவது போல.

கந்தரமும் மந்தரத்தின் புயநான்கும் கண்டு முத்தித்,
துறைகாட்டுங் கடற்றீரச் சுருதிவனத் திறைவனடி
துதித்தல் செய்வான். (௨௪)

வேறு.

களக்கோலவல் விடமுண்டருள் களத்தாய்கவின்
றருஞ்சா, மளக்கோமளத் திருமேனிகொண் மலைமா
தின் மணாளா, தளக்கோகன தக்கண்ணினன் றருவே
டனைச் சுடுதீக், குளக்கோவுடை யானேகுறிக் குங்
கோவுடை யானே. (௨௫)

சுடுஞ்சூகரத் தடிமென்றுறு சுவைகண்டவை யுதவுங்
கடுங்கானவர் குலந்தோன்றிய கண்ணப்பனை யாண்டாய்

---

(௨௪) பிறைகாட்டும்=சந்திரன் விளங்கும்; பிரமரம்=வண்டு; காமரம்=இசை; முரன்று=பாடி; பிரசம் மாந்த=தேனைக் குடிக்க; நறைகாட்டும்=வாசனைவீசும்; மந்தரம்=மந்தரமலைபோலும்.

(௨௫) களம்=களாக்கனி; கோலம்=வண்ணம்; சாமளம்=பச்சை நிறமும்; கோமளம்=மாறுத இளமையும் வாய்ந்த; தளக் கோகனதம் = இதழ்களையுடைய தாமரை மலர் போன்ற; கண்ணினன் தரு=கண்ணை யுடைய திருமாலீன்ற; குளக் கோவுடையானே=நெற்றிக்கண்ணை யுடையவனே; குறிக்கும்=மதிக்கத்தக்க; கோவுடையானே = இடபத்தை யுடையவனே, அல்லது இறைமை வாய்ந்தவனே.

(௨௬) சுடும்=வெதுப்பிய; சூகரத் தடி=பன்றியினிறைச்சி; கடுங்கானவர்=கொடியவேடர்; தொடும்=எய்கின்ற; காய்கணையென=கொல்லுந்தன்மை வாய்ந்த அம்பாக; மால்வர=திருமால்வர; துன்னார்=பகைவர்; அடும்=கொல்லுகின்ற; கார்முகத்தானே = வில்லையுடையவனே; அழகார்=அழகு விளங்கும்.

தொடங்காய்களை யெனமால்வரத் தன்னார்புரமூன்
ளடங்கார்முகத் தானேயொரைந் தழகார்முகத் தானே. (உ௬)

சம்புக்கிளை கிளையின்கிளை தானாய்வர மீனார்
மொய்ம்புற்றிடு கொடிமன்னவன் முன்னேகொடுவந்தா
யம்புற்றநன் முடியாய்விற லரிதேடரு மடியாய்
கம்புக்குழை யானேகயக் கம்புக்குழை யானே. (உ௭)

ஈரக்குளிர்ப் புனல்வையையி னிடியுங்கரை நொடியிற்
றூரச்சொரி மண்கூடை சுமந்தேயடி பட்டாய்
கோரச்சின மிக்காகிய கொக்கின்சிறை யக்கி
னாரச்சடை யானேநினை யாரச்சடை யானே. (உ௮)

(உ௭) சம்புக்கிளை = நரிக் கூட்டம்; கிளை (கிள்ளை) யின் = குதிரையினது; கிளை தானாய் = கூட்டமாக; மீனார் = மீனெழுதிய; மொய்ம்பு உற்றிடு = வலிமை பொருந்திய; கொடி மன்னவன் = கொடியினையுடைய வேந்தன்; அம்பு உற்ற = கங்கைபொருந்திய; கம் = ஆகாயத்தில்; புக்கு = தாவிப்புகும்; உழையானே = மானையுடையவனே; கயக் கம்பு = குளத்திலுள்ள சங்கை; குழையானே = காதணியாகப் பூண்டவனே, கயக்கம் புக்கு உழையானே எனப் பிரித்து - துன்பத்தை யடைந்து வருந்தாதவனே எனப் பொருள் கொள்ளினு மமையுமென்க.

(உ௮) ஈரம் = அழகிய; குளிர்ப்புனல் = குளிர்ந்த நீர்; தூர = அடையும் படி; கோரச்சினம் மிக்காகிய = பயங்கர முண்டாக்கும் கோபமிகுந்த; கொக்கின் = பகாசூரன் எடுத்த கொக்கு உருவத்தின்; சிறை = இறகையும்; அக்கின் = எலும்பின்; ஆரச்சடையானே = மாலையையுந் தரித்த சடையை யுடையவனே; நினையார் = தியானிக்காதவர்; அச்சு = (உள்ளத்தை) தேகத்தை; அடையானே = பொருந்ாதவனே.

கலைமாமறை யயனீறுறு கற்பந்தொறு நல்குந்
தலைமாலை புனைந்தாய்வட தருநீழ லிருந்தாய்
கொலையார்கதி ராழிப்படை கொவ்டேசலந் தரனை
மலைமாதிடத் தானேயிம மலைமாதிடத் தானே. (௨௯)

சிலைத்தூண்டனி லுதித்தோங்கிமண் டிகைத்தே
ங்கமுன் சிரித்தே, யுலைத்தாண்டுபொன் னிறத்தீயவ
னுடற்கீண்டிடு மரிமை, யலைத்தாங்குயிர் கொளச்சிம்
புள தாயயி லார்முத், தலைத்தானையி ஞனேபுலித்
தலைத்தானையி ஞனே. (௩௦)

பணைப்பாம்பரைப் பரவைக்குநம் பரவைப்பெரு
விரக, முணர்த்தாங்கென விடுஞ்சுந்தரற் கொருசந்து
நடந்தாய், மணப்பூந்துகள் குடைந்தூதிமை வரிவண்டி

---

(௨௯) கலை மா மறை=சாத்திரங்களையும் பெருமை பெ
திய வேதங்களையும் உணர்ந்த; அயன் ஈறு உறு க
=பிரம்மா அழியுங்காலம் (பிரம்ம கற்பம்); தலை ம
=தலைகளாலாகிய மாலை; கொலையார் = கொல்ல
ன்மை வாய்ந்த; கதிர் ஆழிப்படை=ஒளி வீசும் க
ராயுதம்; மலை=கொன்ற; மா திடத்தானே=மி த
வலிமையுடையவனே; இம மலை மாது=இமயம யி
லவதரித்த உமாதேவியார்; இடத்தானே=இடப் வு
டையவனே.

(௩௦) சிலைத்தூண்=கற்றூண்; உதித்து ஓங்கி=தோன்றி ப
ழுந்து; மண்=உலகம்; ஆண்டு=அவ்விடத்து; பொன்
நிறத் தீயவன் = இரணியனாகிய கொடியவனை; உலை
த்து=வருத்தி; = அலைத்து = அலையச்செய்து; சிம்
புள்=சரபம்; அயில் ஆர்=கூர்மை பொருந்திய; முத்
தலைத்தானையினனே = முக்கிளைச் சூலத்தையுடை
யவனே; புலித்தலை=புலியினிடத்துண்டாகிய; தானை
யினனே=தோலாகிய வஸ்திரத்தை யுடையவனே.

மிர் மதலைத், துணர்ப்பூங்கணி யானேதொழுந் தொண்டர்க்கணியானே. (௩௧)

சுதைக்கும்பமின் முலைமாதரைத் துகள்நீர்புவிச் சுரரை, வதைக்கும்பழி தனைமாற்றிடு மணிகன்னிகை யுடையாய், பதைக்கும்படி யடலார்கொடும் பகடூர்சமன் மருமத், துதைக்குங்கழ லானேகரத் தொளிர்பொங் கழ லானே. (௩௨)

சலத்தான்மிகுங் கொடியோனிசை தருவீணையின் கொடியோன், புலத்தார்கரி யிருநான்குடன் பொ

(௩௧) நம் பரவை = சமுத்திரம் போன்ற நமது; மணப் பூந் துகள் = வாசனையுள்ள மகரந்தம்; குடைந்து ஊதி = கிண்டித் தூற்றி; மைவரி = கறுத்த கோடுகளையுடைய; மதலை = கொன்றை; துணர்ப்பூ = பூங்கொத்துகளா லாகிய; கணி (கண்ணி) யானே = மாலையை யுடையவனே; அணியானே = சமீபத்தி லுள்ளவனே.

(௩௨) சுதைக்கும்பம் = அமுதகலசம் போன்ற; துகள்நீர் = குற்றமற்ற, புவிச்சுரர் = பிராமணர்; பதைக்கும்படி = துடிக்கும்படி; அடல் ஆர் = வலிமை பொருந்திய; சமன் = இயமன்; பொங்கு அழலானே = மூளுகின்ற நெருப்பை யுடையவனே.

(௩௩) சலத்தால் = கோபத்தினால்; மிகுங்கொடியோன் = மிகுந்த தீயவன்; வீணையின் கொடியோன் = வீணைக்கொடியுடைய இராவணன்; புலத்து ஆர் = திக்குகளிற் பொருந்திய; பொருது அன்று அடல்புரியும் = முன் நாளிலே எதிர்த்து யுத்தஞ் செய்த; உலத்தோள் = கல்லுருண்டை போன்ற தோள்; உரன் = வலி; உட்கும்படி = கெடும்படி; மலர்க் கால் நகத்தானே = மலர்போன்ற பாதத்திலுள்ள நகத்தையுடையவனே; மறைக் கானகத்தானே = வேதாரணியத்தி லெழுந்தருளியிருப்பவனே.

ருதன்றடல் புரியு, முலத்தொடலை நெரிபட்டர னுட் கும்படியூன்றி, மலர்க்கனகத் தாளே திரு மறைக் கானகத் தாளே. (௩௩)

துன்பந்தரு பிறவிப்பிணி தொலையும்படி நிலையா, மன்பங்கியி னிழுதிட்டென வகநெக்குரு கிப்பூ, நன் பங்கய நிகர்நின்பத நாளுந்தொழு மடியார்க், கின்பந் தரும் பித்தாவர மெனைநீவிரும் பித்தா. (௩௪)

வேறு.

என்றுபல துதிகூறி யானந்த மிகுந்துபுன லிரு கண் சோரத், துன்றுமயிர்ப் புளகமெழப் பரவசனாய் வீழ்ந்தெழுந்து துள்ளி யாடித், தன்றுணைச்செங் கர ங்கூப்பி முடியில்வைத்துப் படியினின்றோன் றன்னை நோக்கிக், கன்றுசினக் கருங்காலன் றனையுதைத்த செ ங்காலன் கழறு மன்றே. (௩௫)

உவரிவளை நெடுநிலத்தி லுடற்கணிலா கண்டல ன்போ லுவப்பினோடுந், துவரிதழ்வாய் மனைவிமகார் சூழமிகு போகமெல்லாந் துய்த்துக் கற்றைக், கவரிசி லர் புடையிரட்டக் கணங்களெதிர் கொண்டழைப்பக்

(௩௪) நிலையாம் அன்பு=நிலைபெற்ற அன்பு; அங்கியின் இழு து இட்டென=நெருப்பில் வெண்ணெயிட்டதுபோ ல; நன்பங்கயப்பூ நிகர்=அழகிய தாமரை மலரையொ த்த; இன்பந்தரும் பித்தா = இன்பத்தைக் கொடுக்கி ன்ற பித்தனே; வரம் எனை நீ விரும்பித் தா=நீ என க்கு வரத்தை விரும்பிக்கொடுப்பாயாக.

(௩௫) கன்று சினக்கருங்காலன் = முதிர்ந்த கோபமும் கரு நிறமும் பொருந்திய இயமன்; செங்காலன்=அழகிய பாதத்தையுடையோன்; கழறும் = சொல்லுவான்; அன்று=அப்பொழுது.

காய நீத்துத் தவரிதய மெனவிளங்குங் கயிலைமலை வ ருதியெனத் சாற்றிப் போனான். (௩௬)

அன்றுமுத லளகைநகர்க் கதிபதிபோ னிதிபல பெற் றவனி மீதிற், றன்றுபல போகமெல்லாந் துய்த் துநெடு நாட்கழித்துத் துதித்து வானோர், நின்றுதொ ழப் பதஞ்சலியும் புலிமுனியுங் காணநித்த நிருத்தந் தில்லை, மன்றுதனி லாடியபொற் பூவடிவாஞ் சேவடி யின் மருவி னானே. (௩௭)

ஈதுமுத னிகழ்காதை யாரேனுஞ் சிவநிசிநோற் றிடுவோர் பேறிங், கோதுவதென் னுளத்தில்விழைந் தனபெறுவ ருலகமதி லுடலம் விட்டாற், றுதவிழ்பூங் கொன்றையந்தார்ச் சடைமுடியோ னிருசரணஞ் சார் வாரென்று, சூதமுனி வரன்முனிவ ரனைவருங்கேட் டுளமகிழச் சொன்னான் மன்னோ (௩௮)

வேறு.

வாழி மாதவர் வாழி மனுநெறி
வாழி மாநிலம் வாழிநல் லானினம்
வாழி நான்மறை வாழி மழைமுகில்
வாழி வைதிக சைவ வழக்கமே. (௩௯)

---

(௩௬) உவரிவளை = கடல் சூழ்ந்த; உடற்கணில் = இவ்வுடல் தனில்; ஆகண்டலன் = இந்திரன்; மகார் = பிள்ளைகள்; புடை இரட்ட = இருபுறமும் வீச; தவர் இதயமென = தபசிகளது உள்ளம்போற் களங்க மற்ற.

(௩௭) நிதிபல = பலவகைச்செல்வம்; நித்தம் = எப்பொழுதும்; நிருத்தம் = நடனம்.

(௩௮) ஓதுவது என் = சொல்வதென்னை; உளத்தில் விழைந்தன = மனதின்கண் விரும்பியவைகளை.

வசனம்.

ஸூதமாமுனிவரை நைமிசாரண்ய வாசிகள் வணங்கி, சுவாமின்! இச்சிவராத்திரி விரதமிழைப்பவர், மறுமையில் இன்பவீடடைவதல்லாமல் இம்மையில் விரும்பியவைகளையும் பெறக்கூடுமோவென்று கேட்க, சூதமாமுனிவர் அங்ஙனமே இம்மையில் சகல போகங்களையும் பெற்ற சரிதமொன்று சொல்லுகின்றேன் கேளுங்களென்று சொல்லலுற்றனர்.

சந்திரனைச் சடையின்கண் தரித்த பரமேசுவரனிடத்து அன்பு பூண்ட சாலிகோத்திரனென்னும் பெயரையுடைய ஒரு மறையவனிருந்தனன். அவன் அன்பு, பொறுமை, அடக்கம், சத்தியம், என்பவை நீங்காது குடிகொண்ட உள்ளமுடையவனாய், வேதமுதலிய கலைகளை நன்குணர்ந்து அந்தணருக்குரிய யாகாதி கிருத்தியங்களெல்லாந் தவறுதியற்றிக் காலங் கழித்து வந்தனன். இப்படியிருக்கையில், அவனுக்கு மனைவி, மைந்தர், முதலினர் நாளுக்கு நாள் அதிகரிக்க, பெருங்குடும்பியாயினன். அன்றியும் அங்ஙனமே நாளுக்கு நாள் இலட்சுமி கடாக்ஷம் குறைய, வறுமையென்னும் வன்பிணியும் அதிகரித்துவந்தது. அதனால் அவன் சகிக்கவொண்ணாத பெருந் துன்பமுற்று, பொதிகை வரையிற்சென்று அகத்திய முனிவரைக்கண்டு வணங்கி, பாம்பின் வாயிலகப்பட்ட தேரைபோல தரித்திரத்தின் வாயிலகப்பட்டுத் துன்புறுகின்றனன். அடியேன் இத்துன்பத்தினின்று நீங்குமாறு கடாக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தனன்.

அகஸ்தியமுனிவர் அந்தணனை நோக்கி, நீ மேலாகிய ஒரு சிவத்தலத்தையடைந்து, ஒப்புயர்வில்லாச் சிவராத்திரி விரதம் நோற்று விதிப்படி இறைவனைப்பூசிப்பையேல், வறுமையென்னுங் கடலைக்கடப்பாய், அன்றியும் பிரம்மாதி தேவர்களாலும் அனுபவித்தற்கரிய போகங்களையெல்லாம் பெற்று இங்கனுபவித்து, மறுமையில் மோட்ச சாம்பிராச்சியமடைவாய். இதுவேயன்றி வேறு எவ்வகையானும் நின் துன்பத்தை

யொழிப்பது அஃதாம் என்று திருவாய்மலர்ந்தனர். ஃ
அவ்விரதம் நோற்றற்குரிய மேலாகிய சிவத்தலம் யா
ஆனையுந் திருவாய் மலர்ந்தருளவேண்டு மென்று பிரா
அகத்தியமுனிவர் இவ்வுலகில் தேவர்களாலும், மறை
அநேகம் பெரியோர்களாலும் பூசிக்கப்பெற்ற இறை
ங்கும், வேதவனம் என்னும் பெயரையுடைய ஒருத
அதுவே நீ சென்று விரதமிழைத்தற்குரிய தலமாமெ
றினர். அந்தணன் கும்பமுனிவர்பால் விடைபெற்று
ந்து புறப்பட்டு வேதாரணியம் என்னுந் தலத்தை ப
மாதந்தோறும் வரும் சிவராத்திரி தினத்தில் விதிப்ப
ள்ள தீர்த்தங்களிற் படிந்து பஞ்சாட்சர ஜபஞ்செய்து
நோற்று அன்றிரவு நான்கு யாமத்தும் வேதவனப் பெ
த்தவாறு பூசித்துவந்தனன்.

இங்ஙனமிருக்கையி லொருநாள், பக்திவலையிற்
ளுகிய பரமேசுவரன் உமாதேவியாரோடு இடபவாக
அவ்வந்தணன்முன் தோன்ற, அவன் பெருமானைக்
ரத்தரிசித்து உள்ளமுருகித்தோத்தரித்து வணங்கின
பதி அந்தணனைப்பார்த்து மறையோய் ! நீ இங்கு சக
ரியங்களையும் பெற்று மனைவி மக்களோடு கூடி இந்தி
ல சகல போகங்களையும் அனுபவித்துப் பின்னர் இச்ச
நீத்து மோட்ச சாம்பிராச்சிய மடையக்கடவாய் என்று
ய்மலர்ந்து அந்தர்த்தானமாயினர்.

பின்னர் அவ்வந்தணன் அங்ஙனமே குபேரனை
சகல ஐசுவரியங்களையும் பெற்று நெடுங்காலம் அனுப
புத்திரபவுத்திரரோடு வாழ்ந்திருந்து அச்சரீரத்தையெ
பஞ்சகிருத்திய நடனமியற்றும் பரமபதியின் பாதமல
ண்டறக்கலந்து என்று மழியாத இன்ப மெய்தினன்;
சூதமாமுனிவர் சொல்லி முடித்தனர்.

சாலிகோத்திரச்சருக்கம் முற்றிற்று.

சிவராத்திரி புராணம் முற்றிற்!

ADIGAL